“நாவலர் நாட்டார்க்கு நாம் செய்யும் நன்றி சங்க விலக்கியத்தை நன்கு மதித்தலும் வழிவழிக் காத்தலும் வரக்கற்றலும் ஆம். புரியாத நடையுடையது சங்க விலக்கியம் என்ற ஒரு சாராரின் அவலக் கருத்து நீர் சுடும் என்பது போன்ற மயக்க மருளாகும். இலக்கண வழக்கு முரண்பட்ட அயல்மொழிகளைப் புரியும் என்று பொருள் கொட்டிப் படிக்கும் தமிழர்கள் தம் தாயிலக்கியம் புரியாது என்று புலம்புவது பேதைமையுள் எல்லாம் கலப்பற்ற பேதைமையாகும். சங்கத் தமிழை நீர் தெளிந்த கோதாவரிக்குக் கம்பர் ஒப்பிடுவதைச் சிறிதேனும் எண்ணுங்கள் புரியும்!”

- வ.சுப.மாணிக்கனார்.

தமிழ்மண் பதிப்பகம்
2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

19 நாவலர் நாட்டார் தமிழ் உரைகள்

# நாவலர் நாட்டார்
## தமிழ் உரைகள்

19



வரலாறு – 2

தமிழ்மண்

# நாவலர் நாட்டார் தமிழ் உரைகள்

**19**

**நக்கீரர் – கபிலர் –**

**அகத்தியர் – இளம்பூரணம்**


*ஆசிரியர்*

**நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார்**

*பதிப்பாசிரியர்*

**பேராசிரியர் பி. விருத்தாசலம்**



*பதிப்பாளர்*

**கோ. இளவழகன்**

தமிழ்மண் பதிப்பகம்

நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **நாவலர் நாட்டார் தமிழ் உரைகள் - 19** |
| ஆசிரியர் | : | நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் |
| பதிப்பாசிரியர் | : | **பேராசிரியர் பி. விருத்தாசலம்** |
| பதிப்பாளர் | : | கோ. இளவழகன் |
| முதற்பதிப்பு | : | 2007 |
| தாள் | : | 18.6 கி. என்.எஸ்.மேப்லித்தோ |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 32+ 232 = 264 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. **245/-** |
| படிகள் | : | 1000 |
| நூலாக்கம் | : | பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : | மு. இராமநாதன், வ. மலர் |
| அச்சிட்டோர் | : | வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>ஆயிரம் விளக்கு, சென்னை - 6. |
| வெளியீடு | : | **தமிழ்மண் பதிப்பகம்**<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர்நகர், சென்னை - 600 017.<br>தொ.பே. 2433 9030 |

நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்
124 ஆம் ஆண்டு
நினைவு வெளியீடு

## பதிப்பாசிரியர் உரை

*புனல் பரந்து பொன்கொழிக்கும் மலைத்தலைய கடற் காவிரியை இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கானல் வரியில்,*

***வாழியவன்றன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி,***
***ஊழியுய்க்கும் பேருதவி ஒழியாய்வாழி காவேரி***
***உழியுய்க்கும் பேருதவி ஒழியாதொழுகல் உயிரோம்பும்***
***ஆழியாள்வான் பகல்வெய்யோன் அருளேவாழி காவேரி***

*என்று புகழ்ந்து பாடுவார். காவிரித்தாயின் உலகு புரந்தூட்டும் உயர்பேரொழுக்கம் காரணமாக இன்றைய கரூர், திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பண்டைய சோழவளநாடு*

***" சோழவளநாடு சோறுடைத்து"***

*எனவும்,*

***" சாலி நெல்லின் சிறைகொள் வேலி***
***ஆயிரம் விளையுட் டாகக்***
***காவிரி புரக்கும் நாடுகிழ வோனே"***

*பொருநராற்றுப்படை 246 - 248 எனவும்,*

***" ஒருபிடி படியுஞ் சீறிடம்***
***எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே" (புறநானூறு-40)***

*எனவும் புலவர் பெருமக்களால் பாராட்டப்பெறுவதாயிற்று. இவ்வாறு, கரும்பல்லது காடறியாப் பெருந்தண்பணைகள் நிரம்பிய சோழநாட்டில், தஞ்சாவூருக்கு வடமேற்கே பத்துக்கல் தொலைவிலுள்ள* **நடுக்காவிரி** *என்னும் சிற்றூரில் திருவாளர் வீ.முத்துச்சாமி நாட்டார் திருமதி தைலம்மை இணையருக்கு மூன்றாவது மகனாக 12.04.1884 இல் பிறந்த பெருமைக்குரிய வர்தாம் நாவலர், பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர் களாவார். அவர் ஆசிரியர் எவருடைய துணையுமில்லாமல் தாமே படித்து, மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய* **பிரவேச பண்டிதம்,**

**பால பண்டிதம், பண்டிதம்** ஆகிய மூன்று தேர்வுகளையும் முறையே 1905, 1906, 1907 ஆகிய மூன்றே ஆண்டுகளில் எழுதி முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். அதனால் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற விழாவில் பாண்டித்துரைத்தேவர் அவர்கள் நாட்டார் ஐயாவிற்குப் பொற்பதக்கம் அளித்தும், தங்கத்தோடா அணிவித்தும் சிறப்புச் செய்தார். அதுகாரணமாக நாட்டார் ஐயா அவர்கள் **தாமே பயின்ற தமிழ்ப் பேராசான்** என்று நாட்டு மக்களால் அன்புடன் அழைக்கப் பெற்றார். திருமுருகாற்றுப்படை கல்வி கேள்வி களிலும், தவத்திலும் சிறந்த முனிவர்களைப் பற்றி

> **" .........................யாவதும்**
> **கற்றோர் அறியா அறிவினர்; கற்றோர்க்குத்**
> **தாம்வரம் பாகிய தலைமையர்"**

**திருமுருகாற்றுப்படை 132-134)**

என்று சிறப்பித்துக் கூறும், அவர்களைப் போன்று வீறுசான்ற அறிவு நிரம்பிய நாட்டார் அவர்கள்

> **" கல்வி தறுகண் இசைமை கொடையெனச்**
> **சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"**

**(தொல்.பொருள்.மெய்ப்பாட்டியல் - 9)**

என்று தொல்காப்பியர் கூறிய பெருமிதம் உரையவராய் விளங்கினார்.

1907-இல் பண்டிதம் பட்டம் பெற்ற நாட்டார் ஐயா அவர்கள் 1908-இல் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்று வந்த எஸ்.பி.ஜி.கல்லூரியிலும் (அக்கல்லூரி இப்பொழுது பிசப் ஈபர் கல்லூரி என்று வழங்கப் பெறுகின்றது) 1909-ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் உள்ள தூயமைக்கேல் உயர்நிலைப்பள்ளியிலும் வேலைபார்த்தார்; மீண்டும் திருச்சி எஸ்.பி.ஜி. கல்லூரியில் 1910-இல் பணியில் சேர்ந்து 1933 வரை **இருபத்து இரண்டு ஆண்டுகள்** தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அக்கல்லூரி 1933-இல் மூடப்பெற்றது. அதன்பின் இராசா சர்.அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் அன்புநிறைந்த அழைப்பினை ஏற்று, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், தமிழ்ப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார்; அங்கே, 1933 முதல் 1940 வரை ஏழாண்டுகள் பணிபுரிந்து ஓய்வுபெற்றார். ஓய்வு பெற்ற பின் தஞ்சையில் வந்து குடியிருந்த நாட்டார் ஐயா அவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் **செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள் த.வே. உமாமகேசுவரனார்** அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கக் **கரந்தைப் புலவர்**

**கல்லூரியில்** ஊதியம் எதுவும் பெற்றுக் கொள்ளாமல் **மதிப்பியல் முதல்வராக** 02.07.1941 முதல் 28.03.1944-இல் அவர் இறக்கும் நாள் வரையில் பணிபுரிந்தார்.

நாட்டார் ஐயா அவர்கள் தம்முடைய வாழ்நாளில் அறிஞர் பெருமக்களால் மிகுதியும் மதிக்கப்பெற்றார். இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்ட பெருமை மிக்க திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் **“செந்தமிழ்ச்செல்வி”** என்னும் தமிழராய்ச்சித் திங்களிதழை நடத்தி வந்தது; அந்த இதழ் இன்றும் காலந்தவறாமல் தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றது. அந்த நூற்பதிப்புக் கழகத்தின் தலைமைப் பொறுப்பாளர்களாக முதலில் **திருவரங்கனாரும்**, அவருக்குப்பின் அவர் தம்பி தாமரைத் **திரு வ.சுப்பையா பிள்ளை** அவர்களும் விளங்கினர். மறைமலை அடிகளாரின் மகள் நீலாம்பிகை அம்மையாரின் கணவர் திருவரங்கனார் ஆவார். ஆயினும், செந்தமிழ்ச் செல்வியின் இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினராகவும் தலைவராகவும் நாட்டார் ஐயா அவர்களை ஏற்றுக் கொண்டமைக்கு ஐயா அவர்கள் செந்தமிழ் மொழிக்கும், சைவ சமயத்திற்கும் செய்துவந்த தொண்டுகளே காரணம் ஆகும். தொண்டை மண்டலத்தில் வாழ்ந்த குடிமக்களுள் **சேக்கிழார் வழிவந்த தொண்டை மண்டல முதலியார்கள்** இன்றைக்கும் பெருஞ்சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் நடத்திவந்த **சைவ சித்தாந்தப் பெருமன்றத்திற்கு** நாட்டார் ஐயா அவர்கள் பல ஆண்டுகள் தலைவராக இருந்தார் என்பது பெருமைக்குரிய செய்தி ஆகும். 1940-இல் **சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டில்** நாட்டார் ஐயா அவர்களுக்கு **நாவலர்** என்னும் பட்டம் வழங்கப்பெற்றது. 28.3.1944-இல் நாட்டார் ஐயா தம் பூத உடம்பை நீத்துப் புகழுடம்பைப் பெற்ற போது அவரை அடக்கம் செய்த இடத்தில் கோயில் ஒன்று எழுப்பப் பெற்றது. அக்கோயில் **நாட்டார் திருக்கோயில்** என்று தமிழன்பர்களால் பெருமையுடன் அழைக்கப் பெறுகின்றது. நாட்டார் ஐயா அவர்கள் 1921-இல் தம்முடைய முப்பத்து ஏழாம் வயதில் **தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று உருவாக வேண்டும் என்றும், அதற்கு முன்னோடியாகத் திருவருள் கல்லூரி என்னும் பெயரில் கல்லூரி ஒன்று நிறுவவேண்டும்** என்றும் கருதி அதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டார்கள். அக்கல்லூரி நிறுவுவதற்குத் தமிழ்நாட்டில் தன்மானப் பேரியக்கத்தைத் தோற்றுவித்தவரும், பகுத்தறிவுப் பகலவனாக விளங்கியவரும் ஆகிய **தந்தை பெரியார்** அவர்கள்

உருபா 50/- நன்கொடை வழங்கினார்கள் என்பது பெருமைக் குரிய வரலாறு ஆகும். இவ்வாறு நாட்டார் ஐயா அவர்கள் 1921 -இல் நிறுவ விரும்பிய திருவருள் கல்லூரி, 71 ஆண்டுகள் கழிந்ததற்குப் பிறகு **நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி** என்னும் பெயரில் தனித்தமிழ்ப் புலவர் கல்லூரியாகத் தஞ்சாவூரில் **14.10.1992இல்** தொடங்கப் பெற்று இன்று வரையில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக மிகச் சிறப்புடன் நடைபெற்று வருகிறது. இவ்வாறு, தமிழ்நாட்டில் புலவர் ஒருவரின் பெயரால் திருக்கோயில் கட்டப்பெற்றதும், கல்லூரி நிறுவப் பெற்றதும் நம் நாட்டார் ஐயா அவர்களுக்கு மட்டுமே.

இத்தகைய சிறப்புமிக்க நாட்டார் ஐயா அவர்கள் எஸ்.பி.ஜி.கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திலும், கரந்தைப் புலவர் கல்லூரியிலும் பணிபுரிந்த காலத்தில் வேளிர் வரலாற்று ஆராய்ச்சி, நக்கீரர், கபிலர், கள்ளர்சரித்திரம், கண்ணகி வரலாறும் கற்பு மாண்பும், சோழர் சரித்திரம் என்னும் **ஆறு வரலாற்று நூல்களை** எழுதினார்; அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதல் இருபத்தாறு காதைகள்; திருவிளையாடல் புராணம், இன்னா நாற்பது, களவழி நாற்பது, கார்நாற்பது, திரிகடுகம் ஆகிய கீழ்க்கணக்கு நூல்கள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய பிற்கால நூல்கள் ஆகிய **பதின்மூன்று நூல்களுக்கு உரை** எழுதினார்; அகத்தியர் தேவாரத்திரட்டு, தண்டியலங்காரம், யாப்பருங்கலக்காரிகை ஆகிய **மூன்று நூல் களுக்கும் உரைத்திருத்தங்கள்** செய்தார். அத்துடன் திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்திலிருந்து ஆற்றிய **இலக்கியப் பேருரைகள், கட்டுரைத்திரட்டு என்னும் பெயரில் இரண்டு தொகுதிகளாக** வெளியிடப்பெற்றன; மேலும், நாட்டார் ஐயா அவர்கள் பல்வேறு மாநாடுகளிலும், கரந்தைத் தமிழ்ச் சங்கம் முதலிய தமிழ்க் கழகங்களின் ஆண்டு விழாக்களிலும் ஆற்றிய உரைகளும், பல சங்கங்களின் விழா மலர்களில் எழுதிய கட்டுரைகளும் **நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் கல்வி, கலை, பண்பாட்டு அறக்கட்டளையினரால்** நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் இலக்கணக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள், சொற்பொழிவுக் கட்டுரைகள் என்னும் பெயர்களில் மூன்று நூல்களாக வெளியிடப்பெற்றன. இப்பொழுது, தமிழ் மொழிக் காவலர் திரு கோ.இளவழகன் அவர்களால் மிகவும் அரிதின் முயன்று திரட்டப் பெற்ற நூல்களும், கட்டுரைகளும் தமிழ்மண் பதிப்பகத்தாரால் வெளியிடப் பெறுகின்றன. அவை, பின்வருமாறு

1. திரிகடுகம் - ந.மு.வே.உரை
2. மணிமேகலை வரலாறு
3. தொல்காப்பிய ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள்
4. நாவலர் நாட்டார் நாட்குறிப்பு முதலியனவாம்.

**இவ்வாறு, நாட்டார் ஐயா அவர்கள் எழுதிய நூல்கள் வெளிவந்த ஆண்டுகளைப் பற்றிய விவரம் வருமாறு:**

1. வேளிர் வரலாற்று ஆராய்ச்சி - 1915
2. நக்கீரர் - 1919
3. கபிலர் - 1921
4. கள்ளர் சரித்திரம் - 1923
5. இன்னா நாற்பது
6. களவழி நாற்பது
7. கார் நாற்பது
8. ஆத்திசூடி
9. கொன்றை வேந்தன் - 1925
10. வெற்றி வேற்கை
11. மூதுரை
12. நல்வழி
13. நன்னெறி
14. கண்ணகி வரலாறும் கற்பு மாண்பும் - 1926
15. சோழர் சரித்திரம் - 1928
16. பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராண உரை - 1925 - 31
17. அகத்தியர் தேவாரத் திரட்டு உரைத்திருத்தம் - 1940
18. தண்டியலங்காரப் பழைய உரைத்திருத்தம் - 1940
19 யாப்பருங்கலக்காரிகை உரைத்திருத்தம் - 1940
20. கட்டுரைத் திரட்டு முதல் தொகுதி - 1941
21. சிலப்பதிகார உரை - 1940-42

22. மணிமேகலை உரை - 1940 -42

23. அகநானூறு உரை - 1942-1944

24. கட்டுரைத் திரட்டு - இரண்டாம் தொகுதி - 1942

25. நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் இலக்கணக் கட்டுரைகள் - 2006

26. நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் இலக்கியக் கட்டுரைகள் - 2006

27. நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் சொற்பொழிவுக் கட்டுரைகள் - 2006

28. திரிகடுகம் உரை - 2007

தமிழக அரசு நாட்டார் ஐயா அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கியதன் பயனாகப் பல பதிப்பகத்தார்களும் நாட்டார் நூல்களைப் பதிப்பிக்க முன் வந்துள்ளனர். அவ்வகையில் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரில் சிறை சென்ற தமிழ்மொழிக் காவலர் **திரு கோ.இளவழகன் அவர்கள் தம்முடைய தமிழ்மண் பதிப்பகத்தின் வாயிலாக நாட்டார் ஐயா அவர்களின் நூல்கள் அனைத்தையும் இருபத்து நான்கு தொகுதிகளாக** இப்பொழுது வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சியை விளைவிக்கின்றது. அவர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர், திருவி.க., யாழ்ப்பாணத்துத் தமிழ் அறிஞர் ந.சி.கந்தையா பிள்ளை, வெ.சாமிநாத சர்மா, சாத்தான்குளம் அ. இராகவன், பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் முதலிய தமிழறிஞர்களின் நூல்கள் மற்றும் தொல்காப்பிய பழைய உரைகள் அனைத்தையும் முழுமையாக வெளியிட்ட பெருமைக்குரியவர். அவர் இப்பொழுது **நாட்டார் ஐயா** அவர்களின் நூல்கள் அனைத்தையும் ஒரு சேர வெளியிடுவது மிகவும் துணிவான செயல் ஆகும். அவருடைய முயற்சி காரணமாகத் தமிழகப் பதிப்புத்துறை வரலாற்றில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தைப் போலவே தமிழ்மண் பதிப்பகமும் பலநூறு ஆண்டுகளுக்குத் தமிழறிஞர்களால் புகழ்ந்து பாராட்டப் பெறும். அவரது **இந்த முயற்சி இமயமலையைப் பெயர்த்தெடுத்துக் கொண்டுபோய் வங்காள விரிகுடாவில் வைப்பது போன்ற அரிய பெரிய முயற்சி ஆகும்.**

> **“ எண்ணிய எண்ணியாங்கு எய்துப; எண்ணியார்**
> **திண்ணிய ராகப் பெறின்” (திருக்குறள் 666)**

என்னும் குறளுக்குத் **திரு கோ.இளவழகன்** அவர்களே தக்கதோர் எடுத்துக் காட்டாவார். அவர் வாழ்க, அவர் முயற்சி வெல்க என்று நான் வாயார மனமார வாழ்த்துகின்றேன். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் நாட்டார் ஐயாவின் நூல்கள் இடம் பெறுமாறு செய்ய வேண்டுவது தமிழறிஞர் களின் கடமை ஆகும். அதுபோலவே தமிழக அரசால் நடத்தப்பெறும் தமிழ்நாட்டில் உள்ள நூலகங்கள் அனைத்திலும் ந.மு.வே.நாட்டார் ஐயா அவர்களின் நூல்கள் இடம்பெறுமாறு செய்யும் படி தமிழக அரசை அன்புடன் வேண்டிக்கொள் கின்றேன்.

*17.07.2007* **பேராசிரியர் பி.விருத்தாசலம்**
***நிறுவனர்***

*நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி,*
*கபிலர் நகர், வெண்ணாற்றங்கரை,*
*தஞ்சாவூர் - 613 003.*
*தொ.பேசி : 04362 252971*

# பதிப்புரை

முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்கும் நம் தமிழ் மொழியின் ஈடற்ற அறிவுச் செல்வங் களை யெல்லாம் தேடியெடுத்துத் உலகெங்கும் வாழும் தமிழர்க்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு **'தமிழ்மண் பதிப்பகம்'** தொடங்கப் பெற்றது.

தாய்மொழியாம் தமிழுக்கு வளம் சேர்ப்பதை முதன்மை யாகக் கொண்டும், இனநலம் காப்பதைக் கடமையாகக் கொண்டும் மிகுந்த தமிழுணர்வோடு தமிழ் நூல் பதிப்பில் எம் பதிப்புச் சுவடுகளைக் கால் பதித்து வருகிறோம்.

தமிழ் , தமிழர் மறுமலர்ச்சி இயக்கத்திற்கு வடிவம் தந்து தமிழுக்கு அளப்பரிய தொண்டு செய்த அறிஞர்கள் எழுதிய நூல்களையெல்லாம் ஒருசேரத் தொகுத்து ஒரே வீச்சில் தொகை தொகையாய் எம் பதிப்பகம் இதுகாறும் வெளியிட்டு வருவதைத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும்.

**மொழிநூல் கதிரவன் பாவாணரின்** அறிவுச் செல்வங்களை யெல்லாம் ஒரே நேரத்தில் மறுபதிப்புச் செய்து வெளியிட்டதால் தமிழ் உலகம் என்னை அடையாளம் கண்டது; என் மதிப்பை உயர்த்தியது.

நல்ல தமிழ் நூல்களைத் தமிழர்களுக்கு அளிக்கும் போதெல்லாம் எனக்குப் புத்துணர்ச்சியும் பெருமகிழ்வும் ஏற்படுகின்றன. பதிப்புத் துறையில் துறைதோறும் மேலும் பல ஆக்கப் பணிகளைச் செய்ய உறுதி கொள்கிறேன்.

தமிழ்நூல் பதிப்பில் எம் பதிப்பகம் இதுகாறும் ஆற்றிய தமிழ்ப் பணியை எண்ணிப் பார்க்கிறேன். நெஞ்சில் ஒரு நிறைவு. இனிச் செய்ய வேண்டிய பணியை எண்ணிப் பார்க்கிறேன். தயக்கமும் கவலையும் மேலிட்டாலும், தக்க தமிழ்ச் சான்றோர்கள், நண்பர்கள் துணையோடு அதனைச் செய்து முடிப்பேன் என்ற உறுதியும் தெம்பும் எனக்கு ஏற்படுகின்றன. எனவே, முன்னிலும் வேகமாக என் பதிப்புப் பணிகளைத் தொடர்கின்றேன்.

***“தொண்டு செய்வாய்! தமிழுக்கு..., செயல் செய்வாய் தமிழுக்கு......,ஊழியஞ் செய் தமிழுக்கு......., பணி செய்வாய்! தமிழுக்கு........, இதுதான் நீ செயத் தக்க எப்பணிக்கும் முதல் பணியாம்.”*** *எனும் பாவேந்தர் வரிகளின் உணர்வுகளைத் தாங்கித், தமிழ், தமிழர் மறுமலர்ச்சி இயக்கத்தின் பின்னணியோடு வளர்ந்த நான் தாய்மொழிவழிக் கல்வியின் மேன்மையை வலியுறுத்திய* **நாவலர் நாட்டாரின்** *நூல்களை தமிழர் தம் கைகளில் தவழ விடுகிறேன்.*

**நாட்டார் யார்?**

*19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும்* **தமிழ்த் தேரை** *இழுத்த பெருமக்களுள்* **நாவலர் ந.மு.வே. நாட்டாரும்** *ஒருவர்; தமிழுக்கு வளம் சேர்த்த அறிஞர் பெருமக்களுள் முன்வரிசையில் வைத்துப் போற்றத் தக்க பெருமையர்; “சங்கத் தமிழ் நூல்களை எழுத்தெண்ணிப் படித்தவர்; பன்னூல் அறிவும் பழந்தமிழ்ப் புலமையும் மிக்கவர்; இணையற்ற உரையாசிரியர்; நூலாசிரியர்; வரலாற்று ஆய்வாளர்; ஆய்வறிஞர்; தமிழ் அறிஞர்கள் நடுவில் என்றும் பொன்றாப் புகழுடன் நிலைத்து நிற்பவர்” என்று அவர் காலத்தில் வாழ்ந்த தமிழ்ச் சான்றோர் களால் போற்றப் பெற்றவர்.*

*மேலும், நாட்டாரையா அவர்கள் தமிழ் நெறியையும், தமிழர் மரபையும் உலகுக்கு உணர்த்திய உரைவளச் செம்மல்; தமிழுணர்வின் - தமிழாற்றலின் வலிமையை வெளிப்படுத்திய தமிழ்ப் பேராசான்; தமிழறிவின் வற்றாத வளத்துக்குத் தமிழ் வள்ளலாய் வாழ்ந்தவர்; தமிழ்ப் பண்பாட்டு வடிவங்களுக்கு அடையாளமாகத் திகழ்ந்தவர்; தமிழ் உரைநடை வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியவர்; தன்னலம் கருதாது தமிழ் நலம் கருதியவர். தம்மை முன்னிறுத்தாது தமிழை முன்னிறுத்தித் தமிழுக்கு வளமும் வலிவும் பொலிவும் சேர்த்த இப்பெருந் தமிழறிஞரின் நூல்களை எம் பதிப்பகம் வெளியிடுவதில் பெருமை கொள்கிறது.*

*பன்னருஞ் சிறப்புக்கள் நிறைந்த பழந்தமிழ்க் கருவூலங் களை ஒருசேரத் தொகுத்துத் தமிழ் உலகிற்கு வழங்க வேண்டும் என்று எனக்கு வழிகாட்டியவர் செந்தமிழறிஞர், கரந்தைப் புலவர் கல்லூரியின் மேனாள் முதல்வர், நாவலர் ந.மு.வே. நாட்டார் திருவருள் கல்லூரியின் நிறுவனர் பேராசிரியர்* **பி.விருத்தாசலம்** *ஆவார். அவர் ‘கெடல்எங்கே தமிழின்நலம் அங்கெல்லாம் தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!’ எனும் பாவேந்தர் வரிகளுக்கு*

நம்மிடையே இன்று சாட்சியாக வாழ்ந்து கொண்டிருப்பவர்; வாழும் தமிழறிஞர்களில் நான் வணங்கும் சான்றோருள் ஒருவர். இப் பெருமகனாரைப் பதிப்பாசிரியராகக் கொண்டும் இவருடைய முழு ஒத்துழைப்புடனும், மேற்பார்வையுடனும் **நாவலர் நாட்டார் தமிழ் உரைகள்** என்னும் தலைப்பில் நாட்டாரையா நூல்கள் அனைத்தையும் **24 தொகுதிகளாகத்** தமிழ் உலகுக்குப் பொற் குவியலாகத் தருவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

குமுகாய மாற்றத்துக்கு அடிப்படையானது தாய்மொழி வழிக் கல்வி ஒன்றுதான். இக்கல்விதான் மக்களுக்கு ஊற்றுக் கண். தாய்மொழி வழிக் கல்விதான் குமுகாயத்தின் முகத்தைக் காட்டவல்லது; மக்களை உயர்த்த வல்லது என்னும் உறுதியான நிலைப்பாடுடைய இப்பெருந்தமிழறிஞரின் நூல்களை வெளியிடு வதில் பெருமைப் படுகிறேன். ‘தாய்மொழியே சிந்தனைக்கு மலையூற்று’ என்னும் பாவேந்தரின் சிந்தனையைத் தம் நெஞ்சில் தாங்கியவர் பேராசிரியர் விருத்தாசலனார்.இவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு இப்பழந்தமிழ்க் கருவூலங்களை வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.

தாய்மொழியைப் புறக்கணித்த எந்த இனமும் , எந்த நாடும், வளர்ந்ததாகவோ, வாழ்ந்ததாகவோ, செழித்ததாகவோ வரலாறு இல்லை. வளர்ந்து முன்னேறிய நாடுகளின் மக்கள் எல்லாம் தம் தாய்மொழியின் மூலம்தான் கல்வி கற்று உலகரங்கில் உயர்ந்து நிற்கின்றனர் என்பதைத் தமிழர்கள் இனியேனும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அரசோ, பல்கலைக் கழகங்களோ, பேரியக்கங்களோ, அறநிறுவனங்களோ, பெருஞ்செல்வர்களோ அறிஞர்கள் குழு அமைத்துச் செய்ய வேண்டிய பெரும்பணியைப் பெரும் பொருள் நெருக்கடிகளுக்கு இடையில் செய்ய முன் வந்துள்ளேன். பழந்தமிழ்க் கருவூலமான நாட்டாரின் இவ்வருந்தமிழ்ப் புதையல்கள் தமிழர்கள் இல்லந்தோறும் இருப்பதற்கு உங்களின் பங்களிப்பையும் செய்ய முன் வாருங்கள். மொழி, இன நாட்டின் அடையாளங்களை மீட்டெடுக்கும் எம் தமிழ்ப் பணிக்குக் கைகொடுத்து உதவுங்கள். இந் நூல்கள் அனைத்தும் தமிழ் மக்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் வைத்துப் போற்றத் தக்க - பாதுக்காக்கத்தக்க கருவூலங்கள் ஆகும்.

நாவலர் நாட்டார் தமிழ் உரைகளுக்கு அணிந்துரை தந்து எம் தமிழ்ப் பணிக்குப் பெருமை சேர்த்த பெருமக்கள் பேராசிரியர்**பி.விருத்தாசலம், புலவர் இரா.இளங்குமரனார்,**

***முனைவர் சோ.ந.கந்தசாமி, முனைவர் அ.தட்சிணாமூர்த்தி, புலவர் செந்தலை ந. கவுதமன், ச.சிவசங்கரன் , நாட்டாரின் மரபு வழி உறவினர் திருமிகுகுரு.செயத்துங்கன், பேரா. கோ. கணேசமூர்த்தி*** *ஆகியோர்க்கு எம் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.*

*நாட்டார் தமிழ்க் கல்லூரியின் பேராசிரியப் பெருமக்களும், கல்லூரி மாணவர்களும் நாட்டார் தமிழ் உரைகள் பிழையற்ற செம்பதிப்பாக வெளிவருவதற்குப் பல்லாற்றானும் துணையிருந்தனர். இவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். இப்பதிப்பில் பிழை காணின் சுட்டி எழுதுங்கள்: சொல்லுங்கள். அடுத்த பதிப்பில் பிழை நீக்கி நிறைவு செய்வேன்.*

*இந்நூல் ஆக்கத்திற்கு இரவும் பகலும் என்னோடு இருந்து, எனக்குப் பெருந்துணை செய்த எம் பதிப்பக ஊழியர்கள் அனைவரையும் இந்நேரத்தில் நன்றி உணர்வோடு பாராட்டு கின்றேன்.*

***சென்னை*** ***இங்ஙனம்,***
***3-10-2007*** ***கோ.இளவழகன்***

## வல்லுநர் குழு

1. முனைவர் கு.திருமாறன்
2. முனைவர் இரா.கலியபெருமாள்
3. பேராசிரியர் சண்முக.மாரி ஐயா
4. பேராசிரியர் நா.பெரியசாமி
5. முனைவர் பி.தமிழகன்
6. முனைவர் மு.இளமுருகன்

## நூலாக்கத்திற்குத் துணை நின்றோர்

*நூல் கொடுத்து உதவியோர்*

*செந்தமிழ் அந்தணர்* **இரா.இளங்குமரனார்**
நாட்டார் கல்லூரி நிறுவனர் **பேராசிரியர் பி.விருத்தாசலம்**
**திருமிகு குரு.செயத்துங்கன், முனைவர் கோ.கணேசமூர்த்தி**

*நூல் வடிவமைப்பு*
**செல்வி வ.மலர்**

*மேலட்டை வடிவமைப்பு*
**ஓவியர் மு. இராமநாதன், வ.மலர்**

*கணினி அச்சு*
**நாட்டார் கல்லூரி கணினிப் பிரிவு,**
**முனைவர் கி. செயக்குமார், ம. பிரியா,**
**குட்வில் பெ. செல்வி**

*மெய்ப்பு*
*நாட்டார் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள்*
*புலவர் த. ஆறுமுகம், க.சுப்பிரமணியன்,*
*பொன். மணிமொழி, மு.இராசவேலு,*
*க. குழந்தைவேலன், சுப. இராமநாதன்,*
*அரு.அபிராமி, அ. கோகிலா, இரா. நாகவேணி*

*உதவி*
**அரங்க. குமரேசன், மு.ந. இராமசுப்ரமணிய இராசா,**
**வே. தனசேகரன், இல. தருமராசு**

*எதிர்மம் (Negative)*
பிராசசு இந்தியா (Process India), சென்னை -14

*அச்சு மற்றும் கட்டமைப்பு*
வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-6

**இவர்களுக்கு எம் நன்றி என்றும் . . .**

# நாட்டார் ஐயா அவர்களின் உரைப்பணியும் ஆய்வுப்பணியும்

**சிவ.பார்வதி அம்மையார்**

*“ ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்*
*மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க*
*ஏன்றான் இமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்*
*தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே*

*(திருநாவுக்கரசர் தேவாரம்)*

நாவலர் பண்டித ந.மு.வே. நாட்டாரையா அவர்களின் உரைநடை நூல்களில் உள்ள ஆராய்ச்சிப் பகுதிகளில் எனக்குத் தெரிந்த சிலவற்றை ஈண்டுக் கூறுகிறேன்.

**நக்கீரர்**

1919-ஆம் ஆண்டில் **நக்கீரர்** என்னும் ஆராய்ச்சி உரைநடை நூல் வெளியிடப்பட்டது. இந்நூல் கடைச்சங்கப் புலவர் தலைவராகிய நக்கீரனாரைப் பற்றியும், அவர் எழுதிய நூல்களின் ஆராய்ச்சிகளும் உயரிய செந்தமிழ் நடையில் அய்யா அவர்களால் எழுதப்பட்டுக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடப் பட்டதாகும்.

இந்நூலில், நக்கீரனாரின் இறையனார் அகப்பொருள் விரிவுரையையும், பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையையும், நெடுநல்வாடையையும், பிற புறப்பொருட்பாக்களையும் நன்கு ஆராய்ந்திருப்பது கற்பாருக்குக் கழிபேருவகை தருவதாகும். இந்நூல் தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங் களிலும், காசி இந்துப் பல்கலைக்கழகத்திலும், இலண்டன் பல்கலைக் கழகத்திலும் பாடமாக இருந்து ஆசிரியர்களால் பெரிதும் பாராட்டப் பெற்ற தாகும். நக்கீரர் என்னும் நூலின் உரைநடையிலிருந்து சிறிது காண்போம்.

**“நக்கீரர், படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வந்த பழங்குடியினரான முடியுடைத் தமிழ்வேந்தர் மூவருள்ளே ஈண்டிய சிறப்பிற் பாண்டியரானோர் வழிவழியமர்ந்த பழவிறன் மூதூராகிய பீடுமிக்க மாட**

**மதுரையில் சங்கமிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப் புலவர் குழாத்துப் பல்லிசை நிறுத்த படிமையோராவர். இவர் குடிப்பிறப்பாகிய உடையுடுத்துக் கல்வியாகிய மலர் சூடி, ஒழுக்கம் என்னும் விழுக்கலன் பூண்டு, வாய்மை யென்னு முணவுண்டு, நடுவுநிலை யென்னும் நகரின்கண் தூய்மை யென்னும் ஆசனத்தமர்ந்து, அழுக்காறின்மை அவாவின்மை யெனப்படும் இருபெரு நிதியமும் ஒரு தாமீட்டுந் தோலா நாவின் மேலோராகித் தமக்கொப்பாரும், மிக்காரும் இல்லையாக விளங்கினரெனவும் உரைப்பர்''**

**கபிலர்**

1921-ஆம் ஆண்டு **கபிலர்** என்னும் ஆராய்ச்சி உரைநடை நூல் வெளியிடப்பட்டது. இந்நூலில் தமிழ்ச்சங்க வரலாறு மிகுந்த ஆராய்ச்சியுடனும், மேற்கோள்களுடனும் விளக்கப்பட்டுள்ளது. இவரைத் திருவள்ளுவருடன் பிறந்தவர் என்று சிலர் கூறுவர். அதனை மறுத்துப் பாண்டிநாட்டிலுள்ள மாணிக்கவாசகப் பெருமான் தோன்றிய திருவாதவூர் எனப்பல மேற்கோள்களுடன் விளக்கப்பட்டுள்ளது. இவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர் எனவும், அந்தணர் மரபில் உதித்தவர் எனவும் அய்யா அவர்கள் ஆராய்ந் திருக்கிறார்கள்.

'' *செறுத்த செய்யுள் செய்செந் நாவின்*
*வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்*

*(புறநானூறு 53:11,12)*

எனவும்,

'' *உலகுடன் றிரிதரும் பலர் புகழ் நல்லிசை*
*வாய்மொழிக் கபிலன்''*

*(அகநானூறு 78:15,16)*

எனவும்,

*''பொய்யா நாவிற் கபிலன்''* *(புறநானூறு 174:10)*

எனவும் புலவர் பலராலும் பாராட்டப் பெற்றவர் என்பதனால் இவர் புலமை புலனாகும்.

மற்றும் இவர்,

*''புலனழுக் கற்ற அந்தணாளன்''* *(புறநானூறு 126:11)*

எனவும்,

*"யானே, பரிசிலன் மன்னும் அந்தணன்"*

*(புறநானூறு 200:13)*

என்றும் கூறிக் கொள்வதால் இவர் அந்தணர் மரபில் தோன்றியவர் என்பது வெளிப்படும் என்பார்கள்.

இவர் இயற்றிய நூல்கள் பலவாகும். பத்துப்பாட்டில் ஒன்றாகிய குறிஞ்சிப்பாட்டு, கலித்தொகையில் குறிஞ்சிக் கலி, ஐங்குறுநூற்றில் குறிஞ்சிக் குறுநூறு, பதிற்றுப்பத்தில் ஏழாம்பத்து ஆகிய சங்கநூல்களும், நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவற்றில் பல பாடல்களும் இன்னா நாற்பது என்ற கீழ்க்கணக்கு நூலும் இவரால் இயற்றப்பட்டவையாம். மேலும், **மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி** போன்ற நூல்களும் இவரால் இயற்றப்பட்டவையென்றும், இந்நூல்களைப் பற்றிய அரிய ஆராய்ச்சி கற்போருக்கு இன்பம் பயப்பதாகும் எனவும் கூறுவர். குறிஞ்சிப்பாட்டு, குறிஞ்சிக்கலி ஆகியவற்றிற்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் எழுதியுள்ள உரையையும், விளக்கத்தையும் அய்யா அவர்கள் எடுத்துரைப்பது மிகவும் சிறப்புடையதாகும். இவர் நூல்கள் பலவற்றில் சிவபெருமானது இறைமையும், தலைமையும் தோன்ற எழுதியிருப்பதால் அய்யா அவர்கள் இவர் சைவ சமயத்தினர் என்றே துணிந்துரைக்கின்றார்கள்.

# வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் (1884 – 1944)

### பிறந்த ஊர்

*தஞ்சைக்கு வடமேற்கில் சுமார் 12 கி. மீ. தொலைவில் உள்ள நடுக்காவேரி என்னும் ஊர் நாவலர் ந. மு. வே. பிறந்த ஊராகும்.*

### பெற்றோர்

*தந்தையார் திரு. வீ. முத்துச்சாமி அவர்கள்; தாயார் திருவாட்டி தைலம்மையார் அவர்கள்.*

### பிறந்த நாள்

*தாரண ஆண்டு சித்திரைத் திங்கள் இரண்டாம் நாள் (12-4-1884).*

### பெயர் வைப்பு

*நாவலர் ந. மு. வே. அவர்களுக்குப் பெற்றோர் முதலில் வைத்த பெயர் சிவப்பிரகாசம் என்பதாகும். இவருக்கு முன் பிறந்த தட்சணாமூர்த்தி, இராமச்சந்திரன் ஆகிய இருவரும் இளமையிலேயே இயற்கை எய்தினர். எனவே கவலை கொண்ட பெற்றோர் இந்தக் குழந்தையையாவது காப்பாற்றி அருள வேண்டும் என்று திருவேங்கடப் பெருமானை வேண்டிக் கொண்டு சிவப்பிரகாசம் என்னும் பெயரை மாற்றித் திருவேங்கடப் பெருமான் நினைவா வேங்கடசாமி என்று பெயரிட்டனர்.*

### கல்வி

*நடுக்காவேரியில் இருந்த தொடக்கப் பள்ளியில் நான்காம் வகுப்புவரை ந.மு.வே.பயின்றார்.அப்போதெல்லாம் நான்காம்*

வகுப்புத் தேர்வு அரசினர் தேர்வாக இருந்தது. தேர்வில் ந. மு. வே. ஒவ்வொரு பாடத்திலும் முதன்மையாகத் தேறினார். இதற்காகப் பல பரிசுகளையும் பெற்றார். தொடக்கக் கல்வி முடிந்த பின் தம் தந்தையாரிடமே சில நூல்களைப் பாடம் கேட்டார். பிறகு, பகற்பொழுதில் வேளாண்மையில் ஈடுபட்டு உழைத்துவிட்டு, இரவில் தாமாகவே நன்னூல் முதலிய இலக்கண நூல்களைக் கற்றறிந்தார். பின்னர்த் திருவாளர் ஐ. சாமிநாத முதலியார் அவர்களின் அறிவுரைப்படி 1905 ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்தி வந்த பிரவேச பண்டிதத் தேர்வு எழுதி முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். அதற்குரிய பரிசுகளையும் பெற்றார். அச்சங்கத்தின் இரண்டாம் தேர்வாகிய பால பண்டிதம் தேர்வினை 1906 ஆம் ஆண்டில் எழுதி முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுப் பொற்பதக்கம் பரிசு பெற்றார். மூன்றாம் தேர்வாகிய பண்டிதத் தேர்வை 1907 ஆம் ஆண்டில் எழுதி முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றுத் தங்கத்தோடா பரிசு பெற்றார். இப்பரிசினைப் பாண்டித்துரைத் தேவர் தம் கைகளாலேயே வழங்கி நாவலருக்குப் பெருமை சேர்த்தார். மூன்று தேர்வு களிலும் முதன்மையாளராகத் தேர்ச்சி பெற்றுப் பரிசுகளும் பெற்றதால் ந. மு. வே. அவர்களின் புகழ் தமிழ் நாடெங்கும் பரவியது. கல்வி முடிந்தபின் ந. மு. வே. அவர்கட்குத் திருமணம் ஆயிற்று.

### ஆற்றிய பணிகள்

ந. மு. வே. அவர்கள் 1908இல் திருச்சி எஸ். பி. ஜி. கல்லூரியில் தமிழாசிரியராகச் சேர்ந்து பணியாற்றினார். பின் 1909இல் கோயம்புத்தூர் தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகச் சேர்ந்தார். நாவலரின் அறிவாற்றலையும் பாடம் கற்பிக்கும் திறனையும் அறிந்து மீண்டும் எஸ். பி. ஜி. கல்லூரி, தமிழாசிரியர் பணி ஏற்குமாறு வேண்டி ந. மு. வே. அவர்களுக்கு அழைப்பு விடுத்தது. அவர் கி. பி. 1910இல் மீண்டும் எஸ். பி. ஜி. கல்லூரியில் ஆசிரியர் பணியில் சேர்ந்தார். இவர் தமிழ் கற்பித்து வரும் காலத்தில் பெரும்பாலான ஆண்டுகளில் பி. ஏ. வகுப்பிற்குரிய தமிழ்த் தேர்வில்

இக்கல்லூரி மாணவர்களே முதற்பரிசாகிய தங்கப்பதக்கம் பெற்று வந்தனர். உலகப் பொருளாதார நெருக்கடி காரணமாக 1933 ஆம் ஆண்டு இக்கல்லூரி மூடப்பட்டமையால் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தாரின் அழைப்பினை ஏற்று அங்குச் சென்று தமிழ்ப்பணி புரிந்தார். அங்குச் சிறப்புறப் பணியாற்றி 30-6-1940இல் ஓய்வு பெற்றார். தம் குடும்பத்துடன் தஞ்சை வந்து தங்கினார். பின்னர்க் கரந்தைப் புலவர் கல்லூரியில் முதல்வர் பணியை ஏற்றுக்கொண்டு ஊதியம் பெறாமல் சிறப்புறப் பணியாற்றினார்.

### ந. மு. வே. இயற்றிய நூல்கள்

1. வேளிர் வரலாற்று ஆராய்ச்சி 1915இல் வெளியிடப் பட்டது.
2. நக்கீரர் என்னும் நூல் 1919இல் எழுதப்பட்டது.
3. கபிலர் என்னும் நூல் 1921இல் எழுதப்பட்டது. இவ்விரு நூல்களும் சென்னைப் பல்கலைக் கழகம், காசி இந்து பல்கலைக் கழகம், இலண்டன் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பி. ஏ. வகுப்பிற்குப் பாடமாக வைக்கப் பட்டிருந்தன.
4. கள்ளர் சரித்திரம் என்னும் நூல் 1923இல் எழுதப் பட்டது. கள்ளர் வகுப்பினரைப் பற்றி எழுதப்பெற்ற தாயினும், தமிழ் மக்கள் அனைவரைப் பற்றியும் பொதுவாக இதில் ஆராயப்பட்டுள்ளது.
5. கண்ணகியின் வரலாறும் கற்பு மாண்பும் என்னும் நூல் 1926இல் எழுதப்பட்டது.
6. சோழர் சரித்திரம் என்னும் நூல் 1928இல் எழுதப் பட்டது.
7. கட்டுரைத் திரட்டு - I, கட்டுரைத் திரட்டு - II ஆகியவையும் வெளிவந்துள்ளன. இதில் நாவலர் ந. மு. வே. எழுதிய பற்பல கட்டுரைகள் அடங்கியுள்ளன.

## ந. மு. வே. எழுதிய உரைகள்

1. தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வேண்டுகோளின்படி 1925இல் இன்னாநாற்பது, களவழிநாற்பது, கார்நாற்பது, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகிய நூல்லகளுக்கு உரையும், முகவுரையும் எழுதினார்.
2. 1925 - 1931இல் திருவிளையாடற் புராணத்திற்கு உரை எழுதப்பட்டது.
3. 1940இல் அகத்தியர் தேவாரத் திரட்டு உரைத் திருத்தம்,
4. தண்டியலங்கார பழைய உரைத்திருத்தம்,
5. யாப்பருங்கலக்காரிகை உரைத்திருத்தம் ஆகியன எழுதப்பட்டன.
6. கரந்தைப் புலவர் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த போது 1940 - 42இல் சிலப்பதிகார உரையும்,
7. 1942-44இல் மணிமேகலை உரையும்,
8. கரந்தைக் கவியரசு அரங்கவேங்கடாசலம் பிள்ளையுடன் அகநானூறு உரையும் ந. மு. வே. அவர்களால் எழுதப் பட்டன.

## சொற்பொழிவுத் திறன்:

நாவலர் ந. மு. வே. சொற்பொழிவாற்றும் திறன் மிக்கவர். தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாத அய்யர், மு. இராகவையங்கார், இரா. இராகவையங்கார், திரு. வி. க., இரா. பி. சேதுப்பிள்ளை, அரசஞ் சண்முகனார், கந்தசாமிக் கவிராயர், அருணாசலக் கவிராயர், மு. கதிரேசன் செட்டியார், கோவிந்தராச ஐயங்கார், கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளை முதலியோருடன் நாவலர் அவர்கள் பல்வேறு அமைப்புக்களிலும், சங்கங்களிலும், விழாக்களிலும், கல்லூரி களிலும் ஆற்றியுள்ள சொற் பொழிவுகள் எண்ணிறந்தன. கொழும்பிலுள்ள தமிழன்பர்கள் வேண்டுகோளின்படி

1939 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் அவர் இலங்கை சென்று விவேகானந்த சங்கம் முதலிய சங்கங்களிலும் சொற்பொழிவு களாற்றித் திரும்பினார்.

ந. மு. வே. அவர்களின் சொற்பொழிவு என்றால் தமிழன்பர்கள் மிக்க மகிழ்ச்சியோடு கூடிவிடுவர். தமிழ் இலக்கியங்களுக்கு அவர் பொருள் விரித்துக் கூறும் அழகை அனைவரும் மெய்ம்மறந்து சுவைப்பர். தாம் படித்துச் சுவைத்தவற்றைப் பயனுள்ள முறையில் பிறருக்கும் தெளிவாக எடுத்துச் சொல்லுவதில் நாவலருக்கு இணை நாவலர் அவர்களே எனில் அது மிகையாகாது.

**கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல்.**

என்பார் வள்ளுவப் பெருந்தகை. அவ்வாறே தம் பேச்சைக் கேட்போரைத் தன்பால் ஈர்த்துக் கொள்வதோடு கேளாத வருக்கும் அவர் பேச்சைக் கேட்க வேண்டும் என்னும் விருப்பம் ஏற்படக் கூடிய அளவுக்குச் சொற்பொழிவாற்றும் திறனை ந. மு. வே. பெற்றிருந்தார். நாவலர். ந. மு. வே. அவர்களின் சொற்பொழிவால் நல்ல தமிழ் நடை ஓங்கியது.

## நாவலர் பட்டம்

24-12-1940இல் சென்னையில் சென்னை மாநிலத் தமிழர் சங்கச் சார்பில் சென்னை மாநிலத் தமிழர் மாநாடு நடை பெற்றது. ந. மு. வே. அவர்களின் தமிழறிவையும் சொற்பெருக்காற்றும் திறனையும் பாராட்டிப் போற்றும் வகையில் இப்பேரவையில், அறிஞர்கள் கூடி, அவருக்கு **நாவலர்** என்னும் பட்டமளித்துச் சிறப்பித்தனர்.

## நாவலர் ந. மு. வே. வாழ்க்கையில் சில நிகழ்ச்சிகள்

நாவலரின் பண்பு நலம், புலமைத் திறன், அஞ்சா நெஞ்சம், தூய வாழ்க்கை முதலியவற்றை அனைவரும் அறிந்து கொள்ளுதல் நலம். எனவே அவற்றை உணர்த்தும் முகத்தான் அவர் வாழ்க்கையில் நடந்த சில நிகழ்ச்சிகள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

1908ஆம் ஆண்டில் காஞ்சி காமகோடி பீடாதிபதி - சங்கராச்சாரிய சுவாமிகள் நடுக்காவேரிக்கு வந்திருந்த போது ந.மு.வே. அவர்கள் பண்டிதத் தேர்வில் முதன்மையாகத் தேறி, தங்கத் தோடா பரிசு பெற்ற செய்தியை அறிந்திருந் தமையால், அவரைத் தாம் தங்கி இருந்த வீட்டிற்கு அழைத்து வரச் செய்து பொன்னாடை போர்த்தி மகிழ்ந்தார்.

1912ஆம் ஆண்டில் நாவலர் ந. மு. வே. தம் வீட்டில் ஒரு சாய்வு நாற்காலியில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தார். காலை பத்து மணியளவில் ஒருவர் வந்து அவரை வணங்கி வரவேற்று ஒரு நாற்காலியில் அமரச் செய்தார். வந்தவர் சட்டை அணியாமல் ஒரு போர்வையைப் போர்த்திக் கொண்டிருந்தார். சிலப்பதிகாரத்தில் சில இடங்களில் பொருள் விளங்கவில்லை என்றும், அவற்றை விளக்க வேண்டும் என்றும் நாவலரிடம் அவர் கேட்டுக் கொண்டார். அவரும் அவற்றை விளக்கினார். இதேபோல் அவர் தொல்காப்பியத்திலும் சில ஐயப்பாடுகளைத் தீர்த்துக் கொண்டார். அவர் வணங்கிச் சென்றபின் நாவலர் தம் தம்பியை நோக்கி, இப்போது வந்து சென்றவர் யார் தெரியுமா? என்று கேட்டார். நாவலரின் தம்பி இப்போது வந்து சென்றவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் என்று விடையிறுத்தார். இந்நிகழ்ச்சி ந. மு. வே. அவர்களின் தமிழ்ப் புலமையைத் தெரிவிக்கின்றது.

ந. மு. வே. அவர்களின் தந்தையார் வேதாந்த நூல்களை ஆழ்ந்து கற்றவர். ந.மு.வே. திருச்சியிலிந்து கோடை விடுமுறையில் நடுக்காவேரிக்கு வரும்பொழுது தம் தந்தை யாருடன் வேதாந்த சித்தாந்த வாக்கு வாதங்கள் நடத்துவார். தந்தையார் என்ற முறையில் நாவலரின் தந்தையார் அதட்டிப் பேசுவார். மகன் என்ற முறையில் ந. மு. வே. அடக்கத்தோடும், பணிவோடும் பேசுவார். ஆனாலும் தம் கருத்துக்களை ந. மு. வே. அழுத்தம் திருத்தமாய் நிலை நாட்டி விடுவார்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டுவிழா இராமநாதபுரம் மன்னர் ப. இராசராசேசுவர சேதுபதி தலைமையில் நடைபெற்றுது. அவர்களுடன் வந்திருந்த

அவைப்புலவராகிய திருவாளர் இரா. இராகவையங்கார் அவர்கள் விழா நடைமுறை விதிகளை மீறி மற்றொருவர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தபோது அவருக்கு ஒரு மறுப்புக் கூறினார். உடனே நாவலர் எழுந்து 'தாங்கள் சமத்தானப் புலவராய் இருக்கலாம். ஆயினும் ஒருவர் பேசும் போது இவ்வாறு குறுக்கே எழுந்து பேசுவது சால் பாகாது' என்று கூறினார். அவையில் பரபரப்பு ஏற்பட்டது. இராகவையங்கார் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அமர்ந்தார்.

சேலம் செவ்வாய்ப்பேட்டைத் தமிழ்ச் சங்கத்தின் ஓர் ஆண்டுவிழா தமிழறிஞர் திருவாளர் மு. இராகவையங்கார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நாவலர் ந. மு. வே. சொற்பொழிவாளராகச்சென்றிருந்தார். விழாவில் தலைமை தாங்கிய இராகவனார் அவர்கள் தம் முகவுரையில் திருமங்கை யாழ்வாரின் பெருமைகளைப் பற்றிக் கூறத் தொடங்கியவர் சில தவறான சொற்களைக் கூறிவிட்டார். உடனே நாவலர் எழுந்து திருமங்கையாழ்வாரைத் திருமங்கை மன்னன் என்பர் தாங்களும் மன்னன் என்று கூறிய வாயால் இவ்வாறு பேசுவது சான்றாண்மை யாகுமா? என்று கேட்டார். தலைவர் திடுக்குற்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

பூவாளூர் சைவ சித்தாந்த சபையின் ஓர் ஆண்டுவிழா, திரு. வி. க. தலைமையில் நடைபெற்றது. நாவலர் ந. மு. வே. அவர்களும் திரு. கா. சு. பிள்ளை அவர்களும் சொற் பொழிவாற்றச் சென்றிருந்தனர். சுயமரியாதை இயக்கம் தீவிரமாக இருந்த காலம் அது. இவ்வியக்கத்தைச் சேர்ந்த பெரும் பேச்சாளர்களும் இவ்விழாவுக்கு வந்திருந்தனர். தலைவர் பேசத் தொடங்கியதும் இவர்களிடமிருந்து ஒன்றன்பின் ஒன்றாகக் கேள்விக் கணைகள் புறப்பட்டன. குழப்பம் ஏற்பட்டது. தலைவர் அமைதியை நிலை நாட்ட முயன்றார். பயனில்லை. உடனே நாவலர் எழுந்து கேள்வி கேட்பவர்களை நோக்கி, 'உங்களுக்கு உண்மையான ஐயங்களிருந்தால் அவற்றைத்தாளில் எழுதிக் கொடுங்கள். முடிவில் அவைகளுக்கெல்லாம் யானேவிடையளிக்கிறேன். இவ்வாறு செய்யாமல் அவையின் நடைமுறை விதிகளை

மீறிக் கேள்விகள் கேட்டு விழா நடைபெறாமல் தடுப்பது உங்கள் நோக்கமானால் அதற்கு யான் இடம் தரேன்' என்று கூறி அமைதி ஏற்பட வழி வகுத்தார். எந்த நேரத்திலும் எந்த ஐயப்பாட்டிற்கும் விடையளிக்கும் அளவுக்கு நாவலரின் தமிழ்ப் புலமை மேலோங்கி இருந்தது.

சைவ சித்தாந்த சமாஜ ஆண்டுவிழா திருச்சி மலைக் கோட்டை நூற்றுக்கால் மண்டபத்தில் 1941இல் நடைபெற்றது. ந. மு. வே. அவர்கள் திருவாசகம் என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்ற இருந்தார். நிகழ்ச்சிக் குறிப்பும் இவ்வாறே அச்சிடப்பட்டு விட்டது. ஆனால் நாவலர் அவர்கள் சொற்பொழிவாற்ற எழுந்த போது தலைவர் திருப்பாதிரிப் புலியூர் ஞானியாரடிகள் நாவலரைத் திருக்குறளைப் பற்றிப் பேசுமாறு ஆணையிட்டார். அவ்வாறே, நாவலர் 'திருக்குறளும் விரிநூற் கேள்வி பரிமேலழகர் உரையும்' என்னும் பொருள் பற்றி மிகச் சிறப்பாகச் சொற்பொழிவாற்றி முடித்தார். எந்த விதத் தயாரிப்பும் முன்னறிவிப்புமின்றி நாவலர் அவர்கள் தலைவர் கட்டளைக்கு இணங்கச் சிறப்பான முறையில் சொற்பொழி வாற்றியதைக் கண்டு அவையோர் வியந்து பாராட்டினார்.

1940ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் திருப்பதியில் அனைத்து இந்தியப் பத்தாவது கீழ்த்திசைக் கலை மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில் நடக்கவிருந்த சொற்போரில் திருவஞ்சைக்களம்தான் சேரர் தலைநகர் என நிலைநாட்ட ந. மு. வே. சென்றிருந்தார். திரு. இரா. இராகவையங்கார் கரூவூர் தான் சேரர் தலைநகர் என நிலைநாட்டச் சென்றிருந்தார். சொற்போர் தொடங்கு முன் இராகவையங்கார் நாவலரை அணுகித் தம் சார்பாகப் பேசும்படியும் இல்லையெனின் மையமாக விட்டு விடும் படியும் கேட்டுக்கொண்டார். நாவலரோ அவ்வேண்டு கோளை ஏற்க மறுத்துத் தம் வாதத் திறமையால் திருவஞ்சைக்களம்தான் சேரர் தலைநகர் என்பதை நிலை நாட்டினார்.

நாவலர் திருச்சி பாதிரியார் ஈபர் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது 20 மாணவர்கள் சேர்ந்து மணற் பரப்பில்

நிலாச்சோறு உண்பதற்காக அவரையும் உடனழைத்துச் சென்றிருந்தார்கள். உண்டு முடிந்த பின் தம் ஆசிரியரை நோக்கி ஏதாவது அறிவுரை கூறவேண்டும் என்றார்கள். நாவலர், நாராயணசாமி என்னும் மாணவரை நோக்கி, "நாராயணசாமி! நீதான் நன்றாகப் பாடுவாயே, ஏதாவது ஒன்று பாடு," என்றார். அவர் தேவாரத்தில் ஒரு பாட்டை இசையுடன் பாடினார். பாடி முடிந்ததும் நாவலர் அப்பாடலுக்கு ஒருமணிநேரம்பொருள் விரித்துவிளக்கம்கூறினார். நாவலரின் இளவல் திரு. ந. மு. கோவிந்தராயர் பி. ஏ. எல். டி., அவர்களைச் சந்தித்தபோது இந்தச் செய்தியை நாராயணசாமி அவர்களே நேரில் கூறியதுடன், "அவர்கள் பொருள் கூறிய குரல் இன்னும் என்காதுகளில் ஒலித்துக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது" என்றும் கூறினாராம்.

நாவலரிடம் பாடம் கேட்ட பலர், "இவர் என்னிடம் தமிழ் பயின்றவர், கற்பிக்கும் திறமையுடையவர்" என்று அவர் அளிக்கும் ஒரு சான்றிதழைக் கொண்டே உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர் ஆயினர். இஃது நாவலரின் அறிவுத் திறத்தை உலகுக்குணர்த்தும் செய்தியன்றோ?

### நகைச்சுவை உணர்வு

நாவலரின் இளவல் தொடக்கப்பள்ளி மாணவராயிருந்த போது ஒருவர் தேள்கடி மந்திரம் என்று சில புரியாத சொற்களைச் சொல்லிக் கொடுத்து ஒருவருக்கும் சொல்லி விடாதே என்று எச்சரிக்கை செய்திருந்தார். ஆனால் அவரோ உடனே அம் மந்திரத்தை ஒரு சிறு கற்பலகைத் துண்டில் எழுதி எல்லோரும் பார்க்கும்படியாக ஒரு சுவரில் பதித்து வைத்தார். இதைப் பார்த்த நாவலர் ந. மு. வே. "என் தம்பி இப்பொழுதே இராமானுசர் ஆகிவிட்டானே" என்று நகைச் சுவையோடு கூறினார்.

### தமிழ்த் தொண்டும் மறைவும்

நாவலர் ந. மு. வே. அவர்களின் தமிழ்ப்பணி அளவிடற்கரியது.தமிழாசிரியராகவும்,சொற்பொழிவாளராகவும், கட்டுரையாளராகவும், உரையாசிரியராகவுமிருந்து அவர் தமிழுக்கு

*ஆற்றியுள்ள தொண்டுகள் மிகப்பலவாகும். தமிழ்மொழி வரலாற்றிலும், தமிழ் வளர்ச்சியிலும் நாவலர் ந. மு. வே. அவர்களின் பங்கு என்றென்றும் போற்றப்பட வேண்டிய தாகும்.*

*தம் வாழ்நாள் முழுதும் தமிழுக்காகவே வாழ்ந்துவந்த நாவலர் ந. மு. வே. அவர்கள் கரந்தைப் புலவர் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டே தமிழிலக்கியங்களுக்கும் உரைகள் எழுதி அணிசேர்த்துவந்த நேரத்தில், முப்பதாண்டுகளுக்கும் மேலாக அவரை நலிவுறுத்திவந்த ஈளைநோய் 28.3.1944 ஆம் ஆண்டில் அவரின்னுயிரைப் பறித்துக் கொண்டுவிட்டது. நாவலர் ந. மு. வே. அவர்களின் இழப்பு நற்றமிழுக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அவர்கள் விட்டுச் சென்ற அவர்தம் படைப்புக்கள் இறவாப் புகழுடையனவாகும்.*

***வீ. உலக வூழியன்***

★ ★ ★

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்பாசிரியர் உரை | |
| | பதிப்புரை | |
| | **நக்கீரர்** | |
| | முகவுரை | 3 |
| 1. | நக்கீரர் வரலாறு | 5 |
| 2. | நக்கீரரைப் பற்றிய புராண கதைகளின் ஆராய்ச்சி | 16 |
| 3. | நக்கீர தேவரியற்றிய அந்தாதி முதலியவற்றின் ஆராய்ச்சி | 26 |
| 4. | களவியலுரை யாராய்ச்சி | 36 |
| 5. | நக்கீரர் இயற்றிய பாட்டுக்களின் ஆராய்ச்சி | 46 |
| | **கபிலர்** | |
| | முகவுரை | 65 |
| 1. | தமிழ்ச் சங்க வரலாறு | 67 |
| 2. | கபிலர் வரலாறு | 86 |
| 3. | பெயர் முதலியவற்றின் ஆராய்ச்சி | 104 |
| 4. | குறிஞ்சிப் பாட்டு ஆராய்ச்சி | 121 |
| 5. | குறிஞ்சிக்கலி ஆராய்ச்சி | 147 |
| 6. | மற்றைய அகப்பகுதிகள் | 162 |
| 7. | புறப்பொருட் பகுதியும் பிறவும் | 172 |
| | **அகத்தியர்** | **185** |
| | **இளம்பூரணம்** | **227** |

நக்கீரர்

வரலாறு

# முகவுரை

***ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி***
***யேங்கொலிநீர் ஞாலத் திருளகற்று - மாங்கவற்றுண்***
***மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது***
***தன்னே ரில்லாத தமிழ்.***

அமிழ்தினு மினிய நம்தமிழ் மொழியினை முச்சங்க நாளினும் பிற்றை நாளினும் ஆராய்ந்து, நல்லறிவின் முற்றுப் பேறுடையராய் விளங்கிய புலவர் பல்லாயிரவராவர். அன்னவரியற்றிய நூல்களும், பாட்டுக்களும் துறைதொறும் எண்ணிலவாகும். அவற்றுட் பல காலவயத்தானே மறைந் தொழிந்தமையின், அவற்றை யியற்றிய புலவர் பெயருள்ளும் பல மறைவனவாயின. எனினும், சிற்சில ஆண்டுகளாகச் சில பெரியோர்களின் அரிய முயற்சியால் தமிழ்ப் பழநூல்களுள் எஞ்சியுள்ளன வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. அவைகளிலிருந்து பன்னூறு புலவர்களின் பெயரை அறிகின்றோம். அவைகளை வெளிப்படுத்திவரும் பெருந்தகை யாளர்கள் பால் தமிழ் மக்கள் அனைவரும் நன்றி பாராட்டக் கடன்பட்டோராவர்.

வெளிவந்த நூல்களுட் சிலவே தமிழின் பழமை, பெருமை களை விளக்குதற்குப் போதியவாகும். அங்ஙனமாகவும், பிறமொழி யாளர்கள், அவ்வம் மொழியிற் புலவராயிருந்தாரின் சரிதங் களையும், அவர்களியற்றிய நூற் பொருணுட்பங்களையும் ஆராய்ந்து விரித்தெழுதி மாணவர்கள் கற்கும்படி செய்வது போல், தமிழ் மக்கள் செய்திலர். சில சிறந்த புலவர்களைப் பற்றித் தம்மனம் போனபடி சிலர் புனைந்துவிட்டனர். தமிழ்ப் புலவர் பலரையும் பற்றி ஆராய்ந்து தொகுத்தெழுதிய புத்தகங்கள் இரண்டொன்றேயுள்ளன. அவையும் தக்காங்கு விரித்தெழுதப் பட்டில. இரண்டொரு புலவர்களைப் பற்றியே சற்றுவிரிவாக எழுதிய புத்தகங்களுள்ளன. ஆகலின் தமிழ்ப் புலவர் பலருடைய வரலாறுகளையும் விரித்தெழுத வேண்டு மென்னும் ஆசை யாற்றூண்டப்பட்டு, நல்லிசைப் புலவர்களின் பெருமைகளை உள்ளவாறு விளக்குதற்குச் சிறிதும் தகுதியில்லாத யானும், நக்கீரனாரைப் பற்றி முதலில் எழுதி வெளியிடத் துணிந்தேன்.

இஃது ஐந்தாறு வருடங்களின் முன்பே எழுதப்பெற்ற தாகலின், 1915 - ஆம் ஆண்டில் நான் எழுதி வெளியிட்ட ஓர் சிறு புத்தகத்திலும் இதனைச் சுட்டுமாறு நேர்ந்தது. எனினும், இப்பொழுது, முன் எழுதியிருந்தவற்றிற் சிலவற்றை மாற்றியும், சில சேர்த்தும் எழுதியுள்ளேன். நான் எழுதியவற்றிற் பிழைகள் பல இருப்பினும், உண்மையை ஆராய்ந் தெழுதவேண்டு மென்னும் என் நோக்கத்தை மதித்து, அறிவுடையோர் ஆதரிப்ப ரென்னும் துணிபுடையேன்.

என்பாற் பேரன்புடையவர்களான என் **பழைய மாணாக்கர்கள்** இதனை வெளிப்படுத்துமாறு முன்வந்து உதவி புரிந்தார்கள். அவர்கள் எவ்வகை நலனும் பெற்றுப் பிறர்க்கென முயலும் பெற்றியராய் நெடிது வாழுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளின் றிருவருளைச் சிந்திக்கின்றேன்.

இது விரைவில் அச்சிடப்படுதற்குப் பெரிதும் உதவிபுரிந்த உண்மைத் தமிழன்பரான **திருவாளர் S. அற்புதசாமி உடையார்., B.A., L. T., அவர்களுக்கும் இதனை வெளிப்படுத்துதவிய கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினர்க்கும்** நன்றி பாராட்டக் கடமைப் பட்டுளேன்.

**மு. வே.**

# 1. நக்கீரர் வரலாறு

## முன்னுரை

**நக்கீரர்** படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டு வந்த பழங் குடியினரான முடியுடைத் தமிழ்வேந்தர் மூவருள்ளே ஈண்டிய சிறப்பிற் பாண்டியரானோர் வழியமர்ந்த பழவிறன் மூதூராகிய பீடுமிக்க மாடமதுரையிற் சங்கமிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப் புலவர் குழாத்துட் பல்லிசை நிறுத்த படிமையோராவர். இவர், குடிப் பிறப்பாகிய உடையுடுத்துக், கல்வியாகிய மலர்சூடி, ஒழுக்க மென்னும் விழுக்கலன் பூண்டு, வாய்மை யென்னு முணவுண்டு, நடுவுநிலையென்னும் நகரின்கண் தூய்மையென்னும் ஆதனத் தமர்ந்து, அழுக்காறின்மை, அவாவின்மை யெனப்படும் இரு பெரு நிதியமும் ஒரு தாமீட்டுந் தோலா நாவின் மேலோராகித், தமக் கொப்பாரும் மிக்காருமில்லையாக விளங்கினரென இவரது வரலாறு கூறாநிற்கும். அக்காலத்துப் புலவரெல்லாரும் பாட்டியற்றிய மட்டிற் பெயர் சிறந்தாராக, இவர், பாட்டுப் பல் புனைந்ததன்றி, ஆலவாய்ப் பெருமா னடிகளருளிய பொருணூலுக்குப் பொருள் காணாது மயங்கிய யாவருந் தெருளுமாறு சிறந்ததோருரை கண்டு புகழ்சிறந்து விளங்கினர். அவ்வுரை பின்னுளோருரை கட்கெல்லாம் உரையாணியாய் நிற்பதொன் றென்னலாம். இன்னணம் பல்லாற்றானும் புகழ்மிகப் படைத்த இவ்வாசிரியர் வரலாற்றினை யாம் அறிந்து கோடற்குக் கருவியாயிருப்பன இவரியற்றிய நூல் உரைகளும், திருவிளையாடல் முதலிய புராணங்களும், பிறவுமாம்.

### பெயர்க்காரணம்

இவரது இயற்பெயர் **கீரன்** என்பது. இப்பெயரின் பொருள் அக்காலத்து வழங்கிய ஏனைப்பல பெயர்ப் பொருளுமொப்பவே யின்னதெனத் துணிந்திடற்கரிதாக வுள்ளது. **பாலப்பன்** என்பது இவரது பிள்ளைத் திருநாமம் என்றும், இவர் புலமை நிரம்பி யோராய்த் தமிழ்ச் சங்கமடைந்த பின்னர் முற்பெயரின் பொருளுக்கேற்பவே, **'கீரன்'** என அழைக்கப் பட்டனரென்றும் ஒரு சாரார் கூறுவர். கீரன் என்பது 'வாக்மி' எனப் பொருள்

படுவதோர் வடசொற் சிதைவென்று பிறிதொருசாரார் கூறுவர். பிறர் பிறவாறுங் கூறுப. இதன் பொருள் யாதானும் ஆக. கீரந்தை, கீரங்கண்ணன், கீரங்கீரன் எனத் தமிழ்ச் செய்கை முடிபுற்றடிப்பட்டு வழங்குஞ் சொற்களையெல்லாம் தக்க ஆதாரமின்றியே வடசொல்லெனக் கூறி விடுதல் கருத்தன்றாம். இவர் கலையெலாம் நிரம்பிக், கூரியவறிவும், சீரியவொழுக்கமுமுடையராய் விளங்கிய போழ்து இவரது சிறப்புநோக்கி நகரவிடைச் சொல்லும், 'ஆர்' விகுதியும் தந்து **நக்கீரனார்** என அறிஞரெல்லாம் வழங்குவாராயினர். 'குலநினையல் நம்பி' என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளுரையில், 'நப்பின்னை' யென்பதனை விளக்குழி - 'நப்பின்னை - அவள் பெயர். ந - சிறப்புப் பொருளுணர்த்துவதோரிடைச்சொல்; நச்செள்ளை, நப்பாலத்தன், நக்கீரன் என்றாற்போல' என நச்சினார்க்கினியர் கூறுதல் காண்க. இவர் தந்தை[1] கணக்காயரென்பது இவர்க்கு வழங்கும் கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்னும் பெயரானும், இவர் மகனார்[2] கீரவிகொற்றனார் என்பது களவியலுரையானும் அறியப்படுவன. கணக்காயர் என்னுஞ் சொற்குப் பிள்ளைகளைக் கூட்டமாகச் சேர்த்து வைத்து, அரிச்சுவடி என வழங்கும் தமிழ்க் கணக்குப் பயிற்றுவிப்பவர் என்று ஒரு சாரார் பொருள் கூறுப. தமிழெழுத்துக்களின் றொகுதிக்குத் தமிழ்க்கணக்கு, தமிழ் நெடுங் கணக்கு எனப் பெயருளவாயினும், ஈண்டு அதுவே பொருளெனக் கொள்ளுமாறில்லை. தமிழ்ப் பழ நூல்களை யெல்லாம் கீழ்க்கணக்கு மேற்கணக்கெனப் பகுத்திலக்கணங் கூறலானும், 'கணக்கினை . . . . . கற்றலிற் கேட்டலே நன்று' என வழக்காறுண்மையானும், கணக்கென்பது நூல் என்னும் பொருட்டாதல் பெறப்படும். நூல்களெல்லாம் ஒவ்வோரளவினவாக இயன்றமையின் கணக்கென வழங்கப்பட்டன போலும்? சமயக்கணக்கர் என்புழியும் கணக்கு இப்பொருட்டாதல்வேண்டும். 'எழுத்துமெண்ணுங் கணக்கென்றாகும்' என்று பிங்கலத்தில் எண்ணுடன் வைத்தோதிய எழுத்து இலக்கணமென்னும் பொருளதாகுமெனல் அமைவுடைத்தேயாகலின் இலக்கணமும் கணக்கெனப்படுமென்க. இனி, 'கணக்காய ரோத்துரைப் போர்', 'கணக்காயர் நூலுரைப்போர்' என்று நிகண்டுகள் கூறுவதும், 'கணக்காயர்' என்று கீழ்க் கணக்குக்கள் கூறுவதும், கணக்காயராவார் தொல்கேள்வித்

1. குறுந்தொகையில் ஓர் பாட்டு கணக்காயன் றத்தன் பாடியது என்றிருப்பது கொண்டு இவரது இயற்பெயர் தத்தன் என்று சிலர் கருதுகின்றனர்.

2. கீரங்கொற்றனார் என்பது எழுதுவோராற் றிரிபுற்றது போலும்?

துறை போகிய நல்லாசிரியன்மா ரென்பதனை நன்கு விளக்கு வனவாகும். மதுரைக் கணக்காயனார் பாடிய பாட்டுக்கள் தொகைநூல் பலவற்றிற் காணப்படுதலே யவரது புலமைக்குத் தக்க சான்றாகும்.[1] இவ்வாறாகலின் 'மகனறிவு தந்தையறிவு', 'மகனுரைக்கும் தந்தை நலத்தை' என்ற முதுமொழிகளின்படி நக்கீரரது அறிவு மாட்சிக்கு அவரது பிறப்புங் காரணமாய் நின்றமை காண்க.

## குலம்

இனி, இவர் குலத்தைப் பற்றியும் பலர் பலவாறு கூறாநிற்பர். 'கொங்குதேர்வாழ்க்கை' என்னுஞ் செய்யுட் பொருள்பற்றிச் சொக்க நாதர்க்கும் நக்கீரனார்க்கும் வாது நிகழ்வுழி,

***அங்கங் குலுங்க வரிவாளி னெய்தடவிப்***
***பங்கம் படவிரண்டு கால்பரப்பிச் - சங்கதனைக்***
***கீர்கீ ரெனவறுக்குங் கீரனோ வென்கவியை***
***யாராயு முள்ளத் தவன்.***

என்று சொக்கர் வெகுண்டு கூறாநிற்ப, அதற்கெதிராக நக்கீரரும்,

***' சங்கறுப்ப தெங்கள்குலந் தம்பிராற் கேதுகுலம்***
***பங்கமறச் சொன்னாற் பழுதாமே - சங்கை***
***யரிந்துண்டு வாழ்து மரனாரைப் போல***
***விரந்துண்டு வாழ்வ திலை.'***

என இறைவரைப் பழித்துரைத்தனர்; என்று ஓர் கதை வழங்கு கிறது. இதற்கு ஆதாரமாகக் காணப்படுவது பழைய திருவிளை யாடலிலுள்ள,

***அங்கங் குலுங்க வரிவாளி னெய்யென்றோர்***
***பங்கக் கவிதை பரமன் சொலவிளிந்து***
***சங்கறுப்ப தெங்கள்குலந் தம்பிராற் கேதென்றோர்***
***துங்க முறுங்கவிதை சொன்னா னெதிர்துணிந்து.***

என்னுஞ் செய்யுளொன்றே. இச்செய்யுள் தானும் இதற்கு முன்பின் உள்ள செய்யுட்களை நோக்குழி அவ்விடத்திற்கு வேண்டாத தொன்றாகக் காணப்படுதலின், இது பின்னுளோர் இடைப் புகுத்ததெனக் கோடலே யேற்புடைத்து. எல்லா முழுமுதன்மையு முடையராய், எல்லா வான்மாக்களையும் அடிமையாகவுடைய விறைவர் நக்கீரனாரைக் கோட்டியுட்

1. சிறந்த புலவராயினார் நெடுங்கணக்குக் கற்பித்தல் கூடாதென்பது எம்கருத்தன்று.

குடிபழித்தனரெனலும், நல்லிசைப் புலவராகிய கீரனாரும் அதற்கெதிராகப் பழித்துரைத்தா ரெனலும் தெருளற்பாலவாமோ? அன்றி, இக்கதைக்குச் சிறந்த வாதாரமுமில்லை. இக்கதை பற்றுக் கோடாகவே புலவர் புராணமுடையாரும், நக்கீரரை நெய்தனிலத் துள்ளவோர் பரதவரில்லிற் பிறந்தவரெனக் கூறிப் போயினர்.

இக்கதையினையும்,

> ***' வேளாப்பார்ப்பான் வாளரந்துமித்த***
> ***வளைகளைந் தொழிந்த கொழுந்து'***

என்னும் அகப்பாட்டடிகளையும்,

> ***யாகம் பண்ணாத ஊர்ப் பார்ப்பான் - இவர்களுக்***
> ***குச் சங்கறுக்கையுந் தொழில்***

என்னும் உரைக் குறிப்பையும் ஆதாரமாகக் கொண்டு, நக்கீரர் வேள்வி யியற்றாது சங்கறுக்குந் தொழில் மேற்கொண்ட பார்ப்பாராவர் எனக் கூறுவர், **திரு. மு. இராகவையங்கார்**. அவர், அங்ஙனம் வேள்வி யியற்றாது தாழ்நிலை யெய்தியவர்க்கு வேட்பித்தல், ஓதுவித்தல் முதலிய சிறந்த தொழில்கள் உளவெனக் கூறுவர். அதற்கவர் கண்டவாதாரம்,

> ***' திருமணி குயிற்றுநர் சிறந்த கொள்கையோ***
> ***டணிவளை போழுநர்'***

என்னுஞ் சிலப்பதிகாரவடியில் 'சிறந்த கொள்கை' என்றிருப் பதுவே யாகும். சிலப்பதிகாரத்திற்கு உரை கண்ட இருபெரும் புலவரும் இதற்கு இப்பொருள் கொள்ளவில்லை. இவ்விடத்தில் 'சிறந்த கொள்கை' என்பதற்கு வேட்பித்தல் முதலிய பொருள் கொள்ள விருக்கும் பொருத்தத்தினை யாம் அறிந்திலம். அன்றியும் வேட்டலே இலராயினார்க்கு வேட்பித்தல் முதலிய கூறுதல் எங்ஙனம் பொருத்தமாகும்? இவர் கொண்ட படியே வைத்துக் கொளினும் சங்கறுக்குந் தொழிலுடையார் பார்ப்பார் மாத்திரமேயோ?

இனி, 'வேளாப்பார்ப்பான்' என்பதன் பொருளை ஆராய்ந்து காண்போம். 'பார்ப்பான்' என்பது ஒரு காரணப் பொதுச்சொல். இச்சொல் அடையின்றிக் கூறுங்கால் இடுகுறி மாத்திரையாய் ஒரு சாதியுட் பிறந்தானைக் குறிக்கும். அடையொடு படுக் குங்கால் வேறு பிறரைக் குறிப்பதுமாகும்.[1] 'மூவகை, ஆரெயி

1. பரிபாடல்

லோரழ லம்பின் . . . எய்த . . பைங்கட் பார்ப்பான்' என்புழிச் சிவனைக் குறிக்கின்றது. 'பார்ப்பான் குண்டிகையிருந்த நீரும் குளுகுளு கொதித்தது.'[1] என்புழி அயனைக் குறிக்கின்றது. இவ்வாறே வேளாப்பார்ப்பார் என்பது கொற்றொழில்புரியும் மரபினரைக் குறிப்பதாகும். 'இது புகழாவாகை', 'அடுபொருநன்' என்பனபோல வெளிப்படையாகும். பொற்கொல்லராகிய கம்மாளர்கள் தம்மை 'விசுவப் பிராமணர்' எனக் கூறிக் கொள் வதற்கு ஆதாரம் இருத்தல் வேண்டும். அகப் பாட்டுரைகாரர் 'ஊர்ப் பார்ப்பான்' எனக் கூறுவதும் இக்கருத்துப் பற்றியே போலும்? விசுவப் பிராமணன் எனினும் ஊர்ப்பார்ப்பான் எனினும் ஒக்கும். விசுவம் = உலகம். உலகம் என்னுஞ் சொல் நிலத்தின் ஒவ்வொரு பகுதியையும் குறித்தல் இருவகை வழக்கினும் காணப்படுகிறது. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நிலப்பகுதிகளை, காடுறையுலகம், மைவரையுலகம், தீம்புனலுலகம், பெருமணலுலகம் எனத் தொல்காப்பியர் கூறுதல் காண்க. அது மற்றும் சுருங்கி 'ஊர்' என்னும் பொருளில் வருதலை, ஊர்வாயிலை 'உலக விடைகழி' யென்றும், ஊரம்பலத்தை 'உலகவறவி' யென்றும் முறையே சிலப்பதிகாரமும், மணிமேகலையுங் கூறுதல் கண்டு தெளிக. வேளாப்பார்ப்பான் என்றது வாளரத்திற்கு அடை. வளை களைதற்குக் கொள்ளினும் இழுக்கின்று. இங்குக் கூறியவாற்றால் நக்கீரர் பார்ப்பாராவர் என்பதற்குப் பிரமாணமின்மை காண்க. அவர் அந்தணராகார் என்பது எம் கருத்தன்று. இன்ன மரபினரவரெனத் துணிதற்குத் தக்க மேற்கோள் எமக்கிதுகாறுங் கிடைத்திலது. வேண்டிடின் யாம் அவரை, விருந்து போற்றிய வேளாளரென்றும், அகப்பொருள் விரித்த புகழ்ப்பெரு வணிகரென்றும், புவியரசேத்து கவியர சென்றும், செந்தண்மை பூண்ட அந்தணரென்றும், பிறபிற வாறும் பாராட்டுதல் பொருந்துவதாகும்.[2]

## சமயம்

இவரது சமயம் சைவமென்றே நுல்களானும் பரம்பரை வழக்கானு மறியப்படுகின்றது. இவரே யன்றிச் சங்கப் புலவர் பலரும் சைவரென்றே சைவ நூல்கள் கூறா நிற்கும். 'பொய்யடிமையில்லாத புலவர்' என்று ஆளுடைய நம்பிகள் திருத்தொண்டத்தொகையு ளோதியது சங்கப் புலவர்களையே

1. கம்பராமாயணம்
2. சீர்கருணீகர் புராணம் என்பதொன்று நக்கீரரியற்றிய தென்றும் அதனால் அவர் வேளாளரில் கருணீகர் அல்லது கணக்கர் வகுப்பினரெனக் கருதப்படுகிறதென்றும் கூறுவாரும் உளர்.

யெனப் பின்னுள்ள பெரியோர் பலருங் கொண்டனர். முதல் இராசராச சோழர் காலத்து நம்பியாண்டார் நம்பி யியற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியில், பொய்யடிமையில்லாத புலவரைக் குறித்து,

> **‘ தரணியிற் பொய்ம்மை யிலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்**
> **பரணர்நக் கீரர் முதனாற்பத் தொன்பது பல்புலவோர்**
> **அருணமக் கீயுந் திருவால வாயரன் சேவடிக்கே**
> **பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே’**

என்று கூறியிருத்தலுங் காண்க. தமிழகத்துத் தொன்று தொட்டுள்ள மதம் சைவமேயாமென்பதும் ஒரு சாரார் கொள்கையாகவுள்ளது. அஃது எவ்வாறாயினும், பழந் தமிழ் மக்கள் எத்தெய்வத்தையும் எத்துணையும் நிந்தை புரியுங் குணமுடைய ரல்லரெனச் சங்கத்துச் சான்றோர் நூல்களானே நன்கறியலாகும். நக்கீரர் தொகையிலும், பாட்டிலும் இயற்றியுள்ளன மட்டில் அவர் எம்மதத்தினையாதல் கடிந்திருப்பது காண்கின்றிலம். மணிமிடற்றிறை, மணிவண்ணன், வாலியோன், முருகன், இந்திரன் என்ற கடவுளர்களைப் புகழ்ந்துரைத்திருக்கின்றனர். முருகக் கடவுள்பால் மெய்யன் புடையரென ஆற்றுப்படையா லறியலாகும். பதினொராந் திரு முறையிலுள்ள பிரபந்தங்கள் சைவசமயத்தின் மேம்பாட்டைக் கிளந்தோதுகின்றன.

## பெருமை

இவர் பொய்யில் கேள்விப் புலமை யுடையாரென்பது இவரியற்றிய நூல்களானே யறியக்கிடக்கின்றது. அகத்தினும், புறத்தினும் பலதிணையும் நலமுறப் பாடுந் திறலுடையவர். ஒவ்வொரு பொருளையும் நேரிற் கண்டாங்குப் புலங்கொளச் சொல்லும் கலங்கா வறிவினர். இவர் யாருடனும் எத்துணையும் சலிப்பின்றி வாதியற்றி வலங்கொள்ளும் மதுகை யுடையா ரென்பதும்; தாம் மெய்யல்லதென வறிந்த வொன்றைத் தமக்கு வரும் ஏதங் குறித்தாதல், வேறெவ்வாற்றானாதல் மெய்யெனக் கொள்ளலும் அங்ஙனமே தாம் மெய்யென வறிந்ததை நெகிழவிடுதலும் செய்கிலாக் கடைப்பிடியுடையா ரென்பதும்; திரிபுரமெரித்த விரிசடைப் பெம்மானுடன் வாதித்து நெற்றிக் கண் காட்டினும் குற்றம் குற்றமே எனச் சாதித்தன ரென்னு மிவரது வரலாற்றாற்றெளியப்படும். இவர், எவரினுங் காட்டில் நுண்மாணுழை புலமுடையரென்பது, அளவியையார்க்கு மறிவரியான்றந்த களவியற்கு மெய்ப் பொருள் கண்டமையாற்

றெளியப்படும். இவர், மனமாசு தீர்ந்து ஒன்னார்த்தெறலும் உவந்தாரை யருளிலும் கைவரப் பெற்றவரென்பது, 'கொண்டான்' என்பான் சாவவும் வாழவும் பாடியவாற்றாற் றெளியப்படும். அச்சரிதை வருமாறு:-

நக்கீரனார் சங்கத்து வைகுநாளில் ஆரியம் வல்ல 'கொண்டான்' என்னுங் குயவன், பட்டி மண்டபமேறி, 'வட மொழியே' சிறப்புடையது தமிழ் சிறப்புடைய தன்றெனத் தமிழை யிழித்துக் கூறினான். அது கேட்ட நக்கீரர், 'வடமொழியே தமிழைச் சிறப்புடைய மொழியென்று ஒப்புக் கொள்ளுகின்றது தமிழினை யிகழ்ந்த நின்னை இப்பொழுது இறக்கும்படி கூறுவல்' என்று,

> ***' முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி***
> ***பரண கபிலரும் வாழி - அரணிலா***
> ***ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான்***
> ***ஆனந்தஞ் சேர்கசு வாகா',***

எனக் கூறலும், அவன் அவ்விடத்தே வீழ்ந்து உயிர் துறந்தான். அது கண்ட ஏனையோர் வந்து வேண்டிக்கொள்ள,

> ***' ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த***
> ***காரியத்தாற் காலக்கோட் பட்டானைச் - சீரிய***
> ***அந்தண் பொதியி லகத்திய ராணையாற்***
> ***செந்தமிழே தீர்க்கசு வாகா,'***

என்று பாட அவன் உயிர்த்தெழுந்தனன் என்பது,

> ***' நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த***
> ***மறைமொழி தானே மந்திர மென்ப,'***

என்னும் செய்யுளியற் சூத்திர வுரையில், பேராசிரியரும், நச்சினார்க் கினியரும் இவ்வெண்பாக்களை யெடுத்துக்காட்டி 'இவை, தெற்கில் வாயில் திறவாத பட்டி மண்டபத்தார் பொருட்டு, நக்கீரர் ஒருவன் வாழவும் ஒருவன் சாவவும் பாடி, இன்னவாறாகவெனச் சபித்தற் பொருட்டாய் வந்த மந்திரம் பாட்டாய் வருதலின் அங்கதமாயின' என்று கூறிப் போந்தனர். இங்ஙனம் தொல்லாசிரியர்களாலே நிறைமொழி மாந்தராக எடுத்துக்காட்டப் பெற்றமையின் ஆசிரியர் நக்கீரனாரது பெருமை அளப்பரிய தொன்றாகும். இவரது கல்வி வன்மைபற்றி 'இனைவறு குறுமுனி யிலக்கணம் பெறப், புனைதரும் இலக்கியப் புலவர் சிங்கம்.' என்று கற்பனைக் களஞ்சியமாகிய துறை மங்கலம் ***சிவப்பிரகாசர்*** கூறினர். கவியரசாகிய ***கச்சியப்ப***

**சிவாசாரியரும்**, 'பொய்யற்ற கீரன் முதலாம் புலவோர் புகழ்ந்த, ஐயன்' என முருகப் பெருமானைப் பாராட்டுமுகத்தானே நக்கீரனாரது பெருமை தெரித்தனர். சுருங்க வுரைக்கில், இவர் சங்கப் புலவர்களிற் றலைவராய் வீற்றிருந்தமையே இவரது பெருமையை நன்கு புலப்படுத்தும் என்க.

## காலம்

இனி, இவரும், இவருடனாகவும் சற்று முன்னாகப் பின்னாகவும் விளங்கிய அரசர்களும், புலவர்களுமாகிய இன்னவர் தம் காலத்தை வரையறுப்பான் எண்ணி ஆராய்ச்சி செய்தோர் பலராவர். அவரெல்லாம் தாம் தாம் கண்ட ஆதாரங்களினாலே பாரத காலத்திருந்து கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுவரை இவர்கட்கு வேறு வேறு காலங்களைக் கற்பிப்பாராயினார். அவற்றுட் பலவும் பிழையாதல் காட்டிக் கண்டிக்கப்பட்டு, இவர்கள் கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் விளங்கியவரென்னுங் கொள்கையே ஆராய்ச்சி வல்லுநர் பலரானும் நிலை பெறுத்தப் பட்டு வருதலின் யாம் இவர் காலம் பற்றி இங்கு வேறாராய்ச்சி நிகழ்த்துதல் வேண்டா. நக்கீரர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் விளங்கியவராவரெனக் கருதப்படுகிறது. இவர்காலத்து விளங்கிய புலவர்களும், அரசர்களுமாவார்:-

| | |
|---|---|
| 1. ஆலத்தூர் கிழார் | 6. கல்லாடனார் |
| 2. ஆவூர்மூலங்கிழார் | 7. கூடலூர்கிழார் |
| 3. இடைக்காடனார் | 8. மதுரைமருதனிளநாகனார் |
| 4. இடைக்குன்றூர்கிழார் | 9. மாங்குடி கிழார் |
| 5. ஔவையார் | முதலியோரும்; |

1. தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்
2. உக்கிரப் பெருவழுதி
3. இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன்
4. இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி
5. யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை
6. சேரமான் மாவெண்கோ
7. குட்டுவன் சேரல் முதலியோரும் ஆம்.

இவரன்றிக் குறுநிலமன்னரும், பிரபுக்களும் பலரிருந்தனர். **கபிலர், பரணர், சாத்தனார்** முதலிய புலவர்களும் ஆரியப்படை கடந்த **நெடுஞ்செழியன், கிள்ளிவளவன், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, செங்குட்டுவன், செல்வக்கடுங்கோ வாழியாதன்** முதலிய அரசர்களும், **பாரி, பேகன்** முதலிய வேளிர்குல வள்ளல்களும் நக்கீரனார் இளைஞராயிருந்த காலத்தும், சிறிது முற்பட்ட காலத்தும் விளங்கினவராவர். **கரிகாற் பெருவளத்தான், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்**[1] என்னும் தமிழ்ப் பேரரசர்களும் இவர்க்குச் சிறிது முன்னாக கி. பி. முதல் நூற்றாண்டில் விளங்கினராவார். இனி, அக்காலத்துத் தமிழகத்தின் நிலைமையைத் துருவி நோக்கின், அஃது உலகத்து ஏனைப் பகுதிகளினும் விளக்கமுற்றிருந்ததென்பது தேற்றமாம். உழவு, வாணிகம், நெய்வு, சிற்பம் என்னுந் தொழில்களும், உலகப் பொது வாழ்விற்கு வேண்டப்படும் பிறதொழில்களும் வளமுற்றிருந்தன. தமிழகம் தமிழ் வரசரது காவலிற்றானே பொருந்தி இருந்தது. தமிழ் வேந்தர்கள் ஒரொருகால் தம் தம் நாட்டினைப் பிரித்து ஆட்சிபுரிந்தும், ஒருவர் ஒருவரின் முரணி யடுத்தடுத்துப் போர் நிகழ்த்தியும் போந்தனர் என அறியப்படினும், அவர்கள் தத்தம் குடிகளை நன்கு புறங்காத்து, அன்னவர்க்குக் கண்ணும், ஆவியும் என்ன விளங்கினரெனத் தெரிகிறது. வீரத்தினும், நீதியினும், வண்மையினும் மேம்பட்டு விளங்கினர். தமிழ்ப் புலவர்கள் கூறும் மாசற்ற பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து, வரையா வள்ளன்மை காட்டிப் போற்றி அவர்களை நன்கு மதித்து வந்ததன்றித் தாமும் புலமை சிறந்து விளங்கித் தம்முடைய உயரிய நோக்கங்களை யமைத்துப் பாட்டியற்றியும் போந்தனர். புலவர்களும்,

> ***‘ பொருபடை தரூஉங் கொற்றமும் உழுபடை***
> ***ஊன்றுசால் மருங்கி னீன்றதன் பயனே’***

என்றும்,

> ***‘ நல்லதன் நலனும் தீயதன் தீமையும்***
> ***இல்லை யென்போர்க் கினனா கிலியர் ’***

என்றும்,

> ***‘ நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட***
> ***அறநெறி முதற்றே யரசின் கொற்றம்’***

என்றும்,

1. கரிகாலன் முதலியோரை நக்கீரர் பாடியிருப்பது சென்றகால நிகழ்ச்சிபற்றி யாகும்.

***' வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்கபுலம் போலத்
தானும் உண்ணான் உலகமுங் கெடுமே '***

என்றும்,

***' நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே.'***

என்றும் அரசர்களை நெருங்கி யறிவுகொளுத்தியும் போந்தனர். இவ்வாறாகலின் புலவரெல்லாம் அரசராயினார்க்கு அமைச்சர் போன்றும், நண்பர்போன்றும், இன்றியமையாது விளங்கின ரென்னலாம். மற்றும் அக்கால வியல்பெல்லாம் இங்கு விரித்தெழுதின் 'மற்றொன்று விரித்தல்' ஆகுமென்று இவ்வளவில் நிறுத்துவேமாயினேம்.

## இடம்

இவர் மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரரென்றும், மதுரை நக்கீரரென்றும் கூறப்படுதலின், இவரது பதி மதுரையே யாகும்.

## நக்கீரரியற்றிய நூல்கள்

1. திருமுருகாற்றுப்படை
2. நெடுநல்வாடை
3. கைலைபாதி காளத்தி பாதித் திருவந்தாதி
4. திருவீங்கோய்மலை எழுபது
5. திருவலஞ்சுழி மும்முணிக்கோவை
6. திருவெழுகூற்றிருக்கை
7. பெருந்தேவபாணி
8. கோபப்பிரசாதம்
9. காரெட்டு
10. போற்றித்திருக்கலி வெண்பா
11. கண்ணப்ப தேவர் திருமறம்
12. நக்கிரர் நாலடி நாற்பது
13. களவியலுரை

என்பன.

இவையன்றி நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு என்பவற்றிற் சிற்சில பாடல்களும், திருவள்ளுவ மாலையிலுள்ள 'தானே முழுதுணர்ந்து' என்னும் வெண்பாவும் இவரால் இயற்றப்பெற்றுள்ளன. பதினோராந் திருமுறையி லுள்ளவற்றில் திருமுருகாற்றுப் படையல்லாத பிரபந்தங்கள் இவரியற்றியவையல்லவென்பது சிலர் கருத்து. அது பின் ஆராய்ச்சி செய்யப்படும்.

# 2. நக்கீரரைப் பற்றிய புராண கதைகளின் ஆராய்ச்சி

இனி, நக்கீரர் சம்பந்தமாகப் புராணங்கள் கூறுவனவற்றை ஆராய்ந்து காண்பாம். சிவாநுபூதிமானாக விளங்கிய **பரஞ்சோதி யாரியற்றிய திருவிளையாடற் புராணங் கூறுமாறு.**

நக்கீரர், கபிலர், பரணர் முதலாகப் புலவர் நாற்பத்தெண்மர் திருவாலவாயுடைய இறையனாராகிய சோம சுந்தரக்கடவுளா லளிக்கப்பட்ட தெய்வமாப் பலகை மேவிச் சிவனா ராணை தாங்கிச் செந்தமிழாராய்ந்து போந்தனர். அன்னாருடன் இறையனாரும் ஒருவராகப் புலவர் நாற்பானொன்பதின்மராவர். அவரங்ஙனம் தமிழாய்ந்து போதருவாராக, மதுரையம்பதியில் அரிமாசுமந்த அரசுகட்டிலேறி அற்றைநாட் செங்கோலோச்சிய திருவுடை மன்னனாவான், திருவாலவாயடிகட்கெனத் திருநந்தனவனம் உளதாக்கி, நாளும் சண்பகமாலை சாத்திச் சோமசுந்தரரைச் சண்பகசுந்தர ரெனப் பாராட்டிப் போற்றி வந்தமையின் சண்பகமாறன் என்றழைக்கப்பட்ட பாண்டியன் வங்கிய **சூடாமணி** என்பான். அவன் வயந்த காலத்து மாதேவியுடனேகி இளமரக்காவில் எழிலுறு செய்குன்றிற் பொழுதினை யினிது கழிப்பிவருவோன், ஆண்டு ஓர் வியத்தகு நறுமணமுணர்ந்து, இம்மணம் யாண்டு நின்று போந்ததாமெனச் சிந்தித்து மனைவியை நோக்கினன். நோக்குழி அன்னாள் கூந்தலினின்று அந்நறுமணமுண்டாதல் கண்டு, 'இவள் கூந்தற்கு இஃது இயற்கையினுளதோ? அன்றிச் செயற்கையினுள தாயிற்றோ? இவ்வுண்மையறிந்துகொள்வல்,' என்று கருதி என்னுளத்துளதாய் ஐயத்தைத் தவிர்க்கவல்லார் இது பெறுக என்று ஆயிரம்பொன்னடங்கிய கிழி ஒன்றினைச் சங்கமண்டப முன்னர்த் தூக்குவித்தான். அது கண்ட புலவரெல்லாரும் அரசன் மனக்கருத்திதுவென அறிய மாட்டாராயிருந்தனர். அப்பொழுது ஆதி சைவமரபிற் பிறந்தோனும் பிரமசாரியுமாய தருமி யென்னும் அந்தணன் சோமசுந்தரக் கடவுளின் சந்நிதியடைந்து 'எம் பெருமானே! அடியேன், இளம்பருவத்தே தந்தை தாயரையிழந்த தமியேன்; இப்பொழுது ஓர் கன்னிகையை

வதுவை முடித்துக் கொள்ளும் வேட்கையுடையேன்; இல்லறத் தொடு பொருந்து தலின்றி நின்னடி யருச்சிக்கு நீர்மையனாவனோ? ஐய! நீ யாவும் அறிதி. யாவர்க்கும் தந்தையும் தாயுமாகிய பெரும! என் மனத்துயர் போக்குதற்கிது சமயம். பாண்டியன் மனக் கருத்தினைப் புலப் படுத்தும் செய்யுளொன்று தந்தருள்க, என்றிங்ஙனம் பலவாறு இரந்து வேண்டினன். வேண்ட இறைவனும் உவந்து,

> ***' கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத்***
> ***தும்பி காமஞ் செப்பாது கண்டது மொழிமோ***
> ***பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்***
> ***செறியெயிற் றரிவை கூந்தலி***
> ***னறியவு முளவோ நீயறியும் பூவே.'***

என்னுஞ் செய்யுளை இயற்றித் தந்தருளினர். அந்தணனும், அது பெற்றுவந்து சங்கத்தார் முன் காட்டினன். அவர்கள் அதனைப் படித்து அதிலுள்ள சொற்பொருட் பொலிவினை வியந்து அரசனிடஞ் சார்ந்து அதற்குப் பொருள் கூறிக் காட்டினர். காட்ட அரசனும் அது தன் கருத்தோ டொருமைப்பாடுற்றிருத் தலின் சிரந்துளக்கி மகிழ்ந்து 'புலவருடன் சென்று தருமிபொற்கிழி பெறுக' என்றனன். என்ன அன்னவனும் மன்ன னாணைப்படி சென்று கிழியறுக்கும் எல்லையில் அவ்வழிப்போந்த கீரன் கண்டு தடுத்துச் செய்யுளைக் குற்றமுடைய தென்று கூறி விட்டனன். அதனைக் கேட்ட பனவனும் வாட்டம் மிகவுற்றுச் சிவசந்நிதி யடைந்து, 'இறைவ! நினது பாட்டிற்குச் சில்வாழ்நாட் சிற்றறிவுடைய புலவர் குற்றங்கூறினர். எனக்குப் பொருள் கிடைக்கா தொழியினும் ஒழிக. உலகத்தில் நின்னை யாவர் மதிப்பர்? நினக்கு இவ்விகழ்ச்சி யுண்டாயிற்றே, என்று சொல்லி யிரங்கினான். இரங்க அந்தச் சுந்தர விடங்க மூர்த்தி யானவர், ஒரு புலவராய்த் தோற்றஞ்செய்து கற்றுச் சொல்லிகள் உடன்வரச் சங்கத்தையடைந்து, 'நம் கவிக்குக் குற்றமியம்பினோர் யார்?' என்ன, நக்கீரர், 'நானே யியம்பினேன்' என்றார். 'குற்றம் யாது?' என்று வினவ, 'கூந்தலுக்கு மலரின் சார்பாலன்றி மணமின்மையின் இக்கவி பொருட்குற்ற முடைத்து' என்றிறுத்தார் நக்கீரர். 'பத்தினிப் பெண்டிர் கூந்தலும் தேவமாதர் கூந்தலுமோ?' என, 'அவையும் அன்னவே' என்றனர். நீ வழிபடுங் கடவுளாய திருக்காளத்தி நாதர் பாகத்தமர்ந்த ஞானப்பூங் கோதையின் கூந்தலும் அத்தன்மைத்தோ?' என, 'அவர்' ஒரு சிறிதும் அஞ்சாராய், 'அதுவும் அற்றே' எனச் சாதித்து நின்றனர். அப்பொழுது

எம்பெருமானார் தமது நுதற்கண்ணினைச் சிறிதே காட்ட, அது கண்டும் அவர் அஞ்சிற்றிலராய் நும்முடல மெல்லாம் கண்ணாயிடினும் நுமது பாடல் குற்றம் குற்றமே, எனச் சாதித்து 'நுதல்விழிச் செந்தீயின் வெம்மைபொறுக்கலாற்றாது' பொற்றாமரை வாவியில் வீழ்ந்து மூழ்கினர். இறைவரும் தம் முருக் கரந்தருளினர். 'இன்னணம் நிகழ்ந்துழி' நக்கீரர் துன்பக் கடலுளாழ்ந்து வருந்துதலையும் அவரில்லாது சங்கமானது மெய்யுணர்விலாக் கல்விபோன்றும், வேந்தனில்லாக் குடி போன்றும் பொலிவுகுன்று தலையும் கண்டு, புலவரெல்லாரும் பொறுக்கலாற்றாராய் வேண்டுவார் வேண்டிற்றை யீந்தருளும் பரங்கருணைத் தடங்கடலாகிய சுந்தரேசர் சந்நிதியையடைந்து, குறையிரந்து நிற்ப' அவரும் தம் அருட்சத்தி யாராகிய உமா தேவியாரோடும் எழுந்தருளி வந்து, புலவர் பெருந்தகையாகிய கீரனாரை அருட்கண்ணால் நோக்கியருளினர். நோக்க நக்கீரனார் பசுகரணமெல்லாம் பதிரணமாகத் திகழப்பெற்று ஞானப் பூங்கோதையார் கூந்தற்குக் குற்றங் கூறிய பிழையினைப் பொறுத் தாண்ட பெருங்கருணைத் திறத்தினை நினைந்துநினைந் துருகுவோராய், **கைலைபாதி காளத்தி பாதியந்தாதி** பாடித் துதித்தனர். துதிக்க திருவடியைத் தந்து பிறவிக் கடலினின்றும் கரையேற்றுவிப்பாராகிய முதல்வர் நக்கீரனாரது கையினைத் தமது திருக்கையாற் பற்றி அவ்வாவியின் கரையேற்று வித்தருளினர். வடிவொடு பெயர் செயலொன்று மின்றியே மாற்ற மனங்கழிய நின்ற மெய்ப்பொருளாகிய பரமசிவன் அருட்கோலந் தாங்கி வந்து, திருக்கையாற் பரிசித்தற்கு எண்ணிறந்த பிறவிகளில் எல்லையில்லாப் புண்ணியஞ் செய்துவந்த புலவரேறாகிய நக்கீரர் பின் **கோவப்பிரசாதமும், பெருந் தேவபாணியும் எழு கூற்றிருக்கையும்** பாடினர். தருமியும் பொற்கிழி பெற்றுச் சென்றனன். ஆலவாயுடையாரும் நக்கீரருக்கு மகத்துவமிக்க அகத்திய முனிவரால் இலக்கணவுபதேசஞ் செய்வித்தார் என்பது. சங்கத்தார் கலக நிகழ்ச்சி முதலியவும் இந்நூலிற் கூறப்பெற்றுள. இச்சரிதம் நம்பி திருவிளையாடலிற் சிற்சில வேறுபாடுகளுடன் காணப்படுகின்றது. அவ்வேற்றுமைகளிற் சிறந்தன சில காட்டுதும்.

சிவபிரான் புலவர்களோடிருந்து தமிழாராயுங்கால், **'அன்பினைந்திணை'** என்றெடுத்துப் பொருணூலருளிச் செய்தார். அதுகண்டு புலவரெல்லாம் மகிழாநிற்ப, நக்கீரர் மாத்திரம் 'இஃது என்றமிழில் ஐந்தாம் பனுவலுக்கொப்பாகா' தென்றனர். பின்னர் சொக்கப்பெருமான் வேறொரு கவிதை சொல்ல அதனையும் சிறப்பில தெனவுரைத்தார். பின், ஆகாய வாக்கினால் இறைவனை

யுணர்ந்து அனைவருந் துதித்தனர். சொக்கநாதர் சங்கத்து வீற்றிருந்தபொழுது அவர்க்கு வழங்கிய பெயர் **மதுரைப் பேராலவாயர்**. **இறையனார்** என்பன. பொருளதிகாரம் 'இறையனார் பொருள்' என்னும் பெயருடன் விளங்குவதாயிற்று. நக்கீரர், 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் பாட்டிற்குக் குற்றங் கூறியபொழுது, புலவராக வந்த சொக்கநாதரால், 'அங்கங் குலுங்க' என்னுஞ் செய்யுள் கூறப்பட, அதற்கெதிராக நக்கீரரால், 'சங்கறுப்ப தெங்கள் குலம்' என்னுஞ் செய்யுள் கூறப்பட்டது. புலவரெல்லாரும் சுந்தரேசர் ஆணைப்படி முருகக்கடவு ளமிச மாகிய உருத்திரசன்மனார் முன்னிருந்து, இறையனார் பொருளுக்கு உரைகூறிவர, நக்கீரர், கபிலர், பரணர் இம் மூவருரையும் கேட்டபொழுது உருத்திரசன்மர் மெய்புளகுற்றுக் கண்ணீர் விடுத்தனர். அதுகண்ட புலவரெல்லாரும் மகிழ்சிறந்து அம்மூவருரையும் மெய்யுரையெனக் கொண்டு போற்றினர் என்பன. இந்நூல், இந்திரன் முடிமேல் வளையெறிந்த திருவிளையாடலில் நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடிய வரலாறு காணப்படினும் அப்பாடல்கள் பிற்காலத்து வெள்ளி என்பவராற் பாடிச் செருகப்பட்டன என்று குறிக்கப்பட்டிருத்தலின் அதனை யீண்டு எழுதிற்றிலம்.

திருப்பரங்கிரிப் புராணம் நக்கீரச் சருக்கத்தில் திரு முருகாற்றுப்படை பாடிய வரலாறு கூறப்படுகிறது. அது வருமாறு:-

நக்கீரர், கடவுளரில் சிவபிரானையும் மானுடரில் பாண்டி யனையும் தவிரப் பிறர் யாரையும் பாடுவதில் லென்றிருப்ப அஃதுணர்ந்த முருகக் கடவுளானவர் தம்மைப் பாடுவிக்கத் திருவுளத்தடைத்து, உக்கிரனண்டாபரணன் என்பானை அழைத்து 'சரவணப் பொய்கைக்கட் போதரும் நக்கீரரை ஒரு குற்றங்கற்பித்து மலையிற் சிறைப்படுத்துக, எனப் பணித்தனர். அண்டாபரணன் அப்பணியினைத் தலைமேற்கொண்டு நக்கீரர் சரவணப் பொய்கையிற் போதந்து சிவபூசனை புரிதரு போழ்தத்து அருகிலிருந்த அரச மரத்தினிலை யொன்றினைக் கிள்ளியிட அவ்விலையின் ஓர் பகுதி நீரினும், பிறிதோர் பகுதி நிலத்தினும் வீழ்ந்து அவ்விரு பகுதியும் முறையே மீனும் பறவையுமாகி ஒன்றையொன்று பற்றியிழுப்புழி அதனைக் கண்ட கீரனார் இரக்கமேற்கொண்டு அவற்றைப் பற்றி நகத்தினாற் பிரித்து விட்டனர். விடவே அம்மீனும் பறவையும் வாயங்காந்து குருதி கான்று உயிர் நீத்தன. உடன், அண்டாபரணன், 'முருகப்

பிரானது பரங்குன்றத்திற்கொலைப் பாதகம் புரிந்தனை, என்று கூறி அவரையெடுத்துச் சென்று, ஓர் மலைமுழைஞ்சினுள் ளடைத்திட்டான். நக்கீரனார், இது கந்தனைப் பாடாக்குறை யெனவுணர்ந்து, திருமுருகாற்றுப்படை பாடினர். அப்பாட்டினிறுதி 'கிழவோனே' என்று முடிந்திருத்தல் கண்டு குமாரக் கடவுளானவர் நக்கீரரது கனவினிற்றோன்றி, 'நம்மைக் கிழவன் என்றனை. நாம் கிழவராய் வரப் பன்னாள் செல்லவேண்டும்.' என்று சொல்லி மறைந்தருளினர். பின்னர், நக்கீரர்,

**' குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்**
**புன்றலைய பூதப் பொருபடையா - யென்றும்**
**இளையா யழகியா யேறூர்ந்தா னேறே**
**யுளையாயெ னுள்ளத் துறை,'**

என்னும் வெண்பாவாற் றுதித்தனர். இப்பாட்டினில் 'இளையாய்' என்றழைத்திருப்பது கண்டு நெடுவேளானவர் மனமகிழ்ந்து, பல்வகைத் தேவரும் புடைசூழ எழுந்தருளி, வேற்படைவிடுத்துக் குகையினைத் திறந்து நக்கீரனாரைச் சிறைவீடு செய்தனர். அவரும், வெளிவந்து, அறுமுகப் பெருமானை மணிமயின் மேற்கண்டு, பலவாறு போற்றிசெய்து, திருமுருகாற்றுப் படையினை மெய்யன்புட னோதுவார்க்கு வேண்டும் வரங்களைத் தந்தருள வரம் பெற்று, நாடொறும் முருகப் பெருமானை வழிபட்டு வரு வாராயினர் என்பது.

சீகாளத்திப் புராணம், நக்கீரச் சருக்கத்தில், இறைவர்க்கும் நக்கீரர்க்கும் வாது நிகழ்ந்ததும், நக்கீரர் திருமுருகாற்றுப் படையும், கைலைபாதி காளத்திபாதித் திருவந்தாதியும் பாடியது மாகிய வரலாறுகள் சில வேறு பாட்டுடன் காணப்படுகின்றன. அவை வருமாறு: -

நக்கீரர், 'கொங்குதேர் வாழ்க்கை' என்னுங் கவிக்குக் குற்றங்கூறி, உமையம்மையின் கூந்தற்கும் இயற்கை மணமின்றெனச் சலஞ் சாதித்த காலையில், பாட்டியற் புலவராய் வந்த இறைவர், தமது நெற்றி நாட்டத்தையும், சடையினையும் காட்ட, 'நீ வடிவெலாங் கண்ணாகக் காட்டினும் நின்செய்யுள் இழுக்குடையதே. சடை கொண்டு வெருட்டல் வேண்டா. இதற்கு நான் தோற்றிலன்.' என்று கீரனார் கூறினர். கூற, முற்றுணர் புலவராய முதல்வர், 'எம்மொடு முரணி யிமயப் பூங்கொம்பின் மைம்மலி கூந்தலையும் பழித்துரைத்த நீ இம்மையிற் குட்ட நோயுற்றலைக.' என்றனர். என்னலும், நக்கீரர் அஞ்சி, மெய்பனித்துக், கழல்களில் வீழ்ந்திறைஞ்சி, 'கருணையங்கடலே! எந்தாய்!! நாயினேன்

*அறிவிலாது செய்த பிழையினைப் பொறுத்தருளிச் சாபப்பிணி தவிர்த்தாட் கொள்வாய்.' என்று வேண்டினர். வேண்டலும், கருணைவள்ளலானவர்,சினந்தணிந்து, 'சென்று நீ கயிலை காணில் தீரும் இக்கொடு நோய்' என்று கூறிக் கோயிலிற் புக்கனர். நக்கீரரும் பரமசிவனது சாபத்தின் விளைந்த பிணியானது உடலம் போர்ப்ப, 'இனி இதனைக் கயிலை கண்டொழிப்பேன்'. எனத்துணிந்து, புலவர்களை யெல்லாம் தனித்தனி விளித்து, 'நுங்களோடு உடனுறை வாழ்வு நீங்கும் ஒரு பெரும்பாவியேனை மறவன்மின்.' என்று சொல்லி அவரெல்லாம் தனித்தனி மார்புட னிறுகப்புல்லிக் கண்ணருவி சொரிந்து, உளங்குழைந் தழுதி ரங்காநிற்ப அரிதினிற் பிரிந்து வையையின் வடகரை யடைந்தனர். அடைந்தவர்,*

***' என்றினி மதுரை காண்பேம்! எப்பகல் சவுந்தரேசன்***<br>
***றன்றிருவடிகள் காண்பேம்! தாயையெஞ் ஞான்று காண்பேம்!***<br>
***வென்றிவேற் றரும வேந்தர் வேந்தனை யெந்நாட் காண்பேம்!***<br>
***ஒன்றுயிர்த் துணையாஞ் சங்கத் துறவையெப் பொழுது காண்பேம்!'***

*'மாட்சிமிக்க வறிவினையுடைய புலவரெல்லாம் எம்மை மறந்து விடுவரோ? அரசர் கோமகனும் நினையான் கொல்லோ? சங்கப் புலவர் நாற்பத்தெழுவரேன்று உலகங் கூறிவிடுமோ? தமிழின் இனிமையை இனியார்க்கெடுத் துரைத்திடுவேம்? என்று பலப் பல நினைந்து, கரநெறிகடந்து, புனல் நாடுபுக்குப், பெண்ணையும், பாலியுந் தாண்டித், திருவேங்கடங் கண்டு, ஏமகூடஞ் சென்று, கங்கை படிந்து, காசியுங் கேதாரமும் பணிந்து, வானுற நிவந்த இமயமலைக்கட் செல்லுவாராயினார், இன்னணம் உள்ளங்கால் வெள்ளெலும்பாக நடந்து கொண்டிருந்த புலவர் சிங்கமானவர், ஆண்டு ஓர் கடலனைய தடாகத்தையும் உலகினுக்கிட்ட ஒரு பெரும்பந்தர் போன்று தழை கஞலி, விழைதக நிற்கும் ஆலவிருக்கத்தையும் கண்டு சென்று, அவண் உளனமர்ந்திருப்பவர், அவ்வதிசயமரத்தின் இலையொன்று நீரினும் நிலத்தினும் பொருந்த விழுந்தது, மீனும் பறவையுமாய உருப்பெற்று, அவையொன்றை யொன்று கவ்வி யீர்ப்பக் கண்டு, விம்மிதமெய்தித் தாழ்த்து நின்றனர். உடன் ஒரு கொடிய பூதம் இவரை யெடுத்துச் சென்று ஒரு குகையினுள் அடைத் தேகிற்று. அங்கு அவ்வாறே அப்பூதத்தினால் முன்ன ரடைக்கப்பட்டிருந்த தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றொன்பதின்மரும் நக்கீரரைக் கண்டு இன்று, நீ வந்தமையின் நாம் ஆயிரமென்னும் தொகையுடைய ராயினேம். இனிப் பூதமானது நம்மனைவரையும் விழுங்கித் தன்*

வயிற்றுத் தீயினைத் தணிப்பதாகும். என்று அல்லலுற் றறைந்தனர். அது கேட்ட நக்கீரனார் சிறிதும் மனம் மாழ்கலின்றி அன்னவர்தம் இடரினை யகற்றத் திருவுளத்தடைத்து, 'ஆறிருதடந்தோ ளண்ணல் ஆறெழுத்தினையும் ஓதில் பிறவி யென்னும் அனாதி நோயுந்தீர்ந்து இன்ப வீட்டிற் குடிபுகுந்திருக்கலாமென்னின் வேறொரு பிணியகலுவதில் வியப்பு என்னுளது? ஐம்பூத வாயி னகப்படு முயிரை மீட்டுச் செம்பதுமத் திருவடி நீழலில் வைக்கும் குமரவேளுக்கு ஒரு சிறு பூதத்தாலுற்ற இந்நோய் தீர்த்தலரி யதாமோ?' என நினைந்து நினைந்தன நினைந்தாங் குதவும் **திருமுருகாற்றுப்படையினைப்** பாடினர். பாட, அறுமுகப் பெருமான் மயின்மிசை யிவர்ந்து தோன்றி, அனைவர்க்குஞ் சிறைவீடு செய்து, கீரனார் போந்த காரணங்கேட்டு, 'கைலை காண' எனத் தமது திருத்தந்தையார் பொதுவிற் கூறியிருத்தலின் தென்கைலை காணினும் இவருற்ற நோய் நீங்குமெனக் கருதி 'இக்குளத்தினின் மூழ்கிற் கயிலை காணுதி' எனப் பணித்தனர். அவரும் தம்மை உய்யக்கொண்ட பெருங்கருணை வள்ளலாகிய முருகக்கடவுளின் ஆணையைச் சிரமேற்கொண்டு, குளத்தினின் முழுகிப் பொன்முகரி யென்னும் புனித நதியில் நோய் நீங்கி யெழுந்து தென்கயிலாய மாகிய சீகாளத்தியைத் தரிசித்தார். தரிசித்து சீகயிலாயமும் சீகாளத்தியும் ஒன்றென்னுங் கருத்துடையராய்க் **கைலைபாதிகாளத்திபாதித்** திருவந்தாதியால் அவ்விரண்டினையும் மாறி மாறித் துதித்து உடற்பிணி தவிர்த் தாண்டாங்கு உயிர்ப்பிணியாய ஆணவ வல்லிருளகற்றி யாட் கொண்டருள வேண்டுமெனப் பிரார்த்தித்துக் காளத்தி யப்பருடைய திருவடி நீழலிற் கலந்தருளினார் என்ப.

நாம் இங்கெடுத்துக் கொண்ட நான்கு புராணங்களில் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலானது, அந்தாதி, கோவைப் பிரசாதம், பெருந்தேவபாணி, எழுகூற்றிருக்கை என்னும் நான்கு நூல்களையுஞ் சுட்டுகிறது. நம்பி திருவிளையாடல், அந்தாதியைச் சுட்டுவதுடன், இறையனார் களவிய லருளியவாறும், புலவரெல்லாம் அதற்குரை கண்டவாறும் கூறுகிறது. மற்றும் இந்நூல் கூறுகிற 'இறையனார் செய்யுளும்' 'நக்கீரரது ஐந்தாம் பனுவலும்' இன்னவெனப் புலப்படவில்லை. 'அங்கங்குலுங்க' 'சங்கறுப்பது' என்னும் இரண்டு வெண்பாக்களும் இதனிற் சுட்டப்படினும், இவற்றைச் சுட்டும் பாடற்கு முன்பின் உள்ள பாடல்களை நோக்குழி, அஃதியைபின்றி யிருத்தலின் அப்பாட்டுப் பின்னுளோர் இடைப்புகுத்து எனக் கோடல்வேண்டும். பரங்கிரிப் புராணம்

திருமுருகாற்றுப்படையுடன், 'குன்றமெறிந்தாய்' என்னும் வெண்பாவையுஞ் சுட்டுகிறது. சீகாளத்திப்புராணம் திருமுருகாற்றுப் படையையும் அந்தாதியையும் சுட்டுகிறது. 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் பாசுரத்தைப் பரங்கிரிப் புராண மொழிந்த மூன்று நூல்களும் சுட்டுகின்றன. நக்கீரர் இயற்றிய ஏனைய நூல் களையும், பாட்டுக்களையும் இந்நான்கு புராணமும் சுட்டிற்றில. பழைய திருவிளையாடலொன்றும் சொக்கநாதர் புலவரா யமர்ந்திருந்த பொழுது அவர்க்கு இன்ன பெயர்கள் வழங்கின வென்று கூறுகிறது. மற்றைத் திருவிளையாடலொன்றுமே பாண்டியன் பெயரைக் கிளந்தோதுவது. சீகாளத்திப் புராணம் அக்காலத்துப் பாண்டிநாட்டில் நிகழ்ந்த வற்கடத்தை விரித்துரைக் கிறது. திருவிளையாடற் புராணம் இரண்டினும் பலவிடத்து வற்கடங் கூறப்படினும், இக்கதை நிகழ்ந்த காலத்தை யொட்டிக் கூறப்பட்டில. திருப்பரங்கிரிப் புராணமானது திருமுருகாற்றுப் படை திருபரங்குன்றத்திற் பாடியதாகக் கூறுகிறது. சீகாளத்திப் புராணம் அது இமயமலையிற் பாடியதாகக் கூறுகிறது. பிற வேறுபாடுகளும் ஆராய்ந்தறிக. தமிழ்நாட்டுச் சரிதங்களை வடமொழி வாணர் தாம் தாம் கேட்டவாறும், தத்தமக்குத் தோற்றியவாறும், வேறு வேறு காலங்களில் வடமொழியில் எழுதிவைப்ப, அவற்றைத் தமிழினிற் பெயர்த்தெழுத நேர்ந் தமையின், இந்நூல்களில் இங்ஙனம் வேறுபாடுகள் காணப்படு கின்றன. இனி இக்கதைகளை யெடுத்துரைப்பவும் ஆதரிப்பவுமாய பிறநூன் மேற்கோள் முதலியன கூறுதும்.

தருமிக்குப் பொற்கிழி நல்குவிக்கச் சொக்கநாதர் 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் பாட்டருளியதும் அவர் புலவராய்ச் சங்க மேறியதும்,

> **' பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக்**
> **கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்**
> **பொற்குவை தருமிக் கற்புட னுதவி**
> **யென்னுளங் குடிகொண் டிரும்பய னளிக்குங்**
> **கள்ளவிழ் குழல்சேர் கருணையெம் பெருமான்.'**

எனக் கல்லாடத்தும்;

> **நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி**
> **நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்.**

எனத் திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தும் கூறப் பட்டுள.

இறையனார் களவிய லருளிச்செய்தது,

*' உலகிய னிறுத்தும் பொருண்மர பொடுங்க*
*மாறனும் புலவரு மயங்குறு காலை*
*முந்துறும் பெருமறை முளைத்தருள் வாக்கா*
*லன்பினைந் திணையென் றறுபது சூத்திரங்*
*கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோற்*
*பரப்பின் றமிழ்ச் சுவை திரட்டிமற் றவர்க்குத்*
*தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்'*

எனவும்,

*' ஐந்திணை வழுவா தகப்பொரு ளமுதினைக்*
*குறுமுனி தேறவும் பெறுமுதல் புலவர்க*
*ளேழெழு பெயருங் கோதறப் பருகவும்*
*புலனெறி வழக்கிற் புணருல கவர்க்கு*
*முற்றவம் பெருக்கு முதற்றா பதர்க்கு*
*நின்றறிந் துணரத் தமிழ்ப்பெயர் நிறுத்தி*
*யெடுத்துப் பரப்பிய விமையவர் நாயகன்'*

எனவும் கல்லாடத்தும்;

*' திருவால வாயமர்ந்த செழுஞ்சுடரைச் செழும்*
*பொருணூல், தருவானை'*

எனவும்,

*நுலின்கட் பொருள்பாடி நூலறிவார்க் கீந்தானை.*

எனவும் பெரிய புராணத்தும் கூறப்பட்டுள்ளது.

முக்கட்பெருமான் சங்கமமர்ந்து தமிழாராய்ந்தது,

*' சென்றணைந்து மதுரையினிற் றிருந்தியநூற் சங்கத்துள்*
*அன்றிருந்து தமிழாராய்ந் தருளிய வங்கணர்'*

எனவும்,

*'திருவாலவாயில், எம்மைப் பவந்தீர்ப்பவர் சங்க மிருந்தது.'*

எனவும், பெரிய புராணத் தோதப்பட்டது

முருக்கடவு ளமிசமாகிய உருத்திர சன்மனார் களவியற் பொருள் தெளிவுறுத்தது

*' மணிக்கா லறிஞர் பெருங்குடித் தோன்றி*
*யிறையோன் பொருட்குப் பரணர்முதல் கேட்பப்*
*பெருந்தமிழ் விரித்த வருந்தமிழ்ப் புலவனும்*
*பாய்பா ரறிய நீயே யாகலின்,'*

எனக் கல்லாடத்தும்;

***'திருத்தமிழ் மதுரைதன்னிற் சிவன்பொரு ணிறுக்கு மாற்றால்
உருத்திர சன்மனாகி யுற்றிடு நிமலன்'***

எனக் கந்த புராணத்தும் ஓதப்பட்டது.

'இறையனார்' என்னும் பெயரைத் தலைச் சங்க மிருந்த சிவனார்க்குக் கூறுவர் அடியார்க்கு நல்லார். 'பேராலவாயார்' என்னும் பெயர் நற்றிணையிலும், அகநானூற்றிலும், புறநானூற்றிலும் சில பாட்டுக்கள் பாடிய ஒரு புலவர்க்கு வழங்குகிறது. 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் பாட்டு, குறுந் தொகையில் இரண்டாவது செய்யுளாக அமைக்கப்பட்டுளது. திருவள்ளுவ மாலையிலுள்ள 'என்றும் புலராது' என்னும் வெண்பா இயற்றினாரும் இறையனாரே. திருக்குறள் அரங்கேற்றிய பொழுது வள்ளுவனாருடன் உருத்திர சன்மனார் வீற்றிருந் தனரென ஒரு வெண்பாக் கூறுகிறது. அகநானூறு தொகுத்தாரும் உருத்திரசன்மரே.

திருவிளையாடற்புராணம் கூறுகிற பாண்டியன் பெயர் வடமொழிவாணர் படைத்துக்கொண்டதாகல் வேண்டும். அக்காலத்து நெடுங்கிள்ளி, நெடுஞ்சேரல், நெடுஞ்செழியன் என்றாற் போலும் தமிழ்ப் பெயர்கள் வழங்கினவன்றிக் குலோத்துங்கன், இராஜ சேகரன் என்றாற்போலும் வடமொழிப் பெயர்கள் வழங்க வில்லை. ஆகலின் வங்கிய சூடாமணி என்னும் பெயர் பிற்காலத்தார் படைப்பு என்பதே துணிபு.

சீகாளத்திப் புராணங் கூறுகிற வற்கட நிகழ்ச்சி,

***'பன்னீரி யாண்டு பாண்டிநன் னாடு
மன்னுயிர் மடிய மழைவள மிழந்தது'***

என மணிமேகலையிலும்;

***'அன்றுதொட்டுப் பாண்டியனாடு மழைவறங்
கூர்ந்து வறுமையெய்தி'***

எனச் சிலப்பதிகாரத்தும்;

***அக்காலத்துப் பாண்டிய னாடு பன்னிரு
யாண்டு வற்கடஞ் சென்றது***

எனக் களவியலுரையிலும் கூறப்பட்டுளது. மற்றுஞ் சில அடுத்த அதிகாரத்திற் காட்டப்படும்.

# 3. நக்கீர தேவரியற்றிய அந்தாதி முதலியவற்றின் ஆராய்ச்சி

கைலைபாதி காளத்திபாதி யந்தாதி முதலாகத் திருக் கண்ணப்பர் திருமறம் ஈறாகப் பதினொராந் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ள நக்கீர தேவநாயனார் பிரபந்தங்களில், திருமுருகாற்றுப்படை யொழிந்த ஒன்பது நூல்களும் கணக்காயனார் மகனார் நக்கீரனாரியற்றிய வல்லவென ஒரு சாராரும், அவரியற்றியவே யெனப் பிறிதொரு சாராரும் கூறுப. அவ்விரு கொள்கையையும் ஆதரிப்பன இவையிவையென ஓர்ந்துணர் வேமாக.

1. பிற்காலத்தார் பாவின மெனக்கொண்ட கட்டளைக் கலித்துறை போல்வன சங்கநாளில் வழங்கவில்லை.

2. ஒரு செய்யுளி னந்தம் அடுத்த செய்யுளுக்கு ஆதியாக வரத்தொடுக்கப்படும் அந்தாதி, மும்மணிக்கோவை முதலிய பிரபந்தங்களும் பழைய நாளில் இயற்றப்பட்டில. இவற்றுக் கெல்லாம் தொல்காப்பியத் திலக்கணமு மில்லை.

3. திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை முதலிய பாட்டுக் களுக்கும், நக்கீரதேவர் அந்தாதி முதலியவற்றுக்கும் உள்ள நடைவேற்றுமை சாலவும் பெரிது.

4. சங்கத்தார் நூல்கள் பிற சமயங்களைத் தாழ்த்துக் கூறுவனவல்ல. அந்தாதி முதலியன அன்னவல்ல.

5. இவை பண்டையுரையாசிரியர்களால் எடுத்தாளப் பட்டனவுமல்ல.

இவையெல்லாம் இப்பிரபந்தங்கள் நக்கீரர் வாக்கல்ல என்பதனை ஆதரிக்கின்றன. மற்றும் இவைகளை யாராய்வோம்.

1. தொல்காப்பியராற் பாவினம் கூறப்படவில்லையென்பது உண்மை. சங்கத்தார் பாக்களே யியற்றிப் போந்தனர். அவற்றுள்ளும் வஞ்சிப்பா அருகியே வழங்குவதாயிற்று. ‘அடியின் சிறப்பே பாட்டெனப்படுமே’ என்னுஞ் செய்யுளியற் சூத்திரவுரையிற்

பேராசிரியரும்[1], 'தலையிடை கடைச் சங்கத்தாரும்' பிற சான்றோரும், நாற்சீரடியான் வரும் ஆசிரியமும், வெண்பாவும், கலியுமே பெரும் பான்மையுஞ் செய்தார். வஞ்சிப்பா சிறுவரவிற் றெனக் கொள்க. எனக் கூறினர். நச்சினார்க்கினியரும் இவ்வாறே கூறினர். எனினும் இப்பிரபந்தங்கள் பெரும்பான்மையும் பாக்களானியன்றவே யாகலானும், திருவலஞ்சுழி மும்மணிக் கோவையில் பிற்காலத்தார் பாவினத்து னொன்றாகக் கொண்ட கட்டளைக் கலித்துறைச் செய்யுள் காணப்படினும், அது தொல்காப்பியர் கூறியவாறு, கொச்சக வொருபோகு யாப்பின் வேறு பட்டு வந்ததாகக் கோடலமையு மாகலானும், இவ் வாதாரம் வலியுடையதாகாது. இவ்வொருபோகினிலக்கணத்தைத் 'தரவின்றாகி' என்னுஞ் சூத்திரத்து 'யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையது, கொச்சக வொருபோ காகுமென்ப' என்பதற்கு உரையாளர்கள் விரித்துரைத்தன கொண்டு தெளியலாம். சீவக சிந்தாமணிப் பாடல்களெல்லாமும் கொச்சகவொருபோகே யென்பர் நச்சினார்க்கினியர். 'தொல் காப்பியனாரையொழிந்த ஆசிரியர் பதினொருவருட் சிலர் இனமும் கொண்டார்' ஆகலின், அதனை இனமெனவே கொள்ளினும் அமையும்.

2. தொண்ணூற்றாறு வகையும் பிறவுமாகிய பிரபந்தங் கட்கும், செய்யுட்கள் அந்தாதியாக வருதற்கும், அடிகள் அந்தாதியாக வந்து தொடையுற்று நிற்றற்கும் தொல்காப்பியர் இலக்கணங் கூறிற்றிலர். எனினும் பிற்காலத்தார் அவ்வாறெல்லாங் கோடற்கு அவர் இடம் வைத்துச் சென்றனராவர். அவர், 'அம்மை' முதலாயின தொடர் நிலைச் செய்யுளுக்கு இலக்கணமாகக் கூறுமிடத்து, 'விருந்து' என்னும் வனப்புப்பற்றி 'விருந்தே தானும், புதுவது கிளந்த யாப்பின் மேற்றே, எனக் கூறினர். அதற்குப் பேராசிரியரும், 'புதிதாகத் தாம் வேண்டிய வாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்துவரச் செய்வது' என உரை கூறி, 'அது முத்தொள்ளாயிரமும்' பொய்கையார் முதலாயினார் செய்த அந்தாதிச் செய்யுளுமெனவுணர்க. கலம்பக முதலாயினவுஞ் சொல்லுப என்றிலக்கியமுங் காட்டினர். நச்சினார்க்கினியர்க்கும் அது கருத்தென்பது அவருரையா னறியப்படுவது. மற்றும் அவர், 'குழவி மருங்கினுங் கிழவதாகும்.' 'ஊரொடு தோற்றமு முரித்தென மொழிப.' என்னும் புறத்திணையியற் சூத்திரங்கட்குப் பொருளெழுதிய விடத்தும் பிள்ளைக்கவியும், உலாவும் என்றிவற்றைப் பொருளாகக் கொண்டனர். இன்னணம் வழக்கொடு சிவணிய வகைமையானே புதிது புதிதாக நூலியற்றல் ஆசிரியர்க்குக் கருத்தாதல் பெறப்படுகின்றமையின், நக்கீரர் முதலாயினார்

அந்தாதிச் செய்யு ளியற்றலிற் போந்த இழுக்கொன்று மின்மை யானும், சங்கநாளில் ஈறு முதலாகத் தொடுத்துப் பாடும் வழக்குண்டெடன்பதற்கு, ஐங்குறு நூற்றின் நெய்தல் எட்டாம் பத்தும், பதிற்றுப் பத்தின் நான்காம்பத்தும் அந்தாதியாகத் தொடர்புற்றிருப்பது கரியாக லானும் இன்னோரன்ன பிரபந்தங்கள் பண்டைநாளில் இலவெனக் கூறு மிதுவும் திட்பமுடைத் தாகாது.

3. எட்டுத்தொகை, பத்துப் பாட்டாதிய வற்றோடி வற்றிடை யுள்ள நடைவேற்றுமை யிறப்பவும் பெரிதே. அவற்றில் வட சொற்கள் எங்கேனும் ஒன்றிரண்டருகியே வழங்கும். இவற்றில், அவ்வாறின்றி, வடசொற்கள் மிகப் பல விரவியுள்ளன. சரணம், தீர்த்தன்,[1] தயா, அசலை, பாசுபதம், தேவாதிதேவன், பாதார விந்தம் என்றாற் போலும் வடசொற்களும், தொடர்களும், சந்திகளும் காணப்படுகின்றன. அவற்றில் அளபெடைகளும் 'செய்பு' என்னும் வாய்பாட்டுச் சொற்களும் மிக்குள்ளன. உதாரணமாகத் திருமுருகாற்றுப் படையினை யெடுத்துக் கொள்வோம். அவ்வொரு பாட்டின்கண், நாற்பது அளபெடைச் சொற்களும், இருபது 'செய்பு' என்னும் எச்சச் சொற்களும் வந்துள்ளன. இவ்வொன்பது நூற்களிலும் ஓரளபெடையாதல், ஒரு 'செய்பு' என்னு மெச்சமாதல் கண்டிலம். இன்னும் அவற்றிடை கிறு, கின்று, ஆநின்று என்னும் இடைநிலைகள் வழங்கவில்லை; இவற்றிடை ஒன்பது கின்றிடை நிலைச் சொற்கள் வந்துள்ளன. இங்ஙனம் பல்லாற்றானும் வேறுபட்ட நடையினையுடைய நூற்களைக் கடைச்சங்கத்திருந்த நக்கீரனாரே யியற்றின ராவரோ என ஐயுற வுண்டாதலியல்பே. இதற்கெத் துணைச் சமாதானஞ் சொல்லினும் கேட்பவர் மனந் திருத்தியுறு மென நினைக்கின்றிலம். ஆசிரியர் தொல்காப்பியனார், 'வடசொற் கிளவி வட வெழுத்தொரீஇ, யெழுத்தொடு புணர்ந்த சொல் லாகும்மே.' என வடசொற்கள் தமிழில் வழங்குமாறு கூறினாராயினும் சங்கப்புலவரெல்லாம் அவை பெரிதும் தமிழிற் புகுதாமற் போற்றியே வந்தனர். எனினும் சமயக் கோட்பாடுகளை விரித்துரைப்பவும் பிறசமயங்களைக் கண்டிப்பவுமாய நூல்கள் சங்கத் தியற்றப் படாமையின், வடசொற் பெரிதும் பயில இடமின்றென்றும், அவை வியற்றப்படுங்கால் வடசொற்கள் பயில்வனவாமென்றும் ஒருசமாதானங்கூறலமையும். சங்கத்துச் சான்றோர்கள், சமயக் கொள்கைகளை விரித்துரைத்தல் தமிழ் வளர்ச்சி கருதி சங்கத்தின் நடைபேற்றுக்குத் தடையாகுமென்று கருதினார் போலும். பிறமத நிந்தையின்றியே, கடவுளரிலக்கணங்களும்,

கடவுளர் வழிபாடுகளும் கூறப்புக்க **பரிபாடலில்,** ஏனைத் தொகைகளிற் காணப்படாத வட சொற்களேறிவிட்டன. சாத்தனாரியற்றிய மணிமேகலையுள் பல்வேறுசமயக் கொள்கை களும் அளவைகளும் கூறியவிடத்து வடசொற்கள் மிகப் புகலுற்றன. வடசொல்லின் மிகுதிப்பாட்டிற்கு இவ்வொரு காரணஞ்சொல்லினும், நடையின் மற்றை வேறுபாடுகட்குத் தக்க காரணமில்லை. நடைப் போக்கொன்று கொண்டே இது நிச்சயிக்கத் தக்கதன்றென்று கூறுவதைத் தவிர, இங்குக் கூறலாகும் சமாதானம் பிறிதில்லை.

4. இப்பிரபந்தங்களில் வந்துள்ள,

***‘ பிரமன் பெருந்தலை நிறைய தாகக்***
***கருமன் செந்நீர் கபால நிறைத்தனை.’***

***‘ கச்சங் கொண்டு கடுந்தொழின் முடியாக்***
***கொச்சைத் தேவரைத் தேவரென் றெண்ணிப்***
***பிச்சரைப் போலவோ***
***ராரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று’***

என்பனபோலுந் தொடர்களை நோக்குங்கால், இவை பிற மதங்களைப் பொருட்படுத்தாது செல்லு மியல்பு விளங்குகிறது.

5. இவை பண்டையுரையாசிரியர்கள் எடுத்தாட்சி செய்த நூல்களுமல்ல. எனினும் இவற்றுடன் பதினொராந் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளதும் கபிலதேவ நாயனார் அருளிச்செய்தது மான **மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை**யிலிருந்து இரண்டு செய்யுட்கள் இளம் பூரணவடிகளால் மேற்கோளாக எடுக்கப் பட்டுள்ளன. உரையாளர்கள் எடுத்தாளாமையிற் போந்த இழுக் கொன்றுமில்லை யாயினும், இவை சங்கப்புலவர் வாக்கென்பதில் அவர்கட்குங் கருத்தில்லைபோலு மெனக் கொள்ளப்படுமன்றே?

இனி, இவை நக்கீரரியற்றியன வென்பதற்குள்ள ஆதாரங் களையும் பார்ப்போம். இவற்றுட்சில நூல்களை விதந்து, அவை சங்கப்புலவராகிய நக்கீரர் பாடியன வென்று புராணங்கள் கூறுகின்றன. புராண கதை கட்கு இந்நூல்கள் பொருத்தமுடைய வாகவுமுள்ளன. **போற்றித் திருக்கலி வெண்பா** புராணத்திற் சுட்டப்பட வில்லையேனும், இதினிறுதி ‘**காளத்தி போற்றி கயிலை மலை போற்றி யென**’ நீளத்தி னானினைந்து நிற்பார்கள், . . . . . . . . . அத்தனடி சேர்வார்களாங்கு.’ என்றிருத்தலின், அந்தாதியும் இதுவும் ஒருவர் பாடியவேயென்று துணியப்படும். புராணங்கள்

இவற்றை யாதரித்தல்போன்றே, இவற்றிலுள்ள சில பாகங்கள் புராண கதைகளை யாதரித்து நிற்கின்றன.

**‘ சிறியேன் சொன்ன வறிவில் வாசகம்**
**வறிதெனக் கொள்ளா யாகல் வேண்டும்.’**

(திருவெழுகூற்றிருக்கை)

**‘ பணிந்தேனின் பாதம் பரமேட்டி பானீ**
**றணிந்தால வாயி லமர்ந்தாய் - தணிந்தென்மேல்**
**மெய்யெரிவு தீரப் பணித்தருளு வேதியனே**
**யையுறவொன் றின்றி யமர்ந்து.’**

(மேற்படி இறுதி வெண்பா)

**‘ கூட லாலவாய்க் குழக னாவ**
**தறியா தருந்தமிழ் பழித்தன னடியேன்**
**ஈண்டிய சிறப்பி னிணையடிக் கீழ்நின்று**
**வேண்டு மதுவினி வேண்டுவன் விரைந்தே.’**

(பெருந்தேவபாணி)

**விரைந்தேன்மற் றெம்பெருமான் வேண்டியது வேண்டா**
**திகழ்ந்தேன் பிழைத்தே னடியேன் - விரைந் தென்மேற்**
**சீற்றத்தைத் தீர்த்தருளு தேவாதி தேவனே**
**யாற்றவுநீ செய்யு மருள்.**

(மேற்படி இறுதி வெண்பா)

என்பன காண்க.

தருமிக்குப் பொற்கிழி யளித்ததனைத் தேவாரமும், கல்லாடமும் சுட்டிக் கூறுகின்றன. அவற்றுட் கல்லாடம், ‘அருந்தமிழ்க் கீரன் பெருந்தமிழ்ப் பனுவல், வாவியிற் கேட்ட காவியங் களத்தினன்’ என அக்கதை விரிவைப் புலப்படுத்துங் கூறுகின்றது. நம்பியாண்டார் நம்பிகள் இப்பிரபந்தங்களைப் பதினொராந் திருமுறையிற் றொகுத்துவைத்ததன்றி நக்கீரர் முதலாயினாரைச் சிவனடியார்களெனவுங் கூறியிருக்கின்றனர். இங்ஙனம் பன்னூறாண்டுகளாகக் கொள்ளப்பட்டுவருதலே இவை நக்கீரர் வாக்கென்பதற்குப் பிரமாணமாகும்.

ஆயின், திருமுறைகளி னடைவை யெடுத்தோதிய உமாபதி சிவாசாரியாராதல், பிறராதல் இந்நூல்களைச் சிறிதுஞ் சுட்டிக் கூறினார்களில்லை. நம்பியாண்டார் நம்பிகள் காலத்தின்

பின்னரும் சில பிரபந்தங்கள் பதினொராந்திருமுறையிற் சேர்க்கப் பட்டுள்ளன என்பதற் காதாரமிருக்கின்றது. ஆகலின், இவை யெல்லாம் நம்பிகளாலேயே திருமுறையிற் றொகுக்கப்பட்டன வென்று ஒருதலையாகக் கூறவியலாது. எனினும் இவைகள் இற்றைக்குப் பன்னூறாண்டுகளின் (நம்பிகள் காலத்தின்) முன்னரே யியற்றப்பட்ட வாகுமெனக் கொள்ளுதல் நேரிதாகும். சிவபிரானையும் சிவனடியாரையும் துதித்தல் கருதிய இந்நூல் களில், சமய குரவர்களான நால்வரைப் பற்றியாதல், அவர்கள் பொருட்டு இறைவன் புரிந்த திருவிளையாடல்களைப் பற்றி யாதல், அவர்கள் காலத்தும் பிற் காலத்துமிருந்த வடியார் களைப் பற்றியாதல் யாதுங் கூறப்படவில்லை. பெரிதும் முற்காலத்தவர்களான கண்ணப்பர், சண்டேசர்,[5] மார்க்கண்டர், உபமந்நியு, அருச்சுனன், இராவணன், சலந்தரன் முதலியோரே கூறப்படுகின்றனர். இதுவே இந்நூல்களின் பழைமைக்குத் தக்க சான்றாகும். இவற்றின்கண், ‘கற்கொண்டெறிந்த **சாக்கியன்** அன்பும் ‘சீர்மலி சிலந்திக் கின்னரசளித்’ ததும் கூறப்படு தலை நோக்குழி, இவை கடைச்சங்க மழிந்து ஒன்றிரண்டு நூற்றாண்டுகளானபின் இயற்றப்பெற்றவையாகு மெனக் கருதுதலும் கூடும். அவ்வாறாயின் இவையிற்றை ஆக்கியோர் நக்கீரர் என்னும் பெயருடைய வேறு புலவரெனக்கொள்ள வேண்டும். அங்ஙனம் கொள்ளின், கதைப் பொருத்தம் பலவுஞ் சிதைந்து சுவை குன்றுமாகலின் சங்கப்புலவராகிய நக்கீரனாரே இவற்றை ஆக்கியோர் என யாம் கொள்ளுதும்.

இனி, இந்நூல்க ளொவ்வொன்றையும்பற்றிச் சில குறிப்புக் களும் இவற்றின் சொற்பொருணயங்களை யறிந்து கோடற் பொருட்டுச் சில பாட்டுக்களும் ஈண்டுத் தருதும்.

## கைலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி

இது நேரிசை வெண்பா நூறுடையதாய்ச், சொற்றொடர் நிலையாய், இறுதிப்பாட்டினிறுதிச்சீர் முதற்பாட்டின் முதற்சீராக மண்டலித்து முடியப் பெற்றுளது. இதன்கண் அகப்பொருட்டுறை யமைந்த பாடல்களும் உள. பல அரிய சொற்களும் உள்ளன. இந்நூன் முதற்செய்யுளாகிய ‘சொல்லும் பொருளுமே’ என்னும் வெண்பாவுடன் முதலாழ்வா ரிருவர் தத்தம் அந்தாதியின் முதலில் வைத்துள்ள ‘வையந் தகளியா’ ‘அன்பே தகளியா’ என்னும் வெண்பாக்கள் ஒப்புநோக்கத் தக்கவை. இந்நூலை ‘ஐந்தெழுத்துஞ் சோராம லெப்பொழுதுஞ் சொல்’ என நெஞ்சிற் கறிவுறுத்தி முடித்திருத்தலை நோக்குங்

கால், இவ்வாசிரியர்க்குத் திரு வைந்தெழுத்தினிடமுள்ள பேரன்பு வெளியாகின்றது.

*' சொல்லும் பொருளுமே தூத்திரியு நெய்யுமா*
*நல்லிடிஞ்சி லென்னுடைய நாவாகச் - சொல்லரிய*
*வெண்பா விளக்க வியன்கயிலை மேலிருந்த*
*பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று.'* (1)

*' வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்*
*கேளார்கொ லந்தோ கிறிபட்டார் - கீளாடை*
*யண்ணற் கணுக்கராய்க் காளத்தி யுண்ணின்ற*
*கண்ணப்ப ராவார் கதை.'* (12)

*' மற்றும் பலபிதற்ற வேண்டா மடநெஞ்சே*
*கற்றைச் சடையண்ணல் காளத்தி - நெற்றிக்க*
*ணாரா வமுதின் றிருநாம மஞ்செழுத்துஞ்*
*சோராம லெப்பொழுதுஞ் சொல்.'* (100)

## திருவீங்கோய்மலை யெழுபது

இது, சோழ நாட்டிலுள்ள தேவாரம் பெற்ற திருப்பதிகளி லொன்றாகிய ஈங்கோய் மலையைச் சிறப்பித்து, 'இது சிவபிரான் விரும்பி யுறையும் மலை' யென்னும் பொருளில் ஒவ்வொரு பாட்டும் முடிந்துள்ள எழுபது நேரிசை வெண்பாவா னாகிய தொரு நூல். இந்நூலேயன்றி, எட்டுத் தொகையு ளொன்றாகிய பரிபாடலும், பின்னுள்ள ஏரெழுபது, சிலையெழுபது, ஈட்டி யெழுபது என்பனவும் ஒரே தொகையுள்ள பாடல்களா னமைந் திருத்தலை நோக்குங்கால், எழுபது பாட்டானும் நூலியற்றுதல் மரபு எனத் தெரிகிறது. இந்நூலில், மலையுறையுங் கானவர்களின் செயலும், விலங்கு முதலிய கருப்பொருள்களி னியல்பும் அணி பெறக் கூறப்பட்டுள்ளன. பல அரிய சொற்களும் வந்துள்ளன. இதிற் பதினைந்து பாட்டுக்கள் இறந்து போயின.

*' உண்டிருந்த தேனை யறுபதங்க ளூடிப்போய்ப்*
*பண்டிருந்த யாழ்முரலப் பைம்பொழில்வாய்க் - கண்டிருந்த*
*மாமயில்க ளாடி மருங்குவரு மீங்கோயே*
*பூமயிலி தாதை பொருப்பு.'* (10)

*' ஏன முழுத புழுதி யினமணியைக்*
*கானவர்தம் மக்கள் கனலென்னக் - கூன*
*லிறுக்கங் கதிர்வெதுப்பு மீங்கோயே நம்மேன்*
*மறுக்கங்க டீர்ப்பான் மலை.'* (14)

*கல்லாக் குரங்கு பளிங்கிற் கனிகாட்ட*
*வெல்லாக் குரங்கு முடனீண்டி - வல்லே*
*யிருந்துகிராற் கற்கிளைக்கு மீங்கோயே மேனிப்*
*பொருந்தவராப் பூண்டான் பொருப்பு.* (29)

## திருவலஞ்சுழி மும்மணிக் கோவை

இது, சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற திருப்பதி களி லொன்றாகிய திருவலஞ்சுழி யீசர்மீது பதினைந்து பாட்டுக் களாற் சொற்றொடர் நிலையாகப் பாடப் பெற்றதொரு பிரபந்தம். மூவகை மணிகளைக் கோத்தாற்போன்று, ஆசிரியம், வெண்பா, கலித்துறையென்னும் மூவகைப் பாடலானும் தொடர்புறச் செய்திருத்தலின், இது மும்மணிக் கோவை யென்னும் பெயர்த் தாயிற்று. இதிலுள்ள பாட்டுக்களிற் பெரும்பாலன அகப் பொருட்டுறை யமைந்தவை. வேழம் வெகுளியை யெயிற்றிடை யடக்குமென இதிற் கூறப்பட்டிருக்கிறது.

*வணங்குதும் வாழி நெஞ்சே புணர்ந்துடன்*
*பொருகடன் முகந்து கருமுகிற் கணநற்*
*படவர வொடுங்க மின்னிக் குடவரைப்*
*பொழிந்து கொழித்திழி யருவி குணகடன்*
*மடுக்குங் காவிரி மடந்தை வார்புன*
*லுடுத்த மணிநீர் வலஞ்சுழி*
*யணிநீர்க் கொன்றை யண்ணல தடியே.* (1)

## திருவெழுகூற்றிருக்கை

இஃது, ஒருவகை யெண்ணலங்காரம் படவரும் சித்திரச் செய்யுள். இயற்றமிழ்ப்பாவில் இஃதிணைக் குறளாசிரியப்பா வாகும். இஃது ஒரு செய்யுளே. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், திருமங்கையாழ்வாரும் எழுகூற்றிருக்கை பாடி யுள்ளார்கள்.

## பெருந் தேவபாணி

இது, தனக்குப் பயனுண்டாகச் சிவபிரானை முன்னிலையாக வாழ்த்தலுறும் ஒரு பாட்டு. தேபாணியாவது, தெய்வத்தை முன்னிலையாகப் பராவலுறும் பாட்டாகும். பெருமை தெய்வத்திற்கு அடை.

## கோபப் பிரசாதம்

இது, பரமபதியாகிய சிவபெருமான், தீங்கியற்றுவாரை மறக்கருணையாற் றண்டித்தலும், நலம்புரிவாரை அறக் கருணையால் நல்வாழ்விலமர்வித்தலும் முறை முறை யெடுத்துக் கூறுவதோர் இணைக்குறளாசிரியப்பா வாகும். இதுபற்றியே இஃதிப்பெயர்த் தாயிற்று. 'கார்மலி யுருவக் கருடனைக் காய்ந்தும், ஆவின் கீழிருந் தறநெறி யருளியும், இன்னவை பிறவு மெங்களீசன், கோபப் பிரசாதங் கூறுங்காலை' என இந்நூலுள் வருவது காண்க. இதன் கண் வந்துள்ள,

***' மாமுயல் விட்டுக் காக்கைப் பின்போம்'***

***' விளக்கங் கிருப்ப மின்மினி கவரும்'***

என்னுந் தொடர்களோடு, திருநாவுக்கரையர் தேவாரத்தில் வந்துள்ள,

***முயல்விட்டுக் காக்கைப்பின் போன வாறே***

***விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்த வாறே***

என்னுந் தொடர்கள் ஒப்புநோக்கற் பாலன.

## காரெட்டு

இஃது, எட்டு நேரிசை வெண்பாக்களினால் முகிலை வருணிப்பதொரு நூலாகும். இதில், சூற்கொண்டலின் கருமை, மின்னல் முதலியன இறைவனுடைய மணிமிடறு, செஞ்சடை முதலியவற்றோடு ஒப்பித்துக் கூறப்பட்டுள. இறைவன் றிருவடிக்கண் அன்பு முதிரப்பெற்ற பெரியராயினார் உலகத் தோற்றங்களைக் காணும்வழி, அவற்றானெல்லாம் கடவுளி னருட்கோலமாதிய நினைந்துருகுவார் என்பதற்கு இஃது ஒரு சான்றாகும்.

***' மையார் மணிமிடறு போற்கருகி மற்றவன்றன்***
***கையார் சிலைவிலகிக் காட்டிற்கே - யைவா***
***யழலரவம் பூண்டா னவிர்சடைபோன் மின்னிக்***
***கழலரவங் காண்புற்ற கார்.'*** *(2)*

## போற்றித்திருக்கலி வெண்பா

இது, போற்றி எனும் வாய்பாடுகொண்டு சங்கரனை வழுத்துவதொரு கலிவெண்பாவாகும். இதில் சைவபுராணக் கதைகள் பல குறிக்கப்பட்டுள.

***வானவர்க டாங்கூடி மந்திரித்த மந்திரத்தை***
***மேனவில வோடி விதி விதிர்த்துத் - தானவருக்***
***கொட்டிக் குறளை யுரைத்த வயன்சிரத்தை***
***வெட்டிச்சிரித்த விறல் போற்றி***

*எனக் கூறப்பட்டுளது.*

*'குறுத்தாள்', 'போகட்டு' என்ற ஆட்சிகள் இதிலுள்ளன.*

## திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

*இது, திருத்தொண்டர் புராணத்துக் கூறப்பட்ட அரும் பெருந் தொண்டுசெய்த நாயன்மார்களி லொருவரும், 'கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்' எனத் திருவாதவூரடி களாலும் அன்பிற்கு மேலெல்லையாக வைத்துப் பாராட்டப் பெற்றவரும், இங்ஙனமே ஏனைச் சமயகுரவராலும், சங்கராசாரியர், பட்டினத்தடிகள் முதலிய பெரியோர் பலராலும் தோத்தரிக்கப் பெற்றவருமாகிய கண்ணப்ப நாயனாரது சரிதத்தைச் சுருங்க, விளங்க வெடுத்துரைக்கும் ஓர் அகவற்பா வாகும். மறம் என்பது வேட்டுவரது வீரத்தைக் குறிக்கும் பாட்டிற்கு ஆகுபெயர். இங்கு, வீரமாவது, காட்டு விலங்குகளை வேட்டம் புரியுமது வன்றி, உலகியலைக் கீழ்ப்படுத்துத், தற்போதத்தை யறவெறிந்து, 'நாளாறிற் கண்ணிடந் தப்பவல்லே னல்லேன்' என்று கூறுமாறு செயற்கருஞ் செயல் புரிந்து, சிவானந்த மதுவுண்டு தருக்கும் பெருவீரமாகலின், அது திருமறம் எனப்பட்டது. இது, சொன்னயம், பொருணயங் களின் மிகச்சிறந்து விளங்குவது. கண்ணப்பரது சரித்திர வமுதைத் தமிழக முழுது முண்டு களிக்குமாறு விரித் துரைப்பான் புக்க சேக்கிழார் குரிசிலுக்கு அருங்கருத்துக்களை யொருங்குதவிய பெருஞ் சிறப்புடையது. கல்லாடதேவ நாயனா ரருளிச் செய்த திருக்கண்ணப்ப தேவர் திருமறம் ஒன்றும் இதனை யடுத்துப் பதினொராந் திருமுறையி லுள்ளது. இரண்டும் படித்தின்புறற் பாலன.*

***' தத்தையாந் தாய்தந்தை நாகனாந் தன்பிறப்புப்***
***பொத்தப்பி நாட்டுடுப்பூர் வேடுவனாந் - தித்திக்குந்***
***திண்ணப்ப னாஞ்சிறுபேர் செய்தவத்தாற் காளத்திக்***
***கண்ணப்ப னாய்நின்றான் காண்.'*** ***(இறுதி வெண்பா)***

## 4. களவியலுரை யாராய்ச்சி

இற்றைநாள் வரை நமக்குக் கிடைத்துள்ள தமிழ் நூலுரைகளுள் களவியலுரையானது மிக்க திட்பநுட்பமமைந்த சீரியவுரையாகும். தொன்மையுடையதுமாகும். தமிழ்நாட்டு முச்சங்கங்களின் வரலாற்றை விரிவாக முதன்முத லுணர்த்துவது இவ்வுரையே யாகும். இரு மொழிக்கு முதற் குரவராகச் சொல்லப்படுந் தழற்புரை சுடர்க்கடவுளே தந்த திவ்வகப் பொருணூலெனின், இதற்குரைகண்டார் தொல்கேள்வித் துறைமுற்றிய நல்லிசைப் புலவரெனின், இவ்வுரைதான் செந்தமிழ்க் கடவுளாய செவ்வேள் கேட்டுவந்ததெனின், முச்சங்க வரலாறாகிய பழம்பொருளை நமக்கெச்சமெனத் தேடிவைத்த திவ்வுரையே யெனின், இது நம்மனோரால் எத்துணைப் போற்றத்தக்கது! சிந்தித்திடுமின். இவ்வுரையுட் பாயிரமாகக் கூறிவரும் பகுதியில், கேட்போரை யுணர்த்துமிடத்து, முச்சங்க வரலாறு கூறிப் பின் களவியல் வரலாறும், உரைவரலாறும் கூறப்பட்டுள. அவற்றுள், இந்நூல் உரைகளின் வரலாறு அடியில் வருமாறு காண்க. (இதுவே யிடமாக உரையின் போக்கினையு முணர்ந்து கொள்ளுமாறு புத்தகத்திலுள்ளபடியே யிங்கெழுதப்படுகிறது.)

“அக்காலத்துப் பாண்டியனாடு பன்னிருயாண்டு வற்கடஞ் சென்றது. செல்லவே, பசி கடுகுதலும் அரசன் சிட்டரை யெல்லாங் கூவி, ‘வம்மின், யான் உங்களைப் புறந்தரகில்லேன்! என் தேயம் பெரிதும் வருந்துகின்றது. நீயிர் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடுநாடாயின ஞான்று என்னை யுள்ளிவம்மின்.’ என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயினபின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது. கழிந்தபின்னர், நாடுமலிய மழை பெய்தது. பெய்தபின், அரசன் இனி நாடு நாடாயிற்றாகலின் நூல் வல்லாரைக் கொணர்கவென்று எல்லாப் பக்கமும் போக்க, எழுத்ததிகாரமுஞ், சொல்லதிகாரமும், யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து. பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலே மென்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, ‘என்னை? எழுத்துஞ், சொல்லும், யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின்

பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமேயெனின், இவை பெற்றும் பெற்றிலேம்.' எனச் சொல்லாநிற்ப; மதுரை ஆலவாயின் அழனிறக் கடவுள் சிந்திப்பான்: 'என்னை! பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடைய தாகலான் யாம் அதனைக் தீர்க்கற்பாலாம்.' என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து, மூன்று, செப்பிதழகத் தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

"இட்ட பிற்றைஞான்று, தேவர்குலம் வழிபடுவான், தேவ கோட்டத்தை எங்குந் துடைத்து, நீர் தெளித்து, பூவிட்டு, பீடத்தின்கீழ் என்று மலகிடான் அன்று தெய்வத் தவக் குறிப்பினான் அலகிடுவனென்று உள்ளங்குளிர அலகிட்டான். இட்டாற்கு அலகினோடும் இதழ்போந்தன. போதர, கொண்டு போந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத்தாயிற்றோர் பொருளதி காரமாய்க் காட்டிற்று. காட்ட, பிராமணன் சிந்திப்பான்: 'அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றானென்பது கேட்டுச் செல்லா நின்றதுணர்ந்து நம்பெருமான் அருளிச்செய்தானாகும்.' என்று, தன் அகம் புகுதாதே கோயிற்றலைக் கடைச்சென்று நின்று, கடைகாப்பார்க் குணர்த்த, கடைகாப்பார் அரசற் குணர்த்த, அரசன் புகுதுகவென்று பிராமணனைக் கூவ, சென்றுபுக்குக் காட்ட, ஏற்றுக்கொண்டு நோக்கி, 'பொருளதிகாரம், இது நம்பெருமான் நமதிடுக்கண் கண்டு அருளிச் செய் தானாகற்பாலது.' என்று, அத்திசை நோக்கித் தொழுது கொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, 'நம் பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச் செய்த பொருளதிகாரம்; இதனைக் கொண்டு போய்ப் பொருள்காண்மின்.' என, அவர்கள், அதனைக் கொண்டுபோந்து, கனமாப்பலகை ஏறியிருந் தாராய்வுழி, எல்லாருந் தாந்தாம் உரைத்த உரையே நல்லதென்று சில நாளெல்லாஞ் சென்றன. செல்ல, நாம் இங்ஙனம் எத்துணையுரைப்பினும் ஒருதலைப்படாது; நாம் அரசனுழைச் சென்று நமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டுமென்று, கொண்டுபோந்து, அவனாற் பொருளெனப்பட்டது பொருளாய், அன்றெனப்பட்டது அன்றாய் ஒழியக் காண்டுமென, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச் சென்றார். அரசனும், எதிர்சென்று, 'என்னை? நூலுக்குப் பொருள் கண்டீரோ' என, 'அஃது காணு மாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்.' என, 'போமின், நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று; நுமக்கு நிகராவார் ஒருவர் இம்மையினின்றே.' என்று அரசன் சொல்ல, போந்து கனமாப்

பலகையின் ஏறியிருந்து, அரசனும் இது சொல்லினான்: 'காரணி கனைப் பெறுமாறு என்னை கொல்லென்று சிந்திப்புழி, சூத்திரஞ் செய்தான் ஆலவாயில் அவிர்சடைக் கடவுளன்றே! அவனையே காரணிகனைத் தரல்வேண்டுமென்று சென்று வரங் கிடத்து மென்று வரங் கிடப்ப; இடையாமத்து, 'இவ்வூர் உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன்மனென்பான், பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத்தான், ஒரு மூங்கைப்பிள்ளை உளன்; அவனை அன்னனென்றிகழாது, கொண்டுபோந்து, ஆசனமேலிரீஇக், கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தால், கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்ட விடத்து வாளா இருக்கும்; அவன் குமாரதெய்வம்; அங்கோர் சாபத்தினாற் றோன்றினான்.' என முக்காலிசைத்த குரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்றாக, எழுந்திருந்து தேவர் குலத்தை வலங்கொண்டுபோந்து, உப்பூரிகுடிகிழாருழைச் சங்கமெல்லாஞ் சென்று இவ்வார்த்தையெல்லாஞ் சொல்லி, ஐயனாவான் உருத்திரசன்மனைத் தரல் வேண்டுமென்று வேண்டி, கொடுபோந்து, வெளியது உடீஇ, வெண்பூச்சூட்டி, வெண்சாந்தணிந்து, கனமாப்பலகையேற்றி, கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப, எல்லாரும் முறையே உரைக்கக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்த விடத்து ஒரோவிடத்துக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் நிறுத்தி, பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரர் உரைத்தவிடத்துப் பதந்தொறுங் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து மெய்யுரை பெற்றாம் இந்நூற்கென்றார்."

இதற்கும் பழைய திருவிளையாடலுக்குமுள்ள வேறுபாடு கண்டுணர்க. இறையனார் ஏனைய புலவர்களுடன் வீற்றிருந்து தமிழாராயுங்கால், பொருணூல் அருளிச்செய்தார் என அது கூறுகின்றது. கல்லாடம், 'உலகிய னிறுத்தும் பொருண்மர பொடுங்க, மாறனும் புலவரும் மயங்குறுகாலை ..... அன்பினைந் திணையென்றறுபது சூத்திரம் .... தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்.' என்று கூறுவது இவ்வுரையுடன் கருத்தொருமை யுறுவதாகத் தோன்றுகிறது. மற்றும் அது, 'நக்கீரர், கபிலர், பரணர், இம்முவருரையும் கேட்ட பொழுது உருத்திரசன்மர் மெய்புள குற்றுக் கண்ணீர் விடுத்து நின்றனர்; புலவரெல்லாம் இம்மூவரையும் மெய்யுரையெனக்கொண்டனர்.' என்று கூறுகிறது. கபிலர், பரணர் இருவரும் நக்கீரரொப்பவே முதன்மையுடைய புலவர்கள். குண வொழுக்கங்களில் மிக

மேம்பட்டவர்கள். கபிலர், அக்காலத்துப் புலவரும், அரசரும் புகழும் பெருஞ் சிறப்புடையவராய் விளங்கியவர். நக்கீரர் தாமும், 'உலகுடன் றிரிதரும் பலர் புகழ் நல்லிசை வாய்மொழிக்கபிலன்' என்று அவரை அகப்பாட்டினுள் மிகப் பாராட்டினர். அத்தகு புலவரிருவரும் அப்பொழுதிருந்து அகப்பொருளுக் குரை கூறினாராயின், அவர்களுரையும் மெய்யுரையாகப் போற்றப் பட்டிருக்கவே வேண்டும். இவ்வுரை வரலாறாவது, பின்வந்த உரையாளர்களாவது கபிலரும் பரணரும் உரை கூறினரெனச் சிறிதும் கூறாமையின், அவர்கள் அப்பொழுது இருந்தில ரென்பது தேற்றம். 'இறையோன் பொருட்குப் பரணர் முதல் கேட்ப' என்று கூறுதலின், கபிலர் அப்பொழுது இலராயினா ரென்பது கல்லாடர்க்குங் கருத்தாதல் பெறப்படும். இங்ஙனம் சரிதத்தொடு பொருந்தாதன புராணங்களிற் காணப்படுமேல், அவற்றைப் பிரித்துணர்தலே விவேகமாகும்; 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருண், மெய்ப்பொருள் காண்ப தறிவு.' என்பவாகலின், நக்கீரர்க்கு இலக்கணம் உபதேசித்தது முதலியவும் இங்ஙனம் ஓர்ந்துணர்க. செய்யுளாயினவெல்லாம் பிரமாணமும், உரையாயினவெல்லாம் அப்பிரமாணமும் ஆகா என்க.

இனி, இவ்வுரை யெழுதினார் நக்கீரர் அல்லர்; பிற்காலத் தொருவர் என்று கொள்ளுமாறு, சில குறிப்புக்கள் காணப் படுகின்றன. அவை, 'அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத் தெண்ணூற்றைம்பதிற்றியாண்டென்ப.', 'உக்கிரப் பெருவழுதி யீறாக நாற்பத்தொன்பதின்மரென்ப.' என்று கடைச் சங்கத்திறுதியை அறுதியிட்டுரைத்தலும்; 'அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தரமதுரை **யென்ப**.' என்றிவ்வாறு, நேரிலறியார் போன்று கூறலும்; 'கணக்காயனார் மகனார் நக்கீரர் உரைத்தவிடத்து' என்று படர்க்கையாற் கூறுதலும்; 'அதனால், உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன் செய்தது' இந்நூற்குரை என்பாருமுளர்; 'அவர் செய்திலர், மெய்யுரை கேட்டாரென்க.' என்று இஃதெழுதிய காலத் திற்றானே உரை கண்டாரைப்பற்றி ஐயப்பாடிருந்தமை தோன்றக் கூறுதலும்; 'இனி உரை நடந்துவந்தவாறு சொல்லுதும். மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம்மகனார் கீரவிகொற்றனார்க் குரைத்தார்; அவர் தேனூர்கிழார்க் குரைத்தார்.' என்று தொடங்கி, 'முசிறியாசிரியர் நீலகண்டனார்' வரை ஒன்பது வழிமுறை கூறுதலும்; 'காரணமென்பது **அக்காலத்துப்** பாண்டியனுஞ் சங்கத்தாரும் பொருளிலக்கணம்

பெறாது இடர்ப்படுவாரைக்கண்டு ஆலவாயிற் பெருமானடிகளால் வெளிப்படுக்கப்பட்டது.' என்று சென்ற காலந்தோன்றக் கூறுதலும்; பிற்காலத்தரசர்களாகக் கருதப்படு மவரைப் பற்றிய பாட்டுக்கள் மேற்கோளாக வந்திருத்தலும் ஆகும். மற்றும், உரைகண்டாரே உரைவரலாறு கூறினாரெனலும் பொருத்தமின்றாம். இங்குக் காட்டிய வுரைப் பகுதியெல்லாம் புறவுரையாக இருத்தலின், நூலுரை யெழுதினார் நக்கீரனாரும், பாயிரம் எழுதினார் பிற்காலத்தொருவரும் ஆவரெனக் கொள்வேமெனின், கொள்ளுதலமையாது. என்னை? 'இனி, நூல் நுதலியதூஉம் உரைக்கற்பாலது; அது பாயிரத்துள்ளே உரைத்தாம்.' என்றும்; 'இக்களவு சிறப்புடைத்து; சுவர்க்கம் வீடுபேறுகளை முடிக்குமாகலான், எனப்படுவதென்று சொல்லிச் சிறப்பிக்கப் பட்டது. அது பாயிரத்துள்ளும் உரைத்தாம்.' என்றும் இவ்வுரை கூறுதலிற் பாயிரத்தோடும் உரையெழுதினார் ஒருவரேயென்பது பெறப்படுமாகலின் என்க. இங்ஙனமே மேற்கோள்கள் மாத்திரம் பிற்காலத் தொருவர் புகுத்தினார் எனலும் அமையாது; அப்பாடல்களின் பொருள் ஒரோவழி உரையிலும் விரவி வருதலின் என்க.

இவ்வேதுக்களானே களவியற் பொருள் கண்டார் நக்கீரனாரல்லர் எனக் கொள்வாமெனின், அது பொருந்தாது. அவரே என்று அடிப்பட்ட சான்றோர் வழக்குள்ளது. 'வினையினீங்கி' என்னும் மரபியற் சூத்திரவுரையில், 'கடைச் சங்கத்தாருட் களவியற் பொருள்கண்ட கணக்காயனார் மகனார் நக்கீரனார், இடைச்சங்கத் தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியம் என்றார்.' எனப் பேராசிரியர் கூறினர். சிலப்பதிகாரத்து வேனிற் காதை முதற்கண், 'கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த இறையனார் பொருளுரை' என்று அடியார்க்குநல்லார் கூறினார். 'திணைமயக்குறுதலும்' என்னும் அகத்திணையியற் சூத்திரவுரையில், 'இக்கருத்தானே நக்கீரரும் ஐந்திணையுள்ளுங் களவு நிகழுமென்று கொண்டவாறுணர்க.' என்று நச்சினார்க்கினியர் கூறினர். களவியலுரைப்பாயிரமே இவ்வுரை கண்டார் நக்கீரரே என வற்புறுத்துக் கூறுகிறது. இவ்வுரையியற்றினார் பிறரொருவராயின், அவர், நக்கீரரியற்றினர் எனக் கூறுதற்குக் காரணந்தான் என்னை? காரணமின்றியே கூறினார் என்னினும், நாம் முன்பு காட்டிய தடைகளை அவர் உணர்ந்திலராவரோ? அவர் அத்துணை எளியரல்லர். இவ்வாற்றான் நாம் அறியக்கிடப்ப தென்னையெனின், களவியற்பொருள் கண்டார் கணக்காயனார் மகனார் நக்கீரரே; அவ்வுரை பலரானும் கேட்கப்பட்டு வர, அவருள் ஒருவரால் இங்ஙனம்

எழுதப்பட்டது; அவர், தாம் கேட்டவற்றோடு மேற்கோள்களும் சேர்த்துக்கொண்டாராவர்; உரைவரலாறும் தாம் கேட்டபடி அவர் எழுதினாராவர்; தாம் எழுதினும், அவ்வுரைப் பொருளில் தமக்குச் சிறிதேனும் உரிமையுண்டென்று கருதினாரல்லர்; என்பது. இன்னணம் பின்னுளோரொருவர் எழுதிய காரணத்தால் முன்னையுரை சிறுபான்மை குறைந்தும், திரிந்து மிருத்த லியல்பே. இது நிற்க, இவ்வுரையெழுதினார் முசிறியாசிரியர் நீலகண்டனார் எனச் சிலரும், இளம்பூரணவடிகள் எனச் சிலரும் துணிந்தனர். தக்க ஆதார மின்றியே அங்ஙனம் துணிதல் ஏதமாகும்.

இனி, 'பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேம்' என்பதுகொண்டு அக்காலத்துத் தொல்காப்பியப் பொருளதி காரம் இருந்ததின்றென்றாவது, அது கற்றார் இலரென்றாவது கொள்ளுதல் அமையாது. இவ்வுரைதானே, தொல்காப்பியத்தை இடைச் சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூல் என்று கூறுகிறது. தொல்காப்பியச் சூத்திரங்களைப் பலவிடத்தும் எடுத்தாளுகிறது. அகத்தியம் முதலாயினவும் அக்காலத்து இருந்தனவாகும். பொருட்பயிற்சி குன்றிய காரணத்தால், தொன்னூல்களில் பரந்துபட்டுக் கிடக்கும் பொருளிலக் கணங்களை வழுவின்றித் தொகுத்துரைக்க வல்லார் அரியராயினர் என்பதே கருத்தாகும். பொருளுளும் அகப்பொருளே விரிந்த தாகலின் அதனைத் தொகுத்துணர்த்துதல் இன்றியமையா தாயிற்று. இறையனார் களவியலும் அகப்பொருளுணர்ச்சிக்குக் கட்டளை மாத்திரமாக இயற்றப்பெற்றதென்க. பொருளதிகாரம் வல்லார் இலர் என்றதுகொண்டும், களவியலுரை ஒருவர் பின் ஒருவராகக் கேட்கப்பட்டு வந்தது என்றது கொண்டும், கடைச் சங்க நாளில் தமிழில் எழுதும் வழக்கம் இன்றென்று கொள்ளற்க. அக்காலத்தும், அதற்கு முற்பட்ட காலத்தும் தமிழில் எழுத்து வழக்கம் உண்டென்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. எழுத்துத் தொழில் பற்றி எழுத்தாளன் என்று பெயருற்றாரும் உளர் எனினும் ஆசிரியர் பாற்கேட்டு நூல் பயிலுதலே மரபாம் என்க. இவ்வுரையினின்றும், சிலப்பதிகார மணிமேகலைகளினின்றும் நாம் கருதலுறுவது, மதுரையிற் கோவலன் கொலையுண்ண, நெடுஞ் செழியன் உயிர்துறப்பக், கோப்பெருந்தேவி தீப்பாய, மதுரையும் எரியுண்ட அல்லற் காலையில் இளஞ்செழியன் பட்ட மெய்தினன்; அக்காலத்து வானமும் பொய்த்து வற்கடமும் மிக்கமையின், தமிழ்ச் சங்கம் நடத்தலில்லையாகப் புலவரெல்லாம் பிரிந்து சென்றனர்; சில ஆண்டுகள் சென்றபின் மறித்தும் சங்கம் கூடிற்று; என்பது.

இனி, இவ்வுரையானது,

**அன்பி னைந்திணைக் களவெனப் படுவ**
**தந்தண ரருமறை மன்ற லெட்டினுட்**
**கந்தருவ வழக்க மென்மனார் புலவர்**

என்னும் முதற் சூத்திரத்துக்கும், இரண்டாஞ் சூத்திரத்துக்கும் விரிவாகவும், ஏனைய சூத்திரங்கட்குச் சிறிது சுருக்கமாகவும் அமைந்துள்ளது. இரண்டாஞ் சூத்திரவுரை மிக்க நுட்பமுடைய தாய், கற்றார்க்குக் கழிபேருவகை பயக்குஞ் சிறப்பினதாய் நிலவுகின்றது. அஃது, உலகத்தில் எம்மொழியினுமுள்ள சிறந்த உரைகளுடன் ஒட்டி முன்னிற்கும் ஒட்பம் உடையது எனலாம்.

இவ்வுரை, "ஐந்து தலையுடைய நாகத்தை ஐந்தலை நாகமும் என்ப; ஐந்து தலை நாகமும் என்ப; இருமுடிபுடைத்து என்னை? குற்றியலுகரப் புணரியலுள், 'முதனிலை . . . புலவர்' என்றா ராகலின்." என ஒரோவழி எழுத்தின் செய்கையை விளக்கியும்; 'மூன்றாம் வேற்றுமை காரண காரியத்தை வேறுணரவு நிற்கும்; வேறன்றி யுணரவு நிற்கும்.' எனவும், 'ஒரு சொன்முன் ஒரு சொல் வருங்கால் பயனிலை வகையானும், தொகைநிலை வகையானும், எண்ணு நிலை வகையானும் என மூன்றனுள் ஒன்று பற்றியன்றே வருவது?' எனவும் சொல்லின் பெற்றியை விளக்கியும்; 'உலகத்துப் பொருள்தான் இரண்டு வகையான் உணரப்படும்; உண்மை மாத்திரை, உணர்த்திப் பிழம்பு உணர்த்தப்படாதனவும், உண்மையும் பிழம்பும் உணர்த்தப் படுவனவும் என.' எனப் பொருட்டன்மை விளக்கியும்; 'போறவென்பது சிறிதொத்துச் சிறிதொவ்வா தொழிவது; என்னை? குவளைப் பூப்போலுங் கண் என்றால், நீல மாத்திரை யொக்கும்; மற்றொவ்வாப் புடை பெரிது' என உவம வியல்பு விளக்கியும்; 'பல காரணத்தினாய பொருளை ஒரு காரணத்தினாற் சொல்லுவது சிறப்புடைமை நோக்கி; என்னை? நிலனும் நீரும் காலமும் வித்துமென இவற்றினது கூட்டத்தினாய முளையை நென்முளை யென்ப. நென்முளைக்கு நெல் சிறப்புடைக் காரணம்; நிலனும் நீரும் முதலாகவுடையன பொதுக்காரணம்; அவை பயற்று முளை முதலாவுடையன வற்றுக்குங் காரணமாகலான்.' எனக் காரண பேதங்களை விளக்கியும் செல்லா நிற்பது. "இனி, 'என்மனார் புலவர்' என்பது, 'என்ப' என்னும் முற்றுச்சொற் குறைக்கும் வழிக் குறைக்க வென்பதனாற் பகரங்குறைத்து விரிக்கும் வழி விரித்தல் என்பதனால் 'மன்', 'ஆர்' என்பன இரண்டிடைச்சொற் பெய்து விரித்து, 'என்மனார் புலவர்' என்றாயிற்று." எனச் சிறுபான்மை சொல்லாக்கமும் ஆராய்வது.

இவ்வுரையில் இடத்துக்கேற்பப் பல அழகிய உவமைகள் காட்டப்பட்டுள. அவற்றுட் சில வருமாறு:-

1. ஆவிற்கு இருகோடுபோல; 2. புனலோடுவழிப் புற்சாய்ந் தாற்போல; 3. வேலேறுபடத் தேளேறு மாய்ந்தாற்போல; 4. கண்ணாடி மண்டிலத்து ஊது ஆவி போல; 5. சந்தனமும் காஞ்சிரையும் மரமெனப்பட்டது போல; 6. நாண்வழிக் காசுபோல; 7. நீர்வழி மிதவை போல; 8. பள்ளத்துவழி வெள்ளம் போல; 9. குன்ற முருண்டாற் குன்றி வழியடை யாகாவாறுபோல; 10. கடல்வெதும்பின் வளாவு நீரில்லதுபோல; என்பன.

இஃது, உலகத்தார் மனோபாவங்களையும் ஏற்புழிக் கூறிச் செல்கின்றது. பின்வருமாறு காண்க.

'இனியாரோடு தலைப்பெய்த இடங்கண்டாலும் அவ்வினி யாரைக் கண்டாலேபோல்வது உலகத்துத் தன்மை.'

'உலகத்தோர் இடுக்கணுற்றால் விதியானே தீருமென்றிரார்; முன்னே தீர்த்தற்குச் சுற்றத்தாரையும், நட்டாரையும் நினைப்பர்.

'ஆரறிவார்? சிறியாராற் பெரியார் முடிக்குங் கருமங்களு முள'

'உலகத்து ஒருபொருண் முடியாதெனக் கவன்று நின்றார் முடிப்பதோர் உபாயங்கண்ட ஞான்று அப்பொருள் எய்தினாரே போல மகிழ்வர்.'

இனி, ஏனைநூல் உரைகட்கும் இதற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமையுட் சில காட்டுதும்.

ஆசிரியர் தொல்காப்பியனார், முதனூல், வழிநூல் என நூல் இருவகைப்படுமென்று கொண்டு; அவற்றுக் கிலக்கணங் கூறினார். பின்வந்த நூலசிரியர், சிலர் அவற்றொடு சார்புநூல் என்பதொன்று கொண்டு நூல் மூன்று என்றனர். இவ்வுரையானது அவற்றொடு 'எதிர்நூல் என்பதும் ஒன்று உண்டு' எனக் கூறி, 'தன்கோ ணிறீஇப் பிறன்கோண்மறுப்ப தெதிர் நூலென்ப ரொருசா ராரே.' என்னுஞ் சூத்திரத்தை மேற்கோளாகக் காட்டுகிறது.

'தமிழ் நான்குவகைப்படும்; எழுத்தும், சொல்லும், பொருளும், யாப்பும் என' என்பது இவ்வுரை. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரமாக வகுக்கப்பட்டது. யாப்பு ஓர் அதிகாரமாகக் கொள்ளப்பட்டிலது. செய்யுளியல் முதற்

சூத்திரவுரையில், 'மற்றிதனை யாப்பதிகாரமென வேறோரதி காரமாக்கி யுரைப்பாருமுளர்; அங்ஙனங்கூறின் வழக்கதிகார மெனவும் வேறு வேண்டுமென மறுக்க' என்று பேராசிரியர் கூறினர். பின்னுளோர் அணியையுங் கூட்டி, இலக்கணம் ஐந்து என்பா ராயினார். அணியிலக்கணம் என ஒன்று கோடல் அமையாதென்று, 'நிரனிறுத்தமைத்த' என்னும் உவமவியற் சூத்திரவுரையில் பரக்கக் கூறப்பட்டுள்ளது.

இவ்வுரையில் மாலை, யாமம், வைகறை, எற்பாடு, நண்பகல் எனச் சிறுபொழுது ஐந்து கூறப்பட்டன. நச்சினார்க்கினியர், அகத்திணையியலுரையில் 'வைகுறுவிடியல்' என்பதனை, 'வைகுறுவும்விடியலும்' என இரண்டாகக்கொண்டும்,எற்பாட்டினைப் பிற்பகல் எனக் கொண்டும் சிறுபொழுது ஆறு என்றார். சிவஞான முனிவர், சிறுபொழுது ஐந்தேயாமெனச் சாதித்து, எற்பாட்டினை ஞாயிறு தோன்றுங்காலை என்று சூத்திர விருத்தியுட்கூறினர்.

பசுப்போல்வாளைப் பசுவென்றலும், பாவைபோல் வாளைப் பாவையென்றலும் உவமந்தொகுத்தவாறு என இவ்வுரை கூறாநிற்கும். சேனாவரையர் முதலாயினாரெல்லாம் பாவை முதலாயின ஆகுபெயரெனக் கொண்டனர்.

'யாப்பு' என்பது தொகுத்தல் முதலிய நூல்யாப்பு என்றும் 'கேட்போர், என்பது நூலரங்கேறும் அவைக்களத்துக் கேட்டோ ரென்றும் இவ்வுரை கூறிற்று. பின் வந்த உரையாளர்களும் அவ்வாறே கூறினர். சிவஞான முனிவர் அக்கொள்கையை மறுத்து வேறு பொருள் கூறினர்.

'என்மனார்' என்னுஞ் சொன்முடிபுபற்றி இவ்வுரை கூறுவதும், சேனாவரையர் முதலியோர் கூறுவதும் மாறு பாடுடையன.

அகப்பொருள் நாற்பத்து மூன்றாஞ் சூத்திரத்து, மூன்றுநாள் சொற்கேட்கும் வழி யுறைதலும், ஒன்பது நாள் கூடியுறைதலும் கூறுகின்றது. இவ்வுரை கற்பியல் நாற்பத்தாறாஞ் சூத்திரத்து, மூன்று நாளும் பன்னிரண்டு நாளும் என்றும், மூன்றுநாளும் ஒன்பது நாளுங் கூறுவாரும் உளர் என்றும் நச்சினார்க்கினியர் கூறினர். 'நீராடியபின் னீரறுநாளும்' என்று அகப்பொருள் விளக்கம் கூறுகின்றது.

'திணையே கைகோள்' என்னுங் களவியற் சூத்திரவுரையில் விற்பூட்டு, விதலையாப்பு, கொண்டுகூட்டு பாசிக்கு, ஒரு சிறை நிலை எனப் பொருள்கோள் ஐந்தென்று கூறி, 'விற்பூட்டென்பது தலையுங் கடையும் பொருள் கொள்வது; விதலையாப்பென்பது

முதலும் இடையுங் கடையும் பொருள்கொள்வது; பாசிநீக்க மென்பது சொற்றோறும் அடிதோறும் பொருளேற்று நிற்பது; கொண்டு கூட்டென்பது பொருள்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளுமா றறிந்துகொள்வது; ஒரு சிறைநிலை யென்பது ஒரு பாட்டினத்துச் சொல்லப்பட்ட பொருள் ஒருவழி நிற்பது.' என அவற்றுக்கிலக்கணமும் கூறப்பட்டுளது. அதனை யடுத்த சூத்திரம் பொருள்கோளின்றியும் பாட்டு வருமெனக் கூறுகின்றது. நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று என நான்கு பொருள்கோள் கூறினர் தொல்காப்பியனார். 'அகன்று பொருள் கிடப்பினும் என்னுஞ் செய்யுளியற் சூத்திரவுரையில், 'மாட்டு' என்பதுபற்றி 'இதுவும் நால்வகைப் பொருள்கோளன்றி வேறு புலவரது செய்கை' என்றார் பேராசிரியர். 'இது மொழி மாற்றுப் பொருள்கோளன்றிப் புலவர் வேறுசெய்வதோர் செய்கை' என்று கூறிப் பின்னும் விரித்துரைத்தார் நச்சினார்க்கினியர். நன்னூலார் முதலாயினார் பொருள்கோள் எட்டுக்கூறினர். ஒன்பது பொருள் கோள் கூறினாருமுளர்.

இங்ஙனம் வரும் உரை விகற்பமெல்லாம் ஆராய்ந்தறிக.

இவ்வுரையில், மதுரை ஆவணியவிட்டம், உறையூர்ப்பங்குனி யுத்திரம், கருவூர் உள்ளிவிழா என்பன பெரிய திருவிழாக்களாகக் கூறப்பட்டுள. 'தேவரும் அசுரரும் அமர்செய்த காலத்துத் தேவர்களையும் அசுரர்களையும் ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஒறுப்பல் யானெனப் பாண்டியன் மாகீர்த்தி சந்து செய்வித்தது போல்' என்று ஒரு கதையும் கூறப்பட்டுளது. பல அரிய நூற் பெயர்களும் புலவர் பெயர்களும் இதிற் காணப்படுகின்றன.

'வடவேங்கடந்தென்குமரி - யாயிடைத் - தமிழ் கூறு நல்லுலகத்து' என்று தொல்காப்பியர் கூறினர்.' என இவ்வுரைப் பாயிரங் கூறுவது, தொல்காப்பியனார் உட்கோளைப் பனம் பாரனார்கொண்டு மொழிந்தனர் எனக் கருதியாகல் வேண்டும். பாயிரமியற்றினார் பனம்பாரனாரெனக் கிளந்தோதிய பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் செய்யுளியல் முதற் சூத்திரவுரையில் 'பாயிரத்துள் வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி - னெழுத்துஞ் சொல்லும் பொருளும் ஆராய்வல் என்று புகுந்தமையால்' என, அது தொல்காப்பியனார் உட்கோள் என்பது தோன்றக் கூறுதலுங் காண்க.

# 5. நக்கீரர் இயற்றிய பாட்டுக்களின் ஆராய்ச்சி

## 1. திருமுருகாற்றுப்படை

இது, கடைச்சங்கப்புலவர் தொகுத்த பத்துப்பாட்டுள் முதலாவதாக வுள்ளது. பதினோராந்திருமுறைத் தொகுப்பிலும் இது சேர்ந்துளது. பத்துப் பாட்டுத் தொகுத்தார் சங்கப் புலவரென்பது நச்சினார்க்கினியர் கருத்து. இது மலைபடு கடாத்தில் 'தீயினன்ன' என்பதற்கு ஆளவந்தபிள்ளை யாசிரியர் குற்றங் கூறினரெனச் சொல்லி, அவரை மறுத்துரைக்கும் உரையால் விளங்குகிறது. எனினும், பத்துப்பாட்டு, ஏனைத் தொகை நூல்கள்போன்று ஓர் தொகையாக வழங்கப் படவில்லை. **திருமுருகாற்றுப்படை** பாடிய வரலாறு புராணங் கூறுவதனை முன்பு கூறியுள்ளாம். அதிலிருந்து நாம் அறிவன, கடவுட் பூசை யாற்றும்பொழுது மனம் பிறிதாதல் ஏதமாம் என்பதும், முருகனைப் பாடுவார் எவ்வகை யிடுக் கணினின்றும் நீங்கி யின்புறுவர் என்பதும் ஆம். பிறவாறு அறிவாரும் அறிக. முருகாற்றுப்படை என்னுந் தொடர் முருகனிடத்து ஆற்றுப் படுத்ததென விரியும். 'வீடு பெறுதற்குச் சமைந்த ஓர் இரவலனை வீடு பெற்றானொருவன் முருகக் கடவுளிடத்தே ஆற்றுப்படுத்திய தாக அம் முருகக்கடவுளைப் பாடியது இப்பாட்டு. ஆற்றுப் படுத்தலாவது, கூத்தர் முதலாயினார் ஓர் தலைவன்பால் தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை எதிர்வந்த நல்குரவாளரான கூத்தர் முதலாயினார்க்கு அறிவுறுத்து, அவரும் ஆண்டுச் சென்று அன்ன பெறுமாறு வழிப்படுத்துரைத்தல் என்பது, 'தாவினல்லிசை' என்னுஞ் சூத்திரத்து, 'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச் சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்' என்பதனாற் பெறப்படுகின்றது. பத்துப்பாட்டுள் ஐந்து பாட்டுக்கள் ஆற்றுப்படையாகவுள்ளன. ஏனை ஆற்றுப்படை யெல்லாம் மக்களிடத்து ஆற்றுப்படுப்பன. பரிசில் பெறற்

குரியாரைக் கிளந்தெடுத்து 'பொருநராற்றுப்படை' முதலிய பெயரானே வழங்குவன. இஃதொன்றும் கடவுள்பால் ஆற்றுப் படுவது. பரிசிலளித்தற் குரியார் பெயர் கிளந்து 'முருகாற்றுப் படை' என ஏழாம் வேற்றுமையாகவும் 'திரு என்னும் அடை புணர்த்தும் வழங்குவது. பிற ஆற்றுப் படைகட்குப் பொருளாயினார் ஒரொரு காலத்தே விளங்கி மறைந்தாராகலின் அப்பாட்டுக்களின் முக்கியப் பொருளொடு ஏனைக் காலத் திரவலர்க்குச் சிறிதும் இயைபில்லை. இதற்குப் பொருளாயினார் நித்தராகலின் இதன் முக்கியப் பொருளொடு எக்காலத் தெவ் வெவர்க்கும் இயைபுண்டு. இன்ன பல சிறப்பு நோக்கியே இது முதலாவதாக வைக்கப்பட்டுளது. தொல்காப்பிய வுரையில் 'இதனைப் புலவராற்றுப்படை என்று உய்த்துணர்ந்து பெயர் கூறுவார்க்கு முருகாற்றுப்படை யென்னும் பெயரன்றி அப்பெயர் வழங்காமையான் மறுக்க' என்று நச்சினார்க்கினியர் கூறியிருத்தலின், இதனைப் **புலவராற்றுப் படையெனவும்** ஒரு சாரார் கூறினராதல் வேண்டும்.

முந்நூற்றுப் பதினேழு அடிகளையுடைய இப்பாட்டு ஆறு பிரிவினதாக அமைந்துளது.

**முதல் பிரிவு** - நீ முருகக்கடவுளின் றிருவடிப்பேற்றை விரும்பினாயாயின் அதனை இப்பொழுதே பெறுகுவை; அவர் திருப்பரங் குன்றத்திலே விரும்பி யுறைதலு முரியர்; என்று கூறுகிறது. இதன்கண் வரையுறையும் சூரரமகளிர் விளையாட்டும், பேய்மகள் துணங்கையாடலும் வருணிக்கப்பட்டுள. சாம்பூநதம் என்னும் பொன் 'நாவலொடு பெயரிய பொலம்' எனக் கூறப் பட்டுளது. 'வரிப்புனை பந்து' என முதனிலை வினையெச்சப் பொருளில் வந்துளது. அரசர்கள் பகைவரை மகளிராக்கி அவர்கொண்டு விளையாடுதற் குறிப்பாகத் தம் கொடிக்கருகே பந்தும் பாவையும் தூங்கவிடுதலாகிய வழக்கம் கூறப்பட்டுளது. 'அறுவேறு வகையி னஞ்சு வர மண்டி....... மாமுதல் தடிந்த' என்புழி, முருகக்கடவுளின் றிருவவதாரம் முதலியபற்றிக் கந்தபுராணத்தின் வேறுபடக் கூறுவர் நச்சினார்க்கினியர். அவர் கூற்றுக்கு ஆதாரமாகவுள்ளது 'பாயிரும் பனிக்கடல்' என்னும் பரி பாடற் பாட்டாகும். 'சேவடி படரும்' என்றவிடத்து "திருவடியே வீடாயிருக்கு மென்றார்; அது 'தென்னன் பெருந்துறையான் - காட்டாதனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித் - தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி'[1] என்பதனானும்

1. திருவாசகம் – திருவம்மானை,

பிறருந் திருவடியைக் கூறுமாற்றானு முணர்க" என்ற வுரை சிந்திக்கத்தக்கது.

**இரண்டாம்பிரிவு** - முருகக்கடவுளானவர் யானையேறிப் பல்லியமியம்பத் திருச்செந்தூருக்கு ஆகாயவழியாக எழுந்தருளு தலும் அவருக்கு நிலைபெற்ற குணம் என்று கூறுகிறது. ஆறு திருமுகங்களும் தனித்தனி புரியுந் தொழில்களும், அவற்றுள் ஒவ்வொரு முகத்திற்கும் இவ்விரண்டு கைகள் இனமாகப் பன்னிரண்டு திருக்கைகளும் புரியுந்தொழில்களும் இதில் கூறியிருப்பது படித்துணர்ந்து இன்புறற்பாலது.

**'ஒரு முகம்** . . . . . வள்ளியொடு நகையமர்ந்தன்று' என்னு மிடத்து, "காமநுகர்ச்சியில்லாத இறைவன் இங்ஙனம் நகைய மர்ந்தான்; உலகில் இல்வாழ்க்கை நடத்தற்கென்றுணர்க. அது[1] 'தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்'[1] என்பதனுட் 'பெண்பா லுகந்திலனேற் பேதாயிருநிலத்தோர் - விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ' என்பதனானுணர்க" என்ற வுரையும்; 'ஒருகை மார்பொடுவிளங்க ஒருகை தாரொடு பொலிய' என்பதற்கு 'முனிவர்க்குத் தத்துவங்களைக் கூறி உரை யிறந்த பொருளை யுணர்த்துங்காலத்து ஒருகை மார்போடே விளங்காநிற்க, ஒருகை மார்பின் மாலை தாழ்ந்ததனோடே சேர்ந்து அழகுபெற' என்று கூறி, "இறைவன் மோனமுத்திரை யத்தனாய்த், தானாயே யிருந்துகாட்ட, ஊமைத் தசும்புள் நீர்நிறைந்தாற்போல ஆனந்த மயமான வொளிமாணாக்கர்க்கு நிறைதலின் அதற்குரிய மோனமுத்திரை கூறிற்று. 'தன்னை யுன்னி யென்னையாக்கிய போழ்தே யானவனாயினேன்' என்பதனா னுணர்க." என்ற வுரையும் சிந்திக்கற்பாலன.

***அலைவாய்*** என்பது நாமனூரலைவாயென்னும் திருப்பதி யென்பர் உரைகாரர். நாமனூர் என ஒன்று பாண்டிநாட்டிலுள்ள தாகப் பழைய திருவிளையாடல் கூறுகிறது. திருச்செந்திலுக்கு நாமனூர் என்பதும் ஒரு பெயர்போலும்?

**மூன்றாம்பிரிவு** - முருகக் கடவுளாற் சபிக்கப்பட்டு அயன் மண்ணிடைத்தோன்றி மயக்கமுறுங்கால் முத்தொழிலும் நடை பெறாமையால், அயன், அரி, அரன் என்னும் மூவரும் தத்தம் தொழிலியற்றித் தலைவராதற்கு நான்முகனைப் பழைய நிலையில் நிறுத்தல் கருதி, கலுழக் கொடியையுடைய மாயோனும், ஏற்றுக் கொடியையுடைய முக்கட் செல்வனும், நூறு வேள்வி

1. திருவாசகம் – திருச்சாழல்.

முடித்தோனாகிய இந்திரனும், ஆதித்தர் பன்னிருவரும், உருத்திரர் பதினொரு வரும், வசுக்கள் எண்மரும், மருத்துவர் இருவரும், பதினெண்கணங்களும் ஆகாயவழியே வந்து, கந்தருவர் தம் மகளிருடன் யாழ் வாசிக்கவும், முனிவராயினார் முன்பு செல்லவும் ஒரு சேரச்சென்று குறைவேண்டிநின்று, வரம் பெறுதற்குக் காணும்படியாக அருட்கற்பினையுடைய தெய்வானையாருடன் திருவாவினன் குடியிலே தங்கிருத்தலுமுரியர்; என்று கூறுகிறது. திருவாவினன் குடி பழனித்திருப்பதி (**பொதினிமலை**) முற்காலத்து **ஆவி** குடியினர் ஆண்டமையால் ஆவினன்குடி எனப்பட்டது. **சித்தன் வாழ்வு** என்றும் இதற்கொரு பெயருண்டு போலும்? பிள்ளையார் அயனைச் சபித்த வரலாறாக உரைகாரர் எழுதியிருப்பது கருதத்தக்கது. பரிபாடல் எட்டாம்பாட்டில் 'திருமாலும், சிவனும், நான்முகனும், தேவர் முப்பத்து மூவரும், திசைகாப்பாளர் எண்மரும், ஏனை அமரரும், அவுணரும் முருகக்கடவுளைக் காண்டல் காரணமாகத் திருப்பரங்குன்றத்தில் வந்திருப்பர்' என்று கூறுவது இங்கே சிந்திக்கற்பாலது. முனிவரியல்பு இதில் நன்கு கூறப்பட்டுளது.

**நான்காம் பிரிவு** - இருபிறப்பாளர் நீராடிப் புலராத ஆடை உடம்பிற்கிடந்து புலருமாறுடுத்து, உச்சியிற் கைகூப்பித் திருவாறெழுத்தினை அடக்கியுள்ள மந்திரத்தை விதிப்படி நாப் புடைபெயருமளவாக வுச்சரித்து, வழிபடுங் காலமறிந்து தோத்திரங் கூறாநிற்க, முருகக்கடவுள் அதற்குப் பெரிதும் மகிழ்ந்து, திருவேரகத்தின்கண் உறைதலு முரியர்; என்று கூறுகிறது. இதன்கண் இருபிறப்பாளர் ஒன்பது இழையானாகிய முப்புரி நூலணிதலும், அவர் அறுவகைஇயல்பின் வழாமையும், முத்தீயோம்பலும், நாற்பத்தெட்டி யாண்டு பிரமசரியங் காத்தலும் கூறப்பட்டுள. 'ஏரகம் - மலைநாட்டகத்தொரு திருப்பதி' என்பர் நச்சினார்க்கினியர். பிற்காலத்துப் பெரியார் பலரும் ஏரகம் - சுவாமிமலை என்று கொண்டே பாடியுள்ளார்கள்.

ஐந்தாம் பிரிவு - குமாரக் கடவுளானவர் படிமத்தான் றொடுத்த கண்ணியைச் சூடி, செவ்வாடை யுடுத்து, இன்ன பல கோலங்களையுடையராய், இயம் பலவும் எழுப்பி, தம்மைச் சேவிப்பாரும், சேவித்துப் பாடுவாரு மாகிய மகளிருடனே மலைகடோறுஞ் சென்று விளையாடுதலாகிய நிலைபெற்ற பண்பினையுடையர்; என்று கூறுகிறது. இதில் மலைவாழ் கானவர் தொண்டகப் பறைமுழக்கிக் குரவையாடுதல் கூறப் பட்டுளது. இதிலுள்ள 'குன்றுதோறாடல்' என்னுந் தொடரை

ஓர் திருப்பதியின் பெயராகக் கொண்டார் பலர். அஃது ஓர் பதியின் பெயரன்று. மலைதோறுஞ் சென்று விளையாடுதல் என்பதே அதற்குப் பொருளாகும். நச்சினார்க்கினியாரும் இப்பொருளே கூறியிருத்தல் காண்க. கந்தபுராணத்துள் 'குன்று தோறாடிய' என்றும், 'தணிகையாதிப் பூவுலகுள்ளவெற்பில்' என்றும் கூறியிருத்தலுங் காண்க. ஏனைத் திருப்பதிகளோடு உடன் எண்ணவேண்டிய வழி 'குன்றுகள்' எனக் கொள்ளல் பொருத்தமாகும். மயிலேறும் பெருமாள்பிள்ளையும் 'குன்றுகள்' என்றே கூறினர். அருணகிரிநாதர் தணிகையாதி மலைகளைத் தனித் தனியாகவும் குன்றுகள் எனப் பொதுவாகவும் பாடியுள்ளார்.

ஆறாம் பிரிவு - பழம் முற்றின சோலைகளையுடைய மலைக்கு உரியராகிய குமாரக் கடவுளானவர், முற்கூறிய ஊர்களன்றி வேறுபட்ட பலவாகிய ஊர்களினும் காடு,கா, துருத்தி, யாறு, குளம், சதுக்கம், சந்தி, கடப்பமரம், மன்றம், பொதியில், கந்துடைநிலை ஆகிய விடங்களினும், விழாச்செய்யு மிடத்தும், ஊர்ச்சாந்தி செய்து அன்பர்கள் பூசிக்குமிடத்தும் உறைதலுமுரியர்; யான் அறிந்தபடியே கூறினேன்; அவ்வவ் விடங்களிலே யாயினுமாக, பிற விடங்களிலேயாயினுமாக நீ கண்டவிடத்துத் துதித்து, வாழ்த்தித் தண்டனிட்டு, 'அறுவர் பயந்த ஆறமர் செல்வ! ஆல் கெழு கடவுட் புதல்வ! மால்வரை மலைமகள் மகனே! ........ குரிசில்!' என்று நான் கூறியபடியே, நீயும் கூறிப் புகழ்ந்து, 'ஒப்பாரில்லாத மெய்ஞ் ஞானத்தை யுடையோய்! நின் திருவடியைப் பெற நினைந்து வந்தேன்' என்று நீ கூறுமுன், அவரைச் சேவிக்கும் கூளியர் சென்று நீ வந்த வாற்றை யறிவிக்க, அவரும் உடன் அணுகி, உட்குந் திறம் பொருந்திய நெடியவடிவை மறைத்துத் தமது பழைய இளைய வடிவைக் காட்டி, 'நீ வந்த காரணத்தை யான் முன்னே யறிவேன்; நீ அஞ்சல்வேண்டா'. என்று அன்புள்ள மொழிகள் பலவும் அருளிச்செய்து, கடல் சூழ்ந்த வுலகத்தில் ஒப்பின்றி விளங்கும்படி பெறுதற்கரிய வீடுபேற்றினை நினக்குத் தருவர்; என்று கூறுகிறது. கோழி கொடி நிறுத்தி, மறியறுத்து, ஊர்களில் விழாச் செய்தல் இதிற் கூறியுளது. குறமகள் முருகவேளை யழைத்து ஊர்ச்சாந்தி செய்தல் விளங்கக் கூறப்பட்டுளது. தெய்வத்திற்கு நறும்புகை யெடுத்தலும், மலர்த்தூவலும், மணியசைத்தலும், இயம் ஒலிப்பித்தலும், பண்பாடுதலும், கொம்பு ஊதுதலும் அக்கால வழக்கங்களாக இதனாலறியப்படுகின்றன. 'மதி' என்னும் அசைச்சொல் படர்க்கையில் வந்துளது. இதில் அருவி வீழ்ச்சி கூறியுள்ளது இயற்கை நவிற்சியாக மகிழ்ச்சி பயப்பதாகும்.

இதனிறுதியிலுள்ள 'பழமுதிர் சோலைமலை' என்பதில், 'பழமுதிர் சோலை' ஓர் திருப்பதியின் பெயரெனக்கொண்டு, ஆறு திருப்பதியாக எண்ணினர் ஒரு சாரார். 'சோலைமலை' ஓர் திருப்பதியின் பெயரெனக் கொண்டார் ஒரு சாரார். சோலை மலை முருகக் கடவுளுடையதாகப் பழைய தமிழ் நூல்களால் விளங்கவில்லை. அது திருமால் குன்றென்று பரிபாடல் சிலப்பதிகாரம் முதலியவற்றால் தெரிகிறது. அஃது, இருங்குன்றம், திருமாலிருங்குன்றம், திருமாலிருஞ் சோலைமலை என்னும் பெயர்களானும் வழங்கும். இந்நூலிலே திருப்பரங்குன்றம் முதலிய நான்கினைக் கிளந்தெடுத்து, முருகக் கடவுள் அவ்விடங்களிலுறைவர் என்று கூறிப் பின் மலைதோறும் விளையாடுவரென்று ஏனை மலைகளைப் பொதுப்படக் கூறி, அதன்பின், காடு, கா முதலியவற்றில் உறைவரென்று கூறி, முறைப்படுத்திருத்தலும் சோலைமலையில் உறைவரென்று கிளந்தோதாது 'மலைகிழவோன்' எனப் பெயர் மாத்திரையாகக் கூறியிருத்தலும் நோக்குங்கால், சோலை மலை முருகக் கடவுளுடையதென இந்நூலானும் துணியக் கூடவில்லை. இதற்குரைகண்ட மெச்சும் புலமை நச்சினார்க்கினியரும் ஏனைவற்றைத் 'திருப்பரங்குன்று' 'என்னும் திருப்பதி' 'ஒரு திருப்பதி' 'என்னும் ஊர்', என அடைகொடுத்தும் விளக்கியும் போந்து 'பழமுதிர் சோலை மலைகிழவோன்' என்றவிடத்துச் சோலை மலைக் குரியன் என்றேனும் கூறாமல், 'பழம் முற்றின சோலைகளையுடைய மலைக்கு உரிமையையுடையோன்' என்று கூறுதலின், அவர்க்கும் அஃதோர் திருப்பதி யெனக்கொள்ளுதல் கருத்தன்றாம். 'கிழவோனென்ற பெயர் உடம்பொடு புணர்த்தலாற்கொள்க' என்று அவர் எழுதியிருப்பதனைச் சிலர் திரியக்கொண்டோராவர். உரையாளர் கருத்து 'ஒன்' என்னும் ஈறுபெற்றுக் கிழவோன் என நிற்பதற்கு இலக்கணங் காட்டிய தாகும். இதனை, **விளி மரபு** - பன்னிரண்டாஞ் சூத்திரத்திற்கு அவரெழுதிய வுரையா னறிக.

கந்தபுராணம் - திருநகரப்படலத்தில்,

***' மேவருங் கூடன்மேலை வெற்பினி லலைவாய் தன்னி***
***லாவினன் குடியி னல்லே ரகந்தனிற் றணிகை யாதிப்***
***பூவுல குள்ள வெற்பிற் பொற்புறு மேனை வைப்பிற்***
***கோவில்கொண் டருளி வைகுங் குமரகோட் டத்து மேயோன்'***

என்று, சோலைமலையின்றியே ஆற்றுப்படை கூறிய முறைப் படிக் கூறியிருத்தலும் காண்க. கந்தபுராணம் - வாழ்த்துச் செய்யு

ளொன்றில் 'பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம்' என்பது காணப்படுகிறது. இஃது அவ்வாசிரியர் பாடியதெனின் 'பழமுதிர் சோலை மலை' என்பதற்கு அவர் இரண்டு விதமாகவும் பொருள் கொண்டன ரெனல்வேண்டும். அருணகிரிநாதர் முதலிய பெரியோர்கள் சோலைமலையை முருகக்கடவுளின் திருப்பதியுள் ஒன்றாகவைத்துப் பாடியிருக்கின்றனர். 'சேயோன் மேய மைவரை யுலகம்' என்று இலக்கணங் கூறுதலானும், இப்பாட்டுத் தானும், 'குன்றுதோறாடலும் நின்ற தன்பண்பு என்றும் 'விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ' என்றும் 'மலைகிழவோனே' என்றும். கூறுதலானும். குறிஞ்சி முழுதும் முருகக் கடவுளுடைய தென்னும் உரிமைபற்றி இருங்குன்றமும் முருகனுடையதென்று கூறுதலும் இழுக்காகாது. இருகடவுளர்க்கும் ஒப்பவுரிமை யுடைத்தாதலும் அமையும்.

திருப்பரங்குன்றம் முதலியவற்றை முருகக்கடவுளின் **படை வீடு** என வழங்கிவருகின்றனர். இவ்வழக்கு எக்காலத்துளதாய தென்று தெரிந்திலது. முருகக்கடவுள் சேனாபதியாகலின் அவருறையு மிடங்களைப் படைவீடு என வழங்கினர்போலும். இப்பாட்டிலும் வானோர் 'வணங்குவிற்றானைத் தலைவ' என்று வந்துளது.

இப்பாட்டினீற்றிலுள்ள சொல் 'கிழவோனே' என்பது. இதனைப் புராணம் எடுத்துக் கூறுதல் முன்பு காட்டினாம். **சிறுபாண்** ஒழிந்த பிற ஆற்றுப்படைச் செய்யுள்களும் இச்சொல்லான் முடிந்திருத்தலின் ஆற்றுப்படை இவ்வீற் றானிறுதல் பெரும்பான்மை மரபுபோலும்?

இப்பாட்டின்புறத்தே சில வெண்பாக்களுள்ளன. அவை பழைய ஏட்டுப் பிரதிகளில் இல்லை என்பர். இப்பாட்டிற் போலவே ஏனைய ஒன்பது பாட்டுக்களின் புறத்தும் ஒன்றும் பலவுமாக வெண்பாக்களுள்ளன. அவற்றுள் ஒன்றற்கேனும் உரை யெழுதப் படாமையின் அவை பத்துப்பாட்டாசிரியர்கள் பாடியவல்ல என்பதே உரையாளர் கருத்துப்போலும்? அது கருத்தாயினும் பொருநராற்றுப்படையில், 'கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்' என்னுந் தொடர்க்குப் பொருள் கூறுமிடத்து 'முச்சக்கரமும் - என்னுங் கவியானே கரிகாலாதலுணர்க' என்று அப்பாட்டின் புறத்துள்ள வெண்பா வொன்றினை அவர் மேற்கோளாகக் காட்டியிருத்தலின், அதுவும், அது போன்ற பிற சில வெண்பாக்களும் அவ்வுரையாளர் காலத்தின் முன்பே யிருந்தன வென்பதும் அவையும் உரைகாரரால் மதிக்கப்பட்டன

*வென்பதும் வெளியாகின்றன. திருமுருகாற்றுப்படையின் புறத்துள்ள வெண்பாக்களில் 'குன்றமெறிந்தாய்' என்பது புராணத்துள்ளுங் கூறப்படுதலின் தொன்மையுடையதாகும். அதுவும் அதனை யடுத்துள்ள,*

***குன்றமெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்***
***அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும் - இன்றென்னைக்***
***கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்***
***மெய்விடா வீரன்கை வேல்***

*என்னும் வெண்பாவும்* **பதினொராந் திருமுறைப்** *பழம் பதிப் பிலுள்ளன. புதுப்பதிப்பில் வேறு வெண்பாக்களும் சேர்க்கப் பட்டன. 'கற்பொதும்பிற் காத்தது' என்னுந் தொடர் இங்கே கருதத்தக்கது; திருப் பரங்குன்றத்தில் ஒவ்வோராண்டிலும் நடைபெற்றுவரும் பங்குனித்திருவிழா - நான்காந் திருநாளில் முருகக் கடவுள் நக்கீரனாரைச் சிறைமீட்டருளிய திருவிளையாடல் நடைபெறுமென்றும், அப்பொழுது நக்கீரர் திருவுருவம் எழுந் தருளுதல் மரபு என்றும் கூறுவர்.[1] இத்திரு முருகாற்றுப் படையைப் பலர் நியமமாகப் பாராயணம் பண்ணி வருகின்றனர். இப்பாட்டின் அருமையை அறிந்துகொள்ளச் சில பகுதிகள் கீழே தருகின்றோம்.*

## முனிவரியல்பு

***சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு***
***வலம்புரி புரையும் வானரை முடியினர்***
***மாசற விமைக்கு முருவினர் மானின்***
***உரிவை தைஇய வூன்கெடு மார்பின்***
***என்பெழுந் தியங்கும் யாக்கையர் நன்பகல்***
***பலவுடன் கழிந்த வுண்டியர் இகலொடு***
***செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்***
***கற்றோ ரறியா வறிவினர் கற்றோர்க்குத்***
***தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு***
***கடுஞ்சினங் கடிந்த காட்சியர் இடும்பை***
***யாவது மறியா வியல்பினர் மேவரத்***
***துனியில் காட்சி முனிவர் முற்புக*** *(126 - 137)*

1. பழைய திருவிளையாடல், ஆராய்ச்சி, பக்கம் – (65)ல் காண்க.

## அருவிவீழ்ச்சி

*. . . . . . . . . . பலவுடன்*
*வேறுபஃ றுகிலி னுடங்கி யகில்சுமந்*
*தார முழுமுத லுருட்டி வேரற்*
*பூவுடை யலங்குசினை புலம்ப வேர்கீண்டு*
*விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த*
*தண்கம ழலரிறால் சிதைய நன்பல*
*வாசினி முதுசுளை கலாவ மீமிசை*
*நாக நறுமல ருதிர யூகமொடு*
*மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுத*
*லிரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று*
*முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று*
*நன்பொன் மணிநிறங் கிளரப் பொன்கொழியா*
*வாழை முழுமுத றுமியத் தாழை*
*யிளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கிக்*
*கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற*
*மடநட மஞ்ஞை பலவுடன் வெரீஇக்*
*கோழி வயப்பெடை யிரியக் கேழலோ*
*டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன*
*குரூஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்*
*பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்*
*டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்*
*றிழுமென விழிதரு மருவிப்*
*பழமுதிர் சோலை மலைகிழ வோனே* *(295 - 317)*

## 2. நெடுநல்வாடை

இது பத்துப்பாட்டுள் ஏழாவதாக வுள்ளது. நூற்றெண் பத்தெட்டு அடிகளையுடையது. சொன்னயம் பொருணயங் களில் மிகச் சிறந்தது. தலையாலங்கானம் என்னு மிடத்தில் தன்னுடன் மாறுபட்டெழுந்த சேரன், செம்பியன் முதலிய எழுவரைப் போர்வென்ற பெருவீரனும், பெரு வள்ளலுமாகிய பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடியது. பகைமேற்சென்ற தலைவனைப் பிரிந்து வருந்தாநின்ற தலைவிக்கு, அவ்வருத்தந் தீரும்படி, அவன் விரைவிற் பகைவென்று மீளவேண்டுமெனக் கொற்றவையைப் பரவுவாள் கூறியதாகப் பாடப்பெற்றுளது இது.

இப்பாட்டு அகமோ புறமோ என ஐயுறுந் தன்மைத் தெனினும் 'வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகம்' எனப்

பாண்டியனது அடையாளப் பூக் கூறியிருத்தலானும், அது பெயர் கூறியதை யொக்குமாகலானும் புறனேயாயிற்று. கூதிர்ப் பாசறை கூறுதலிற் புறத்தின் பகுதியாய வாகைத் திணையாயிற்று. **கொற்றவை நிலை** கூறுதலின் வஞ்சித்திணையின் சம்பந்தமு முடையது. கூதிர்க் காலத்துத் தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு ஒரு பொழுது ஓரூழிபோல நெடிதாய்க் காட்டுதலின் நெடுமையும், கூதிர்க்காலம் பிரிந்திருப்பார்க்கு வருத்தஞ்செய்யும் இயல்பினதேனும், காமத்தை வென்றிகொண்டு பாசறையி லிருக்கும் தலைவற்கு வருத்தஞ் செய்யாமையால் நன்மையும் வாடைக்கு அடைகளாய் வந்தன. வாடை என்பது ஆகுபெயராய்க் கூதிர்காலத்துப் பாசறையை உணர்த்திற்று. நெடுஞ்செழியன் எழுவரரசரோடே பொரும் பாசறையே இப்பாட்டிற் கூறியதென்பது உரையாளர் கருத்தாதல், ‘பலரொடு முரணிய பாசறைத் தொழிலே’ என்னும் ஈற்றடிக்கு அவர் கூறிய வுரையாற் பெறப்படும்.

இப்பாட்டு இன்னணம் தலைவியை ஆற்றுவித்தல் தலைக் கீடாக, ஐப்பசி, கார்த்திகை மாதங்களாகிய கூதிர்க் காலத்தி னியல்பையும், அக்காலத்துத் தனித்திருக்கும் தலைவியின் ஆற்றாமை மிகுதியையும், தலைவன்றன் பாசறையிருப்பையும், பிறவற்றையும், ஆடியினிழலின் அறியத் தோன்றுமாறு கற்பவர் நெஞ்சிறை கொள்ளும் பொற்புறு தமிழின் இனிது விளக்கலுறுவது. இதில் முன் எழுபத்திரண்டு அடிகளில் கூதிர்க்காலத்தியல்பும்; அடுத்து நாற்பத்திரண்டு அடிகளில் கோயிலும், கோயிலுள் ஆடவர் குறுகா அருங்கடி வரைப்புக் களும், அவற்றுள் தலைவியிருக்கும் இல்லமும்; அடுத்து இருபத்தொரு அடிகளில் தலைவியமர்ந்திருக்கும் தந்தக் கட்டிலும், சேக்கையும்; அடுத்து முப்பத்தொரு அடிகளில் தலைவி வருத்தத்துடனிருக்கும் இயல்பும்; அடுத்து இரண்டு அடிகளில் கொற்றவையை வேண்டிக்கோடலும்; இறுதியிலுள்ள இருபது அடிகளில் தலைவன் பாசறையிருப்பும் கூறப்பட்டுள. இப்பாட்டின் உயிர்நிலையாகவிருப்பன,

> ***‘ புலம்பொடு வதியு நலங்கிள ரரிவைக்***
> ***கின்னா வரும்படர் தீர விறறந்***
> ***தின்னே முடிகதில் லம்ம’*** *(166 - 168)*

> ***‘ வேந்தன், பலரொடு முரணிய பாசறைத்***
> ***தொழிலே’*** *(187 - 188)*

என்பவே. இப்பாட்டினைப் படிப்பவர் இறுதிச்சொல் காறும் படித்தன்றி அமையாவாறு மேன்மேலும் அவாவினை யெழுப்பிச் சென்று, பாசறைத்தொழில், என்னும் எழுவாயை இறுதியிற் கொண்டு விளங்கும்படி இயற்றியுள்ள திறப்பாடு வியக்கத்தக்கதாம்.

தலைவனைப் பிரிந்து தன்னுடைய குழை முதலிய அணிகலன்களையுந் துறந்து, கூந்தலும் கைசெய்யாது மாசுண்ட உடையுடுத்து, யானைக் கொம்பினாற் செய்யப் பட்டு, நாடா வினாற் பின்னியிருக்கிற கட்டிலின்கண், பல்வேறு மெத்தைகள் போட்டுப் பூக்களினிதழ் பரப்பித் துகிலின் தூமடி விரித்துப் படுத்திருக்கும் தலைமகள், செவிலியராதியோர் பொருளொடு புணராப் பொய்ம் மொழியும் மெய்ம்மொழியுமாகிய உரைகள் பலவற்றையுஞ் சொல்லி, 'நின்மனக் கினிய துணைவர் இன்றே வந்து விடுவர்' என்று பலவாறு தேற்றவும் தேறாளாய் கட்டிலின் மேல் விதானத்தில் மெழுகுபடாத்தி லெழுதியுள்ள திங்களின் பக்கத்திருக்கும் உரோகிணியைப் பார்த்து, 'இதுபோன்று யாமும் பிரிவின்றி யிருக்கப்பெற்றிலோமே' என்று சிந்தித்துப் பெருமூச்செறிந்து கண்களினின்றும் ததும்புகின்ற நீரைத் தனது சிவந்த விரலால் எடுத்துத் தெறித்து வருத்தத்துடன் தங்கியிருக் கின்றாள் தலைமகள்; என்று கல்லும் கரைந்துருகப் பாடி உள்ளது. இதில் தலைவிக்குத் தலைவன்பாலுள்ள அன்பு மிகுதியும் கற்புடைமைக்கேற்ற பொற்புடை ஒழுக்கமும் எவ்வளவு நன்றாய்ப் புலனாகின்றன! தலைவனைப் பிரிந்திருக்கும் உயர்குடித் தலைவியின் மனப்பான்மையை இதனினுஞ் சிறக்க எங்ஙனம் விவரிக்கலாகும்!

பாசறையிலிருக்கின்ற வேந்தன், முதலில் மாற்றாருடைய களிறுகளைக் கொன்ற தன் வீரர்கள் பின் அப்பகைவருடைய வாட்களால் போழப்பட்ட விழுப்புண் அணிந்திருத்தலைக் கண்டு, பரிகரித்தற் பொருட்டு, நடுயாமத்திலே பள்ளி கொள்ளானாய்த் தனதிருக்கையின் புறம்போந்து, கொற்றக் குடையானது மழைத் துளியை மறைப்பவும், ஆண்டாண்டுள்ள குதிரைகள் உதறுகிற துளிகள் தன் மீது தெறிப்பவும், வாளெடுப்பான் றோளிலே வைத்த வலக்கையையுடையனாய், இடத்தோளினின்றும் நழுவிவீழ்கின்ற உத்தரீயத்தை இடப் பக்கத்தே யணைத்துக்கொண்டு கொளுத்தப் பட்டுள்ள விளக்குகளால் வெளிச்சமுடையவாயிருக்கும் அப்பாசறையிடங் களில் சேற்றின்மீது நடந்துசென்று, முன்னே செல்லும்

சேனாபதியானவன் புண்பட்டவீரரை முறையே முறையே காட்டக்கண்டு, அவர்கட்கு மனம் மகிழும்படி முகமலர்ந்து இன்னுரைகூறி, அவர்கள் போர்த்தொழிலொழிந்து இனிதிருக்கு மாறு செய்துவருகின்றான்; என்று கூறியிருப்பதிலிருந்து, அக்காலத்துத் தமிழ் வேந்தர்கள் போரின்கண் எவ்வளவு தாளாண்மையுடையராய்த் தம் படைவீரர் பால் எவ்வளவு அன்பும் இரக்கமும் உடையராய் இருந்துவந்தனர் என்பது விளங்குகிறது. இதிற் கூறப்பட்டுள்ள வாயினிலை, கதவம், தந்தக்கட்டில், விதானம் என்பவற்றின் நுட்பமமைந்த தொழிற் றிறங்கள் அக்காலத்துத் தொழின் முதிர்ச்சியையும் நாகரிகத்தையும் விளக்கவல்லன. இரும்பு, பொன், தந்தம் முதலியவற்றின் மாட்சிமைப்பட்ட தொழிற்றிறங்களும், மனைநூல், வானநூல் முதலிய நூற்பயிற்சிகளும் அக்காலத்து விளக்கமுற்றிருந்தமை புலனாகின்றது.

கோபுரவாயில்கள் வெற்றிக்கொடியோடு வேழங்கள் புகுதும்படி உயர்ந்திருக்குமென்றும், அரமனையிடங்களில் யவனர் (Grooks) இயற்றிய சிறந்த பாவை விளக்குக்கள் எரிந்து கொண்டிருக்கு மென்றும் இதனாலறியப்படுகின்றது.

கூதிர்க்காலத்தில் குளிர் மிகுதியால் பசுக்கள் கன்றுக்குப் பால் கொடாமல் உதைக்குமென்றும், அழகு பெறச் செய்யப் பட்ட ஆலவட்டங்கள் உறையிடப்பட்டுச் சிலந்தி நூலாற் சூழப் பட்டனவாய் வளைந்த முளைக்கோல்களிலே தூங்குமென்றும், யாவரும் தண்ணீருண்ணாமல் இந்தளம் என்னும் கனற்சட்டியி லிட்ட நெருப்பின் வெம்மையை யேன்றுகொள்வ ரென்றும் பிறவாறு கூறியுள்ளவை படிப்பவர்க்கு வியப்பைத் தருவனா வகும்.

**பாசறை**

***புலம்பொடு வதியு நலங்கிள ரரிவைக்***
***கின்னா வரும்படர் தீர விறறந்***
***தின்னே முடிகதில் லம்ம மின்னவி***
***ரோடையொடு பொலிந்த வினைநவில் யானை***
***நீடிர டடக்கை நிலமிசைப் புரளக்***
***களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவ***
***ரொளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து***
***வடந்தைத் தண்வளி யெறிதொறு நுடங்கித்***
***தெற்கேர் பிறைஞ்சிய தலைய நற்பல்***

*பாண்டில் விளக்கிற் பரூஉச்சுட ரழல*
*வேம்புதலை யாத்த நோன்கா ழெஃகமொடு*
*முன்னோன் முறைமுறை காட்டப் பின்னர்*
*மணிபுறத்திட்ட மாத்தாட் பிடியொடு*
*பருமங் களையாப் பாய்பரிக் கலிமா*
*விருஞ்சேற்றுத் தெருவி னெறிதுளி விதிர்ப்பப்*
*புடைவீ ழந்துகி லிடவயிற் றழீஇ*
*வாடோட் கோத்த வன்கட் காளை*
*சுவன்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து*
*நூல்கால் யாத்த மாலை வெண்குடை*
*தவ்வென் றசைஇத் தாதுளி மறைப்ப*
*நள்ளென் யாமத்துப் பள்ளி கொள்ளான்*
*சிலரொடு திரிதரும் வேந்தன்*
*பலரொடு முரணிய பாசறைத் தொழிலே* *(166 - 188)*

## 3. பிறபாட்டுக்கள்

நற்றிணையில் இவர் பாடியன ஏழு பாட்டுக்களுள்ளன. அவற்றில், வெளிப்படையுவமமும், உள்ளுறையுவமமும் பல அமைந்துள்ளன. பாண்டியனது மருங்கூர்ப் பட்டினம், வாணனது சிறுகுடி, அருமனது சிறுகுடி என்னும் ஊர்கள் கூறப்பட்டுள. பகற்பொழுதில் நகரின் கண் மகளிர் பலியாக முற்றத்திற் போகட்ட சோற்றையுண்ட காக்கைகள், பொழுது பட்ட மாலைப்பொழுதில், நாவாயிற் பிணித்த பாய்மரத்திற் சென்று தங்கா நிற்கும் ‘மருங்கூர்ப்பட்டினம்’ என்றும் வட்டமாகிய கண்களையும் கூரிய வாயையுமுடைய காக்கைப்பேடை தன் பிள்ளையைத் தழுவிக்கொண்டு சுற்றத்தையும் அழைத்துப் பொரிக்கறியோடு கூடிய சோற்றுத் திரளையைத் தெய்வத் திற்கிடும் பலியுடனே கவர்ந்துகொள்ளுமாறு மனையின் கண்ணே கூடினவாயிருக்கும் பழமையான வீடுகளையுடைய ‘அருமன்’ என்பவனது ‘சிறுகுடி’ என்றும் இவ்வூர்கள் பாராட்டப்பட்டுள்ளன.

குறுந்தொகையில் எட்டுப் பாட்டுக்கள் இவர் பாடியன வாகும். இவற்றில், அருவியொலிக்கு முழவொலியை உவமை கூறுகின்றார். விளைந்த தினைக்கொல்லைகளில் தெய்வத்திற் கென்று விடப்பட்டிருக்கும் சில கதிர்களை அறியாது உண்ட மயில் வெறியாடு மகள்போலும் வனப்பினதாகி நடுங்கும் மலை என்கின்றார். நெஞ்சு ஈரம்பட்ட செவ்விப் பைம்புனத்து ஓரே ருழவன்போல நடுக்குற்றது என்கிறார். மேனியின் பசப்பு ஒரு

பெற்றியே தங்காது என்பதற்கு 'நில்லாமையே நிலையிற்றாகலின் நல்லிசை வேட்ட நயனுடை நெஞ்சிற் கடப்பாட்டாளன் உடைப் பொருள்போலத் தூங்குதற்குரிய தன்று' என உவமங் கூறு கின்றார். பேயும் கண்பனிக்கும்படி இரவில் மழைபொழியும் என்று பாடுகின்றார். தலைவன் பாங்கற்குக் கூறும் கூற்றில் வைத்து, 'என் நெஞ்சம் அமர்ந்தாருடன் ஒருநாள் கூடியிருக்கப் பெறின் பின் அரைநாள் வாழ்க்கையும் வேண்டலன் யான்' என்று உரைக்கின்றார்.

**அகநானூற்றில்** பதினேழு பாட்டுக்கள் இவராற் பாடப் பட்டனவாகும். இவற்றில் முடியுடை வேந்தரும், சிற்றரசருமாகிய பலரைப்பற்றிய குறிப்புக்கள் காணலாகும். இப்பாட்டுக்களில் வந்துள்ள உள்ளுறையுவமங்கள் மிகப் பாராட்டற்பாலன. வராற்போத்தானது தூண்டிலிற் கோத்த இரையை விழுங்கி, ஆம்பல் இலை கிழியவும், குவளைமலர் சிதையவும், எழுந்து பாய்ந்து வள்ளைக் கொடியை மயக்கி தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது, கயிறிடப்பட்ட கதத்தினையுடைய ஆனேறு போல மதம்மிக்குக் கயத்தினை உழக்கும் ஊரன் என்று கூறு கின்றார். இதிலுள்ள உள்ளுறையை ஆராய்ந்தறிக. பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துப் போரில் தன்னுடன் எதிர்த்த சேரன், செம்பியன், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேள், பொருநன் என்னும் எழுவரரசரை ஒரு பகலில் வென்று முரசுங் குடையும் அகப்படுத்துக், களவேள்வியியற்றிய பொழுதில், அவனுடைய வீரர் ஆர்த்த ஆர்ப்பினும் அலர் பெரிது என்று பாண்டியனது வெற்றியைப் புலப்படுகின்றார். செழியன், முசிறியை முற்றிக் களிறுகளைக் கொன்ற போர்த் திறத்தினைக் கூறுகின்றார். மூவேந்தரும் வந்து முற்றுகை யிட்டிருந்த பொழுது, அடைமதிற் பட்டிருந்த பாரிவள்ளல், 'உலகுடன் திரிதரும் பலர் புகழ் நல்லிசை வாய்மொழிக் கபிலன்' சூழ்ச்சியால் கிளிகளை விடுத்து, நெற்கதிர்களைக் கொணர்வித்து, உண்டிருந்து மூவேந்தரையும் வாளமருழக்கி, ஓடச் செய்தனன் என்று கூறியுள்ளார். 'ஆரங்கண்ணி யடுபோர்ச் சோழர் அறங்கெழு நல்லவை யுறந்தை யன்ன, பெறலரு நன்கலன்' என்றும், 'வாடா வேம்பின் வழுதிகூடல்' நாளங்காடி நாறுநுதல் என்றும் 'கரும்ப கட்டியானை நெடுந்தேர்க்கோதை திருமாவியனகர்க் கருவூர் முன்றுறை......... தண்ணான் பொருநை மணலினும் பல' என்றும் ஒரு பாட்டில் மூவேந்தர் தலைநகரங் களையும் சிறப்பித்துக் கூறியுள்ளார். எவ்வியானவன் சென்று நன்மொழி கூறி வேண்டவும் அடங்காது, **அன்னி**யானவன்

**திதி**யனொடு பொருது அழிந்ததனைக் கூறியிருக்கிறார். கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நாள் இரவில் தெருக்களில் விளக்குக்களை வைத்து, மாலைகளால் அலங்கரித்துப், பலருங்கூடி மகிழ்வுடன் விழாவயர்தலும், புதுவதாக மணஞ்செய்யப்பெற்ற மருமகளை அழைத்து வந்து அவளால் முதலில் பால் உலைவைக்கச் செய்வதும், கார் நெற்கதிர்களைக் கொண்டுவந்து, சிறுமியர் பலர்கூடி அவலிடிப்பதும் அழகுறப் பாடியுள்ளார். ‘செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால், வெல்போர்ச்சோழன் இடையாற்றன்ன, நல்லிசை வெறுக்கை’ என்று கரிகாலனது இடையாற்றைச் சிறப்பித்துள்ளார். ‘வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை’ வளங்கெழு கோசர் விளங்கு படைநூறி, நிலங்கொள வெஃகிய பொலம்பூட் கிள்ளி’ எனச் சோழன் கோசரை வென்றமை கூறுகின்றார். தூங்கலோரியார் பாடிய தழும்பனது ஊணூர் என ஊணூரைப் பாராட்டிஉள்ளார். ‘நெடுந்தேர் களிறொடு சுரக்குங் கொடும்பூட், பல்வேன் **முசுண்டை வேம்பி** யன்ன வென், னல்லெழி விளநலம்’ என்று, முசுண்டையின் வண்மையையும், ஊரையும் பாராட்டிக் கூறியுள்ளார். வடுகர் தலைவன் **எருமை** யென்பானையும், குட்டுவன் சேரலையும், அவனது தொண்டியென்னும் பட்டினத்தையும் **திரையன்** என்பானையும், அவனது பதியாகிய **பவத்திரியையும்** பாராட்டிப் பாடியிருப்பதுடன், பழையன்மாறன் மதுரையில் வந்தெதிர்த்த கிள்ளிவளவனை வென்றதனையும் பாடியுள்ளார். இப்பாட்டுக்களின் சொல்விழுப்பமும் பொருள் விழுப்பமும் படித்தின்புறற்பாலன. நற்றிணையிலும், குறுந்தொகையிலும், அகநானூற்றிலும் இவர் அகப்பொருட் பகுதியான பல திணை களும், துறைகளும் அமைவரப் பாடியிருப்பது மதிக்கத்தக்கது.

புறநானூற்றில் மூன்று பாட்டுக்கள் இவர் பாடியன. இலவந்திப்பள்ளித் துஞ்சிய **நன்மாறனைப்** பாடியது ஒரு பாட்டு. சோழநாட்டுப் **பிடவூர் கிழான்** மகன் **பெருஞ் சாத்தனைப்** பாடியது ஒரு பாட்டு. பொருண்மொழிக் காஞ்சியாகப் பொதுவிற் பாடியது ஒரு பாட்டு.நன்மாறனுக்குச் சீற்றம், வலி, புகழ், எண்ணியது முடித்தல் என்பனபற்றி முறையே மணிமிடற்றிறையையும், பலராமனையும், மாயோனையும், முருகனையும் உவமையாகக் கூறுகின்றார். இப்பாட்டில் யவனரால் குப்பியிற் கொடுவரப் பட்ட மதுக்குறிக்கப்படுகிறது. பெருஞ்சாத்தனைப் பாடிய பாடாண் பாட்டில் ‘தன்மனைப், பொன்போன் மடந்தையைக் காட்டியிவனை, யென்போற் போற்றென்றோனே’ என்று, அவன் புலவர்பால் வைத்துள்ள வேற்றுமையில்லா அன்பினை விளங்கக்

கூறியுள்ளார். பெருஞ்சாத்தனது ஊராகிய பிடவூர் திரிசிர புரத்துக்குக் கீழ்பாலுள்ளது. 'உறந்தைக்குணாது, நெடுங்கை வேண்மானருங்கடிப் பிடவூர்' என இப்பாட்டிலும் கூறப் பட்டுள்ளது. இவர் கூறிய பொருண்மொழிக் காஞ்சி படித் தறிந்து மகிழத்தக்கது.

***' தென்கடல் வளாகம் பொதுமை யின்றி***
***வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கும்***
***நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்***
***கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கும்***
***உண்பன நாழி யுடுப்பன விரண்டே***
***பிறவு மெல்லா மோரொக் கும்மே***
***செல்வத்துப் பயனே யீதல்***
***துய்ப்பே மெனினே தப்புந பலவே.'***

*(புறம் - 189)*

## முடிபு

நக்கீரர் விளங்கிய காலத்தில், தமிழறியும் பெருமாள் என்னும் பெயருள்ள ஓர் மாது புலமையிற் சிறந்தாளாய் மிக்க செருக் குற்றிருந்தனள் என்றும், அவளை மணஞ்செய்துகொள்ள விரும்பி வந்தார் பலரும் அவளெழுப்பிய வினாக்களுக்கு விடை யிறுக்க மாட்டாது தோல்வியுற்று நாணிச் சென்றனரென்றும் நக்கீரர் ஓர் விறகுவிற்பானுக்குக் கல்வி கற்பித்து, அவனை அழைத்துச் சென்று, வாதினில் வெல்லுமாறு புரிந்து, அவள் அவனுக்கு வாழ்க்கைப் படுமாறு செய்வித்தனரென்றும் ஓர் விநோதமுள்ள கதை வழங்குகிறது. இதன் விரிவை, 'தமிழறியும் பெருமாள் கதை' என்று வழங்குகிற சிறு புத்தகத்திலும், புலவர் புராணம் முதலியவற்றிலும் காண்க. மற்றும் இவர் சம்பந்தமாக வழங்கும் கதைகள் உளவேனும் கேட்டுணர்க.

இவர் தாம் பாடிய அகத்திணைப் பாட்டுக்கள் பலவற்றினும் முடியுடைவேந்தரும், சிற்றரசருமாகிய பலருடைய பெருமை களையும், செயல்களையும் குறித்திருப்பதிலிருந்து சரிதவுண்மை களை வெளிப்படுப்பதில் இவருக்குள்ள ஆர்வ - மிகுதி புலப் படுகின்றது. இவ்வாறன்றிப் பரிசில் கருதி யாரொருவரையும் பாடினரென்று கொள்ளச் சிறிதும் இடனின்று. இவர் பல நிலங்களையும் காலங்களையும் அவற்றுட்பட்ட இயற்கைப் பொருள்களின் பண்புகளையும் உள்ளவாறு கூறுவதிலிருந்து அவைகளில் இவர் எவ்வளவு ஆழ்ந்த அறிவும் அநுபவமு

முடையராயிருந்தாரென்பது புலனாகின்றது. தமிழ் நாட்டு மூவேந்தர் பெருமைகளையும் அவர்கள் நாடு நகரங்களின் சிறப்புக்களையும் ஒப்பமதித்துப் பாராட்டுவதிலிருந்து, இவருடைய நடுவு நிலைமையும் மனத்தூய்மையும் புலனாகின்றன. இவர் பாட்டுக்களிலிருந்து இவருடைய குணாதிசயங்களாக நாம் அறியலுறுவன மற்றும் பலவுள்ளன.

மேல் ஐந்ததிகாரங்களாலும் கூறியவற்றின் றொகைப் பொருள்:

ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளின் முன் மதுரையம் பதியிற் சிறந்த ஆசிரியராய் விளங்கிய தத்தனார் என்பவர்க்குப் புத்திரராய்த் தோன்றிய நக்கீரனார், தமிழெனு மளப்பருந் தீம்பாற்கடலையுண்டு, ஞானவொழுக்கங்களான் மேம்பட்டுச், சங்கப்புலவருட்டலை வராய்த் திகழ்ந்தன ரென்பதும் திருமுருகாற்றுப்படையும், நெடுநல்வாடையும், நற்றிணை முதலிய தொகைகளிற் பல பாட்டுக்களும் இவர் பாடியன வென்பதும் அப்பாட்டுக்களின் சிறப்புக்கள் இன்னவென்பதும், இறையனா ரகப்பொருளுக்கு மெய்யுரை கண்டவர் இவரே யென்பதும், அவ்வுரையின் சிறப்புக் களிவையென்பதும், இவர் சிவபிரானொடும் வாதுபுரிந்து, தாம் கொண்ட கொள்கையே மெய்யெனச் சாதித்தனரென்பதும், கைலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி முதலியன இவர் பாடிய வல்லவெனச் சிலர் கூறுதற்குக் காரணமிவையென்பதும், அவை இவர் பாடிய வாகவே யாம் கொள்ளவேண்டுமென்பதும், இவருடைய குணமும் பெருமையும் இத்தகையவென்பதும் பிறவுமாம்.

## வாழ்த்து

***மழைவளஞ் சிறக்க நாளும் மாநிலத் துயிர்களெல்லாம்***
***தழைவுறு முளத்தவாக தருமமே தலைநின் றோங்க***
***பழையநம் தமிழின் சீர்த்தி பரவுக வுலக மெல்லாம்***
***விழைவுற வரசன் செங்கோல் மேன்மையின் விளங்க மாதோ***

♦ ♦ ♦

# க
# பி
# ல
# ர்

## வரலாறு

# 2. கபிலர் வரலாறு

## முகவுரை

எக்காலத்தும் செவ்வி புலராது, நிலையுதலுற்று, மலர்ந்து, தேன் பிலிற்றும் நீர்மையால்,செந்தளிர்க் கற்பகத்தின் றிருமலரே போலும், நம் தெய்வச் செந்தமிழ் மொழியினைப் பண்டை நாளிலே ஆராய்ந்து, புலமை முற்றிய நல்லிசைப் புலவர் பெரு மக்களுள்ளே, **கபிலர்** என்னும் சான்றோரைப் பற்றி ஆராய்ந்து எழுதிய இந்நூல், **புலவர் வரலாற்றுக்** கோவையுள் இரண்டாவ தாகும். இதிலே தமிழ்ச்சங்க வரலாறும், கபிலரது காலமும், குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சியும் பொருந்திய வளவு விரிவாகவே எழுதப்பட்டுள்ளன. கபிலரது வாழ்க்கை வரலாறு, பெரும் பாலும் பழைய பாட்டுக்களின் உதவிகொண்டு ஒருவாறு தொடர்புபடுத் தெழுதியிருக்கின்றது. பழைய பாட்டுக்களின் பொருள்களை உரை நடையில் எழுதுங்கால் அவற்றிலுள்ள அடைமொழிகளைப் பெரிதும் அகற்றி விட்டெழுதி னன்றி நடையழகு செவ்விபெறாது என அறியப்படினும் முன்னாளில் எவ்வெப் பொருள் எப்படி யெப்படிக் கூறப்பட்டன வென்பது புலப்பட வேண்டுமெனக் கருதியே, புறப்பாட்டுக் களையும் குறிஞ்சிப் பாட்டையும் உரைநடைப் படுத்தும்வழி அடைகள் பெரிதும் தழுவிக் கொள்ளப்பட்டன. நல்லிசைப் புலவர்கள் உலகியற் பொருள்களை எங்ஙனம் கூர்ந்தறிந்து பொருந்துமாறு உவமை கூறியுள்ளார்கள் என்பதனை யாவரும் அறிய வேண்டு மெனக் கருதி, இந்நூலிலே உவமைகள் பெரும்பாலன தொகுத்துக் காட்டப்பட்டுள்ளன. அறிஞர்கள் இதிற் காணப் படும் பிழைகளை எனக்கு அறிவித்து, இதனை ஆதரிக்குமாறு வேண்டுகிறேன்.

பலவான்குடி, **மணிவாசக சங்கத்தின்** தலைவரும், இருபெருஞ் செல்வமும் ஒருங்கு வாய்ந்த உத்தமரும் ஆகிய திருவாளர் **ராம. கு. ராம. இராமசாமிச் செட்டியார்** அவர்களின் நல்விருப்பின்படி, அச்சங்கத்தின் ஒன்பதாம் ஆண்டுத் திருவிழாக் காலத்தில், திருக்கோவலூர் ஆதீனம், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்தின் தலைவரும், கல்விக்

*கடலின் நிலைகண்டுணர்ந்த பெரியாரு மாகிய உயர்திரு.* ***சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்*** *தலைவர் களாக வீற்றிருக்க நடைபெற்ற பேரவையில் இந்நூற் பொருள் சுருக்கமாக வுரைக்கப் பெற்று, மதிப்பெய்தியது.*

*இதனை அச்சியற்ற வேண்டும் பொருளுதவி புரிந்தார், கோயமுத்தூரை யடுத்த ஒப்பிலிபாளையத்திலுள்ள செல்வக் குரிசிலும் அவ்வூர்க்* ***கம்பர் கழகத்தின்*** *தலைவரும் ஆகிய, என் அருமை நண்பர் திருவாளர்* ***சு. ஏ இலக்குமண நாயுடுகார்*** *ஆவர். அவர் மேன் மேலும் எல்லாச் செல்வமும் ஓங்கப்பெற்று நீடுவாழ வேண்டுமெனத் திருவருளை வழுத்துவதன்றி யான் புரியும் கைம்மாறு யாதுளது?*

*இதனைக்* ***கரந்தைத் தமிழ்ச் சங்க*** *வாயிலாக வெளிப்படுத்த அன்புடன் ஏற்றுக் கொண்ட அதன் தலைவரான திருவாளர்* **த. வே. உமாமகேசுவரம் பிள்ளை B. A. B. L** *அவர்களுக்கு நன்றி பாராட்டும் கடப்பாடுடையேன்.*

*ஒன்றுக்கும் பற்றாத என்னை இம்முயற்சியுட் புகுத்தி இயக்குவித்தருளும் இறைவன் றிருவருளில் யாதினை யறிந்து யாங்ஙனம் வழுத்துகேன்!*

**ந. மு. வே.**

# 1. தமிழ்ச் சங்க வரலாறு

## காப்பு

*அகனும் புறனு மளாய பொருளாய்த்*
*திகழு மறிவின் றெளிவாய் - நிகரிலின்பச்*
*செந்தமிழே யென்னவுயர் செம்பொருளை யெப்பொழுதுஞ்*
*சிந்தித்து நெஞ்சேநீ சேர்.*

## தொடக்கம்

உலகத்தில் மக்களாய்த் தோன்றினோர் கல்வியறிவு கைவரப் பெற்றவரேல் விண்ணவரே போல்வரென்பது இருவர்க்கும் ஒப்ப வழங்கும் 'புலவர்' என்னும் பெயரானே தெளியப்படும். [1]தேவரனையர் புலவரும், [2]'தேவரே கற்றவர்' என்னும் ஆன்றோர் கூற்றுக்களும் காண்க. கற்றாருள்ளும் நல்லிசைப் புலமை வாய்ந்த சான்றோர் பெருமை அளப்பரிய தொன்றாகும். நான்முகக் கடவுளானவர் கலைமகளை நாவிலே வைத்துளரேனும் மேன்மை பொருந்திய தமிழ்ப் புலவர்க் கொவ்வார் என்று ஓர் புலவர் பெருந்தகை கூறுமாறு புகழுடம்பால் நிலைபெற்று விளங்கும் பண்டைத் தண்டமிழ்ப் புலவர்களின் அறிவு மாட்சி யாரால் எடுத்தியம்ப லாகும்?[3] அன்னவர் பலர் ஒருங்கிருந்து தமிழாராய்ச்சி செய்ய, மன்னவர்கள் உடனிருந்து கேட்டு இன்புற்று வேண்டுவன நல்கிப் போற்ற, வரம்பி லறிவனாகிய முதல்வனும் அகத்தும் புறத்தும் தோன்றி அருள் வழங்கப் பல்லாண்டு நிகழப் பெற்ற பெருமையுடையது நம் தமிழ்ச்சங்கம். சங்கப் புலவருள்ளே பொங்கொளி வாய்ந்த செம்மணி விளக்குப் போல மெய்ம்மையின் மேம்பட்டு விளங்கினார் **கபிலர்** என்னும் புலவர் பெருந்தகை.

---

1. நான்மணிக்கடிகை.
2. சிறுபஞ்ச மூலம்.
3. 'கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினு – மலரவன், வண்டமிழோர்க் கொவ்வான்'
   – நீதிநெறி விளக்கம்.

இனித், தமிழ்ச் சங்க உண்மையினை இக்காலத்துச் சிலர் ஐயுற்றுத் திரிபுற எழுதி வருகின்றனர் ஆகலின் முதற்கண் அதனை ஆராய்ந்து உண்மை நிலை நாட்டுதல் கடனாகின்றது.

## தமிழ்ச் சங்க நிகழ்ச்சி

### திருவிளையாடற் புராணம் கூறுமாறு

'எல்லார்க்கு மெளிய நெல்லும் நீரும் முதலியன தோன்றும் பிறநாடு போலன்றி, வரைய சாந்தமும் திரைய முத்தமும் தோன்றும் சிறப்புடைய செந்தமிழ்ப் பாண்டி நாட்டில் மதுரை யென்னுந் தலைநகரமர்ந்து திங்களின் வழித்தோன்றலான பாண்டியன் வங்கியசேகரன் செங்கோலோச்சி வருவானாயினன். அந்நாளில் நான்முகப் புத்தேளானவர் காசித்திருப்பதியின்கண் ஒருபது பரிமா வேள்வி செய்து முடித்து, நீராடற்பொருட்டு நாவின்செல்வி, சாவித்திரி, காயத்திரி என்னும் நங்கையர் மூவருடனும் கங்கையை நோக்கிச் செல்வாராயினர். செல்லும் நெறிக் கண் நாவின் செல்வியானவள் விண்ணிடையியங்கும் விஞ்சைமாதொருத்தி பாடும் இசையினில் உள்ளம் போக்கி நின்று வரவுபாணித்தாளாக, நதியை யடைந்த மலர்மிசைக் கடவுள் ஏனை நங்கைய ரிருவரோடும் நீராடிக் கரையேறினர். அப்பொழுது பாமகள் அங்குவந்து, 'என்னையன்றி நீர் நீராடிய வாறென்னை?' என வெகுளாநிற்ப, அது கண்ட தாமரைக் கிழவர், 'குற்றம் நின்மேலதாகவும் நம்மை நீ சினவலுற்றமையின் பெருந்தீங்குடையை யாயினை. இனைய தீங்கினை எண்ணறு மாக்களாகத் தோற்றமுற்று ஒழிக்கற்பாலை' எனச் சபித்தனர். சபிக்க, அப்பொற்றொடி மடந்தை அஞ்சிப் புலம்பி அவல முற்று, 'எம்பெருமானே! நுமது ஆருயிர்த் துணையாகிய யானும் மக்களுடம் பெடுத்து மயங்குவேனோ!' என்று பரிந்து கூறினள். அவரும், அன்னவள் இடரகலக் கருதிப், 'பூங்கொம் பனையாய்! நினக்கு உடம்பா யமைந்த ஐம்பத்தொரு முதலெழுத்துக் களில் ஆகாரம் முதல் ஹாகாரம் இறுதியாகவுள்ள நாற்பத்தெட்டும் புவியிடை நாற்பத்தெண்புலவராய்த் தோன்றுவராக. அவ் வெழுத்துக்கள் எல்லாவற்றினும் கலந்துநின்று அவற்றை வேறுவேறாக இயக்குவிக்கும் தலைமையுடைய அகரத்திற்கு, அது போன்று உயிர்ப்பொருளும் அல்பொருளுமாகிய யாவற்றினுங் கலந்து நின்று அவற்றை இயக்குவிக்கும் தலைமை யுடைய ஆலவாயடிகளே முதல்வராகலின், அம்முறையானே அவர் ஒரு புலவராய்த் திருவுருத் தரித்துப் புலவர் நாற்பத்

தொன்பதின்ம ரென்னுமாறு சங்க மமர்ந்து, அவரவர்க்கு உண்ணின்று அறிவினை விளங்கச் செய்து புலமை புரந்தருள்வர்'. என்றனர். அவ்வாறே நாற்பத்தெட்டெழுத்துக்களும் புவியின்கண் வேறு வேறு மக்களாய்த் தோற்றஞ் செய்ய அவரெல்லாம் ஆரியத்தோடு பதினெண் மொழிகளும் ஆராய்ந்து, செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்றமிழாம் சீரிய மொழியினையும் நன்காராய்ந்து, பன்மாண் கலையுந் தேர்ந்து, புலமையிற்றலைமை சார்ந்தனர். அவர்கள் வயிரமணி முதலியன இழைக்கப்பெற்ற கலன்களேயன்றிக் கண்டியென்னும் கொழு மணிக்கலனும் பூண்பவர்; தண்ணிலாப் போலும் வெண்ணீறு அணிபவர்; வழுவற ஆராய்ந்த செஞ்சொற்களாற் றொடுத்த பாமாலையும், பூமாலையுஞ் சூட்டிச் சிவனை வழிபடும் இயல்பினர். அவரெல்லாம் நாடுகடோறும் சென்று சென்று ஆங்காங்குள்ள புலவர்களையெல்லாம் புலமையால் வென்று வென்று பாண்டி நாட்டு மதுரை நோக்கி நண்ணுவாராயினர். அப்பொழுது ஆலவாயமர்ந்த அவிர்சடைக் கடவுளானவர் மறைமுடியுந் தொடற்கரிய திருவடி நிலந்தோயப் போந்து, ஆண்டு வருகின்றாரை நோக்கி, 'நீவிர் யாவிரோ? எங்கு நின்று போது கின்றனிர்?' என்ன, அன்னவர், 'யாங்கள் விஞ்சை வல்லேம்; ஈண்டுப் பொருனை நாட்டின் வருகின்றேம்' என்று கூறினர். கூற, அவரும், 'நீவிர் அருட்பெருங் கடலாய ஆலவாய்ப் பெருமான் றிருவடிகளை இறைஞ்சுதல் வேண்டும்'. என்று கூறி, அழைத்துச் சென்று, நஞ்சக்கறை பொலிந்த திருமிடற் றிறையைப் பணியுமாறு புரிந்து, மறைந்தருளினர். புலவர்கள் விம்மித மெய்தி, விண்ணிழி விமானத்து மேவிய கண்ணுதலைப் பலப்பல செய்யுட்களாற் பரவி வணங்கி, மீண்டு, பாண்டியனைச் சென்று கண்டார்கள். மன்னவனும் அன்னவர்தம் அறிவும், செறிவும், ஒழுக்கமும், விழுப்பமும் நோக்கி, இப்பெரியோர்கள் இவண் எய்தப் பெற்றேம் என்று உவகை பூத்த உள்ளத்தனாய், திங்களங்கண்ணி வேய்ந்த செஞ்சடைப் பரமர் கோயிலின் வடமேற்கில் ஓர் புடைச் சங்க மண்டபம் உண்டாக்கி, அவர்களை அங்கிருக்கச் செய்து, வரிசை பல நல்கா நின்றனன். அது கண்ட முன்னைப் புலவ ரெல்லாம் உளம் புழுங்கி, அவர்களை நெருங்கி வாது புரிந்து, தோற்றுத் துயருழந் தேகினார்கள். இங்ஙனமே வேறு புலத் திருக்கும் கேள்வி வல்லோரும் வந்து வந்து, தருக்கினாற் பற்பல வினாக்களை யெழுப்பிப், பட்டிமை புரிந்து, தோல்வி யுற்றேகினர். இன்னணம் யாவரையும் சொற்போரில் வென்று வைகும் அன்னவர். மலைமகளொருபால் நீங்காத் தலைவரை

யடைந்து வணங்கி 'எந்தாய்! யாவரும் அடுத்தடுத் திங்கு வந்து எம்மொடு பட்டிமை புரிகின்றனர்; ஆகலின் அவரவர்புலமையை ஆராய்ந்து அளந்து அறிவிப்பதாய சங்கப் பலகை யொன்று தந்தருள வேண்டும்'. என்று குறையிரந்து நின்றனர். வேண்டுவார் வேண்டுவதை யீந்தருளும் கருணை வள்ளலான கடவுளும் ஆண்டு ஓர் பலகையுடன் 'புலவராய்த் தோன்றி' சதுரமாய் இருசாண் அளவுள்ளதாகும் இப்பலகை மதியினும் வாலிது; மந்திர வலியது; புலத்துறை முற்றிய நும்மனோர்க்கெல்லாம் முழம் வளர்ந்து இருக்கை நல்குவது; இது நுமக்கு அளவு கோலாயிருக்கும்'. என்றியம்பி அதனை யீந்தனர். நாமகளுருவாய் வந்த நாவல ரெல்லாம் வெள்ளைத் தாமரையனைய அப்பலகையைப் பெற்று, கோயிலை வலம் வந்து கழகத்தை யடைந்தனர். அடைந்த பின் நறுமலர் தூவி நறும்புகையெடுத்துப் பலகையை வழிபட்டு நக்கீரர் அதன் கண் ஏறினர். கபிலரும் பரணரும் ஏறினர். இருங்கலை வல்லோரெல்லாம் இம்முறை யேறி யேறி ஒருங்கு இனிதிருந்தனர். பலகையும் சுருங்கி நின்று உரை செய்வார்க்கு விரிந்து தோன்றும் நூல் போல யாவர்க்கும் வளர்ந்து இடங்கொடுத்தது.

மேதகு சான்றோர் நூலின் விளைபொருள் விளங்கத் தம்மில் ஏதுவுமெடுத்துக் காட்டும் எழுவகை மதமுங் கூறும் போதவை தெளிந்த கிள்ளை பூவையே புறம்பு போந்து வாது செய் வார்கள் வந்தால் மறுத்துநேர் நிறுத்தும் மன்னோ!'

'இங்ஙனம் புலவர் நாற்பத்தெண்மரும் தாம் ஆராய்ந்தறிந்த கல்வியின் பயன் விளங்குமாறு தூய்மைமிக்க பாட்டுக்கள் பல பாடிக் கொண்டிருந்தனர். பாட்டுக்களும் பலவாயின. அவை ஒன்று ஒன்றனோடு சொல்வளனும் பொருள் வளனும் ஒத்துத் தோன்றலின் அவற்றின் வேறுபாடறியாமல், 'நுமது பாட்டு அது; எமது பாட்டு இது, என்று கூறிச் சங்கப் புலவரும் மாறு பாடுற்றனர். சொல்லும் பொருளுமாய் விளங்கும் சொக்கப் பெருமானும் அவரது மாறு பாட்டினை யகற்றக் கருதி, ஓர் நாவலராய்த் தோன்றி அவரவர் பாட்டுக்களை அவரவர்க்கு எடுத்தளித்தனர். அவை பெற்ற புலவர்கள் 'நீரும் எம் முடனொரு வராய் உயர்வுற வாழ்வீராக!' எனவேண்டிக் கொள்ள' நாவல ராய் வந்த இறைவரும் அக்கனமாப் பலகையென்னும் பொன்னாரத்திற் சூழப் பதித்த மணிகள்போல் ஏனைப் புலவர்கள் விளங்காநிற்க, நடுவிற் பதித்த குருமணி போன்று நண்ணி வீற்றிருந்தருளினார். புலவரெல்லாரும் தம் மதி நலம்

தோன்றப் பின்னரும் பற்பல பாட்டுக்கள் பாடி வாழ்ந்து வந்தனர் என்பது.[1]

## களவியலுரை கூறுமாறு

தலைச்சங்கம் 'இடைச்சங்கம்' கடைச்சங்க மென மூவகைப் பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள் தலைச் சங்கமிருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருக வேளும், முரஞ்சியூர் முடி நாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐஞ்நூற்று நாற்பத் தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத் தொன்பதின்மர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன, எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் என இத்தொடக் கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற் றியாண்டு சங்க மிருந்தாரென்ப, அவர்களைச் சங்கம் இரீஇயினார் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மர் என்ப, அவருட் கவியரங் கேறினார் எழுவர் பாண்டிய ரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை யென்ப. அவர்க்கு நூல் அகத்தியம்.

இனி, இடைச் சங்க மிருந்தார் அகத்தியனாரும், தொல் காப்பினாரும், [2]இருந்தையூர்க்கருங் கோழியும் மோசியும் வெள்ளூர்க் காப்பியனும் சிறு பாண்டரங்கனும் [3]திரையன் மாறனும் துவரைக் கோமானும் கீரந்தையும் என இத்தொடக்கத் தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்தெழு நூற்றுவர் பாடினாரென்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலை யகவலும் என இத் தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல் காப்பியமும் மாபுராணமும் இசை நுணுக்கமும் பூத புராணமும் என இவை யென்ப. அவர் மூவாயிரத்தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தா ரென்ப. அவரைச் சங்கம் இரீஇயினார் [4]வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத் தொன்பதின்மர்

---

1. இதனை யடுத்துப் புராணத்திற் கூறப்பட்ட 'தருமிக்குப் பொற் கிழியளித்தது' முதலிய வரலாறுகள் **'நக்கீரர்'** என்னும் புத்தகத்திற் காண்க.
2. 'இருந்தையூர்க் கருங்கோழி மோசியாரும்' என்பது சிலப்பதிகார வுரைப்பாயிரம்.
3. 'மதுரை யாசிரியன் மாறனாரும்' என்பது சிலப்பதிகார உரைப்பாயிரம்.
4. 'விண்டேர்ச் செழியன்' என்றும் கூறுவர்.

என்ப. அவருட் கவியரங் கேறினார் ஐவர் பாண்டியரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாட புரத்தென்ப. அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது.

'இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறு மேதாவி யாரும், சேந்தம் பூதனாரும், அறிவுடையரனாரும், பெருங் குன்றூர் கிழாரும், இளந்திரு மாறனும், மதுரை யாசிரியர் நல்லந்துவனாரும், மருதனிள நாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் என இத்தொடக்கத்தார் நாற்பத்தொன் பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத் தொன் பதின்மர் பாடினா ரென்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந் தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், புறநானூறும், ஐங்குறு நூறும், பதிற்றுப் பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என்று இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும், தொல்காப்பியமும் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத் தெண்ணூற்றைம் பதிற்றி யாண்டு என்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினார் கடல் கொள்ளப் பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதியீறாக நாற்பத் தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டியரென்ப. அவர் சங்க மிருந்து தமிழராய்ந்தது உத்தர மதுரையென்ப'. என்பது.

இவற்றுள் புராண கதையானது இற்றை நாள் ஆராய்ச்சி யாளர்க்குப் புதுமை யுடைத்தாய்த்தோன்றும். எனினும் உலகத்து வழங்கும் கதைகள் ஒவ்வொன்றும் யாதானும் ஓர் உண்மையை அடிப்படையாகக் கொண்டே யெழுந்தனவாம் என்பது ஆராய்ச்சியாற் பெறப்படுதலின், இதனினின்று அறியலாகும் உண்மையினை அறிந்து கொள்ளுதல் கடனாம். பன்னூறாண்டு களின் முன்னர் மதுரையில் தமிழ்ச் சங்கம் நடைபெற்றது எவரானும் மறுக்க வொண்ணாததோருண்மையாகும். இதனை அடிப் படையாகக் கொண்டே இக்கதை யெழுந்தது. வட மொழியிற் புராண மெழுதினோர் அக்காலத்துத் தமிழ்ச் சங்க நிகழ்ச்சி எவரானும் ஐயுறவின்றித் துணியப் பட்டிருந்தமையின் அதனை முதலாகக் கொண்டு செவி வழக்காக வந்த சில செய்திகளோடு தாம் புகுத்தக் கருதியவற்றை உருவகப் படுத்துக் கூறியுள்ளார் ரென்பது தேற்றம். கங்கைக் கரையிலிருந்த வடமொழி யெழுத்துக்களில் ஆகாரம் முதலிய நாற்பத்தெட்டும் நாற்பத்தெண் புலவராக, அப்புலவர்கள் பாண்டி நாட்டு மதுரையை

அடைந்து தமிழா ராய்ந்தனர் என்று கூறியவர் கருத்து, வடமொழியின் றொடர்பு தமிழுக்கு உண்டென்றேனும், வடமொழி வாணர்கள் தென்னாடு போந்து தமிழை வளம் படுத்தின றென்றேனும் காட்டுவதாகல் வேண்டும். அவர் கருத்து யாதாயினும் ஆக. வட நாட்டிற்கு ஆரியம் போன்று தென்னாட்டிற் குரிய தொன்மொழி தமிழென்றும், தமிழானது வடநாட்டவரும் விரும்பிக் கற்குமாறு அத்துணை அழகும், திருத்த முடையதாய் விளங்கிற் றென்றும், இக்கதையி லிருந்து புலனாகின்றது. இங்ஙனம் தமிழ் பயின்ற வடமொழி வாணர்கள் தமது மொழியில் அபிமான முடையவர்களாயின், தமிழிலுள்ள நலங்களைத் தம்மொழியில் பெயர்த்துக் கொண்டிருக்கவே வேண்டும். பிறமொழி பயின்றவர் அப்பயிற்சியின் பயனாகத் தமது மொழிக்கு யாதேனும் நலம் புரியாவிடின் அன்னாரைத் தாய்மொழியிலும் மிக்க பற்றுடையரென யாங்ஙனம் கூறுவது? இனிக் களவியலுரையானது, கடைச் சங்கமிருந்து தமிழாராய்ந்தார் நாற்பத்தொன்பதின்மர் என்றதற் கேற்பவே, புராணமும், இறையனாருடன் சங்கப் புலவரை நாற்பத் தொன்பதின்மராகக் கூறிற்று. இத்தொகை பெறுதற் பொருட்டே வடமொழி யெழுத்துக்களில் ஈற்றிலுள்ள சில எழுத்துக்கள் கழிக்கப் பட்டன போலும்? இனி வடவெழுத்துக்கள் ஐம்பத்து மூன்று எனச் சில நூல்கள் கூறாநிற்கும். நன்னூலாரும் அங்ஙனமே கூறினார். ஐம்பத்தொன்று எனச் சில நூல்கள் கூறுகின்றன. இந்நூல் ஐம்பத் தொன்று கொண்டு, அவற்றுள் இரண்டினைக் கழித்துவிட்டது. மாகேச்சுர சூத்திரங்கள் நாற்பத்திரண்டு எழுத்துக்களே கிளந்தெடுத்துக் கூறுகின்றன. கூட்டெழுத்து முதலியவைகளைச் சேர்த்தும் சேர்க்காதும் கணக்கிடு தலின் இவ்வேறுபாடுகள் நிகழ்கின்றன. நக்கீரர், கபிலர், பரணர் என்னும் மூவர் பெயரையும் புராணம் சிறந்தெடுத்துக் கூறுவது அவர்களது பெருமைக்குச் சான்றாகும். நம்பியாண்டார் நம்பிகளும் இம்மூவர் பெயரையே கிளந்தோதினமை காண்க. புராணங் கூறுகிற வேறு சில தெய்விக நிகழ்ச்சிகள் நம் ஆராய்ச்சிக்கு எட்டுவனவல்ல. அவை வேறு நூல் உரைகளாலும் ஆதரிக்கப்படுகின்றன. நம் ஆராய்ச்சியின் முடிபு யாதாயினும் பரஞ்சோதி முனிவ ரியற்றிய திருவிளையாடற் புராணம் கற்பவர்க்கு அன்பினைப் பெருகச் செய்து இன்பம் விளைக்கு மென்பது ஒருதலை.

***இனி,*** இறையனார் களவிய லுரையானது பெரிதும் மதிப்பிற் குரிய தொன்று. இவ்வுரை கூறும் முச்சங்க நிகழ்ச்சி யெல்லாம்

வரலாற்று முறையான் அறியப்பட்ட வாதல் வேண்டும். இன்றேல், மூன்று சங்கத்தினு மிருந்த புலவர்களிற் சிலர் பெயரையும், அவர்களாற் பாடப்பட்ட பனுவல்களிற் சிலவற்றின் பெயரையும், சங்க மிரீஇய அரசர்களிற் சிலர் பெயரையும் எடுத்தோதுதலும் ஒவ்வொரு சங்கத்தும் விளங்கிய புலவர்களும் அரசர்களும் இத்துணைய ரென்றும், சங்கம் நிலவிய ஆண்டுகள் இத்துணைய வென்றும் வரையறுத்துக் கூறுதலும் அமையா வன்றே? அன்றியும், இவ்வுரை கூறும் சங்க வரலாற்றின் அறியலான நூல்களிற் சிற்சில நமக்குக் கிடைத்திருத்தலும், இதனில் இடைச் சங்கமிருந்த இடமாகக் கூறியுள்ள கபாட புரமானது இராமாயண காலத்தில் பாண்டி நாட்டி லிருந்ததாக வான்மீக விராமாயணங்[1] கூறுதலும், பாண்டி நாட்டைக் கடல் கொண்டதாக இதனிற் கூறப்படுஞ் செய்தி கலித்தொகை[2], சிலப்பதிகாரம்[3] என்ற சிறந்த பழைய தமிழ் நூல்களிலும், பழைய வுரைகளிலும் கூறப்பட்டிருத்தலும், கடல்கோட் செய்தி பிறநாட்டுப் புலவர்களின் அரிய ஆராய்ச்சி களானும் ஆதரிக்கப் படுதலும், இவ்வுரையின் மெய்ம்மையை விளக்குவனவாகும். இவ்வுரையின் மெய்ம்மை தெளிந்தன்றே பின் வந்த வுரையாளர் பலரும் இதனைப் பொன்னேபோற் போற்றி மேற்கொள் வாராயினர்? எனினும் காலத்தாற் பெரிதும் சேய்மைப்பட்ட முச்சங்க வரலாறுகள் கூறுவாரானும், எழுது வாரானும் சிறுபான்மையாகத் திரிந்து சிதைந் திருத்தலும் இயல்பே.

[4]இவ்வுரை கண்டார் நக்கீரனா ரென்பதனை ஐயுறத்தக்க சில குறிப்புக்கள் உளவேனும், அவரேயென வலியுறுத்தும் சான்றுகள் பல வுளவாகலின் அவ்வையம் நிலைபெறா தொழிகின்றது. ‘வினையினீங்கி’ என்னும் மரபியற் சூத்திர வுரையில், ‘கடைச் சங்கத்தாருட் களவியற் பொருள் கண்ட கணக்காயனார் மகனார்

---

1. ‘ததோ ஹேமமயம் திவ்யம் முக்தாமணி விபூஷிதம் யுத்தம் கவாடம் பாண்டியானாம்
கதாத்ருக்ஷ்யத வாநரா:’ – வான்மீக விராமாயணம், கிஷ்கிந்தா காண்டம்.

2. மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன். – கலித்தொகை, முல்லைக்கலி.

3. வடிவே லெறிந்த வான்பதை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடு கொடுங்கடல் கொள்ள – சிலப்பதிகாரம், காடுகாண் காதை.

4. ‘நக்கீரர்’ பக்கம் 48, 49 காண்க.

*நக்கீரனார்' எனப் பேராசிரியர் கூறினர். 'திணை மயக்குறுதலும் என்னும் அகத்திணையியற் சூத்திரவுரையில்' 'இக்கருத்தானே நக்கீரரும் ஐந்திணையுள்ளும் களவு நிகழுமென்று கொண்ட வாறுணர்க' என நச்சினார்க்கினியர் கூறினர். சிலப்பதிகாரத்து வேனிற் காதை முதற்கண், 'கணக்காயனார் மகனார் நக்கீரனா ருரைத்த இறையனார் பொருளுரை' என அடியார்க்கு நல்லார் கூறினர். பலரானும் மதிக்கப்பட்ட பழைய பேருரையாளர் பலரும் இங்ஙனம் ஒரு படித்தாகக் கூறு மிதனினும் சிறந்த சான்று வேறென்ன வேண்டும்?*

*இனிப், பண்டைநாளிற் சங்கமிருந்து தமிழ் வளர்த் தமையைப் புலப்படக் கூறும் தெய்வப் பெற்றியாளர்களின் கூற்றுக்களை யீண்டு எடுத்துக் காட்டுதும்.*

***' சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்து மென்***
***சிந்தை யுள்ளும் உறைவா னுயர்மதிற் கூடலினாய்ந்த***
***வொண்டீந்தமிழின் றுறை'*** **– திருக்கோவையார்**

*என மாணிக்கவாசகரும்;*

***நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி***
***நற்கனகக் கிழிதருமிக் கருளினோன்காண்***

*- தேவாரம், திருப்புத்தூர்.*

*எனத் திருநாவுக்கரசரும்;*

***ஞானசம் பந்த னுரைசெய்***
***சங்கமலி செந்தமிழ்கள் பத்தும்*** *- தேவாரம், தேவூர்*

*எனத் திருஞானசம்பந்தரும்;*

***கோதைசொன்ன சங்கத்தமிழ் மாலைமுப்பதும்***

*- திருப்பாவை*

*என நாய்ச்சியாரும்;*

***' கலியன் சொன்ன சங்கமுகத் தமிழ்மாலை பத்தும்***

***' கலிகன்றி சொன்ன சங்கமலி தமிழ் மாலை பத்திவை'***

*- பெரிய திருமொழி.*

*எனத் திருமங்கையாழ்வாரும்;*

***‘ சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய வங்கண் மூதூர்***
***நூல்பா யிடத்தும் முள. . . . . செய்யுண்மிக் கேறு சங்கம்***
***திருவாலவாயில் எம்மைப் பவந்தீர்ப்பவர் சங்க மிருந்தது’***

*- பெரியபுராணம், மூர்த்தி.*

***சென்றணைந்து மதுரையினிற் றிருந்திய நூற்***
***சங்கத்துளன்றிருந்து தமிழாராய்ந் தருளிய வங்கணர்***

*- பெரியபுராணம், திருநாவுக்கரசர்.*

*எனச் சேக்கிழாரும்;*

***சங்கத் தமிழ் மூன்றுந்தா. – நல்வழி.***

*என [1]ஔவையாரும்; அருளிச் செய்துள்ளார்கள். இவற்றுள் அப்பர் தேவாரமும் பெரிய புராணமும் முறையே சிவபிரான் புலவராய்ச் சங்கமேறி வாதியற்றினதையும் அவர் சங்க மமர்ந்து தமிழாராய்ந் ததனையும் கூறுதலுங் காண்க.*

*இறையனாரகப் பொருளுரை கூறும் முச்சங்கவுண்மையை ஆதரித்து நிற்கும் மேற்கோள்கள் வருமாறு:*

*‘தலை, யிடை, கடைச் சங்கத்தாரும், பிறசான்றோரும் நாற்சீரடியான் வரும் ஆசிரியமும், வெண்பாவும், கலியுமே பெரும்பான்மையுஞ் செய்தார்; வஞ்சிப்பா சிறு வரவிற் றெனக் கொள்க’ என்றும், ‘இந்நூல் செய்த காலத்துத் தலைச் சங்கத் தாரும் இடைச் சங்கத்தாரும், அவ்வாறு கட்டளையடியாற் பயின்று வரச் செய்யுள் செய்தார்’ என்றும் ‘இடைச் சங்கத்தாரும் கடைச் சங்கத்தாரும் இவ்விலக்கணத்தாற் செய்யுள் செய்தார்’ என்றும் செய்யுளிய லுரையிலும், ‘அவ்வழக்கு நூல் பற்றி யல்லது மூன்று வகைச் சங்கத்தாரும் செய்யுட் செய்திலர்’ என்று மரபியலுரையிலும் பேராசிரியர் கூறினர்.*

*‘அவ்வாசிரியராவார் அகத்தியனாரும், மார்க்கண்டேயனாரும், தலைச்சங்கத்தாரும் முதலியோர்’ என்று பாயிரவுரையிலும்; ‘இனித் தமிழ்ச் செய்யுட் கண்ணும் இறையனாரும், அகத்தியனாரும், மார்க் கண்டேயனாரும், வான்மீகனாரும், கௌதமனாரும் போல்வார் செய்தன தலையும், இடைச் சங்கத்தார் செய்தன இடையும், கடைச் சங்கத்தார் செய்தன கடையுமாகக் கொள்க. என்று புறத்திணை யியலுரையிலும்;*

1. இவர் கடைச்சங்க நாளில் விளங்கிய ஔவையாரல்லர்.

'தலைச்சங்கத்தாரும் முதனூலாசிரியர் கூறிய முறையே கரணம் ஒன்றாகச் செய்யுள் செய்தார் என்பதூஉங் கூறியவாறாயிற்று' என்று கற்பியலுரையிலும்; 'அது மூவகைச் சங்கத்தாரும், பிற சான்றோரும் நாற்சீரடியானே மூன்று பாவும் வரப் பெரும்பான்மை செய்யுட் செய்து, வஞ்சிப்பா சிறுவரவிற்றாகச் செய்யுள் செய்தவாற்றா னுணர்க'. என்றும் 'இந்நூல் செய்த காலத்திற் றலைச்சங்கத்தாரும்' 'இடைச் சங்கத்தாரும் கட்டளையடி பயின்று வரச் செய்யுள் செய்தா ரென்பது இச்சூத்திரங்களாற் பெறுதும்; பின்பு கடைச் சங்கத்தார்க்கு அஃதரி தாகலிற் சீர் வகையடி பயிலச் செய்தா ரென்றுணர்க.' என்றும் 'அது தலைச் சங்கத்தாரை யொழிந்தோர் சிறுபான்மை வழக்கும் பெரும்பான்மை செய்யுட் சொல்லுமாக இவ் விலக்கணத்தாற் செய்தவாறே இக்காலத்துச் செய்யினுமாம்' என்றும் செய்யு ளியலுரையிலும் நச்சினார்க்கினியர் கூறினர்.

'இரண்டாம் ஊழியதாகிய கபாட புரத்தினிடைச் சங்கம்' என்றும், 'கடைச் சங்க மிரீஇய பாண்டியருட் கவியரங்கேறிய பாண்டியன் மதி வாணனார் செய்த மதி வாணனார் நாடகத் தமிழ் நூல்' என்றும் சிலப்பதிகார வுரைப்பாயிரத்தும் 'முதுலூழியிறுதிக் கண் தென் மதுரை யகத்துத் தலைச் சங்கம்' என்று வேனிற் காதையுரையிலும் அடியார்க்கு நல்லார் கூறினர்.

'சாலு மேன்மையிற் றலைச் சங்கப்புலவனார் தம்முன்' என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்தே சேக்கிழார்கூறினர்.

இன்னணம் பேரருட் புலமை யாளரான பண்டைப் பெரியார் பலரியற்றிய நூல்களினும், ஊரைகளினும் தமிழ்ச் சங்க வரலாறு பரக்கக் கூறப்பட்டுக் கிடக்கவும், சென்னை இராசதானிக் கல்லூரியில் வடமொழிப் போத காசிரியரா யிருந்து காலஞ் சென்ற எம். சேஷகிரி சாஸ்திரி அவர்கள் எம். ஏ; வழுக்கள் மல்கத் தாமெழுதிய 'தமிழ்க் கவி சரிதம், என்னும் சிறுபுத்தகத்தில் பலவிடத்துப் பின் வருமாறு கூறிப் போயினர்.

'முதலிரண்டு சங்கங்களையும் பற்றி யாம் ஆராயப்புகின், அவை ஏறக்குறையப் பொய்யுரையும் புனைந்துரையும் பொதிந்துளவாதலிற் சிறிதேனும் நம்பு தற் பாலன வல்ல.'

'இவ்வாறு கடைச் சங்கங்கூடிய புலவருட் பல்லோர் வெவ்வேறு காலங்களில் விளங்கின ரெனல் காட்டப்படிற் சங்க மென்பது தனாது மெய்ச்சரித வியலிழந்து பொய்க்கதையி னியலுடைத்தாய்விடும்.'

'கடைசியிற் பார்க்கப் போனாற் சங்க நிகழ்ச்சியைப் பற்றிய யாவும் கற்பனா சாமர்த்தியங் காரணமாக விளைந்த பொய்க் கதையாய்க் கழியினும் கழியலாம்.'

'போசராசனிருந்த காலமென்று வழக்கமாகக் குறிக்கப்படுங் கால வரையறைக்கு முற்பட்டவரும் தனித்தனி வெவ்வேறு காலங்களி லிருந்தவருமாகிய காளிதாசன், பாரவி, மாகன், பவபூதி, பாணன், தண்டி, முதலாயினா ரெல்லாம் அவ்வரசன தவைக்களத்தினை அலங்காரஞ் செய்தற் பொருட்டும், ஒருவரோ டொருவர் முரணிப் போட்டியிட்டுத் தமது இறைவனை மகிழ் விக்கத் தக்க வடமொழிக் கவிகள் தக்கணமே சொல்லுதற் பொருட்டும் ஒரே காலத்தின ராக்கப்பட்டனர். இத்தகைய பொய்ம் மகிமையோடும் விளங்கா நின்ற இவ்வடநூற் புலவர் குழாம் நமது தமிழ்ச் சங்கத்திற்கு எவ்வாற்றானும் தக்க விணையாம்.'

இவ்வாறு அவர் கூறியதன் காரணம் இன்னது என யாம் கூறவிரும்புகின்றிலம். அவரது உளப் பான்மையை யாவரும் தெரிந்து கொள்ளுதற் பொருட்டே அவர் கூற்றுக்கள் இங்கு எடுத்துக் காட்டப்பட்டன. தாம் நடுவுநிலையோடு ஆராய்பவ ரென்று காட்டிக் கொள்ளவே வடமொழிப் புலவர் கூட்ட மொன்றையும் இங்குக் கூறி வைத்தனர் போலும்?

இவர் கூறிய வழுவுரை யெல்லாம் தமிழ்ப் பயிற்சியுடையார் கண்டு நகையாடற் கேற்றனவே யன்றி எடுத்து மறுத்தற் கேற்றன வல்ல. உதாரணமாகச் சில காட்டுதும்.

இறையனா ரகப்பொருளுரை கூறும் முச்சங்க வரலாறு ஆலாசிய மான்மியத்திற்கு மாறாக இருத்தலின் பொய்யுரையாம் என்று கூறிவிட்டுப், பின் ஆலாசிய மான்மியம் கூறுவதும் பொய் யென்கின்றார். ஒரு பொய்க்கு மாறுபட விருக்கும் பிறிதொன்றும் பொய்யென்பது இவர் கருத்துப் போலும்!

கரிகாலன் காலமும், சிலப்பதிகார, மணிமேகலைகளின் காலமும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு எனக் கூறிவிட்டுக், கடைச் சங்கம் தோன்றுதற்கு 760 ஆண்டுகட்கு முன் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் யாக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்கிறார். இஃது 9, 10ஆம் நூற்றாண்டுகளில் இவர் படைத்துக்கொண்ட தமிழ்ச் சங்கம் போலும்! சிலப்பதிகார காலத்தில் பரணர் முதலிய சங்கப் புலவர் பலர் இருந்தமையை ஓர்ந்திலர்.

கரிகாலன் 2-ஆம் நூற்றாண்டினன் ஆகலானும், தொண்டைமான் இளந்திரையன் என்பான் 11ஆம் நூற்றாண்டிலிருந்த குலோத்துங்கனது வழியில் வந்தோனாகலானும், இவ்விருவரையும் பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் இளந்திரையன் காலத்தில் இருந்திருக்க வேண்டுமே யன்றிக் கரிகாலன் காலத்தில் இருந்திருக்க முடியாது என்கிறார். இளந்திரையன் பிற்காலத்தவன் என்பதற்கு இவர் கண்ட ஆதாரம் இன்னதெனக் காட்டினாரில்லை. முதற் குலோத்துங்கன் காலத்திருந்த சயங்கொண்டார், பரணியில், கரிகாற் பெருவளவன் உருத்திரங் கண்ணனார்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசில் கொடுத்துப் பட்டினப் பாலை பெற்றான் என்பார், 'தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர் பொன், பத்தொடாறு நூறாயிரம் பெறப் பண்டு பட்டினப் பாலை கொண்டதும்' எனக் கூறியிருத்தலையும் ஓர்ந்திலர்.

இனி, ஆயிரக்கணாக்கா யுள்ள ஆண்டுகள் தமிழ்ச் சங்கம் நடைபெற்ற தெனின், அக்காலத்து இயற்றப்பட்ட நூல்களும், பாட்டுக்களும் அளவில வாதல் வேண்டுமே. அவை அத்துணை யிருந்தன வென்பதற்குச் சான்று என்னை? இப்பொழுது அவை யெல்லாம் யாங்கு ஒழிந்தன? என்னின் கூறுதும். சங்கநாளில் இயற்றப்பட்ட நூல்களும், பாட்டுக்களும் எண்ணிறந்தனவே யாகும். அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், பூதபுராணம், பனம்பாரம், பன்னிருபடலம், அவினயம், காக்கைபாடினியம் சிறுகாக்கைபாடினியம், சங்கயாப்பு, நற்றத்தம் , பல்காயம், மயேச்சுரம் வாய்ப்பியம், அணியியல் என்பனவும்; இசை நுணுக்கம், பஞ்சபாரதீயம், பரதம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், பெருங்கலம், நூல், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதீயம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல் என்பனவும் பிறவுமாக, இயற்றமிழ்க்கும், இசை, நாடகங் கட்கும், இலக்கண நூல்கள் எண்ணிறந்தன வழங்கின வென்பது, பழைய உரை யாளர்கள் அந் நூல்களிலிருந்து சூத்திரங்கள் எடுத்துக் காட்டியும், அந்நூல்களைப் பற்றிச் சிற்சில குறிப்புக்கள் வரைந்தும் சென்றமையால் அறியக்கிடக்கின்றது.

இலக்கண நூல்கள் இங்ஙனம் பல வாயின், இலக்கியங்கள் எத்துணைப் பல இருந்திருத்தல் வேண்டும்? இலக்கணம் ஒன்றாயின் இலக்கியம் நூறாதல் பொருத்தமேயன்றோ? மந்திரமும், கணக்கும், வானநூலும், மருத்துவ நூலும் முதலிய பல் கலைநூல்களும் அக்காலத்து வழங்கின வென்பதற்குப் பழைய நூல்களிற் காணப்படும் குறிப்புக்கள் பல சான்றாக

வுள்ளன. [1]இவ்வாறு சங்கப் புலவர்களாலியற்றப் பட்ட பல்லாயிரக்கணக்கான நூல்கள்,

***" ஏரண முருவம் யோக மிசைகணக் கிரதஞ் சாலம்ர***
***தாரண மறமே சந்தந் தம்பநீர் நிலமு லோக***
***மாரணம் பொருளென் றின்ன மானநூல் பலவும் வாரி***
***வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரு மாள,"***

என்றவாறு கொடுங்கடலாற் கொள்ளப்பட்டு மறைந் தொழிந்தன என்பதில் ஐயப்பாடு யாதுளது? கடைச் சங்கப் புலவரும், பிற சான்றோரும் இயற்றிய நூல்களுள்ளும், இறந்து பட்டனவும் இதுகாறும் வெளிவந்தனவு மன்றி, வெளிவரா திருப்பனவும் பலவுள என்பது தேற்றம்.

இனி வெவ்வேறு காலத்து வெவ்வேறிடத் திருந்த பன்னூறு புலவர்களாற் பாடப்பட்ட **இரண்டாயிரத்து நானூற்று இருபத்தாறு** தனிநிலைச் செய்யுட்கள் ஒருவழிக் கொணரப் பட்டுப் பாட்டும், அளவும், பொருளும் பற்றி எட்டுத் தொகையாகத் தொகுக்கப்பட்டிருத்தலை நுணுகி யுணரினும், இவற்றுக் கெல்லாம் காரணமாகத் தமிழ்ச் சங்கம் விளங்கிற் றென்னும் உண்மை புலப்படா நிற்கும்.

இனி '**சங்கம்** என்னுஞ் சொல் வடசொல்லாகலானும், இச்சொல் நல்லிசைப் புலவர் செய்யுட்களிற் காணப்படாமை யானும், தமிழ்ச் சங்க மென்பது பிற்காலத்தோர் படைத்துக் கொண்டதாகும்.' என்னின், நன்று சொன்னாய்! தமிழகத்துக் குடியேறிய பிறமொழியாளர்கள் தம் பெற்றோர்களை அம்மை, அப்பன் என்னும் தமிழ்ச் சொற்களால் வழங்கிவரின்,

---

1. மந்திரப் பொருள்வயி னாஅ குநவும்

என எச்சவியலினும்;

நிறை மொழி மாந்த ராணையிற் கிளந்த
மறைமெழி தானே மந்திர மென்ப

எனவும்,

'மறைமொழி கிளந்த மந்திரத் தான'

எனவும் செய்யுளி யலினும், ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலின், அக்காலத்து மந்திரம் மிக்கிருந்தமை புலனாம்.

'செஞ்ஞாயிற்றுச் செலவும்', 'ஆடிய லழற்குட்டத்து' என்னும் புறப்பாட்டுக்கள் முதலிய வற்றால் கணக்கும், வானநூலும் இருந்தமை புலனாம்.

மருத்துவ நூல் இற்றைக்கும் பலவுள்ளன.

முற்காலத்து அவர்கட்குப் பெற்றோர் இருந்திலர் என்று கூறலமையுமோ? சங்கம் என்னும் சொல்லால் வழங்குவது பற்றி, வேறு பல சான்றுகளால் நிறுவப்படும் தமிழ்ப் புலவர் கூட்டத்தினை இன்றெனக் கூறுவது எத்துணைப் பேதைமையாகும்! சங்கம் என்னும் பொருளுள்ள தமிழ்ச் சொல் இல்லாமற் போகவில்லை. '**அவை**' என்னுஞ் சொல் அத்து முதலிய சாரியை பெற்றும், பெறாதும் தொல்காப்பியத்தும், தொகை நூல்களிலும், பல விடத்துப் பயின்று வருவதுண்டாகலின் அதுவே முன்னர் வழங்கியிருத்தல் வேண்டும். மற்றும், மன்றம், பொதியில், பட்டி , தொகை என்னும் சொற்கள் சான்றோர் செய்யுட்களில் பயின்று வருகின்றன. இச்சொற்களும் சங்கம் என்னும் பொருளுடையன வாகும். இச்சொற்களெல்லாம் இப்பொருளேயன்றி வேறு கூட்டங்களையும், இடங்களையும் குறிப்பனவுமாயின. ஒரு சொல் நாளடைவிற் பொருள் வேறுபட்டு வருவது மொழி நூலாராய்ச்சியிற் பெறப்படும் உண்மையாகும். சங்கம் என்னும் வடசொற்றானும் நல்லிசைப் புலவர் செய்யுளிற் காணப்படாத தன்று. மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரியற்றிய மணிமேகலையுள், 'புலம்புரி சங்கம் பொருளொடு முழங்க', என்று கூறியிருத்தல் காண்க. சங்கத்துச் சான்றோராகிய சாத்தனார் தமது காப்பியத்துள் ஆண்டுள்ள சங்கம் என்னுஞ் சொல் அவர்க்குச் சில நூறாண்டுகளின் முன்னரே வழக்கிடைப் பயின்றிருத்தலும் கூடுவதேயாகும். இவ்வாற்றல், முதலிடைக் காலங்களில் 'அவை' முதலியவற்றுள் யாதானு மொரு தமிழ்ப் பெயரால் வழங்கி வந்த தமிழ்ப் புலவர் கழகம், தென்னாட்டில் பௌத்தமதம் பரவலுற்ற கடைச்சங்க நாளில் பௌத்த ராட்சியிலிருந்த சங்கம் என்னுஞ் சொல்லைப் பெயராக ஏற்று வழங்குவதாயிற்று என்பது தேற்றமாம்.

இனி, 'வடவேங்கடந் தென்குமரி' யிடைப் பட்ட நில மெல்லாம் தமிழ் வழங்கு நிலமாகவும், பாண்டி நாட்டையே தமிழ் நாடென்று பண்டைச் சான்றோரெல்லாம் சிறந்தெடுத் தோதுதற் கேது, அந்நாட்டில் தமிழ்ச் சங்கம் நிலை பெற்றுத், தமிழ் வளர்த்தமையே யாகும். சோணாட்டிலும் பண்டு சங்கமிருந்த தென்பது, 'புலம்புரி சங்கம் பொருளொடு முழங்க' என்ற மணிமேகலை யானும்,

செந்தமிழ் நாடே

***மன்ற வாணன் மலர்திரு வருளால்***
***தென்றமிழ் மகிமை சிவணிய செய்த***

***அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்***
***படியின்மாப் பெருமை பரவுறு சோழனும்***
***சைவமா தவரும் தழைத்தினி திருந்த***
***மையறு சோழ வளநா டென்ப.***

என்னும் சூத்திரத்தானும், பிறவற்றானும் அறியலாவது. சோணாட்டிலே தமிழ் பெரிதும் திருத்தமும் வளர்ச்சியும் பெற்றிருந்த தென்பது, தொல்காப்பிய வுரையாளர்கள், 'செந்தமிழ் நிலமாவது, வையை யாற்றின் வடக்கும், மருத யாற்றின் றெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாம்.' என்று கூறினமையானும், இடைக்காலத்தும், பிற்காலத்து மிருந்த பெரும் புலவர் பலர் சோணாட்டின ராகலானும் துணியப்படும். அங்ஙனமாயினும் பாண்டி நாட்டிற் போலத் தமிழ் வளர்ச்சியே கருதி ஆயிரக் கணக்காய ஆண்டுகள் தொடர்ச்சியாய்ச் சோணாட்டிற் சங்க மிருந்த தில்லையாகும். அதனாற்றான் சான்றோர் செய்யுட்களில் சோழநாடு சேரநாடுகள் பொதுவகையால் தமிழ் நாடு எனக் கூறப்படுவதன்றிப், பாண்டி நாடுபோல் சிறப்புவகையாற் கூறப்படவில்லை.

***' தமிழ் கெழு கூடற் றண்கோல் வேந்தே'***

எனப் புறநானூற்றிலும்,

***' தமிழ் வையைத் தண்ணம் புனல்'***

எனப் பரிபாடலிலும்,

***' தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின்***
***மகிழ் நனைமறுகின் மதுரையும்'***

எனச் சிறுபாணாற்றுப் படையிலும்,

***'தென்றமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை'***

எனச் சிலப்பதிகாரத்திலும்,

***'தென்றமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்'***

என மணிமேகலையிலும்,

பாண்டி நாட்டையும், மதுரையையும், வையை யாற்றையும் சிறப்பிக்கும் வழித் தமிழொடு புணர்த்துக் கூறியிருத்தல் காண்க. இவற்றுள் சிலப்பதிகாரத் தொடரானது, சோணாட்டிலிருந்த கவுந்தியடிகள் கோவலனை நோக்கி, 'யானும் மதுரைக்குச் செல்லுங் கருத்துடையேன்' என்னுமிடத்துக் கூறப்பட்ட

தாகலின், சோணாடு சிறப்பு வகையால் தமிழ் நாடன்மை பெறப்பட்டது.

**திருஞானசம்பந்தப் பிள்ளையாரும் 'செய்யனே'**

என்னும் திருவாலவாய்ப் பண்ணில் பாண்டி வேந்தைக் குறிக்கு மிடத்து,

**' பட்டிமன் றென்னன் பாண்டியற் காகவே '**

என்றும்,

**' பண்ணியற் றமிழ்ப் பாண்டியற் காகவே '**

என்றும் அருளிச் செய்திருக்கின்றனர்.

**' செழியன் றமிழ் நாடன்'**

என்று திவாகரம் கூறுகின்றது.

**' ஈழமுந் தமிழ்க் கூடலுஞ்சிதைத்**
**திகல்கடந்ததோ ரிசைபரந்ததும்'**

என்று கலிங்கத்துப் பரணி கூறுகின்றது.

சோழ நாட்டிலே திருமறைக் காட்டி லெழுந்தருளி யிருந்த திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டிற்குச் சென்றார் என்று கூறுமிடத்து,

**' தாமாதரவாற் றமிழ்நாட்டிற் போனார் ஞானத் தலைவனார்'**

என்றும்,

பாண்டி நாட்டினின்றும் சோழ நாட்டுக்கு வந்தனர் என்று கூறுமிடத்து,

**' தீந்தமிழ் நாட்டிடை நின்று மெழுந்தருளிச் செம்பொன்னி**
**வாய்ந்த வளந்தரு நாட்டு வந்தணைந்தார்.'**

என்றும்,

சோழ நாட்டிலே திருப்பூந்துருத்தியி லெழுந்தருளி யிருந்த திருநாவுக்கரசர் பாண்டி நாட்டுக்குச் செல்ல நினைந்தார் என்னுமிடத்து,

**'வாகீசர் மண்குலவு தமிழ்நாடு காண்பதற்கு மனங்கொண்டார்'**

என்றும்,

அங்கு நின்றும் சோணாட்டுக்கு வந்தனர் என்னுமிடத்து,

**‘ தேம்பொழில்சூழ் செந்தமிழ் நாட்டினிலெங்குஞ் சென்றிறைஞ்சிப்**
**பாம்பணிவார் தமைப்பணிவார் பொன்னிநா டதுவணைந்து.**

என்றும் திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலும்;

சேரமான் பெருமாணாயனாருடன் சோழ நாட்டுத் திருப்பதிகளை வணங்கிக் கொண்டிருந்த சுந்தரர் பாண்டி நாட்டுத் திருப்பதிகளை யிறைஞ்ச நினைந்தார் என்னுமிடத்து,

**‘ செய்வார் கன்னித் தமிழ்நாட்டுத் திருமா மதுரை முதலான**
**மொய்வார் சடையார் மூதூர்க ளிறைஞ்ச முறைமை யானினைந்தார்’**

என்று சேரமான் பெருமா ணாயனார் புராணத்தும், சேக்கிழார் கூறியிருக்கின்றனர்.

கிட்கிந்தா காண்டம் நாடவிட்ட படலத்தில்,

**‘ துறக்க முற்றார் மனமென்னத்**
**துறைகெழுநீர்ச் சோணாடு கடந்தால். . . . . . . . . .**
**பிறக்கமுற்ற மலைநாடு நாடியகன்**
**றமிழ்நாட்டிற் பெயர்திர் மாதோ’**

என்றும்,

**தென்றமிழ்நாட் டகன்பொதியிற் றிருமுனி வன் றமிழ்ச் சங்கம்**
**சேரு வீரேல்**

என்றும்,

ஆறு செல் படலத்தில்,

**அனைய பொன்னி யகன்புன னாடொரீஇ**
**மனையின் மாட்சி குலாமலை மண்டலம்**
**வினையி னீங்கிய பண்பினர் மேயினார்**
**இனிய தென்றமிழ் நாடுசென் றெய்தினார்.**

என்றும் கல்வியிற் பெரியராய கம்பர் கூறியுள்ளார்.

வான்மீக விராமாயணத்தில், இடைச் சங்கமிருந்த கபாட புரத்தைச் சுட்டிப், ‘பாண்டியனுடைய கபாடத்தைக் காண்பீராக’ என்று வானர வீரர்களுக்குக் கூறியதாக வுள்ள பகுதியிற்றானே கம்பர் ‘தென்றமிழ்நாட் டகன் பொதியிற் றிருமுனிவன் றமிழ்ச் சங்கம் சேரு வீரேல்’ என்று கூறியது வான்மீகத்தையும் தமிழ்ச் சங்க வுண்மையையும் நன்கு அறிந்த துணிபா லென்க.

யாம் இதுகாறுஞ் செய்த ஆராய்ச்சியால், தமிழ் வளர்ச்சி கருதிப் பாண்டி நாட்டிற் பன்னெடுங்காலம் தமிழ்ச் சங்கம் நிலவிய செய்தி உறுதியுடைய மேற்கோள் பல கொண்டு நிறுவப்படு வதாயிற்று. தமிழ்ச் சங்கம் என்பது பாண்டி வேந்தர் ஒவ்வொருவராலும் அரசியல் நடாத்தும் ஏனை அவை போன்று, தமிழ் வளர்ச்சி கருதிப் பேணப்பட்டு வந்ததோர் அவை என்க. தொகை நூல்களுக்கு மிக முற்பட்ட காலத்தது என்று பல்லாற்றானும் நிறுவப்படும் தொல்காப்பியம் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்துக் கேட்கப்பட்டது என்னலால், மிகப் பழைய காலந்தொட்டுத் தமிழவை நிலவிற் றென்பது துணிபு. அஃது ஒவ்வோர் காலம் இடையிட்டு நடந்தமையறிந்த பிற்காலத்து நல்லிசைப் புலவர் அதனை முதற் சங்கம், இடைச்சங்கம், கடைச் சங்கம் எனப் பகுத்திட்டனர் என்க.

தமிழ்ச்சங்கம் பற்றி இங்ஙனம் பொதுவகையால் அறிந்து கொள்வதன்றி, காலத்தாற் பெரிதும் சேய்மையுற்ற அவற்றின் கோட்பாடு முதலியன நம்மால் விளக்கமுற வறிதல் அருமை யாகும். எனினும் இற்றை நாள் வழக்கத்திலிருந்தும், பழம் பாட்டுக்களின் உதவி கொண்டும் ஒருண்மையினையிங் கெடுத்துக் காட்டுதல் மிகையாகாது. பலர் புகழ் நல்லிசை வாய்ந்த **பாண்டித்துரை** யென்னும் கோமகனால் பதினெட்டாண்டு களின் முன் மதுரையில் நிறுவப்பெற்றதாகிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இப்பொழுது உறுப்பினராயுள்ளார் ஏறக்குறைய முந்நூற்றைம்பதின்மராவர். இவர்களேனும், அன்றி இவர்களிற் பண்டிதராயுள்ளாரேனும் எப்பொழுதும் ஒருவழிக் குழீஇ யிருப்பாரல்லர். யாண்டிற் கொருமுறை சிலர் பலர் குழுமுதலே வழக்கமாகும். சங்கத்திற்கு ஆவன சூழ்தற் பொருட்டு வினைப் பொறுப் புடையோர் சிலர் சிலமுறை கூடுதலுண்டு. இங்ஙனமே, பண்டைநாட் சங்கங்களிலும் புலவர்களானோர் வேறு வேறிடங் களிலிருந்து வேளாண்மையும் வாணிகமும் முதலிய தத்த மக்கமைந்த செய்தொழில்களை மேற்கொண்டிருப்பாராவர். அளப்பரும் புலமை சான்ற ஒவ்வொருவர் ஒவ்வொரு காலத்தில் முதன்மைப் புலவராய் விளங்கச், சில பல புலவர் கூடித் தமிழாராய்ச்சி செய்து போதருவர். களவியலுரையில் சங்க மிருந்தார் தொகை யெல்லாம் ஒன்பது என்னும் எண்ணால் முடிந்திருப்பது கொண்டு, சங்கத்தை நடாத்தும் வினைப் பொறுப்பாளர் ஒவ்வொரு காலத்தும் ஒன்பதின்மர் இருந்திருக்கலா மென்று கருதலாகும். சங்கப் புலவராய கபிலரும் எப்பொழுதும் ஓரிடத்திற்றானே இருந்தாரல்லர். இவரது வரலாறு மேல் ஆராய்ச்சி செய்யப்படும்.

## 2. கபிலர் வரலாறு

வடவேங்கடம் தென் குமரி யிடைப்பட்ட தமிழகத்திலிருந்து செங்கோலோச்சி வந்த முடிகெழு வேந்தர் மூவருள்ளே, அறனும், மறனும், ஆற்றலுங் குன்றாத பாண்டிய ரானோர் வழி வழியாக ஆட்சி புரியப் பெற்றது சீர்வளர் செந்தமிழ்ப் பாண்டி நன்னாடாகும். அந் நாட்டின் கண் சான்றோருடைய பாட்டுக் களை யணிந்து, தண்ணென்றொழுகா நின்ற வையை யாற்றின் மருங்குள்ளது, ஒருவாத புகழமைந்த திருவாதவூர் என்னும் திருப்பதி. அத்திருப்பதி யானது அன்பே வடிவாகி, யின்ப வெள்ளத்திற் றிளைத்த ஆளுடைய வடிகள் தோன்றி யருளும் பெரும் பேறுடையதென்றால், அதன் பெருமை யாரால் அளவிட் டுரைக்கலாகும்? அப்பதியிலே, அறு தொழிலின் வழுவாத அந்தண ரொருவர், தம் கற்பிற் சிறந்த பொற்புடை மனைவியோடிருந்து, இல்லறம் இனிது நடாத்தி வாழுநாளில், அன்னவர் தம் நோன்பின் பயனாக அவர்க்கு ஓர் புதல்வர் தோன்றினார். பெற்றோர்கள் தம் அரும் பெறன் மகவைக் **கபிலர்** என்று பெயரிட்டுக் கண்ணுங்கருத்துமாகப் பேணி வளர்த்து. உரிய பருவத்தே பள்ளிக்கு வைத்துக் கல்வி பயில் வித்தனர். கபிலரும் சிறிது பயின்றபின்னர் வேளாண் வாழ்க்கையும், தாளாண்மையும் உடைய பன்னருஞ் சிறப்பின் நல்லாசிரியர் ஒருவரைச் சார்ந்து மடி, தடுமாற்றம், மானம், பொச்சாப்பு முதலியன இல்லாமையும், ஆசிரியர் பாற் சென்று வழிபடுதலும், ஆசிரியர் குறிப்பறிந் தொழுகுதலும், ஆசிரியரிடத்திற் கேட்டவற்றை நினைத்தலும், பழம்பாடம் போற்றலும், பிறர் பால் வினாதலும், பிறர் வினாயவற்றிற்கு விடை கூறலும், அறியார்க்கு அறிவுறுத்திப் பயன் விளைத்தலும், செய்ந் நன்றியறிதலும், தீச்சார்பின்மையும் முதலியவாக மாணவர்க்கு வேண்டும் குணனெல்லாம் உடையராய், இலக்கண விலக்கியத் துறை யெல்லாம் சென்று, கற்று வல்லரானார். ஆனபின், அவர், காவிரி முதலிய மேவியாடுதும் என்றும், தில்லை முதலிய எல்லை காணுதும் என்றும், தாயுமாம் பொருளைப் போய் வழி படுதும் என்றும், ஆங்காங் குள்ள பெரியாரைத் தலைப் பெய்து அறியாதன வெல்லாம் அறியப் பெறுதும் என்றும், குறிஞ்சி,

முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானிலத்து ஐந்திணைக் கருப் பொருள்களின் பெற்றி யெல்லாம் நுனித்தறிந்து, கண்டு, மகிழுதும் என்றும், இன்னணம் பற்பல இடங்களினும் சென்று உலகவறிவும், இலகிய குணனும் பெற்று வருவார், ஆசிரியர்க்கு வேண்டும் வாய்மையும், தூய்மையும், ஒழுக்கமும், விழுப்பமும் எல்லாம் ஒருங்கமையப் பெற்றவராயினார். அவரது மலர்ந்த முகமும், குளிர்ந்தவுரையும், அருள் பொழி விழியும், தெருள் பொழியுணர்வும் யாவர்க்கும் இன்பம் விளைப்ப வாயின. நோக்குடையவாகப் பாக்களியற்றுவதில் இவர்க்கு நிகராவார் இல்லை யென்னுமாறு மேம்பாடுற்றனர். ஒரு நாள் நண்பகலில், அவர் தமக்குத் தமிழ் அறிவுறுத்திய ஆசிரியருடன் ஓர் இருப்பைத் தோப்பையடைந்த பொழுது, ஆசிரியர் அங்கே பூத்திருந்த இருப்பையின் நாண்மலரையும், உதிர்ந்து கிடந்த பழம் பூவையும் காட்டி, 'இவற்றுக்குப் பொருந்திய உவமை கூறிச் செய்யு ளொன்றியற்றுக' எனப் பணித்தனர். பணிக்கவே, கபிலர், சிறிதும் தாழ்க்காது 'நீண்ட இலைகளையுடைய இருப்பையின் வட்டமாகிய ஒள்ளிய பூ வாடாதிருப்பின், பெருமையுடைய பெண்யானையின் கோட்டினை நிகர்க்கும்; வாடினாலோ, கரிய தலையையுடைய வலைஞரது மனை முன்றில் தொறும் உணங்கும் சிவந்த தலையையுடைய இறான் மீனை நிகர்க்கும்;' என்ற பொருளமைத்துப் பாடினர். அதனைக் கேட்ட ஆசிரியர் தன்மை, உவமை, முரண் என்னும் அணிகள் புலப்பட, விரைவிற் பாட்டியற்றிய அவரது ஆற்றலுக்கு, மகிழ் பூத்த உள்ளத்தராய்ப். பின்னும் அவரை நோக்கி, 'அன்பனே, உரிப்பொருளின்றேல் பொருட் பயனின்றாம்; ஆதலால் ஒவ்வொரு பாட்டினும் யாதேனும் உரிப் பொருளிருக்கவே வேண்டும்; இப்பாட்டிலே யுள்ள உரிப்பொருள் யாது?' என்று வினாவினர். அதற்கு அவர், 'எம்பெருமானே, அடிகள்பாற் கேட்டுணர்ந்த இலக்கணத்தை உளங்கொண்டே இஃது இயற்றினேன்; இதில் யான் கருதிய பொருள், 'தலைமகள் தலைவனை யடுத்திருப்பதே அவளது மகிழ்ச்சிக்கும் உலகின் புகழ்ச்சிக்கும் உரிய செயலாகும்; அவ்வாறன்றிப் பிரிந்திருப்பதனால், அவட்கு வாட்டமேயன்றி இகழற்பாடும் உண்டாகும்; ஆகலின், நின்மகள் தன்மனக் கினிய காதலன் பின் சென்றமைக்கு நீ கவலுதல் தக்கதன்று.' என்று உடன் போக்கின்கட் கண்டோர் செவிலிக்குக் கூறினர் என்பது. இவ்வுரிப்பொருள் இதில் உள்ளுறையாகும். இது பாலையாகலின், பாலை எல்லா நிலத்திடையும் நிகழும் என்னும் விதி பற்றித் தலை நிலமாகிய குறிஞ்சியின் கருப்பொருளும், கடை நிலமாகிய நெய்தலின் கருப்பொருளும் இதில் உவமையாக வைத்துள்ளேன்.

*என்று விடை கூறினார். தம்மினும் தம் மாணவர் அறிவு சிறந்து விளங்குதல் கண்ட ஆசிரியர், பெரியதோர் இன்பம் எய்தப் பெற்றவராய்க், கபிலரை நோக்கி, 'என் அன்புள்ள மகனே! யான் கூறுமதனைக் கேட்பாயாக! தமிழின் நலத்தினைப் பேணி வளர்த்தல் கருதி இந்நாட்டிலே தொன்று தொட்டுத் தமிழ்ப் புலவர் பேரவை யொன்று திகழ்ந்து வருகின்றது. வெண் கொற்றக் குடை நிழலிருந்து கலியிருளணு காது செங்கோலோச்சி வரும் பாண்டிவேந்த ரொவ்வொருவரும் அதனைத் தமக்கு இன்றியமையாததோர் அவையாகக் கொண்டு போற்றி வருகின்றனர். சாலச் சிறந்த புலவர்களே அதில் வீற்றிருத்தற் குரியோராவர். அதுதான் மதுரையில் விளக்க முற்றிருக்கும்* ***தமிழ்ச் சங்கம்*** *என்பது. அதனை நீ முன்னும் அறிதியன்றே? நீயும் அத் தமிழ்ச் சங்க மடைந்து, தமிழாராய்ந்து, தமிழ்ப் பணி யாற்றிப், புகழ் சிறந்து, விளங்க வேண்டுமென்பது என் விருப்பம்.' என்றனர் கபிலரும், ஆசிரியர் கட்டளையைத் தலைமேற் கொண்டு வணங்கி, விடைபெற்று, மதுரை யம்பதி யடைந்து, அங்கயற்கண்ணி பங்கரை வணங்கிச், சங்கத்துச் சான்றோருள் ஒருவராய், அங்குள்ள பரணர், கூலவாணிகன், சாத்தனார் முதலிய நல்லிசைப் புலவர்களோடு தமிழாராய்ச்சி செய்து போதருவாராயினர். அப்பொழுது நாடெங்கும் தமிழ் மணம் கமழலுற்றது. நன்மக்களுடைய நாவும், செவியும், உளமுமெல்லாம் தமிழுக்கே நிலைக்களனாய் விளங்கின. வேந்தரெல்லாரும் தமிழ்மாலை சூடி, வீறு பெற்றுயர்ந்தனர். விண்ணிழி மானத்து மேவிய கண்ணுதற் பெருமானும் முந்துறு சிறப்பிற் செந்தமிழ்ப் பாக்களைப் பல்காலும் கேட்டு, அருள் நல்காநின்று, 'பாட்டுக் குருகும் தமிழ்ச் சொக்க நாதர்' என்று பெயரெய்தினர். கபிலரது பாவியற்றும் வன்மையும், வாய்மை, தூய்மை முதலிய நன்மையும் கண்டுணர்ந்த [1]பரணர் முதலிய நல்லிசைப் புலவர்கள்*

1. பழைய வுரைகளில் 'கபில பரணர்' என வழங்குதலால் இவ்விருவரும் ஒருவர்க் கொருவர் சிறந்த நட்பின ரெனக் கருதப்படுகிறது.

நம்பி திருவிளையாடலில், 'பின்னமில் கபிலன் றோழன் பெயரிடைக் காட னென்போன்' என்றும், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடலில் 'முழுதுணர்ந்த கபிலன் றன்பாற், பொழிந்தபெருங் காதன்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன்' என்றும் கூறியிருத்தலால் இடைக்காடரும் கபிலருக்குச் சிறந்த நண்பராதல் வேண்டும். எனினும், இடைக்காடர் சிறிது பிற்காலத்தவரெனக் கருதுதற்கும் இடனுண்டு, திருவிளையாடற் புராணமும் சண்பக மாறனுக்குப் பின் பதினைந்தாவது தலைமுறை யினனான குலேசபாண்டியன் காலத்தில் இடைக்காடரது செய்தி கூறுகின்றது. புலவர் நாற்பத் தெண்மருமே எப்பொழுதும் இருந்தாராகக் கொண்ட புராணத்தின் கொள்கைக்கு இது முரணன்று. எனினும் ஆராயத்தக்கதாம் என்க.

உளங்கலந்து நண்பு பூண்டொழுகியதோடு, அவரைத் தமக் கெல்லாம் தலைவராகவும் கொண்டு போற்றிவந்தனர். அவரும், எடுத்துக் காட்டாகும் பெருமையுடைய பாக்கள் பல அடுத் தடுத்துப் பாடித், தாம் இன்புற்றும், ஏனோரை யின்புறுத்தியும் வந்தனர்.

அந்நாளிலே, ஆரிய நாட்டு மன்ன னொருவன், பிரகத்தன் என்பான், செழியர் பெரு மகனாலே போர்முனையிலே பற்றிக் கொணரப் பட்டவன், பின் அப்பாண்டி வேந்துக்கே நண்பனாய், மதுரையிற் றானே பல ஆண்டுகள் தங்குவா னாயினன். தங்கியவன், அங்கே தமிழ் கற்பான் றொடங்கிச், சிறிது பயின்ற வளவிலே, இஃது ஆரியத்திற்கு நிகராகுங் கொல் என்று ஐயுறவுடையனாயினான். அவனது ஐயத்தைக் குறிப்பானறிந்தார் நல்லிசைக் கபிலர். அறிந்த வளவில் தமக்குள்ளே சிந்திப்பார்: ‘உலகிலே யாவர்க்கும் தத்தம் மொழியிலே பற்றுண்டாதல் இயல்பே. அப்பற்றுத்தான் ஒரு தலையாக வேண்டற் பாலது மாகும். எனினும், அது பற்றி நடுநிலை திறம்பிப், பெருமையுடைய பிற மொழியைத் தாழ நினைப்பது அழகாகாதே. இவ் வாரிய அரசன்றான் நடுவுநிலை யன்றி இங்ஙனம் கருதுகின்றான் என்பதினும், வரலாற்று முறையாற் கற்றிலாமையின் தமிழின் பெருமையை அறிந்திலன் எனக் கொள்ளுதலே சால்புடைத்து. இத்தகையாற்குத் தமிழின் பெருமையை அறிவுறுத்தித் தெருட்டுதலே எனக்குரிய கடனாகும்.’ என இவ்வாறு சிந்தித்தவர், சின்னாளிலே **பெருங்குறிஞ்சி** என்ற பாட்டினைப் பாடிக்கொண்டு, பிரகத்த மன்னன்பால் அணுகி, அளவளாவி இருந்து, அவற்கு உணர்த்தலாகுஞ் செவ்வி தெரிந்து கூறு கின்றார்: ‘அரசே! உலகிலே பழமையும் பெருமையும் வாய்ந்த மொழிகள் சிலவும், அண்மைமையிற் றோன்றி இன்னம் திருத்தம் பெறாதவாய மொழிகள் பலவும் இருக்கின்றன. பழமையுடைய சிலவற்றில் உலக வழக்கினும் நூல் வழக்கினும் பயின்று வருவதும், எக்காலத்தும் அங்ஙனம் பயிலுதற் கேற்ற ஆற்றலமைந்ததும் தமிழொன்றேயாகும். தமிழ்மொழி எப்பொழுது உண்டாய தென்று யாவரானும் அறிய வாராமையின், படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருவதொன்று எனக் கூறும்படி யிருக்கிறது. அவ்வளவு நீண்ட காலமாகியும் அது தன் எழில் சிதையாது, நடை தளராது, இன்னமும் கன்னியென மிளிர்கின்ற தென்றால், அவ்வாறு விளங்குதற் கேற்ற சிறப்பியல்புகள் யாவையென அறிதற்கு அவாவுதல் இயல்பே. அவற்றுள்ளே சில கூறுவேன். தமிழிலுள்ள எழுத்தொலி யெல்லாம் கற்று

வல்லாரும் அல்லாரும் ஒரு படியே கூறத் தக்க மென்மை யுடையன. சொற்களெல்லாம் பெரும்பாலும் இரண்டு மூன்று எழுத்துக்களால் ஆகியவை. சொற்களின் சந்தியில் உண்டாகின்ற மெய் பிறிதாதல், மிகுதல், குன்றல் என்னும் திரிபுகளும், இயல்பும் எல்லாம் இயற்கையினின்றும் மாறுபடாதன. கல்லாத சிறார் பேச்சிலுள்ள சந்தியும் தமிழிலக்கணம் கூறுகின்ற சந்தியும் ஒன்றே. எல்லாப் பெயர்களும் ஒரு தன்மையாகவே வேற்றுமை யுருபேற்றுத் திரிபின்றி நிற்கும் எண்மையுடைய வாதலால், பேசுதற்கு என எவரும் வேற்றுமை யிலக்கணம் கற்க வேண்டுவ தின்று. இவை யெல்லாம் இம் மொழியின் வழக்கிற்குச் சிறந்த கருவியாவன. மற்றும் இதற்குரிய சிறப்பியல்புகளோ பல. இதன் எழுத்தெல்லாம் பெரும்பாலும் இயற்கையிற் பிறப்பன. மெய் யெழுத்துக்கள் வலி, மெலி, இடை யென மூன்று இனமாக அமைந்திருப்பதும், அவை ஒவ்வொன்றும் ஒரேயளவாக அவ்வாறு எழுத்துக்கள் பெற்றிருப்பதும் வியப்பு விளைப்பனவாம். உரப்பலும், கனைத்தலுமின்றிக் கூறத் தக்க இவ்வெழுதுக் களுள்ளும், இவை மொழிக்கு முதலில் வாரா என்றும், இவை இறுதியில் வாரா என்றும், இவ்விவற்றோடு இவ்விவை மயங்கா என்றும், மக்களது நாவி னியல்பையும், ஒலியினியல்பையும் ஆராய்ந்தறிந்து, அருமுயற்சி யின்றிக் கூறத் தக்கவாறு முதனூலாசிரியர் வரையறை செய்திருக்கும் மாட்சியை யாம் எங்ஙனம் வியந்து கூறுவது? சொற்களெல்லாம் பெரும்பாலும் பொருளுக்கும், வினை, பண்பு முதலியவற்றுக்கும் ஏற்ற ஓசையமைதி யுள்ளன. பகுத்தறிவுடைய மக்கள் முதலிய வுயிரை உயர்திணை யென்றும், பகுத்தறிவில்லாத உயிரையும், உயிரில் பொருளையும் அஃறிணை யென்றும் அறிவு பற்றி வேறு எந்த மொழியில் பாகுபாடு செய்திருக்கிறது? சொல் நோக்கி ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும், இரண்டையும் அலியாகவும், பிறழக் கூறுமாறின்றிப், பொருள் நோக்கத்தாலே இம் மொழியில் பால் வகுத்திருக்கிறது. இதிலுள்ள வினைச் சொற்கள், திணை, பால், இடம், காலம் என்பவற்றை உணர்த்து வதுபோல், வேறு எம்மொழிச் சொற்களுணர்த்துவன வாகும்? இதிலுள்ள பாக்களெல்லாம் பொருளுக்கேற்ப வேறு வேறு ஓசை யமைந்தவை. மக்கள் அடையற் பாலனவாகிய பொருளை யெல்லாம் அகம், புறம் எனப்பகுத்து, அவற்றுக்குரிய ஒழுக லாற்றினை இலக்கணத்தால் வரையறை செய்வது இம் மொழிக்கேயுரிய சிறப்பியல்பு.' என்று இங்ஙனம் கூறக்கேட்ட ஆரிய வரசன், 'ஆ! இத்துணைப் பெருமையுடைய தமிழை என்

அறியாமையாலன்றே இகழ்ந்திருந்தேன்.' என்று தன்னை நொந்து கொண்டவனாய்ப், பின்பு கபிலரை நோக்கி, 'அந்தணாளீர்! இளஞாயிறு போலும் நுமது சொல்லாகிய கதிர்களால் என் அறியாமை யென்னும் இருள் இரிந்தோடுவ தாயிற்று. உலகிலுள்ள மொழிகளில், தமிழே தொன்மையும், பெருமையும் வாய்ந்ததென இப்பொழுது நன்கறிந்தேன். தமிழின் பொருட் பாகுபாட்டினைப் புலவர் பெருமானாகிய நும்மிடமே நன்கு அறிந்துகொள்ளும் அவாவுடையேன்.' என்று கூறினன். கபிலரும், அவனுக்குக் குறிஞ்சி முதலிய அகத்தின் பகுதிகளையும் வெட்சி முதலிய புறத்தின் பகுதிகளையும் விளங்க எடுத்துரைத்துப், பின்பு, தாம் இயற்றி வந்த குறிஞ்சிப் பாட்டைக் கூறி, அதன் பொருளையும் அறிவுறுத்தருளினார். வேறு எம் மொழியிலும் காணப்படாத பொருளிலக்கணத்தையும், அகப் பொருளின் ஓர் துறைக்கு இலக்கியமாகிய குறிஞ்சிப்பாட்டையும் கூறக் கேட்ட பிரகதத்தனுக்கு உண்டாய மகிழ்ச்சிக்கு ஓரெல்லையின்று. குறிஞ்சிப் பாட்டிலுள்ள இயற்கை யழகுகளும், நீதி முதலியவும் அவன் உள்ளத்தைக் கவர்ந்து விட்டன. அன்று முதலாக அவ்வரசன் பேரார்வமுடன் இடையறாது தமிழ் பயின்று, பாட்டியற்றும் நல்லிசைப் புலவனுமாயினான். இவ்வாறு ஆரிய வரசனைத் திருத்திய கபிலரது அறிவு, ஆற்றல் முதலியவற்றை அனைவரும் கொண்டாடி னார்கள். கபிலரது புகழ் எங்கும் பரவிற்று.

அக்காலத்தில், வீரத்தின் மேம்பட்ட பேரரசர்களேயன்றிக், குறுநில மன்னருள்ளும் பலர் சிறந்த வள்ளல்களாய் விளங்கினர். சிறிய பூக்களையுடைய முல்லைக் கொடி படர்தற்குத் தனது பெருந்தேரை யளித்த பறம்பிற்கோமானாகிய பாரியும், காட்டிலே யுள்ள மயிலுக்குத் தனது மேற்படாத்தினை நல்கிய பெருங்கல் நாடனாகிய பேகனும், இரவலர்க்கு வேண்டுவன யாவும் நல்கிய முள்ளூர் மன்னனாகிய காரியும், கொல்லிமலைத் தலைவனாகிய ஓரியும், நள்ளியும் முதலிய வள்ளியோர்கள் அப்பொழுது விளக்க முற்றிருந்தனர். அவருள்ளே, வரையா வள்ளன்மையால் வையகமுழுதும் தன்புகழ் பரக்க விருந்த வேள்பாரியின் அருங் குணங்களையும், பெருஞ் செயல்களையும் கேள்வியுற்றார் கபிலர். 'ஆ! ஒருமுல்லைக் கொடி படர்தற்குக் கொழுகொம்பின்றி நடுங்குவது கண்டவளவிலே, தான் ஊர்ந்து வந்த தேரினை அது படருமாறு நிறுத்திக் கழலடி சிவப்ப நடந்து சென்றானாம்! அவ்வோரறிவுயிர் மாட்டும் வரம்பின்றெழுந்த அவனது இயற்கைப் பேரருட் பெருக்கினை யாவர் அளவிட்டுரைக்க

வல்லர்? அவ்வருளுடன் கூடிய அறிவன்றோ அறிவெனப்படுவது. இத்தகைப் பெருமை யுடையானை எப்பொழுது காண்பேம்?' என்று நினைந்து வேள் பாரியைக் காண்டற்கு விருப்பு மிக்கவ ராயினார். பாரியும், கபிலரது பெருமையெல்லாம் கேள்வியுற்று, 'மனந்தூய்மை, செய்வினை தூய்மை இரண்டும் இனந்தூய்மை பற்றுக் கோடாக வரும் என்பர் பெரியோர். தூய்மையே ஒருருவெடுத்தா லனையர் கபிலர். அன்னவரை எப்பொழுது இனமாகப் பெறுவேன்? தூய்மையுறுவேன்?' என்றெண்ணி, அவர்பால் அன்பு மீதூரப் பெற்றவனானான். வள்ளியோன் அன்பினால் இழுக்கப்பட்டார் கபிலர். மதுரையை அரிதின் நீங்கினார். பறம்பு நாடடைந்து பாரியைக் கண்டார். அன்று தொட்டு ஒருவர் ஒருவரிற் கலந்த கேண்மையராயினர். பாரியானவன், அறிவாற்றல் மிக்க பெரியராய கபிலரது கேண்மையினும் பெறுதற்கரிய பேறு பிறிதின்றெனக் கருதி, அவரது குறிப்பின்வழி யொழுகுவானாயினன். கபிலரும், அவ்வள்ளலுக்கு அருமந்த நண்பராயும், சூழ்ச்சித் துணைவராயும் விளங்கியதோடு பறம்பு மலையின் இயற்கை வளனெல்லாம் பல்காலும் கண்டு கண்டு களித்து, அங்குள்ள பூவும், புள்ளும் முதலிய கருப்பொருள்களின் பெற்றியை யெல்லாம் நுனித் தறிந்து, சுவை கனிந்த அகப்பொருட் பாட்டுக்கள் பலபாடியும் வள்ளியோர் தலைவனை மகிழ்வித்து வருவார். ஒரொருகால், தன்னையடைந்தவர் அறிஞராயினும், மடவராயினும், வலியராயினும், மெலியராயினும் அன்னவர்க்கு வேண்டுவன நல்கி விடுக்கும் பாரியின் வண்மையினைப் பாராட்டிப் பாடுவர். இங்ஙனம் பல்லாண்டாகப் பாரியுடன் வாழ்ந்து வரும் நாளில் வையாவிக்கோப் பெரும்பேகன், மலையமான் திருமுடிக்காரி என்னும் வள்ளல்களின் நண்பும் அவர்க்கு உளதாயிற்று.

ஒரு கால் அவர் வேள்பேகனைக் காண வேண்டி, 'அருந்திறற் கடவுள்' ஆய முருகவேள் கோயில் கொண்டிருந்து மன்பதைகட்கு அருள் வழங்கா நின்ற பழனிமலையினையுடைய ஆவிநன்குடி என்னும் அவனது ஊரை அடைந்தார். அப்பொழுது, பேகனோ, ஆடல் பாடலில் வல்லாளான அழகின் மிக்க ஓர் கணிகையின் கண்வலையிற் சிக்குண்டு, கற்பினுக் கரசியெனத் தகும் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்துறை வானாயினன். கண்ணகி யென்னும் பெயருடையார்க்குக் கணவராயினார் இங்ஙனம் ஒழுகுவது இயற்கை போலும்! கற்புடைய மகளிர்க்குத் தம் கணவர் தம்மைப் பிரிந்திருத்தலே யன்றிப், பிறமகளிர் வயமா யொழுகுதலும் புரியின், அதனினும் தாங்கற்கரிய துயரம்

பிறிதுண்டோ? கண்ணகியும் ஆற்றாமை மேலிட்டு நீருமாடாள்; பூவுஞ்சூடாள்; விலையுயர்ந்த ஆடையானும், அணியானும் ஒப்பனை செய்து கொள்ளாள்; ஊணின்றி, உறக்க மின்றி, உடம்பு மெலிந்திடுவாள்; இரங்கி யினைந்திடுவாள். இங்ஙனம் இவளுற்ற ஆற்றாமையின் காரணத்தை அறிந்த சான்றோராய பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் என்னும் புலவர் பெரு மக்கள் பேகன்பாற் சென்று, கண்ணகியின் றுயரினைப் பலவாறு எடுத்துக் கூறி, 'நீ அறநெறியில் ஒழுகி, நின் மனைவியின் ஆற்றாமையைப் போக்குவதே நின்னை யாம் இரக்கும் பரிசில்.' என்று வேண்டினார்கள். அருள் சேர்ந்த நெஞ்சினராய கபிலரும், பேகனை யடுத்து, 'வளமிக்க மலைபொருந்திய நாட்டை யுடையானே! தாளாற்றலும் கைவண்மையும் உடைய பேக! நேற்றுச் சுரத்தின் கண் நடந்து வருந்திய எனது சுற்றத்தின் பசியைப் போக்குமாறு, முரசுபோல் ஒலிக்கும் அருவியை யுடைய உயர்ந்த மலையிடத்துச் சீறூரிலே நின்வாயிலின் கண் வந்து நின்னையும் நின்மலையையும் வாழ்த்தி நின்று பாடினேன்.; அப்பொழுது துயர் மிகுதியால் இடையறாது சொரிகின்ற கண்ணீரானது தன் மார்பகத்தை நனைக்கும்படி விம்மி நின்று, வேய்ங் குழல் இரங்கி யொலிப்பதுபோல, ஒருத்தி அழுதாள்; பெரிதும் இரங்கத்தக்காள்; அவள் யாரோதான்?' என்று கூறினர், அவற்றையெல்லாம் கேட்ட பேகன், தலை கவிழ்த்து. நாண மெய்தியவனாய்த் தன் தவற்றினை நினைந்து நினைந்து வருந்தித், தன்குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமெனக் கபிலர் முதலிய சான்றோரை வணங்கி வேண்டி நின்று, அன்னவர்க்கும் அருங்கலனும், பிறவும் ஆய பரிசில்களை அருகாது வழங்கி விடுத்துப், பின்பு கண்ணகியுடன் கூடி இல்லறம் இனிது நடாத்தி இன்புற்று வந்தான்.

கபிலர், 'ஆவியது நல் ஊர்' எனப் பொருள்படும் ஆவிநன் குடியை நீங்கி, மலையமானாட்டிலே, பெண்ணையாற்றங் கரையிலுள்ள திருக்கோவலூரை யடைந்து, மலையமான் திருமுடிக் காரியைக் கண்டு அளவளாவி மகிழ்வராயினர். முள்ளூர் மலைக்குத் தலைவனும், கோவலூரை அரசிருக்கை யாகக் கொண்டவனும், போரிலே மூவேந்தர்க்கும் ஓரொருகால் உதவி புரிந்த பெரு வீரனும், புலவர்க்கும், இரவலர்க்கும் வரையாது வழங்கும் வள்ளியோனும் ஆகிய திருமுடிக்காரியும் கபிலரது வரவிற்குப் பெரிதும் மகிழ்ந்து, அவர்பால் நட்புரிமையோடு ஒழுகி வருவானாயினன். வள்ளலாகிய காரி, உயர் குணன் பலவும் உடையனாயினும், புலவர்களின் வரிசை

யறியாது நல்குகின்றான் என்பதனை யறிந்த கபிலர், அவனுக்கு அறிவுகொளுத்தக் கருதி, ஓர் கால் அவனை நோக்கி, 'மிக்க வண்மையையுடைய தலைவ! ஓரிடத்துள்ள வள்ளியோன் ஒருவனை நினைந்து நாற்றிசையினு முள்ள பரிசிலர் பலரும் வருவர்; அவர் வரிசையறிதல் அரிது; கொடுத்தலோ மிகவும் எளிது; நீ அதனை நன்கு அறிந்தாயாயின், புலவரிடத்து வரிசை கருதாது பொதுவாக நோக்குதலைத் தவிர்வாயாக.' என்று கூறினர். பின்பொருகால், அவனது வீரத்தையும், வண்மையையும் பாராட்டி, 'வீரக் கழலணிந்த திருந்திய அடியை யுடைய காரியே! நின் நாடு கடலாற் கொள்ளப்படாது; பகைவரும் கொள்ளக் கருதார்; எனினும், அது நினக்கு உரித்தன்றி வேள்வித் தீயைப் புரக்கும் அந்தணருடைய தாகின்றது. மூவேந்தருள் ஒருவற்குத் துணையாக வேண்டுமென, அவர்கள் பால் நின்றும் வந்தோர், தனித்தனி புகழ்ந்து, நினக்குத் தரும் பொருளும் நுமது குடியை வாழ்த்தினராய் வரும் பரிசிலருடைய தாம் ஆதலால், அருந்ததி யொக்கும் கற்பினையும், மெல்லிய மொழியையும் உடைய அரிவையது தோள் மாத்திரை யல்லது, நினதென்று சொல்ல ஒன்று இல்லையாயிருக்கவும், நீ பெருமித முடையயாய் இருக்கின்றாய்! இதற்குக் காரணமென்னை?' என்று வியப்புறக் கூறினர். 'வள்ளியோர் பிறரெல்லாம் நாண் மது வுண்டு மகிழ்ச்சியுற்ற போழ்து பிறர்க்கு வழங்குவர்; மலையமான் இயல்பாக வழங்கிய தேர்கள் முள்ளூர் மலையிலுண்டாகிய மழைத்துளியினும் பல.' என்றும், 'அருவி யொலிக்கும் பெரிய மலையுடையோனைப் பாடியவர்கள், நல்ல நாளன்றிப் போகிப், புள் நிமித்தம் இடைநின்று தடுப்பச் செவ்வியன்றாகப் புகுந்து, வெறுக்கத் தக்கவைகளைச் சொல்லினும், பரிசில் பெறாது வறிதாக மீள்வாரல்லர்.' என்றும் அவனது இயற்கையாகிய கொடையின் சிறப்பைப் புகழ்ந்துரைத்தனர். இவ்வாறாய ஆழ்ந்த கருத்துள்ள பாடல்கள் பலபாடி, மலையனை மகிழ்வுறுத்தி வந்த கபிலர், தம் அரும்பெறல் நண்பனாகிய வேள்பாரியைக் காணும் ஆதரம் பெருகினமையின், அங்கு நின்றும் போந்து, பறம்பு நாடடைந்து, பாரியின் அருள்பொழியும் விழிகளுக்கு நல்விருந்தாயினர்.

நவிலுந்தொறும் நூலின் நயம் வெளிப்பட்டு இன்பம் விளைத்தல் போல், பழகுந்தொறும் இவ்விருவருடைய இனிய பண்புகளும் வெளிப்பட்டு, இருவர்க்கும் இன்பம் விளைப்ப வாயின. காக்கையின் இரு கண்ணிற்கும் மணி ஒன்றாதல் போல, இவ்விருவ ருடம்பிற்கும் உயிர் ஒன்றென்னுமாறு விளங்கினார்கள்.

பாரியின் வண்மைத் தன்மையைக் காணுந்தொறும், கபிலர் மிக்க வியப்பும் உவப்பும் உடையராய், 'மக்களுள் யாவரானும் விரும்பப்படாத எருக்கம் பூவாயினும் கடவுள் விரும்பி ஏற்றுக் கொள்ளுதல் போல, யாதும் அறிவில்லாரும், புன்குணனுடை யாரும் செல்லினும், அன்னவர்க்கும் பாரி கைவண்மை செய்தலைக் கடப்பாடாக வுடையன்.' என்று, கடவுளோ டொப்பித்துக் கூறி, அவனது விரிந்த வுள்ளத்தின் மேன்மையை விளக்கிடுவர். 'பாரி, பாரி யென்று சொல்லி, அவன் பல புகழையும் வாழ்த்தி, அவ்வொருவனையே புகழ்வர், செவ்விய நாவினையுடைய புலவர்; பாரி யொருவனுமே யல்லன் மாரியுமுண்டு, இவ்விடத்து உலகத்தைப் பாதுகாத்தற்கு.' என்று பழிப்பது போற் புகழ்ந்து, வரைவின்றியும், கைம்மாறு கருதாதும் ஈயும் பாரியின் கடப்பாட்டின் மேன்மை தெரித்திடுவர். 'பறம்பு மலையானது, பாடுவார்க்குக் கூறிட்டுக் கொடுத்தலின், அவருடைய தாயிற்று; அறத்தினை மேற்கொண்டு, பாரியும், பரிசிலர் வேண்டுவராயின் அவ்வழி வாரேன் என்னானாய் அவரெல்லையின் கண்ணே நிற்பன்.' என்று, பரிசிலர்க்கு என்பு முரியனாம் அவனது அன்பின் றிறத்தினை யெடுத்தியம்புவர். இவ்வாறு, வேள் பாரியானவன் கபிலர் பாடும் புகழுடை யோனாய் விளங்கினன். அவனது புகழ் நாடெங்கும் பரந்தது. அக்காலத்துச் சேர, சோழ, பாண்டியர்களில் வீரத்தினும், நீதியினும் மேம்பட்ட பேரரசர் சிலரிருந்தனர். அவருடன் பகை கொண்டு அரசின்றித் திரிந்தாரும் சிலருண்டு. அங்ஙனம் திரியலுற்றார் மூவர், ஒருங்கு கூடிப் படைகளைத் திரட்டிச் சென்று, பாரியின் பறம்பென்னும் மலையரணை முற்றுகை யிட்டனர். அவ்வரணோ, நீர், நிலன், காடு என்பவற்றாற் சூழப்பட்டது. ஏணிக் கெட்டாத வுயர்ச்சியும், புறத் தோர்க்குத் தோண்டலாகாத அடியகலமும், அகத்தோர்க்கு நின்று வினை செய்தற்காம் தலையகலமும், கல்லானும், இட்டிகையானும் செய்யப் பட்டமையின், குத்தப்படாத திண்மையும் உடைய மதிலினை யுடையது. அகத்தோர்க்கு வேண்டும் பொருள் களெல்லா வற்றையும் உடையது. தலைவன் மாட்டன்பும், மானமும், மறமும், சோர்வின்மையும் முதலிய நற்குணங் களுடைதாய், உற்றுழி யுதவும் வீரரையுடையது. மற்றும், அரணுக்கு வேண்டும் பிற மாட்சிமை களையும் உடையதாய், மடிந்திராது, ஏற்ற வினையை அளவறிந்து செய்து, காக்க வல்ல வினை மாட்சி யுடையாரையும் உடைத்தாய் இருந்தது. ஆகலின், அஃது எத்துணைப் படை மாட்சியுடைய ரானும் எளிதிற் பற்றப்

படுவதொன் றன்று. மூவரது முற்றுகையும் நெடுங்காலஞ் சென்றது. அரண், அடை மதிற்பட்டிருந்த காலை, அகத்துள்ளார் உணவின்றி வருந்தா வண்ணம், அங்கிருந்த புலவர் பெருமானாகிய கபிலர்,[1]கிளிகள் பலவற்றை பயிற்சி விடுத்து, அரணுக்குப் புறத்தேயுள்ள விளைநிலங்களிலிருந்து நெற்கதிர்களை நாடொறும் கொய்து வரச்செய்து, அங்குள்ள குடிகளையும், படைகளையும் உண்பித்துக் காப்பாற்றி வந்தனர். அங்கிருந்த நொச்சி மறவராயினார், தம் மலையின் கண் இயற்கையாய்க் கிடைக்கும் பலாப்பழம், வள்ளிக் கிழங்கு முதலிய வுணவுகளோடு கபிலரது சூழ்ச்சியாற் கிடைக்கும் உணவினையுமுண்டு தளர்வின்றிப் போர் மலைந்து வந்தனர். முற்றுகை பல்யாண்டாகியும், அரணினைக் கைப்பற்ற வியலாத மூவேந்தரும், பாரி தன் மகளிரை தமக்கு மணஞ் செய்து கொடுப்பின் தாம் போர்புரிவதில்லை யெனக் கூறிவிடுத்தனர். இதனைக் கேட்டலும், பாரிக்குச் சினம் மூண்டது. கவரிமான் போலும் மானமுடைய வீரனானவன் இவ்விழிமொழியை எங்ஙனம் பொறுத்திருப்பன்? கடியதோர் வாளராவெனச் சீறி யெழுந்து உழிஞையார் மேற் சேறலுற்றான். புலவரேறாய கபிலரும், முன்னர்ச் சென்று, மதிற்புறத்தெய்தி, மூவேந்தரையும் பார்த்துப் பின்வருமாறு கூறலுற்றார்:-

---

1. இச்செய்தி,

உலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று
செழுஞ்செய்ந் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தா ளாம்பன் மலரொடு கூட்டி
யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையா
தாளிடூஉக் கடந்து வாளம ருழக்கி
யேந்துகோட் டியானை வேந்த ரோட்டிய
கடும் பரிப் புரவிக் கைவண் பாரி (அகம் – 78) என நக்கீரனாராலும்,

புலங்கந் தாக விரவலர் செலினே
வரைபுரை களிற்றொடு நன்கல னீயு
முரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பி
னிரைபறைக் குரீஇயினங் காலைப் போகி
முடங்குபுறச் செந்நெற் றரீஇய ரோராங்
கிரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொண் மாலைப் படர்தந் தாங்கு (அகம் – 303)

என ஔவையாராலும் கூறப்பட்டுள்ளது.

'பெருமை பொருந்திய முரசினையுடைய நீயிர், மூவேந்தரும், எத்துணைக் காலம் முற்றுகை செய்யினும், பறம்பு என்னும் அரணிலுள்ளார்க்கு உணவுக் குறை உளதாகாது. மூங்கில் நெல்லும், பலாப்பழமும், வள்ளிக் கிழங்கும், தேனும் என்னும் நான்கு பொருளையும் அது மிகுதியாக வுடைத்து. இவை உழவரது முயற்சியின்றியே இயற்கையிற் கிடைப்பன. நீங்கள் எண்ணிலாத களிறும் தேரும் கொணர்ந்து அமர்விளைப்பினும், நுமது முயற்சியால் அரணைப் பற்ற மாட்டீர். நும்வாள் வலியால் பாரி அதனைத் தருவானல்லன். அதனைக் கொள்ளுமாறு யான் அறிகுவன். வடித்து முறுக்கிய நரம்பினையுடைய சிறிய யாழை வாசித்து, நும் உரிமை மகளிர் பின்வர, ஆடிப்பாடிச் செல்வீராயின், அவன் நுமக்கு நாடும் மலையும் சேரநல்குவன்.'

'பெருமை மிக்க தானையினையுடைய மூன்று திறத்தீரும் கூடிப் பொருதீராயினும், பறம்பு கொள்ளுதற்கரிது. குளிர்ந்த நல்ல பறம்புநாடு முந்நூறு ஊர்களை யுடைத்து. அம்முந்நூறூர் களையும் பரிசிலர் பெற்றனர். நீவிர் பாடிக் கொண்டு வரின், நுமக்குப் பரிசிலாக மலையுள்ளது. அதுவேயன்றி யாமும் பாரியும் உள்ளேம்.'

'பாரியது பெரியமலை இரங்கத்தக்கதொன்றே. அது வேற்படைகொண்டு பொரும் வேந்தர்க்கு அரிது எனினும், நீலமலர்போலும் மையுண் கண்களையுடைய விறலி பாடினளாய் வரின், அவட்கு எளிதாகின்றது.'

என்றிங்ஙனம் பாரியது புரவலர்க் கருமையும், இரவலர்க் கெளிமையும் ஆகிய நிலையினை யெடுத்து, அவ் வேந்தர்களைச் சிறிதும் மதியாது, ஏந்திய கொள்கையரான கபிலர் கூறினர். கூற, மூவேந்தரும், இனி நாம் பாரியை வெல்லுதலரிதென ஊக்க மழிந்தனர். பாரியின் படைவீரர் ஆராவாரித் தெழுந்தனர். பாரியும் புகுந்து மந்தர மனைய திண்டோள் வலியால் பகைக் கடலை யுழக்குவனாயினான். மூவேந்தரும் படையுடன் முரிபட்டோடினர். வெற்றித் திருவும் பாரியின் வெற்புத் தோளை மேவலுற்றனள். இஃதிவ்வாறாக, ஊழ்வினை பயனூட்டுங் காலம் அணுகியது. அதனை யொழிக்க வல்லவர் யாவர்? பாரியுடன் சமர் புரியலாற்றாது நிலைகெட்டோடிய மூவரும் ஓரிடத்துக் கூடினர். கூடிப் பாரியின் அருமை, பெருமைகளை யறியாத பண்பிலிகளாய் அன்னார், அந்தோ! அவனை வஞ்சத்தாற் கோறல் கருதினர். அதற்கொரு சூழ்ச்சியும் புரிந்தனர். நஞ்சனையார் புரிந்த வஞ்சனை இன்னதென யாரா லியம்பலாகும்? மாரியனை யான்

பாரியும் பூதவுடம்பை விடுத்துப், புகழுடம்பை நிறுத்தினான். விண்ணவர் மலர்மாரி பொழிய, மண்ணவர் கண்மாரி பொழிந்தனர். இரவல ரிரங்கினர். புலவர்கள் புலம்பினர். அவனுக்கு ஆருயிர்த் தோழராயிருந்த கபிலரது பெற்றியை உரைப்பதென்னே! பாரி தடுத்திராவிடின் தாமும் உயிர் துறந்திருப்பாரல்லரோ? பாரியின் சொற்களாலும், அவன் மகளிரைப் பாதுகாக்க வேண்டியும் உயிர் சுமந்திருந்தாரா யினும், புலவர் பெருமான் நாளும் எல்லையில்லாது துயருழப்பா ராயினர். பறம்பு நாட்டு முந்நூறூரையும் பரிசிலர்க் களித்த பெருமையை நினைந் திரங்குவர் ஒரு கால். முல்லைக் கொடிக்குப் பொற்றே ரளித்துக் கழலடி சிவப்ப நடந்து சென்ற பேரருளை நினைந் திரங்குவர் ஒரு கால். அறிவும், அன்பும், செறிவும், பொறையும் முதலிய குணனெல்லாம் நினைந்திரங்குவர் ஒவ்வொரு கால். அன்புடையாரைப் பிரிதலினும் துன்பமென்ப தியாதுண்டு? புலமை நிறைந்த அவரது உள்ளமும் நிலையழிந்தது. பலவாறு அழுங்கிக் கூறுவர்.

'உலகெங்கும் வறங் கூர்ந்த பொழுதும் அவனது நாட்டில் வயல் விளைவு மிகப், புதலிடத்துப் பூக்கள் மலர, ஆமாவினது நிரை நல்ல புல்லை மேய, மழை பொய்யாது பெய்தது; சான்றோர் பலராயினர்; அவற்றிற்குக் காரணம் அவனது செங்கோன்மையன்றே? அங்ஙனம் கோல் செவ்விதாக நிறுத்தியானையும் இழப்பதே!' என்றும்;

'நிழலில்லாத நீண்ட சுரத்துத் தனிமரம் போன்று முரசுடை வேந்தரினும் மேலாக இரவலர்க் கீயும் வள்ளியோன் நாடு முன்பு பல புதுவருவா யினையு முடைத்து; இனி அது கெடுங்கொல்லோ!' என்றும்;

'கரிய கூந்தலை யுடைய மடந்தையர்க்குத் தந்தையும், புலவராற் பாடப்பட் டமையாத பண்பினனும், பகைவர் புறக் கொடுத்தோடும் வீரக் கழலின் ஆரவாரத்தைக் கண்டு நாணிப் பின்செல்லாது நிற்போனும் ஆகிய, முருகனை யொக்கும் வென்றியை யுடையானது நாடு, முன்பு, நன்றாக விளைந்த புதிய வரகை யறுக்கவும், தினையை யரியவும், எள்ளிளங் காய் கறுப்பவும், அவரையின் கொழுங் கொடியில் வெளிய காய் அறுக்குஞ் செவ்வி பெறவும், நறு நெய்யிலே கடலை துள்ள அதனோடு சோற்றை யட்டு ஊட்டுதற்கு மனையாள் கலம் பூசுதலைப் பொருந்தவும் புது வருவாயை உடைத்தாயிருந்தது; இனி அது கெடும் போலும்!' என்றும்;

'இரவலர்க்குத் தேர் வழங்கும் பாரியது குளிர்ந்த பறம்பு நாட்டில், எண்ணாட் பிறை போலும் வளைந்த கரையையும், தெளிந்த நீரையுமுடைய குளம், பாதுகாப்பாரின்றி உடைவதே!' என்றும்;

'மலர் செறிந்த காவில் மயிலெழுந்து ஆடவும், மலையின் கண்ணே யேறி முசுக்கலை தாவி யுகளவும், அம் முசுக்கலையும் நுகர்ந்து வெறுக்குமாறு மரம் பலவும் காலமன்றாகவும் பழுத்துதவும் புது வருவாயொழியாத சாரலை யுடைய மலை யுச்சியில் ஏறித் தம் தந்தையாகிய பாரியின் அருமை யறியாது, போரேற்று வந்த அரசரது குதிரையை யெண்ணுவோராகிய, மழைக் கண்ணும் இன்முறுவலு முடைய மகளிர், இப்பொழுது முள் வேலியையும், பஞ்சு பரந்த முற்றத்தையு முடைய சிறிய மனையருகே, பீர்க்கமும், சுரையும் படர்ந்த விடத்திலே, ஈத்திலையை யுடைய குப்பையின் கண்ணேயேறி, உமணர் உப்புச் செலுத்தும் சகடத்தை எண்ணுவர்; நோவேன் யான்! எனது வாழ்நாள் கெடுவதாக!' என்றும்; அவனது மலையும், நாடு முற்ற நிலையினையும் அவன் மகளிருக் குற்ற எவ்வத்தினையும் குறித்துப் பலவாறு அழுங்கி அரற்றினர்.

இங்ஙனமாகக் கையாறெய்திய கபிலர், பின்பு, அங்கிருக்க உளம் பொறாதும், பாரிமகளிரைத் தகுதியுடைய ஆடவர்க்கு வாழ்க்கைப் படுத்துதல் கருதியும், அன்னாரை அழைத்துக் கொண்டு புறம்பே யேகலுற்றனர். ஏகுகின்றவர், பறம்பினை நோக்கி நின்று 'ஓ! பெரிய புகழை யுடைய பறம்பே! முன்பு பல சிறந்த வுணவையும் விரும்பியவாறே தரும் மிக்க செல்வம் முதிர்ந்து, எம்முடன் நட்புச் செய்தாய்! இப்பொழுது, பாரி இறந்தானாகக், கலங்கிச், செயலற்று, வளை யணிந்த முன்கையை யுடைய மகளிரின் மணங்கமழும் கரிய கூந்தலைத் தீண்டுதற்கு உரியவரை நினைந்து, நீர் வார்கின்ற கண்ணை யுடையேமாய், நின்னைத் தொழுது வாழ்த்திச் செல்லுகின்றேம்; நீ வாழ்வாயாக!' என்று கூறி, அதனை விடுத்துச் சென்றனர். சென்றவர் சிறிது தூரத்தில் நின்று, மீளவும் நோக்கி, 'தேர்வழங்கும் இருக்கையை யுடைய உயர்ந்தோனது மலை, அவன் உளனாய காலத்துப் புகழானுயர்ந்து, காணாதார்க்கும் செவிப் புலனாகத் தோன்றும்; இப்பொழுது பிற மலைகள் போல் கட்புலனளவிற்றாய், இவ்விடத்து நின்றோர்க்கும் தோன்றும்; சிறிது எல்லை போய் நின்றோர்க்கும் தோன்றும்.' என்று இரங்கிக் கூறினர். இங்ஙனம் பறம்பின்பால் வைத்த பெரும் பற்றினாலே கவற்சிமிக்குப்,

பலவாறு கூறிக்கொண்டு சென்று, மாலைப் பொழுதில் ஓர் பொய்கை யருகே தங்கினர். மதியமானது வெள்ளிய நில வினை விரித்து விளங்குவது கண்டனர் பாரிமகளிர். சென்ற திங்களில் அந்நிலாப் பொழுதில் தாம் இருந்த நிலைமையும், இப்பொழுது இருக்கும் நிலைமையும் அவர்கள் மனத்திலுதித்தன. உடனே உள்ளுடைந்துருகி, 'ஆ! அற்றைத் திங்களில் அவ் வெண்ணிலாவில் யாம் எந்தையை உடையேமா யிருந்தேம்; எம் குன்றும் பிறராற் கொள்ளப் பட்டிலது. இற்றைத் திங்களில் இவ் வெண்ணிலாவில் வேற்று வேந்தராயினார் எம் குன்றினைக் கைப்பற்றினார்; யாம் எந்தையை உடைய மல்லேமும் ஆயினேம்.' என்று கூறி வருத்தத்துடன் தங்கியிருந்தனர்.

கபிலரும், மறுநாள் அவர்களை யழைத்துக் கொண்டு சென்று, விச்சிக்கோன் என்னும் சிற்றரசனை யடைந்து அவனை நோக்கி, 'வளம் பொருந்திய மலையினையுடைய, விளைவு மிக்க நாட்டை யுடையோய்! நெடிய வேலும், கடுங்கண் யானையும், விளங்கு மணிப்பூணு முடைய விச்சிக்கோவே! இவர்கள் தாம், முல்லைக் கொடியானது நாத்தழும்பேறப் பாடாதாயினும் தனது நெடிய தேரைக் கொள்கவென்று கொடுத்த மேம்பட்ட சிறப்பினை யுடைய பாரியின் மகளிர்; யானோ, பரிசிலன்; அது வன்றியும் அந்தணன்; நீயோ பகைவரை முறைமையாற் பொருது, வணங்கு விக்கும் வாளால் மேம்படுபவன்; ஆதலால், இவர்களை நினக்கு யான்தர, நீகொள்வாயாக!' என்று பரிசி விரப்பார் போன்று கூறினர். கூறியும், அவன் அவர்களுற்ற தாழ்மையை, நினைந்தோ, அவர்களை முன்னம் விரும்பிய வேந்தர்களின் பகையுண்டா மெனக் கருதியோ, அன்னவரை மணஞ்செய்து கொள்ள மனமிலனாயினன். பின், புலவர் பெருமான், **இருங்கோவேள்** என்பானுழைச் சென்றனர். அவனும், அவரை வரவேற்று, இம்மகளிர் யாவரென அறியும் கருத்தினனா யிருக்க, அன்னகாலையில் கபிலர், அவனை நோக்கி, 'போரின்கண் வென்றி மேம்படும் அண்ணலே! **புலிகடிமால்** என்பதொரு பெயரினை யுடையாய்! பொன்னுண்டாகும் பெரிய மலைக்குத் தலைவ! பகைவ ரஞ்சும் தானையும், கேடில்லாத நாடும் உடையோய்! இவர் யாரென்று வினவுவாயாயின், இவர் தாம், ஊரெல்லா வற்றையும் இரப்போர்க்கு வழங்கித், தேரினை ஏறுதற் கேற்பச் சமைத்த அணியுடன் முல்லைக்கு வழங்கிய நல்லிசை வாய்ந்த பறம்பிற்குத் தலைவனாகிய பாரியின் மகளிர். யான் இவர் தந்தையின் றோழனாதலால், இவர் என்னுடைய மகளிர். அந்தணனாகிய புலவன் யான் கொண்டு வந்தேன். நீயோ,

வடபக்கத்து முனிவனுடைய ஓம குண்டலத்திற் றோன்றி, நெடிய மதிலையுடைய துவராபதி யென்னும் படை வீட்டையாண்டு, நாற்பத்தொன்பது தலைமுறை தொன்றுபட்டு வந்த வேளிருள் வேளாயுள்ளாய். ஆதலால், யான் நினக்குத் தர, நீதான் இவரைக் கொள்வாயாக!' என்றனர். அவனும், பொய்யில் கேள்விப் புலவராகிய கபிலர், இங்ஙனம் கூறியதை மதியாது, சிறிதும் இரக்கமின்றி, அவர்களை மணந்து கொள்ள மறுத்து விட்டனன். கபிலரும், உள்ளம் நொந்து, அன்னவனை நோக்கி, 'நுந்தையின் உரிமையை நிறையப் பெற்ற புலிகடிமாலே! வேங்கையின் ஒள்ளிய பூக்கள் பரந்த பாறை, பெரிய புலியின் வரியையுடைய நாட்டையுடையோய்! **சிற்றரையம், பேரரையம்** என இருகூறு பட்டதும், பல்கோடி பொருளை நுங்கட்கு உதவியதுமாகிய அரையத்தினது கேட்டையும் கேட்பாயாக! அது கெடுதலுற்றது, நும்போலும் அறிவினையுடைய நும்குடியு ளொருவன் **கழாத் தலையார் என்னும்** புலவரை அவமதித்தமை யாலாகும். இவர், கைவண்மையை யுடைய பாரியின் மகளிர்; எவ்வியின் பழைய குடியிலே வாழ்க்கைப் படுவார்களாக; என்று கூறிய எனது தெளிவில்லாத புன் சொல்லைப் பொறுப்பாயாக! பெருமானே! நின்பால் விடைகொண்டேன்! நின்வேல் வெல்வதாக!' என்று வெறுப்புடன் கூறி, அவ்விடம் விட்டு அகன்றனர். அகன்றவர், வேறு செய்வகை யறியாராய், ஆன்றவிந்தடங்கிய கொள்கை நான்மறையாளர் பால் பாரி மகளிரை அடைக்கலமாக வைத்து விட்டு, மலைநாட்டில் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன், சிறந்த குணமும், மிக்க வண்மையும் உடையனா யிருக்கின்றான் என்பதறிந்து அவனைக் காணுமாறு சென்றனர். சென்று செல்வக் கடுங்கோவைக் கண்டு, 'வெற்றி பொருந்திய வேந்தே! பூசிப் புலர்ந்த சாந்தினையும், புலராத ஈகையினையும், மலர்ந்த மார்பினையும் உடைய எங்கோ வாகிய பாரியானவன் முழவு மண் புலரவும், இரவலர் இனையவும், மீண்டு வராத சேணுலகத்தை யடைந்தான். நீ என்னை அளிப்பாயாக வென்று இரப்பேனு மல்லேன். அஃதன்றி, உண்மை யொழியப் புகழ்ந்து சொல்வேனு மல்லேன். ஈத்ததற் கிரங்காமை முதலிய பாரியின் குணங்கள் நின்பாலும் உளவென்று உலகங் கூறும் நின் புகழை நின்பாலே தருதற்கு வந்தேன்.' என்று தொடங்கி, அவன் புகழினை ஓர் பத்துப் பாட்டினாற் பாடி யருளினார். கபிலரது செந் நாவினின்றும் போந்த தீஞ்சுவைச் செந்தமிழ்ப் பாட்டுக் களை வேந்தர் பெருமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் கேட்டனன். உள்ளத்தே கிளர்ந்தெழுந்த உவகைப் பெருக்கினி

*லாழ்ந்தனன். பரிசிலாக நூறாயிரம் பொற்காசு கொடுத்தும் அமையாது,* ***நன்றா*** *எனப் பெயரிய மலையின் மீதேறித், தன் கண்ணிற் கண்ட நாடெல்லாமும் கொடுத்தான். கபிலரது ஒண்மையையும், சேரமானது வண்மையையும் யாவரும் பாராட்டுவாராயினர். கபிலரும் பெரு மகிழ்வோடு சின்னா ளங்கிருந்து, செல்வக் கோவிடம் விடைபெற்றுப் போந்து, பார்ப்பனர் பாதுகாவலில் இருந்த பாரிமகளிரையும் உடன் கொண்டு திருக்கோவலூரரை யடைந்தனர்.*

*அடைந்து, தன் நண்பனாகிய திருமுடிக்காரியின் வழியில் வந்த, எழிலும், இளமையும் வாய்ந்த ஏறனை யார்க்குத் தாம் அழைத்து வந்த பூவை யனைய பாவையரை அளித்தனர். மன்னரெலாம் வியக்க, மாட்சிமிக்க பெரியோர்கள் வாழ்த்த, அன்னவர்தம் திருமணம் அளவிடற் கரிய சிறப்புடன் நடை பெற்றது.*[1]

*கபிலரும் சின்னாள் அங்கிருந்து, பின்பு, தம் நண்பனாகிய பாரியின் பிரிவுத் துன்பம் தம்மைப் பெரிதும் சுடா நின்றமையின், தாம் இவ்வுலகில் உயிர் வாழ்ந்திருக்க மனம் பொறாராய்ப், பாரியை நினைந்து 'பெரிய வண்மையினையுடைய பாரியே! நீயும் யானும் கலந்த நட்பிற்குப் பொருந்த, நீ செல்லுங்கால் யான் உடன் சேறல் முறைமையாகவும், அதற் கியையாது 'நீ ஈண்டுத் தவிர்க' எனச் சொல்லி, இங்ஙனம் மாறுபட்டனை யாதலின், யான் நினக்குப் பொருந்தினவனல்லே னாயினேன். அதனால், நீ எனக்கு உதவி செய்த காலங்களினும் என்னை வெறுத்*

1. தமிழ் நாவலர் சரிதை என்னும் புத்தகத்திலுள்ள சில பாட்டுக்களைக் கொண்டு, பாரிமகளிர், அங்கவை, சங்கவை என்னும் இருவரும் திருக்கோவலூரி லிருந்த தெய்வீகன் என்பானுக்கு ஔவையாரால் மணஞ்செய்விக்கப் பெற்றனர் என்று ஒருசாராரும்; பாரிமகளிருள் மூத்த வளை மலையற்கு மணம் புரிவித்து, இளையவளைக் கபிலர் தமக்கு வேண்டிய பார்ப்பார் சிலரது பாதுகாவலில் வைத்து வடக்கிருக்க, அவ் விளையவளைத் தெய்வீகன் என்னும் மலையமானுக்கு ஔவையார் பின்பு மணம் புரிவித்தனராகல் வேண்டும் என மற்றொருசாராரும் கூறுப. பிறர் பிறவாறும் கூறுப. ஔவையார் ஒரு பெண்ணுக்கு மணஞ் செய்வித்திருப்பினும் இருக்கலாம். அவ்வளவன்றிப் பாரி மகளிர் மணம் ஔவையாரால் நிகழ்த்தப் பெற்ற தெனத் துணிதற்கு இடனில்லை மண நிகழ்ச்சி பற்றித் தமிழ் நாவலர் சரிதையிற் காணப்படும் பாட்டுக்களெல்லாம் பின்னுளோர் புனைவேயாகும். அவை சங்க காலத்திருந்த ஔவையார் பாடியன என்று கொள்ளுதல் தகாது. அவற்றைச் சங்க காலத்துப் பாட்டுக்களோடும், வரலாற்றோடும் அறிவுடையோர் சீர் தூக்கி யறிதல் வேண்டும். பாரிமகளிர் மண வரலாற்றை ஔவையார், கன்றும் கனியுதவும், வேளிர் வரலாறு என்னும் புத்தகங்களிலும் செந்தமிழ் இரண்டாந் தொகுதியிலும் காண்க.

*திருந்தாயாதல் வேண்டும். எனினும், இப் பிறப்பில் நீயும் நானும் கூடி இன்புற்றிருந்தவாறு போல, மறுமையினும் நின்னொடு கூடி வாழ்தலை விதி கூட்டுவதாக!' என்று சொல்லிப் பெண்ணை யாற்றின் நடுவிலுள்ள மணற் பரப்பிலே வடக்கிருந்து, மூலக் கனலை மூட்டி யெழுப்பித் துறக்கம் புக்கனர்.[1] அதன் பின், அவரது வடிவு கல்லினாற் சமைக்கப்பட்டு, யாவரானும் வழிபடப் பட்டு விளங்குவதாயிற்று.*

1. வன்கரை பொருது வருபுனற் பெண்ணைத்
தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத் தியலு முத்தமிழ்க் கபிலன்
மூரிவண் டக்கைப் பாரிதன் னடைக்கலப்
பெண்ணை மலையற் குதவிப் பெண்ணை
யலைபுன லழுவத் தந்தரிக்ஷஞ் செல
மினல்புகும் வீடுபே றெண்ணிக்
கனல் புகுங் **கபிலக் கல்லது** புனல்வளர்
பேரெட்டான வீரட்டானம்
அனைத்தினு மநாதி யாயது. (திருக்கோவலூர்ச் சாசனம்)

இதன் பொருளைப் புறநானூற்றுக் குறிப்புக்களோடு மாறின்றி அமைத்துக் கொள்ளுதல் முறைமை யாகும்.

# 3. பெயர் முதலியவற்றின் ஆராய்ச்சி

## பெயர்க்காரணம்

கபிலர் என்னும் பெயரினர் பலர். திருமா லவதாரமாகக் கூறப்படும் முனிவர் கபிலரும், சாங்கிய நூலின் ஆசிரியராகிய கபிலரும், சங்கப் புலவருள்ளே தொல் கபில ரென்பாரும், இவ்வாராய்ச்சிப் பொருளாயுள்ள புலவர் பெருமானாகிய கபிலரின் வேறாக விளங்கினோராவர். சிவபெருமானுக்கு உரியதாகும் கபிலர் என்னும் பெயர், கடவுளர் பெயரை மக்கட்கு இட்டு வழங்கும் முறைப்படி, இவர்கட்கு இடப்பட்டது எனக் கொளல் வேண்டும். கபிலம் என்பது செந்நிறத்திற்கு ஒரு பெயராகலின், கபிலர் என்பது செந்நிறமுடைய சிவனார்க்கு உரிய பெயராயிற்று. 'மாஅயோயே' என்னும் பரிபாட்டில், சிவனது திருவுருவுடையரான உருத்திரர் பதினொருவரையும், 'பதினொரு கபிலர்' எனக் கூறி யிருப்பதும், 'உருத்திரரைக் கபில ரென்றார்; அவர் செய்யராதலின்.' என்று பரிமேலழகர் உரை தெளிந்திருப்பதும் காண்க.

## குலம்

இவரது குலம், தமிழ் நாட்டு ஐந்திணை மக்களினின்றும் வேறாகத் தொல்லோரால் வகுக்கப் பெற்ற நாற்பாலுள்ளே அந்தணர் குலமாகும். இவர் அந்தணரென்பது, 'புலனழுக்கற்ற வந்தணாளன்' (புறம் - 126) என மாறோகத்து நப்பசலையார் இவரைப் புகழ்ந்து கூறியிருத்தலாலும், இவர் பாரிமகளிரை விச்சிக்கோன், இருங்கோவேள் என்பவர்களிடம் கொண்டு சென்று, அவர்களை மணந்து கொள்ளுமாறு வேண்டிய பொழுது, 'யானே, பரிசிலன் மன்னுமந்தணன்' (புறம் - 200) என்றும், 'அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே' (புறம் - 201) என்றும் தம்மைக் கூறிக் கொண்டிருத்தலாலும் பெறப்படு கின்றது.

இனிப், பகவன் என்னும் அந்தணனும், கருவூர்ப் புலைச்சி யாகிய ஆதி யென்பவளும் மணந்து, நான்கு பெண் மக்களும், மூன்று ஆண் மக்களும் வெவ்வேறு ஊர்களில் பிறந்தன

ரென்றும், அவர்களுள் திருவாரூரிற் பிறந்த ஆண் குழந்தையை, அவ்வூரிலிருந்த பிள்ளையில்லாத பிராமணன் எடுத்துக், கபிலர் என்று பெயரிட்டு, வளர்த்துத், தக்க பருவத்தில் உபநயனஞ் செய்வித்தற்கு அவ்வூர் அந்தணர்களை அழைக்க, அந்தணரெல்லாம் ஒருங்கு கூடி, இப் பிள்ளை நம் மரபிற் பிறந்தவ னன்மையால் கூடாது என மறுத்து விட்டன ரென்றும், அது கேட்டுத் தந்தையார் வருந்தி நிற்பது கண்ட கபிலர், அம் மறையவர் கூட்டத்திற் சென்று, கன்மத்தாலன்றிப் பிறப்பினாலே சாதியென்ப தொன்றில்லை யென முடிவு செய்தன ரென்றும், **கபிலரகவல்** என வழங்கும் ஒரு பாட்டும், அதனை யொட்டிச் சில ரெழுதிய கதைகளும் கூறா நிற்கும். அவ் வகவல் கபிலர் கூறியதாகவே அது தெரிவிக்கின்றது. அது, கபிலர் பார்ப்பன மாந்தரை விளித்துச் சில வினாக்களை யெழுப்பிப் பின்பு, இளமையும் யாக்கையும் செல்வமும் நிலையற்றன வாகலின், அறத்தினை உடனே செய்ய வேண்டு மென்றும், கூற்றுவன் உயிர் கொண்டு செல்லின், புந்தி நைந்தழுவது தகாதென்றும், இறந்தவரைக் குறித்துப் பிராமணருக்குப் பொருள் கொடுப்பது பேதைமை யென்றும், பிற நாடுகளில் பார்ப்பார் இல்லை யென்றும், இந் நாட்டிற்றான் பார்ப்பார் நால்வகை சாதியை நாட்டி விட்டன ரென்றும், பெற்றமும், எருமையும் முதலிய வெவ்வேறு சாதியின் ஆண் பெண் மாறிக் கலந்து கருப் பெறாமை போலன்றி, மக்கள் கருவுயிர்த்த லுண்டாகலின், மக்களெல்லாரும், ஒரு வகையினரே யென்றும், வசிட்டர், சக்தி, பராசரர், வியாசர் என்போர் பிறப்பில் இழிந்தோராகக் கூறப்படினும், ஒழுக்கத்தால் மாதவராகி வயங்கின ரென்றும், பகவனுக்கும் ஆதிக்கும் பிறந்த மக்களில், உப்பை ஊற்றுக் காட்டில் வண்ணா ரகத்திலும், உறுவை காவிரிப் பூம்பட்டினத்தில் சான்றா ரகத்திலும், ஔவை பாண ரகத்திலும், வள்ளி மலைச் சாரலிலும், வள்ளுவர் மயிலாப்பூரில் பறைய ரகத்திலும், அதிகமான் வஞ்சி நகரில் அதிகன் இல்லிலும் வளரா நிற்க, யான் திருவாரூரில் அந்தணர் வளர்க்க வளர்ந்தே னென்றும், குலமும் ஒன்றே, தெய்வமும் ஒன்றே யெனவுணர்ந்து, புலையுங் கொலையும் தவிர்ந்து, இரப்பவர்க் கிட்டு வாழ வேண்டு மென்றும், சிறப்பும் சீலமு மல்லது, பிறப்பு நலந்தரா தென்றும் அவர்கட்குக் கூறுவதாக அமைந்துளது. கபிலர் மற்றை ஆறு பிள்ளைகளும் போன்று, பிறந்த அக்கணத்திலே செய்யுளியற்றும் அறிவு பெற்றவராகலின், வேறு வேறிடத்திற் பிறந்து வளர்ந்த அப்பிள்ளை களையும், பிற நாட்டியல்புகளையும், பன்னூற்

கருத்துக்களையும் ஒருங்கு உணர்ந்து கொண்டனர் போலும்! இதிற் கூறப்பட்டுள்ள நீதிகளிற் சிற்சில யாவரும் ஒத்துக் கொள்ளற் பாலனவே. வேறு சில கொள்கைகள் நேர்மையானவை அல்லது, தவறானவை யென்று யாம் இங்குக் கூறத்துணிந்திலம். அவை நேர்மையுள்ளவே யெனினும், சங்கப் புலவராகிய கபிலருடைய கொள்கையல்ல என்பது தேற்றம். இது சங்கப் புலவர் பாட்டு என்பதற்கு யாதொரு சான்றும் இல்லை. சான்றோர் பாட்டுடன் சேர்த்து எண்ணத்தகும் நடைப் பெருமை முதலியன இதன்கட் சிறிதும் இல்லை. சில தொன்னூற் கருத்துக் களையும், தொடர்களையும், ஓரோவழி அமைத்திருப்பதே இதிற் காணப்படும் அழகாகும். இப்பாட்டிற் கூறப்படும் எழுவர் வரலாறும், முதற் குறளிலுள்ள 'ஆதி பகவன்' என்னுந் தொடரைத் திருவள்ளுவரது தாய் தந்தையரின் பெயரெனத் திரிபு படக் கருதிக் கொண்ட ஒருவனது சூழ்ச்சித் திறனால் விளைந்த புனைந்துரையே அன்றி வேறல்ல. தன் கொள்கையினை உலகில் வெளிப்படுத்தற்கு ஏற்ற பெற்றியாக இக்கதையினை ஆக்கிக் கொண்டதே அவனது சூழ்ச்சித் திறனாகும். கபிலரது ஊர் பாண்டி நாட்டுத் திருவாதவூர் என்று பழைய திருவிளையாடல் கூறுவதற்கு மாறாகச், சோணாட்டுத் திருவாரூர் என்றும், அதியனது ஊர் தகடூர் எனப் பழைய நூல்கள் கூறுவதற்கு மாறாக, வஞ்சி என்றும் இவ்வகவல் கூறுவது பிழையாகும். அதியர் குடி என்னும் பழங்குடியிற் றோன்றி, வள்ளலாக விளங்கிய **அதியமான் நெடுமான் அஞ்சி**யென்னும் சிற்றரசனையும், அவனைப் பல பாட்டுக்களாற் புகழ்ந்து பாடிப், பரிசில் பல பெற்றுப், பலவூர்களிலும் திரிந்து, வாழ்நாள் நடத்திய ஔவை யென்னும் தொன் மூதாட்டியையும் உடன் பிறந்தார் எனக் கூறுதற்கு அறிவுடையோர் எங்ஙனம் ஒருப்படுவர்? ஔவையார், கபிலர், அதியமான் என்னும் மூவரும் ஒருகாலத்தினர் என்ற வளவு உண்மையாகக் கொள்ளலாம். வள்ளுவர், அக் காலத்தோ, அதனின் முற்காலத்தோ விளங்கினராவர். இவ்வாற்றால் [1] ஆதி பகவன் என்னும் பெயர்களும், ஔவையும் , அதியமானும் ஒருங்கு கேட்கப்பட்டமை போன்ற சில செய்திகளும், பற்றுக் கோடாகக் கொண்டு, இக்கதை புனைந்துரைக்கப்பட்ட தென்றறிக. இஃது இப்பெற்றித் தாகலின், இதனை விடுத்துப் புறப்பாட்டுக்களின் சான்று கொண்டு, கபிலர் அந்தணராவரென அறுதியிடுதலே ஏற்புடைத்தாகும்.

1. ஆதி பகவன் என்னும் பெயரை விடுத்து, அறிவில்லாத சண்டாளப் பெண் என்றும், யாளிதத்தன் என்னும் முனிவன் என்றும் ஞானாமிர்தம் என்ற நூலின் உரை கூறுகின்றது.

## சமயம்

திருவிளையாடல் முதலிய புராணங்களிலிருந்து இவர் சைவ சமயத்தவர் என்று கொள்ளப் படுகின்றது. இவரே யன்றிச், சங்கப் புலவர் பலரும் சைவரென்றே புராணங்களும், வேறு சைவ நூல்களும் கூறாநிற்கும். 'பொய்யடிமை யில்லாத புலவர்' என்று ஆளுடைய நம்பிகள் திருத்தொண்டத் தொகையுட் கூறியது சங்கப் புலவர்களையே யெனப் பின்வந்த பெரியார் பலருங் கொண்டனர். நம்பியாண்டார் நம்பி, தாமியற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியில், பொய்யடிமை யில்லாத புலவரைக் குறித்து,

> **தரணியிற் பொய்ம்மை யிலாத்தமிழ்ச் சங்கமதிற் கபிலர்**
> **பரணர்நக் கீரர் முதனாற்பத் தொன்பது பல்புலவோர்**
> **அருணமக் கீயுந் திருவால வாயரன் சேவடிக்கே**
> **பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே.**

என்று கூறியிருத்தலுங் காண்க. பதினொராந் திருமுறையிலுள்ள மூத்த நாயனார் திருவிரட்டை மணி மாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி என்னும் பிரபந்தங்கள் மூன்றையும் அருளிச் செய்த கபிலதேவ நாயனார் இவரே யென்னின், இவரது சமயம் சைவமென்பதிற் சிறிதும் ஐயுறவின்று! சங்க நூல்கொண்டு பார்க்கு மிடத்தும், இவரியற்றிய **இன்னாநாற்பது** என்னும் நூலின் கடவுள் வாழ்த்தில், 'முக்கட் பகவ னடிதொழா தார்க்கின்னா' என்று முதற்கட் சிவபிரானைக் கூறி யிருப்பதும், புறநானூற்றில், இவர், 'புல்லிலை யெருக்கமாயினு முடையவை, கடவுள் பேணா மென்னா' என்று சிவபிரானைக் குறிப்பான் உணர்த்தும்படி, அவர் சூடும் எருக்கம் பூவை யெடுத்துக் கூறி யிருப்பதும், இவரது சமயம் சைவமென்று கருதச் செய்கின்றன. இவர் இன்னா நாற்பதின் கடவுள் வாழ்த்தில், சிவபிரானை யடுத்துப் பலராமன், கண்ணன், முருகவேள் என்னும் இவர்களைக் கூறியிருப்பது, இவரது பொது நோக்கினையும், அதற்கு இடங் கொடுத்துள்ள சைவ சமயத்தின் விரிந்த கொள்கையையும் புலப் படுத்துவதாகும். சங்கத்துச் சான்றோர் பலரும் இன்னணம் பொது நோக்குடைய ரென்பதும், அவரெல்லாம் இந் நான்கு கடவுளரையும் இவ்வியல்பானே போற்றி வந்துள்ளார்க ளென்பதும் அவர்களியற்றிய பாட்டுக்களானே அறியலாகும். நக்கீரர், புறத்தின்கண் இந் நால்வரையும் இம்முறையே கூறி, இவர்களை,

'ஞாலங்காக்கும் கால முன்பிற், றோலா நல்லிசை நால்வர்' என்று கூறியிருப்பதுங் காண்க. கபிலர் நற்றிணை முதலியவற்றிலும் இக்கடவுளரை யெடுத்துக் கூறியுள்ளார். குறிஞ்சிக் கலியில் இலக்குமிப் பிராட்டியாரையும் எடுத்தியம்பி யுள்ளார்.

## பெருமை

இவ் வாசிரியரது கல்விப் பெருமையை, இவரியற்றிய பாட்டுக்களானே நன்கு அறியலாகும். சங்கத்தார் தொகுத்த எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு என்னும் மூன்று வகுப்பிலும் இவருடைய பாட்டுக்கள் உள்ளன. எட்டுத் தொகையுள், பரிபாட லொழிந்த ஏழனுள்ளும், இவரியற்றியன காணப் படுகின்றன. பரிபாடல் எழுபதில், இருபத்திரண்டு செய்யுட்களே இப்பொழுது வெளி வந்திருத்தலின், அதனுள்ளும் இவர் பாட்டு இல்லை யெனத் துணிந்து கூறலமையாது, பன்னூறு புலவர்கள் பாடிய செய்யுட்களில் இவர் பாடியன ஏறக்குறையப் பதினொன்றில் ஒரு பங்காக இருத்தலும், அவை ஒவ்வொரு தொகையிலும் சேர்ந்திருத்தலும், இவரது பாட்டியற்றும் பெருமையையும், நன் மதிப்பையும் நன்கு விளக்குகின்றன. இளங்கோவடிகள், கம்பர் முதலாயினார் போன்று, இவ்வாசிரியர் தொடர்நிலைச் செய்யுள் இயற்றி யிருப்பாரேல், இவரது பெருமை யாவருள்ளத்தும் இப்பொழுதையினும் நன்றாகப் பதிக்கப் பட்டிருக்கும். தமிழுலகு இதனினும் மிகுதியான பயனையும் எய்தியிருக்கும். எனினும், இவரியற்றிய **குறிஞ்சிப் பாட்டும், குறிஞ்சிக் கலியும்** இயற்கை வளங்களை யெடுத்துரைப்பதில் நிகரற்றனவாய்த், தொடர் நிலைச் செய்யுளின் ஓரளவான பயனை அளிக்கவல்லன என்பதும் தேற்றம். தமிழ்ச் சுவையறியாதிருந்த ஆரிய வரசன் பிரகத்தனுக்கு, இவர் குறிஞ்சிப் பாட்டியற்றித் தமிழ் அறிவுறுத்தினர் என்பதிலிருந்து, தமிழின்பால் இவருக்கிருந்த பெரும்பற்றும், ஏனோரும் தமிழினை யறிந்து இன்புற வேண்டுமென்னும் இவரது பெரு விருப்பமும், தமிழின் சுவை யறியாதோரும் அறிந்து புலவராம்படி தெருட்டவல்ல இவரது பேராற்றலும் நன்கு விளங்குகின்றன. நச்சினார்க்கினியர், சேனாவரையர், பரிமேலழகர் முதலிய உரையாசிரியன்மா ரெல்லாம் ஆறாம் வேற்றுமைச் செய்யுட் கிழமைக்குக் **'கபிலரது பாட்டு'** என்று உதாரணம் காட்டியுள்ளார்க ளென்றால், அங்ஙனம் சான்றோர் பலர்க்கும் எடுத்துக்காட்டாக முன்னிற்றற் குரிய இவர் பாட்டுக் களின் அருமை, பெருமைகளை எங்ஙனம் அளவிட்டுரைக்க

வல்லேம்? இவ்வாறு புலமையிற் சிறந்து விளங்கிய இவ் வாசிரியர், அருளும், அன்பும் முதலிய சிறந்த குணனெல்லாம் ஒருங்கமையப் பெற்றவராயும் இருந்தனர். அக்காலத்துப் புலவ ரெல்லாரும் வாய்மையையே அணியெனப் பூண்டு விளங்கின ரென்றால், இவர் அவ்வாய்மைக்கே அணியெனத் திகழ்ந்தா ரென்னலாம். இவரது பாட்டியற்றும் வன்மையையும், வாய்மையையும், மனத்தூய்மை யையும், புகழ் மேம்பாட்டையும் சங்கத்துச் சான்றோர்களே ஒருங் கொப்பப் புகழ்ந்து கூறியுள்ளார்கள்.

***' உலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசை***
***வாய்மொழிக் கபிலன்,'*** *(அகம். 78)*

என்று புலவரேறாகிய நக்கீரனார் புகழ்ந்து கூறினார்.

***' அரசவை பணிய அறம்புரிந்து வயங்கிய***
***மறம்புரி கொள்கை வயங்குசெந் நாவின்***
***உவலை கூராக் கவலையி னெஞ்சின்***
***நனவிற் பாடிய நல்லிசைக் கபிலன்'*** *(பதிற்றுப்பத்து - 85)*

என்று பெருங்குன்றூர்கிழார் பாடினர்.

***தாழாது***
***செறுத்த செய்யுட் செய்செந் நாவின்***
***வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்*** *(புறம்-53)*

என்று பொருந்திலிளங்கீரனார் பாடினர்.

***' நிலமிசைப் பிறந்த மக்கட் கெல்லாம்***
***புலனழுக் கற்ற வந்த ணாளன்***
***இரந்துசெல் மாக்கட் கினியிட னின்றிப்***
***பரந்திசை நிற்கப் பாடினன்.'*** *(புறம்-127)*

என்றும்,

***' பொய்யா நாவிற் கபிலன்.'*** *(புறம்-174)*

என்றும் மாறோக் கத்து நப்பசலையார் பாடினர்.

இங்ஙனம் புலவரெல்லாம் போற்றும் புலமையும், சான்றாண்மையும் உடையராய இவர்பால், அக்காலத்து வேந்தர்களும், வள்ளல்களும் எவ்வளவு மதிப்பு வைத்திருத்தல் வேண்டும்? பறம்பிற் கோமானாகிய வேள்பாரி, இவரை ஆருயிர்த் துணையாகக் கொண்டொழுகினமையே, இவர்பால் அவ்வள்ளல் வைத்த பெரு மதிப்புக்குச் சான்றாகும். சேரமான்

செல்வக் கடுங்கோவாழியாதன் என்னும் வேந்தர் பெருமான், இவர் பாடிய பத்துப் பாடல்களுக்குப் பரிசிலாக நூறாயிரம் காணம் கொடுத்த தன்றி, ஓர் மலை மீதேறிக் கண்ட நாடெல்லாம் கொடுத்தான் என்றால், அவ்வரசன் இவர் பால் வைத்த மதிப்பினை அளவிடலாகுமோ? மாந்தரஞ்சேரலிரும்பொறை என்ற சேரர் பெருமான், இப்புலவர் பெருந்தகை தமது காலத்தில் இல்லாது போனமைக்கு மனங் கவன்று, 'தாழாது, செறுத்த செய்யுட் செய்செந் நாவின், வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன், இன்றுளனாயின் நன்றுமன்' என்று இரங்கிக் கூறினன். இது கேட்ட பொருந்திலிளங் கீரனார் என்ற புலவர், அவ்வரசனைப் பாடுங்கால் இதனைக் கொண்டு மொழிந்தனர்.

இன்னணம் புலவரும், மன்னரும் புகழமைந்த இவர் தொல்லாணை நல்லாசிரியரும் ஆவர். இது, தமிழினை மதியாது கூறிய குயக்கொண்டான் பெரும் பிறிதுறுமாறு, நக்கீரர் தாம் பாடிய அங்கதப்பாட்டினுள்,

> **' முரணில் பொதிய முதற்புத்தேள் வாழி**
> **பரண கபிலரும் வாழி,'**

என்று, அருந்தவக் கொள்கை அகத்தியனாரொடு ஒப்பவைத்து வாழ்த்தி, இவரது ஆணை பிழையாமை காட்டினமையாற் றெளியப்படும்.

## காலம்

கடைச் சங்க காலத்தையும், அக்காலத்து விளங்கிய அரசர், வள்ளியோர், புலவர் என்பாரிற் சிற்சிலரது காலத்தையும் இதற்கு முன் ஆராய்ந்தார் பலர். அன்னாருடைய கொள்கைகள், தம்மில் ஒன்று பட்டனவும், வேறுபட்டனவுமாய்ப் பல திறப்பட்டுள்ளன. விரிவு கருதி அவற்றையெல்லாம் எடுத்துக் காட்டா தொதுக்கி, ஓர்வழியால் கபிலரது காலத்தை இங்கு ஆராய்ந்து காண்பாம்.

சைவசமய குரவர்களாகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கர சரும் ஒரு காலத்தினரென்பதும் சிறுத்தொண்ட நாயனாரும் அப்பொழுதிருந்தவரே யென்பதும் தேவாரம், பெரியபுராணம் முதலியவற்றால் நன் கறியப்பட்டவை சிறுத்தொண்டர், அக்காலத்து நரசிம்மவர்ம பல்லவ வேந்தனுக்குப் படைத் தலைவராய்ச் சென்று, வாதாபி என்னுமிடத்தில் இரண்டாம் புலிகேசி என்னும் சளுக்கிய மன்னனை முறியடித்து வந்தனர். நரசிம்மனும் வாதாபிகொண்ட நரசிம்மன் எனப் பெயரெய்தினான். இச்செய்தி,

**மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்**
**தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்**
**பன்மணியு நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையு**
**மின்னனவெண் ணிலகவர்ந்தே யிகலரசன் முன்கொணர்ந்தார்.**

என்று பெரியபுராணத்துக் கூறப்பட்டது. மகேந்திரவர்மன் புதல்வனாகிய வாதாபி கொண்ட நரசிம்மவர்மனின் காலம், கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி எனத் தெரிதலால், திருஞான சம்பந்தரும் அக்காலத்தவ ரென்பது கூறாதே யமையும். திருநாவுக்கரசராகிய அப்பர், அப்பொழுது ஆண்டின் முதிர்ந்தோ ராகலின், ஆறாம் நூற்றாண்டி னிறுதியும் அவர்க்குரியதே யாகும். இனி, ஒரு சாரார், பாண்டியன் நெல் வேலிவென்ற நெடுமாறனும், நந்திபோதவர்மன் அல்லது நந்திவர்மனும் ஒருகாலத்தவ ரென்றும், நந்தி போதவர்மன் காலம் கி.பி. 710 முதல் 760 வரை என்று சாதனங்களாற் கருதப்படுதலின், பாண்டியன் நெடுமாறன் காலமும் அவ்வேந்தனைச் சமணிலிருந்து சைவ சமயத்திற் றிருப்பிய திருஞானசம்பந்தர் காலமும் அதுவே யாகவேண்டு மென்றும் கூறுவர். இது, சிறுத்தொண்டர் நரசிம்மவர்மன் காலத்தவ ரென்னும் உறுதியான சான்றுடன் மாறுபடுதலின் நந்தி வர்மனோடும், அவன் சேனாபதியாகிய உதயேந்திரனோடும் போர் புரிந்த அரிகேசரி மாறவர்மனும் வேறு, நெடுமாறனும் வேறு என்று கொள்ள வேண்டும். நெடுமாறன், மாறவர்மனுக்கு அறுபது எழுபது ஆண்டின் முன்விளங்கினோன் என்க.

இனி, கடைச் சங்கமானது, இந் நாயன்மார் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளின் முன்னர் நிகழ்ந்ததாகும். காலத்தை வரையறுத்தற் குரிய கருவிகளில், அக்காலத்துச் செய்யுணடைப் போக்கும் ஒன்று. சங்கச்செய்யுள்களுக்கும் தேவாரத்துக்கும் உள்ள நடை வேற்றுமையோ பெரிதாகின்றது. இஃதொரு புறமிருக்க, இவ் விருவேறு காலங்களின் சேய்மையைக் குறிக்கும் வேறு சான்றுகள் இங்கே காட்டப்படும். திருநாவுக்கரசு நாயனார், 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி நற்கனகக் கிழிதருமிக் கருளினேன்காண்' என்று இறையனார்க்கும் நக்கீரனார்க்கும் வாது நிகழ்ந்தமை குறித்திருத்த லொன்றே, தமிழ்ச் சங்கமானது நாயன்மார் காலத்திற்குச் சிறிதேனும் முற்பட்டதாமென்று நாட்டப் போதிய தாகும். சங்கப் புலவர் களாற் பாடப் பெற்ற முடியுடை வேந்தரும், சிற்றரசரும் மிகப்பல ராகவும், அவர்களுள் ஒருவரேனும் சைவத்தின் இரு விழிகளான

நாயன்மார் காலத்திற்கு அண்மையி லேனும் இருந்தனரெனத் தெரியவில்லை. கோச்செங்கட்சோழர், திருக் கோயிற்றிருப்பணி புரிந்து, சைவத்தைப் போற்றிய திருத் தொண்ட ராகலின், நாயன்மார் பதிகத்து எடுத்தோதும் பேறு பெற்றுள்ளார்.[1]

இவர் சிவபிரானுக்குத் திருக்கோயில் பல சமைத்தமையை, 'எண்டோ ளீசற் கெழின்மாட மெழுபது செய்துலகாண்ட செங்கணான்' என்று திருமங்கை யாழ்வாரும் கூறியுள்ளார். சம்பந்தர் காலத்தின் முன்பு தொட்டுச் சுந்தரர் காலத்தின் பின்னருங் கூடச் சோணாடு பல்லவரது ஆட்சியிற்றானே யிருந்தது. அக்கால மெல்லாம் ஆற்ற லிழந்திருந்த சோழ மன்னர் சிலர் சேர, பாண்டி நாடுகளை யடைந்து, அவ் வேந்தர்களோடு ஒத்து வாழ்ந்து வந்தனர் என அறியப்படுகின்றது. சம்பந்தர் காலத்தின் முன்னரே பல்லவ ஆட்சி சோணாட்டில் நிலைத்து விட்ட தென்பது, காவிரிப்பூம் பட்டினத்திற் பல்லவனாற் கட்டப் பெற்றமையின், **பல்லவனீச்சரம்** எனப் பெயர் பெற்ற திருக்கோயில் சம்பந்தரது பதிகம் பெற்றிருத்தலால் அறியலாகும். சுந்தரமூர்த்தி நாயனார், 'மண்ணுலகங் காவல் பூண்ட, வுரிமையாற் பல்லவர்க்குத் திறை கொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும், பெருமையாற் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே' என்று பாடுதலாலும், சேரமான் பெருமாணாயனார் புராணத்துச் சேக்கிழார் கூறும் சில குறிப்புக்களாலும், பிறவற்றாலும் சுந்தரர் காலத்தில் சோணாடு பல்லவ ஆட்சியி லிருந்த தென்பதும், சோழன், சேர, பாண்டி நாடுகளைச் சார்ந்திருந்தன னென்பதும் அறியலாகும். பல்லவரிற் சிற்சிலர் சமண, பௌத்த மதங்களைத் தழுவி யிருந்தனர். சிற்சிலர் சைவ, வைணவங்களைச் சார்ந்து செங்கோலோச்சி வந்தனர். திருத் தொண்டத் தொகையிற் கூறப்பட்ட சிவனடியார்களில் பல்லவ அரசர்களும் உள்ளனர். இங்ஙனம் சோணாட்டை யடிப்படுத்துத், திறமையுடன் ஆட்சி புரிந்து, நாயன் மாராலும், ஆழ்வார்களாலும் புகழப் பெற்ற பல்லவர் காலத்திற்கும் கடைச் சங்கத்திற்கும் இயைபு இருந்திருப்பின், அவர்கள் சங்கப் புலவர்களால்

---

1. கோடடைந்த மால்களிற்றுக் கோச்செங்க ணாற்கருள்செய்

சேடடைந்த செல்வர் வாழுஞ் சேய்ஞலூர் மேயவனே

(திரஞானசம்பந்தர், திருச்சேய்ஞலூர்ப்பண்)

புத்தியினாற் சிலந்தியுந்தன் வாயினூலாற் பொதுப்பந்தரது விழைத்துச் சருகான் மேய்ந்த, சித்தியினா லரசாண்டு சிறப்புச்செய்யச் சிவகணத்துப் புகப்பெய்தார்.

(திருநாவுக்கரசர், திப்பாசூர்த் திருத்தாண்டகம்.)

எத்துணைப் பாட்டுக்கள் பெற்றிருத்தல் வேண்டும்? சங்கப் புலவருக்கோ பல்லவரென்ற பெயரும் தெரிய நேர்ந்திலது.

இனி, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் காலத்தில் தமிழ்நாடு முழுதும் சமண, பௌத்த மதங்கள் பரவி யிருந்த தன்றிச் சமண, பௌத்தர்களுக்கும் சைவ, வைணவர்களுக்கும் இடையில் மதப் போராட்டங்கள் நிகழ்ந்த செய்தி உலக மறிந்தது. கடைச்சங்க நாளிலோ, புகார், மதுரை போன்ற தலைநகர்களில் பௌத்த, சமணக்கோட்டங்களும், பள்ளிகளும் நிறுவப்பட்டு, அம்மதங்கள் பரவுதற்கான செயல்கள் செய்யப்பட்டு வந்தன என்று அறியப் படினும், தமிழரசர் யாரும் அக்கொள்கைகளை மேற்கொண்டன ரில்லை; தமிழ்ப் புலவர்களும் அன்னர். சேரன் செங்குட்டுவனுக்குத் தம்பியாராகிய இளங்கோவடிகளும், சாத்தனாரும் முறையே சமண, பௌத்தக் கொள்கைகளை விரித்துரைத்தார்க ளெனினும், அவர்கள் சைவ, வைணவக் கொள்கைகளையும் பாராட்டி யிருத்தலின், எம் மதத்தினும் அவர்கட்கு வெறுப்பில்லை யென்பது பெறப்படும். எத்துணையோ பல அரசர்களையும், வள்ளல்களையும் பற்றிப் பன்னூறு புலவர்கள் பாடிய பாட்டுக்களைத் தொகுத்துள்ள எட்டுத்தொகை, பத்துப் பாட்டுக்களில் ஓரிடத்தேனும் சமண, பௌத்தக் கொள்கை காணப்படவில்லை. இன்ன பல காரணங்களால் கடைச்சங்க மானது திருஞானசம்பந்தர் காலத்திற்குச் சில பல நூற்றாண்டுகளின் முன்னர் நிகழ்ந்திருக்க வேண்டுமென்பது வெள்ளிடை மலைபோல் விளங்க நிற்பவும், இவற்றை யெல்லாம் ஓராது, கடைச்சங்கம் எட்டாம் நூற்றாண்டில் நிகழ்ந்த தென்றும், ஒன்பதாம் நூற்றாண்டில் நிழ்ந்த தென்றும், தம் மனம் போனபடி கூறுவார் சிலரும் உளர் என்க! இனி திருநாவுக்கரசர், தமது தேவாரத்தில், 'நரியைக் குதிரை செய்வானும்' என்றும், 'மணியார் வையைத் - திருக்கோட்டி னின்றதோர் திறமுந் தோன்றும்' என்றும், 'குடமுழ நந்தீசனை வாசகனாக் கொண்டான்' என்றும் பாடியிருத்தலால், அவர்க்கு முற்காலத்தவ ரென்றும், மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டில் விளங்கியவ ரென்றும் கருதப்படுகிற திருவாத வூரடிகள், கோவையாரில், 'சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தை யுள்ளும் உறைவா னுயர்மதிற் கூடலி னாய்ந்தவொண்டீந் தமிழின், றுறை' என்று கூறியிருப்பது, அடிகள் காலத்தின் முன்னரே கூடலிற் றமிழ்ச் சங்கம் நடந்த தென்பதை விளக்க வல்லது. ஒருக்கால் அடிகள் பிற்காலத் தவரென நாட்டப் படினும், அது தமிழ்ச் சங்கத்தின் பழைமையை விலக்குதற் குரிய தாகாது.

இனி, இவ்வாற்றால் மூன்றாம் நூற்றாண்டின் முற்பட்டது என நிறுவப்படும் கடைச் சங்கத்தில் விளங்கிய கபிலரது காலம் யாதென ஆராய்ந்து துணிதற்குச் சிறந்த கருவியாகவுள்ளன சிலப்பதிகாரமும், இலங்கைச் சரித்திரங்களும் ஆகும். சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயிலெடுத்து வழிபட்ட நாளில், அங்கு வந்திருந்த மன்னர்களில், 'கடல்சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்' ஒருவன் என்றும், அவன் கண்ணகிபால் வரம் பெற்றுச் சென்று, இலங்கை யிலும் நங்கைக்கு விழாச் செய்தான் என்றும், சிலப்பதிகார வரந்தரு காதையாலும், உரை பெறு கட்டுரையாலும் அறியப்படுகின்றது. இலங்கைச் சரித்திரங் களில், கயவாகு என்னும் பெயருடையார் இருவருளரென்றும், அவருள் முதற் கயவாகுவே சிலப்பதிகாரத்திற் கூறப்பட்டவ னென்றும் சரித வல்லுநர் யாவரும் ஒரு படித்தாகத் துணிகின்றனர். இக் கயவாகுவின் காலம், மகா வம்சம் கூறுகிறபடி, கி. பி. 113 - 135. ஆகும் என்றே கொண்டனர், 'ஆயிரத் தெண்ணூறு ஆண்டு களின் முந்திய தமிழர்' என்னும் நூலியற்றிய வி. கனக சபைப் பிள்ளை முதலியோர். திரு. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், எம்.ஏ., 'மகா வம்சம் கி. பி. 113 - 135 என்று கூறும்' எனக் கூறித், தம்முடைய கொள்கையாக, 'முதற் கயவாகுவின் ஆட்சிக் காலம் கி. பி. 179 - 201 ஆகும்' என்று கூறியுள்ளனர்.[1] திரு. கே. ஜி. சங்கரையர், கயவாகுவின் காலம் கி. பி 154 - 176 என்று கூறுவதோடு, கோவலனிறந்தது 157 - என்றும், கண்ணகிக்குக் கோயி லெடுப்பித்து விழாவியற்றியது 160 - என்றும், சோதிடக் குறிப்பு முதலிய பல ஆதரவு கொண்டு விளக்குகின்றனர்.[2] இப்பொழுது இவ்விறுதிக் கொள்கையினை வைத்துக் கொண்டு, மேல் ஆராய்ச்சி நிகழ்த்ததும். செங்குட்டுவன் அரசுவீற்றிருந்த காலம் ஐம்பத்தைந்து ஆண்டு என்று பதிற்றுப்பத்து, ஐந்தாம் பத்தின் பதிகத் திறுதிக் கட்டுரையால் விளங்குகின்றது. அவன் கண்ணகிக்குக் கோயி லெடுப்பித்த காலத்தில், அவனது ஆட்சியில் ஐம்பதியாண்டு ஆயிற் றென்பதும், அவன் பிறந்து ஏறக்குறைய எழுபதியாண்டு ஆக வேண்டு மென்பதும், மாடல மறையோன் செங்குட்டுவனை நோக்கி,

**[3] வையங் காவல் பூண்டநின் னல்யாண்**
**டையைந் திரட்டி சென்றதற் பின்னும்**

1. செந்தமிழ், தொகுதி – 4, பக்கம் – 525.
2. செந்தமிழ், தொகுதி – 15. பக்கம் – 585, 645.
3. சிலப்பதிகாரம் நடுகற்காதை.

*அறக்கள வேள்வி செய்யா தியாங்கணும்*
*மறக்கள வேள்வி செய்வோ யாயினை*

என்றும்,

*'நரைமுதிர் யாக்கை நீயுங் கண்டனை'*

என்றும் கூறியிருத்தலாற் றெளியப்படும். இவ்வாற்றால், செங்குட்டுவன் அரசுகட்டி லேறியது கி. பி. 110 - ஆம் ஆண்டென்று கொள்ளப்படும்.[1] படவே, அவன் தந்தையாகிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஐம்பத்தெட்டியாண்டு அரசு வீற்றிருந்தா னென்று பதிற்றுப் பத்தால் அறியப்படுதலின், அவன் அரியணை யேறியது கி. பி 52 - ல் என்று கொள்ளலாம். செங்குட்டுவனைப் பதிற்றுப் பத்தில் ஐந்தாம் பத்தாற் பாடிய பரணர் என்னும் புலவர் பெருமான், அவன் றந்தை யாகிய நெடுஞ்சேரலாதனும், சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும் போர்ப்புறத்துப் பொருது வீழ்ந்த காலையில் இரங்கிப் பாடிய பாட்டு ஒன்று புறநானூற்றில் காணப்படுகிறது. இவரே கரிகாலன் றந்தையாகிய உருவப்பஃறே ரிளஞ் சேட்சென்னியைப் பாடியிருத்தலோடு, கரிகாலன் மகளாகிய ஆதிமந்தியின் செய்தியைப் பலவிடத்துக் கூறுகின்றார். இவ் வாற்றால், சோழன் கரிகாலனும், செங்குட்டுவனும் ஒரு காலத்தவ ரென்று கருதலாம். எனினும், சிலப்பதிகாரத்தில் கரிகாலன் செய்திகள் இறந்த காலத்தவாகக் கூறப்பட்டிருத்தலும், மதுரைக் காண்டத்து இறுதிக் கட்டுரையில் நெடுஞ் செழியனையும், வஞ்சிக் காண்டத்து இறுதிக் கட்டுரையில் செங்குட்டுவனையும் கிளந்தெடுத்தோதிய இளங்கோவடிகள், புகார் காண்டத்து இறுதிக் கட்டுரையில் அரசர் பெயர் யாதும் கூறாது விட்டிருத்தலும், கரிகாலன் மகளாய ஆதிமந்தி, தன் கணவனைக் காவிரி அடித்துக் கொண்டு போகத், தான் புனலின் பின் புலம்பிச் சென்று, தன் கணவனை மீட்டும் எய்திய செய்தியைக், கண்ணகி, வஞ்சின மாலையுள், எடுத்துரைத் ததாகக் கூறுதலும், மணிமேகலையுள்ளும், அக்காலத்துப் புகாரி லாண்டவன் நெடுமுடிக்கிள்ளி யென்று கூறப் படுதலோடு, கரிகாலன் அவனுக்கு முற்பட்டவன் என்பது தோன்றக் கூறியிருத் தலும் ஆகியவற்றால், கரிகாலன் அக்காலத்து இருந்திலன்

1. சேரன் செங்குட்டுவன் என்ற நூலில் செங்குட்டுவன் ஐந்தாம் நூற்றாண்டினன் என்பதற்குக் காட்டிய காரணங்களெல்லாம் பின்பு முறையானே கண்டிக்கப்பட்டொழிந்தன. செந்தமிழ், தொகுதி – 15 – காண்க.

என்பது விளங்குதலின், செங்குட்டுவனது இளமையிலும், இமயவரம்பனது ஆட்சிக்காலத்திலும் அவன் விளங்கினான் எனல் பொருந்தும். இவ்வாற்றால், கரிகாலனது ஆட்சிக்காலம் கி. பி. 55 அல்லது 60 - க்கு மேல் 110 - க்கு உட்பட்ட காலம் எனக் கொள்ளல் வேண்டும். கயவாகுவின் காலமும், செங்குட்டுவன் காலமும் இன்னும் இருபது முப்பது ஆண்டுகளின் முன்பென்று காட்டப்படின், கரிகாலன் ஆட்சி கி. பி. 25 - க்கும் 40 - க்கும் இடைப்பட்ட காலத்தில் தொடங்கிற்றென்று கொள்ளலாம். இவ்வாறிருக்க, ஞானசாகரத்தில் எழுந்த 'திருக்குறளாராய்ச்சி' யென்னும் அரிய பொருளுரை, கரிகாலன் கி. மு. முதல் நூற்றாண்டினிடையில் அரசியற்றப் புகுந்தான் என்று கூறுகிறது.

அஃது அவ்வாறு கூறுதற்குக் காரணம், பதிற்றுப் பத்துப் பெற்ற சேரவரசர்களில், இமயவரம்பனுக்கு முன் பெருஞ்சேரலிரும் பொறையும், அவனுக்குமுன் செல்வக்கடுங்கோவாழியாதனும் முறையே அரசு புரிந்தார்களென்றும், கரிகாலனொடு பொருத பெருஞ் சேரலாதன், செல்வக்கடுங்கோவுக்கு முன் ஆண்டவ னென்றும் கொண்டமையே, மற்றும், அது, 'கரிகாற் பெருவளத் தானுக்கும் சேரன் செங்குட்டுவனுக்கும் இடையே ஒரு நூற்றாண்டு கழிந்தமை இவற்றாற் நன்கு தெளியப்படும்' என்கின்றது. செங்குட்டுவனைப் பாடிய பரணரே, கரிகாலன் றந்தையையும் பாடியிருக்கும் பொழுது, ஒரு நூற்றாண்டு எங்ஙனம் இடைப் பட்டிருத்தல் கூடும்? இமயவரம்பனும் செல்வக்கடுங்கோவும் வேளாவிக் கோமான்பதுமன் என்பவனுடைய மகளிரை மணஞ் செய்துள்ளார்களென்று பதிற்றுப்பத்தாற் றெரிதலின், அவ்விரு வரும் ஏறக்குறைய ஒரு காலத்தவ ரென்று கொண்டுவிடின், அவ்வாராய்ச்சியும் கரிகாலன் கி. பி. முதல் நூற்றாண்டினிடையில் விளங்கியவ னென்றே காட்டுவதாகும். 'முதலாவது கரிகாலன்' என்னும் அரிய உரை நூலும், இவ்வாராய்ச்சியையே தனக்குரித்தாகக் கொண்டு, 'கரிகாலன் கி. மு. முதல் நூற்றறாண்டின் இடைப்பட்ட காலத்து அரசு கட்டில் ஏறினவன்' என்று முடித்திருத்தலின், இதுவும் பிழையெனல் கூறவேண்டா.

இனி, உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னியைப் பாடிய பரணர், அவன் மகனுக்கு மகளாகிய ஆதிமந்தியின் கற்பு மேம்பாட்டைப் புகழ்ந்துரைத்தலானும், வேறுசில குறிப்புக் களானும், நெடுநாள் உயிர் வாழ்ந்திருந்தவரென்பது பெறப்படும். ஆதலின், பரணரது காலம் ஏறக்குறைய கி. பி. 50 - 140 ஆகுமெனக்

கருதல் அமையும். பரணராற் பாடப்பெற்ற அரசரும், குறுநில மன்னர் முதலாயினாரும் மிகப் பலராவர். அவர்களிற் சிலரை இங்கே குறிப்பிடுதல் இன்றியமையாதது. உருவப் பஃறேரிளஞ் சேட்சென்னி, வேற்பஃற டக்கைப்பெருநற்கிள்ளி, நெடுஞ்சேரலாதன், செங்குட்டுவன், வையாவிக்கோப்பெரும் பேகன், அதியமான் நெடுமான் அஞ்சி, ஆய், ஓரி, திதியன், நள்ளி, நன்னன் என்போர்.

இனி, அதியமான் அஞ்சியைப் பல பாட்டுக்களாற் பெரிதும் பாராட்டிய ஔவையார், **அஞ்சியைப்** பார்த்து[1], ‘அன்றும் பாடுநர்க் கரியை இன்றும் பரணன் பாடினன்’ என்று கூறியிருத்தலின், பரணரும் ஔவையாரும் ஒரே காலத்தவ ரென்பது பெறப்படும். அஞ்சியைப் பாடிய ஔவையார், அவன் மகன் பொகுட்டெழினியையும், சிறிது பிற்காலத்தவராகத் தெரிகிற **உக்கிரப்பெருவழுதி**, மாவெண்கோ, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்போரையும் பாடியிருத்தலால், அவர் நெடிது நாள் உயிர் வாழ்ந்தவ ரென்னுங் கொள்கை வலியுறு கின்றது. அவர், அதியமான் கொடுத்த நெல்லிக்கனி யுண்டு நெடிது நாள் வாழ்ந்தவ ரென்பது,[2] ‘நீயே தொன்னிலைப், பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட, சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா, தாதல் நின்னகத் தடக்கிச், சாதல் நீங்க வெமக்கீத் தனையே’ என்று அவரே அஞ்சியை நோக்கிக் கூறுதலாற் றெளியப் படும். இவ்வாற்றால், ஔவையார் கி. பி. 65 முதல் 165 வரையிலாவது வாழ்ந்தவராதல் வேண்டும்.

இனிக், ‘கபில பரணர்’ எனத் தொன்று தொட்டு வரும் வழக்கானே, கபிலரும், பரணரும் ஒரு காலத்தின ரென்றும், ஒத்த பெருமைய ரென்றும், ஒன்றிய கேண்மைய ரென்றும் கருதலாகும். வையாவிக் கோப்பெரும்பேகனால் துறக்கப்பட்ட கண்ணகி காரணமாக, அவன்பாற் சென்று, அவனுக்கு இரக்க முண்டாகும்படி பாடிய புலவர்கள் கபிலர், பரணர், அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் என்போராகலின், இவர்களெல்லாம் ஒரு காலத்தின ரென்பது தெளிவாகின்றது. இவர்களால் பாடப் பட்டோரும் ஏறக்குறைய ஒரு காலத்தினராதல் வேண்டும். செல்வக் கடுங்கோவைப் பாடிய கபிலர், மாந்தரஞ்சேரலிரும் பொறை இரங்கிக் கூறும்படி, அவனுக்கு முற்காலத்திலோ, அவனது இளம் பருவத்திலோ இவ்வுலகினை விட்டகன்றார் ஆகலின், அவரது காலம் கி. பி 50 முதல் 125 வரை என்று கொள்ளுதல் பொருந்தும்.

1. புறம் – 99 2.புறம் – 91.

இனி, அக்காலத்திற் றமிழகத்தின் நிலைமையைச் சிறிது ஆராய்ந்து நோக்கின், அது மற்றெந் நாட்டினும் சிறந்து விளங்கிற் றென்பது புலனாம். தமிழ்ப் பேரரசர்கள், 'அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம்' முதலியன எஞ்சாது விளங்கினார்கள். கரிகாற் பெருவளவன், நெடுஞ் சேரலாதன், செங்குட்டுவன், ஆரியப் படை கடந்த நெஞ்செழியன் முதலிய தமிழ் வேந்தர்கள், வடக்கில் இமயமலை காறுஞ்சென்று, ஆங்குள்ள வேந்தர்களை வென்று, திறை பெற்று, இமயத்தில் தம்முடைய புலியும், வில்லும், கயலும் பொறித்து, மீண்டார்க ளென்னின், அவர்களுடைய ஊக்கமும், வீரமும் அளவிடற்பால வாமோ? அன்றியும், அவர்கள் காடு திருத்தி நாடாக்கியும், நீர்நிலைகளைப் பெருக்கியும், மற்றும் பல புரிந்தும், குடி தழுவிக் கோலோச்சி வந்தமையால், மழை வேண்டுமளவு பெய்யா நிற்க, 'வேலி யாயிரம் விளையுட்டாக' என்னும்படி, நில னெல்லாம் தாங்கா விளைவு பெற்றிருந்தன. பண்டிகளாலும், கப்பல்களாலும், உள்நாட்டு வாணிகமும், புறநாட்டு வாணிகமும் நன்கு நடை பெற்று வந்தன. மற்றும், உலகப் பொது வாழ்க்கைக்கு வேண்டப் படுவனவாகிய நெய்வு, சிற்பங்களும், இரும்பு, வெண்கலம், செம்பு, பொன் முதலியவற்றின் தொழில்களும், பிறவும் மேம் பட்டிருந்தன. அரசராயினார், பல அரசியல் மன்றங்களமைத்து முறை செய்து வந்தனர். இவ்வாற்றால், மக்களாயினார், பசியும், பிணியும், பகையுமின்றி, யாவருடனும் கலந்து உறவாடி, யின்புற்று வந்தனர். முடியுடை வேந்தரும் சிற்றரசரும், தாம் தமிழ்ப் புலமையுடை யவராய் விளங்கிய தன்றித், தமிழ்ப் புலவர்கள் பால் ஆன்ற மதிப்புடையவராயும் இருந்தனர். கரிகாற் பெருவளவன், பட்டினப்பாலை பாடிய உருத்திரங் கண்ணனார்க்குப் பதினாறுநூறாயிரம் பொன் பரிசிலளித்தான். பதிற்றுப் பத்துப் பாடிய புலவர்களுக்குச் சேர மன்னர்கள் பன்னூறாயிரம் பொன் பரிந்தளித்து நாடும், பிறவும் நனி வழங்கினர். பாரி, பேகன் முதலிய வேளிர்குல வள்ளல்களும், அதியமான் முதலிய பிற வள்ளல்களும், மாரியன்ன வரையா வண்மையால் புலவர்களுக்குப் பொன்னணி யானையும், தேரும் அளித்துப் போற்றி வந்தனர். இவ்வாறு தமிழ்ப் புரவலர் மிக்கு விளங்கினமையின், தமிழ்ப் புலவரும் எண்ணிறந் தாராயினர். பெண் பாலாருள்ளும் பலர் புலமை சிறந்து விளங்கினர். அசை வில்லாத செழுந்தமிழ் வழக்கானது அயல் மொழி வழக்கினை வென்று விளங்கிற்று. மக்களெல்லாரும் தமிழமிழ் துண்டு, அறிவும், திருவும், ஆற்றலும் உடையராய், அறம், பொருளின் பங்களைப் பெருக்கி, வாழ்ந்து வந்தனர்.

## இடம்

*இவ்வாசிரியர் பிறத்தலாற் பெருமையெய்திய ஊர் யாதென்று பார்க்கின், திருவிளையாடற் புராணமானது, சங்கப்புலவர் நாற்பத்தெண்மரும் [1]பலவிடத் திருந்து, ஒரே காலத்து மதுரைக்கு வந்தனர் என்று கூறுதலின், அதுகொண்டு துணிதற்கு இடனில்லை. கபிலரகவல் என்னும் புத்தகம் கூறுவதும், முன்னரே பிழையென்று கடியப்பட்டது. பெரும்பற்றப் புலியூர் நம்பி யியற்றிய திருவிளையாடற் புராணத்து, வாதவூரடிகளுக்கு ஞானோபதேசஞ் செய்த திருவிளையாடலில்,*

***நீதியார் மதூக நீழல் நெட்டிலை யிருப்பை யென்றோர்***
***காதல்கூர் கவிதை பாடுங் கபிலனார் பிறந்த மூதூர்***
***சோதிசேர் வகுள நீழல் சிலம்பொலி துளங்கக் காட்டும்***
***வேதநா யகனார் வாழும் வியன்றிரு வாத வூரால்.***

*என்று கூறப்பட்டிருத்தலின், கபிலர் பிறந்தவூர், பாண்டி நாட்டி லுள்ள திருவாதவூர் என்னும் திருப்பதி யென்றே கொள்ளற் பாலது. மதுரையும், பறம்பும் முதலியன இவ்வாசிரியர் வதிந்த இடங்களாகும்.*

### கபிலரைப் பாடினோர்

*நக்கீரர், பெருங்குன்றூர்கிழார், பொருந்திலிளங்கீரனார், வெள்ளி வீதியார் என்போர் இவரைப் புகழ்ந்து பாடினோராவர்.*

### பாடப்பட்டோர்

*இவராற் பாடப்பட்டோர், சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன், பாரி, பேகன், மலையமான் திருமுடிக்காரி, ஓரி, நள்ளி முதலியோர்.*

### கபிலர் பாடியன

1. *குறிஞ்சிப் பாட்டு*
2. *குறிஞ்சிக்கலி*
3. *குறிஞ்சிக்குறுநூறு*
4. *நற்றிணை*

---

1. இது பாண்டிநாடு வற்கமுற்ற காலையில், புலவரெல்லாம் பிரிந்து சென்று மீண்டும் மதுரை யடைந்ததனைக் குறிப்பிப்பதும் ஆகலாம்.

*5. குறுந்தொகை இவற்றிற் சிற்சில பாட்டுக்கள்*

*6. அகநானூறு*

*7. புறநானூறு*

*8. பதிற்றுப்பத்தில் ஏழாம்பத்து*

*9. இன்னா நாற்பது*

*10. மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை*

*11. சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை*

*12. சிவபெருமான் திருவந்தாதி*

*13. கபிலம்.*

*இவையும், 'நெட்டிலை யிருப்பை' என்னும் தனிப் பாட்டும், திருவள்ளுவமாலையிலுள்ள 'தினையளவு' என்னும் வெண்பாவும் இவரியற்றியன வாகும்.*

# 4. குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி

மக்கள் அறிவு வளர்ச்சிக்கு இன்றி யமையாக் கருவியா யுள்ளது மொழி. தம் கருத்தைப் பிறர்க்கு அறிவிக்கவும், பிறர் கருத்தைத் தாம் அறிந்து கொள்ளவும், மொழிபோல் துணையாவது பிறிதில்லை. இவ்வாற்றால், மக்களியக்கத்திற்கும், ஆக்கத்திற்கும் கருவியாயுள்ள மொழிகளும் பலவாக வுள்ளன. அவ்வம் மொழிகளிலிருந்தே அவற்றை யுடைய தொல்லோர் களின் பண்புகளும் அறியப்படும். நம் தாய் மொழியாகிய தமிழானது இன்ன காலத்தில் உதித்தது என எவ்வாற்றானும் அறிய வாராத அத்துணைப் பழைமையும், திருத்தமும் உடையதாகும். தமிழ் மொழி, வழக்கு எனவும், செய்யுள் எனவும் இரு கூறுபட்டு இயங்குகின்றது. சாத்தா வா, நீ பொருளைத் தேடினாய், அவன் மிகப் பசித்தான், யான் சோறு கொடுத்தேன் என்றாற் போல, யாவரும் வழங்குதற் பொருட்டுக் கூறும் சொற்றொடர்கள் வழக்கு எனப்படும். இழிந்துளோர். பலவாறு சிதைவுபடக் கூறுவனவும் ஒருவாற்றால் வழக்கே யாயினும், அவை அறிவுடையோரால் மேற் கொள்ளப்படாவாகும். நல்லறி வுடையோரால் பல்வகைச் சொற்களாலும் அமைதி பெறச் செய்யப் படுவன செய்யுள் எனப்படும். பாட்டுக்களே யன்றிச், சூத்திரம், உரை முதலாயினவும், செய்யுள் என்னும் பெயரால், சூத்திரச் செய்யுள், உரைச் செய்யுள் என்று இங்ஙனம் பண்டு வழங்கின. யாம் இப்பொழுது செய்யுள் என்னும் பெயரைப் பாட்டுக்கே உரிய தாக்கிச் சூத்திரம் அல்லாதவைகளை உரை யெனவும், பாட்டு எனவும் இருவகைப் படுத்துக் கொள் கின்றோம். உரையினையும், பல்வகைப் படுத்துக் கூறுகின்றார் தொல்காப்பியனார். செய்யுட்களின் இடையே விரவி வரும் உரை சிலப்பதிகாரத்திற் காணப்படுவது. செய்யுள் அல்லது சூத்திரப்பொருளைத் தெளிவுறுத்தும் உரைகள் தமிழில் மிக்குள்ளன. யாதானு மொரு வரலாறு அல்லது உண்மை யினைச் செய்யுளின்றித் தொடர்ச்சியாய்க் கூறும் உரைநடையா னியன்ற நூல் ‘உரைநூல்’ என்று வழங்கற்குரியது. அத்தகைய நூல் பண்டைச் சான்றோர் செய்ததாக நமக்கு ஒன்றும்

கிடைத்திலது. உரைநடையானது, பயில்வாரது அறிவு நுணுகி நின்று ஆராய்தற் கேற்ற திட்பமும், கூறும் பொருளுக் கேற்ற ஓசையும் உடையதன்று ஆகலின், பாட்டுக்கள் போல, உணர்வினை யெழுப்பி, இன்பஞ் செய்வ தாகாது. ஓர் வரையறை யின்மையின், சிதைவின்றி நிலைபெறுவது மாகாது. எனினும், எளிதிற் பொருள் விளங்குவதாய்ச் சுருங்கிய அறிவினர்க்குப் பயன் றருவது உரை நடையே ஆகலின், ஒவ்வொரு மொழிக்கும் உரை நூல்கள் இன்றியமையாதன என்பதிற் றடையில்லை. அவ்வகையில் தமிழ் மொழி வளர்ச்சியுறா திருந்தது இரங்கத் தக்க தொன்றே.

தமிழ் மொழியிலுள்ள பாட்டுக்களின் மாட்சி அளவிடற் பாலன வல்ல. பிற மொழிச் செய்யுளை யெல்லாம் தமிழ்ச் செய்யுட்கள் வென்று விட்டன என்னலாம். நமது முன்னையோர் தம் நுண்ணறி வானும், உழைப்பானும் கண்டறிந்த அரும் பொருண் மணிகளை யெல்லாம் நமக்கு உதவுமாறு தொகுத்து வைத்த களஞ்சியங்கள் பாட்டுக்களேயாகும். பல்லாயிரம் ஆண்டுகளின் முற்பட்ட நம் பெரியோர், என்பு, தோல், நரம்புகளால் பாதிக்கப் பட்ட உடம்பினை விடுத்து, எழுத்து, அசை, சீர்களால் யாக்கப் பட்ட உடம்பினை யெடுத்து, நமக்கெதிரில் வீற்றிருக்க, நாம் அவர்களோடு அளவளாவியும், அவர்கள் கூறும் உறுதி மொழி களைக் கேட்டும், அறிவும், ஆண்மையும் உடையராய் இன்புற்றிருத் தலினும், பெறுதற்கரிய பேறு யாதுளது? எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளின் முன்பு விளங்கியிருந்து, பின் மாறுதலுற்று மறைந்து போன மலை, நிலன், கடல், யாறு முதலாயின வெல்லாம், புலவருடைய பாட்டுக்களில் தம் பண்டைய வுருவுடன் விளங்குதலைக் காணுமிடத்து, நமக்குண்டாகும் உணர்ச்சியை யாதென்று கூறலாகும்? உலக மென்னும் காட்சி மன்றத்தில் உயர்வற வுயர்ந்த ஒருவனால் காலந்தோறும் அமைத்து வைக்கப்படும் எண்ணில் பேதமான பொருள்களையும், அவற்றின் பண்புகளையும், பொறி களென்னும் வரைவு கோல் கொண்டு, உள்ள மென்னும் கிழியில் ஒழுங்குறத் தீட்டி வைத்த ஓவியராகும் நல்லிசைப் புலவர்கள், அவ்வோவியக் காட்சியில் உறைத்து நிற்குங்கால் உண்டாய வுணர்ச்சியே வடிவாக, அன்னவர்தம் செந்நாவினின் றெழுந்த பாட்டுக்களினும் நமக்கின்பம் விளைப்பன யாவை யுள? ‘ உருகிப் பெருகி யுளங்குளிர முகந்து கொண்டு, பருகற் கினிய பரங் கருணைத் தடங் கடல்’ போன்று, பருகும் தொறும் பருகுந் தொறும் வற்றாத பேரூற்றாய்க், கழி பேரினிமை சுரந்தூட்டுவன பாட்டுக்களேயா மென்க.

இக்காலத்தே பொருட்பொலிவு சிறிதுமின்றி, எதுகை, மோனை யமையச் சொற்களைத் தெற்றிவைப்பதே பாட்டென்று கருதிக் கொண்டிருப்பாரும் உளர். மடக்கும், திரிபுமாகச் சொற்களை அடுக்கி வைத்து, இரண்டொரு போலிப் பாட்டியற்றினாரைப் புலவர் வரிசையிற் சேர்த்தெண்ணுவாரும் உளர். அந்தோ! இவற்றுக்கெல்லாம் காரணம், பாட்டின் றன்மை இன்னதென்று அறியாமையேயாகும். தொல்காப்பியனார் கூறிய, 'நோக்கு' முதலிய இன்றியமையாச் செய்யுளுறுப்புக் களை யொழித்து விட்டுப், பிற்காலத்தார் யாப்பிலக்கணம் வகுத்ததும், பாட்டின்றன்மை யறியாது, பிழை நெறியிற் பிறர் செல்லுதற்கு ஏதுவாயிற் றென்க. இவற்றை யெல்லாம் ஒதுக்கிச், சுருங்கிய சொற்களில் ஆழ்ந்து அகன்ற பொருள்களை யுடையன வாய், இயற்கை நெறி வழாதனவாய், உணர்வினை யெழுப்பி, மெய்ப்பாடு தோற்றுவிக்கும் சான்றோர் செய்யுட்களையே, அறிவுடையோர் 'பாட்டு' என்று கொள்வாராவர். அத்தகைய பாட்டுக்கள் தாம் எண்ணிறந்தனவுள. அவற்றுள், 'கபிலரது பாட்டு' என ஆன்றோரால் எடுத்துக் காட்டும் பெருமை வாய்ந்த செய்யுட்டுறைகளில், அப்புலவர் பெருமானது அடித்துணையே புணையாகச் சென்று, கிடைக்கும் பொருள்களை வெளிப் படுத்தல் கருதி, முதற்கண் குறிஞ்சிப்பாட்டு என்னும் துறையிற் செல்லுகின்றாம்.

குறிஞ்சிப்பாட்டு என்பது, சங்கத்துச் சான்றோரால் செய்யப்பட்டு, அக்காலத்தே தொகுக்கப் பட்டனவாகிய [1]பத்துப்பாட்டுள் எட்டாவதாக வுள்ளது. இஃது, ஆரியவரசன் [2]பிரகத்தனை தமிழறிவித்தற்குக் கபிலர் பாடியது என்று, இப்பாட்டினது உரையிறுதியில் எழுதப்பட்டுள்ள தொடரால்

---

1. பத்துப்பாட்டுக்கள்– திருமுருகாற்றுப்படை பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன.

இதனை,

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி – மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து,

என்னும் வெண்பாவான் உளங்கொள்க. இப்பாட்டுக்கள் பத்திற்கும் நச்சினார்க்கினியர் உரை உளது.

2. யாழ்ப்பிரமதத்தன் என்றும் பிரதி வேற்றுமையுண்டு.

தெரிகின்றது. எனவே, ஆரிய வரசனாகிய பிரகத்த னென்பான் ஒருவன் தமிழ் நாட்டிற் போந்து, சிறிது தமிழ் பயின்ற துணை யானே, தமிழின் பெருமையில் ஐயுறவு கொண்டிருந்தான் எனவும், அதனை யறிந்த நல்லிசைப் புலவரும், புலனழுக்கற்ற அந்தணாளரும் ஆகிய கபிலர், அவனுக்குத் தமிழின் ஒப்புயர் வில்லா மாட்சியைத் தெரிவிக்க எண்ணி, இப்பாட்டினை யியற்றிக் கற்பித்தாரெனவும், இதனைக் கேட்ட ஆரிய வரசன் தமிழ்ச் சுவையில் ஈடுபட்டுத், தமிழினை மேன்மேலுங் கற்றுச் செய்யுளியற்ற வல்ல புலவனாயினான் எனவும் ஓர்ந்து கொள்ளல் சாலும். இவன் பாடிய பாட்டு ஒன்று குறுந்தொகையிற் காணப் படுவது, இவன் கற்று வல்லனாயினான் என்பதனை வலியுறுத்து வதாகும்.

இப்பாட்டு; 261 - அடிகளையுடைய அகவற்பா ஆகும். தமிழ்ச் செய்யுளின் ஓசை யமைதிக்குப் பா என்று பெயர். பாவை யுடைய செய்யுளும், ஆகுபெயரால் 'பா' என வழங்கப் படுகிறது. செப்பல், அகவல், துள்ளல், தூங்கல், எனச் செய்யுளோசை நான்கு வகைப்படும். செப்பலாவது, ஒருவன் கேட்ப, மற்றொருவன் மாறு கூறுவது போல், இடையிடை நின்று செல்லும் இயற்கை யோசையாம். அகவலாவது, ஒருவன் தான் கருதிய வாறெல்லாம் வரையாது கூற, இடையிடை நிற்றலின்றித் தொடர்பு பட்டுச் செல்லும் இயற்கை யோசையாம். துள்ளலாவது, இசை வேறு பாடு தோன்றத் துள்ளிச் செல்லும் செயற்கை யோசையாம். தூங்கலாவது, சீர்தொறும் நிறைத்து நின்றுசெல்லும் செயற்கை யோசையாம். செப்பலோசை யுடையது வெண்பா எனவும், அகவலோசை யுடையது அகவற்பா எனவும், துள்ளலோசை யுடையது கலிப்பா எனவும், தூங்கலோசை யுடையது வஞ்சிப்பா எனவும் கூறப்படும். இவை யன்றிச் செப்பலும், அகவலும் விரவிவருவது மருட்பா எனவும், செப்ப லோசையேனும், எல்லா வோசையுமேனும் பெற்றுக், கலிக்குரிய வுறுப்புக்களுடையதாய் வருவது பரிபாட்டு எனவும் கூறப்படும். இப்பாட்டு முழுதும் ஒரே தொடர்ச்சியாய்ச் செல்லும் அகவலோசை உடைத்தா யிருத்தலின், இஃது அகவற் பாவா மென்பது அறிக.

குறிஞ்சித் திணைக்குரிய பொருள் கூறுதலின், இதற்குக் குறிஞ்சிப்பாட்டு என்று பெயர் கூறினார். உலகத்துப் பொரு ளெல்லா வற்றையும், முதற்பொருள், கருப்பொருள், உரிப் பொருள் என மூவகைப் படுத்துக் கூறுவது தமிழ்நூல் வழக்கு. நிலனும் காலமும் முதற்பொருள் எனப்படும். நீர், தீ முதலிய

மற்றைப் பூதங்களும் நிலனென அடங்கும். பிற பொருளெல்லாம் இவற்றைச் சார்ந்து தோன்றுதலின், இவை முதற்பொருள் எனப்பட்டன. தேவர், மக்கள், விலங்கு, புள், மரம் முதலாயினவும், உணவு, செயல், பறை, யாழ் முதலாயினவும், கருப்பொருள் எனப்படும். நிலத்தினும், காலத்தினும் தோற்றுதலின், இவை கருப்பொருள் எனப்பட்டன. (கரு = தோற்றம்). அவ்வந்நிலத்து மக்கட்கு வேறு வேறாய்த் தோன்றி நிற்றலின், தெய்வமும் கருப்பொருளாயிற்று. மக்கள் எய்தற் பாலனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பன உரிப்பொருள் எனப்படும். உரிய பொருளாகலின் உரிப் பொருள் எனப்பட்டன. இவற்றை, அகப்பொருள், புறப்பொருள் என இரண்டாக அடக்கிக் கூறுவது தமிழ் நூன்முறை. இன்பம் அகப்பொருள். அறனும், பொருளும் புறப்பொருள். வீடு, அகம் புறம் இரண்டினும் அடங்கும். இன்பம், தானே யுணர்தலன்றிப், பிறர்க்கு இன்ன தன்மைத்தெனக் கூறலாகாமையின், அகம் என்றும், அறனும், பொருளும் பிறர்க்குக் கூறப்படுதலின், புறம் என்னும் பெயர் பெறுவவாயின, இன்பமும் பலவாயினும், ஒரு காலத்து ஒரு பொருளால் ஐம்புலனும் நுகரும் சிறப்புடைய காமவின்பமே இங்கு கொள்ளப்பட்டது. அவ்வின்பந்தானும், சுவை மிகுதி தோன்ற உலக நடையோடு ஒத்தலும், ஒவ்வாமையும் உடைய தாக்கிக் கூறப்படுகின்றது. உருவும், திருவும், பருவமும், குடியும், குணனும், அன்பும் முதலியவைகளால் தம்முள் ஒப்புமை யுடையராய தலைவனும், தலைவியும், பிணி, மூப்பாதிய வின்றி நுகரும் இன்பமே அகம் எனக் கூறப்படும் இன்ப மென்க.

அவ்வின்பத்திற்குக் காரணமாய ஒழுக்கம் அகத்திணை யெனப்படும். அது, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளை என எழுவகைப்படும். அறம், பொருளுக்குக் காரணமாய ஒழுக்கம் புறத்திணை யெனப்படும். அதுவும், வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்டிணை என எழுவகைப்படும். சிற்சில ஒப்புமை பற்றிக், குறிஞ்சி முதலிய அகத்திணை யேழுக்கும், வெட்சி முதலிய புறத்திணையேழும் முறையே இனமாக ஆசிரியர் தொல் காப்பியனார் கூறியுள்ளார். அகத்திணையுள், பெருந்திணையும், கைக்கிளையும் அல்லாத ஐந்துமே சிறப்புடையன. குறிஞ்சி யென்பது, கூடலும், கூடல் நிமித்தமும் ஆம். முல்லை யென்பது, பிரிவின் கண் ஆற்றியிருத்தலும், இருத்தல் நிமித்தமும் ஆம். மருத மென்பது, ஊடலும், ஊடல் நிமித்தமும் ஆம். நெய்தலென்பது, இரங்கலும், இரங்கல் நிமித்தமும் ஆம். பாலை என்பது,

பிரிதலும், பிரிதல் நிமித்தமும் ஆம். குறிஞ்சி முதலிய திணைகளுக்கு, முதற் பொருளாகிய நிலம், பொழுதுகளும், கருப் பொருளாகிய தெய்வம் முதலியவும் வேறுவேறு வகுக்கப் பட்டுள்ளன. குறிஞ்சிக்கு நிலம் மலையும், மலை சார்ந்த இடமும் ஆம். பெரும் பொழுது, ஐப்பசியும் கார்த்திகையும் ஆகிய கூதிர்ப் பருவமும், மார்கழியும், தையும் ஆகிய முன்பனிப் பருவமும் ஆம். சிறு பொழுது, அப்பருவங்களது இரவின் நடுக்கூறாகிய யாமம் ஆம். கருப்பொருள், முருகவேள் ஆகிய தெய்வமும், குறவர் முதலிய மக்களும், புலி முதலிய விலங்குகளும், மயில் முதலிய புட்களும், வேங்கை முதலிய மரங்களும், மற்றும் இந்நிலத்தினும், காலத்தினும் தோன்றும் பொருள்களும் பிறவும் ஆம். இவ்வாற்றால், இப்பாட்டின் கட் கூறப்படும் பொருள் இவை யாதல் வேண்டும் என்றறிக. இவற்றுள் உரிப்பொருள் இன்றேல் பொருட் பேறு இன்றாம் ஆகலின், அஃது ஒருதலையாகக் கூறப்படுவதாம். அதனைச் சிறப்பிக்கவே முதற்பொருள், கருப்பொருள்களும் கூறப்படும்.

இனி, இப்பாட்டில் உரிப் பொருளின் எப்பகுதி கூறப்படுவது எனவும், இது, யார், யாருக்கு, எப்பொழுது, எவ்வாறு, கூறுவதாக இயற்றப்பட்டுளது எனவும் முதற்கண் அறிந்து கோடல் வேண்டும். குறிஞ்சி முதலிய அக வொழுக்கமெல்லாம், களவு, கற்பு என இருவகைப்படுத்துக் கூறப்படும். இவற்றில் களவின்றிக் கற்பு நிகழுமா றில்லை யெனவும், களவே சிறப்புடைத் தெனவும் கூறுப. களவாவது, முற்கூறிய உருவும், திருவும் முதலியவற்றால் தம்முள் ஒப்புமை யுடையராய தலைவனும் தலைவியும், கொடுப்பாரும், அடுப்பாரு மின்றி, ஊழ் வகையால் தாமே யெதிர்ப்பட்டு இன்பம் துய்த்து வருவது. முதலில் இவ்வாறு ஒரு பொழிலில் எதிர்ப்பட்டுச் சேர்வது இயற்கை எனவும், அதன் பின் அவர்கள் பிரிந்து சென்று, முன் போன்று மீட்டும் அவ்விடத்தே கூடப்பெறின், அஃது இடந்தலைப்பாடு எனவும், பாங்கனாற் கூடப் பெறின், அது பாங்கற் கூட்டம் எனவும், தோழியாற் கூடப் பெறின், அது தோழியிற் கூட்டம் எனவும் கூறப்பட்டுக் களவு நால் வகைப்படும். பாங்கனும், தோழியும், தலைமக்கட்கு உயிர்போற் சிறந்தாராகலின், அவர்களறிவது பிற ரறிவதாகாது, தலைமக்க ளறிவதே போலும் என்க. இப்பாட்டு, இயற்கையும், பின்னிகழும் கூட்டங்களுக்கு நிமித்தமும் கூறுவது என்பர் நச்சினர்க்கினியர். இயற்கையின் பின்பு, தோழியிற் கூட்டம் நிகழ்ந்து வருங்கால், இரவுக்குறி யிடையீடு பட்டுத், தலைமகன் பன்முறை வறிதே மீளா நிற்ப, தலைவி ஆற்றாமை

பெரிதுடையளாய், உடல் மெலிவுறலானாள். தலைவியின் மேனி இளைத்து வேறு பட்டிருத் தலைக் கண்ட செவிலியானவள், இவ் விளைப்புக்குக் காரணமான நோய் இன்னதென அறியும் பொருட்டுக் குறி சொல்லுவாரை வினாவி, அவர்கள் தெய்வத்தா னாயிற்று எனக் கூறலின், தெய்வங்கட்குச் சிறப்புச் செய்து, பின்னும் நோய் நீங்காமை கண்டு வருந்துகின்றாள். அந்நிலையில், தலைவி, மேலும் ஆற்றாமை யுடையளாய், 'எமக்குள் நிகழ்ந்த இம் மன்றலை நாம் தாய்க்கு அறிவுறுத்தலால் பழியும் வருவதுண்டோ?' என்று தோழிக்கு உணர்த்த, அவள் செவிலிக்கு அறத்தொடு நிற்பதாக, இயற்றப்பட்டுள்ளது இப்பாட்டு. அறத்தொடு நிற்றல் என்பது, தலைவனுக்கும், தலைவிக்கும் நிகழ்ந்த கூட்டத்தை வெளிப்படுத்தல். இந்த நிலைமையில் இதனை வெளிப்படுத்தலே அறத்தொடு பொருந்திய செயலாகலின், இஃது அறத்தொடு நிற்றல் எனப்பட்டது. எனவே, இப்பாட்டிற்குத் திணை, குறிஞ்சி எனவும், துறை, தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல் எனவும் கொள்க. தோழியானவள், உயர் குடிப்பிறந்த தலைவியது களவொழுக்கத்தை வெளிப்படுத்தும் பொழுது, செவிலிக்குச் சின முண்டாகாவாறும், தலைவியிடத்ததாதல், தன்னிடத்ததாதல், தலைவனிடத்ததாதல், அவளிடத்ததாதல் சிறிதும் குற்றமின்றென அவளுணருமாறும், இங்ஙனம் நிகழ்ந்தது நல்வினைப் பயனே யெனத் தோற்றுமாறும், படைத்து மொழியும் திறப்பாடு பெரிதும் வியக்கத் தக்கதாகும். இப்பாட்டின் பொருளுணரவே, அது நன்கு விளங்கு மாகலின், ஈண்டு அதனைச் சுருக்கிக் கூறுகின்றாம்.

"தாயே! யான் கூறுவதனை விரும்பிக் கேட்பாயாக! நீ தான், ஒள்ளிய நெற்றியை யுடைய என் தோழியது இழையினை நெகிழச்செய்த பொறுத்தற்கரிய, நோயைக் கண்டு, அலமந்து, கட்டினாலும், கழங்கினாலும் அறிந்து குறிசொல்லுவாரை வினாவி, அவர் தெய்வத்தான் வந்த வருத்தம் என்றலின், பல்வேறு தெய்வங்களை வழிபட்டும், அதனாற் றீராமையின், இந்நோயை அறியாத மயக்கத்தை உடையையாய், வருந்தா நின்றாய். இவளோ, தனது நல்ல வனப்புக் குன்றவும், தோள் மெலியவும், கூறுதற்கு அருமையாலே தன் மனத்துள்ளே மறைத்திருக்கும், ஆற்றுதற்கரிய, நோயினைக் குறித்து யான் நெருங்கிக் கேட்கலுற்றபொழுது, என்னை நோக்கி, 'முத்தானும், மணியானும், பொன்னானு மியன்ற அருங்கலன் கெட்ட தாயினும், பின்னும் வந்து பொருந்தும், அஃதன்றிக், குணங்களின் அமைதியும், மேம்பாடும், ஒழுக்கமும் கெட்டால், உண்டாய

மாசுபோம்படி கழுவி, முன்போலப் புகழை நிறுத்தல், குற்றமற்ற அறிவினையுடைய முனிவர்க்கும் எளியதன் றென்று தொன்னூ லறிஞர் கூறுவர். யாங்கள் இருவேமும் ஆய்ந்த மன்றல் இதுவென, நாம் தாய்க்கு அறிவுறுத்தின், நமக்குப் புகழன்றிப், பழி வருவது முண்டோ? அஃதில்லையே. இங்ஙனம் வெளிப் படுத்த பின்பு, தலைவர்க்கே நம்மைக் கொடுக்க நேர்ந்தில ராயினும், நாம் உயிர் போந்துணையும் இவ்வருத்தத்தைப் பொறுத்திருப்பின், நமக்கு மறுமையினும் இக்கூட்டம் கூடுவ தொன் றாகுமே'. எனக் கூறி, ஆற்றரு நோயினையுடையளாய், மையல் நோக்கங் கொண்டு, செய லொழிந்து, அயர்ந்து, மெலியா நின்றாள். யானுந்தான், மாறுபட்டு அமரிலே மிக்குச் செல்லும் இரண்டு பெரிய அரசரைச் சந்து செய்விக்கும் தொழிலில் நின்ற சான்றோர் போல, நினக்கும், இவளது வருத்தத்திற்கும் அஞ்சும் இரண்டு பெரிய அச்சத்தாலே வருந்தா நின்றேன். கொடுப்பின் எல்லா வற்றானும் நன்றாகி முடிதலும், குடியும், குணமும், சுற்றத் துதவியும் எனு மிவற்றை ஒப்பித்துப் பார்த்துப் பலருடனும் எண்ணாமலும், நும்மையின்றியும், யாங்களே துணிந்த, உயிர்க்குப் பாதுகாவலான, இவ்வரிய மணம் முன்பு நிகழ்ந்த வாற்றை நீ நன்றாக வுணரும்படி கூறுதற் கமைந்தேன். அது கேட்டுச் சினவாதிருப்பாயாக! தாயே! நீதான், விளைந்த தினையின் கண் வீழும் கிளிகளை யோட்டி, மாலைப் பொழுதில் வருவீராக எனச் சொல்லி, எம்மை அனுப்புகையாலே, யாங்களும் சென்று, மரத்தினுச்சியில், இரவு காத்திருப்போன் பண்ணின புலி யஞ்சும் பரணிலே யேறிக், கவணும், தட்டையும் முதலியவற்றை முறை முறை கைக்கொண்டு, கிளிகளை யோட்டினேம். பின்பு, ஞாயிற்றின் வெம்மை மிகுகின்ற பகற் பொழுதிலே, வானிற்பறக்கும் பறவைகளெல்லாம் தாம் விரும்பும் சேக்கையிற் செல்லாநிற்க, யாங்கள், நெடிய மலையுச்சியி னின்றும் குதிக்கும் தெளிந்த நீரையுடைய, வெளிய துகில் போலும், அழகிய அருவியிலே, தவிராத விருப்புடன் மேலும் மேலும் விளையாடி, அதன் பின்பு, பளிங்கினைக் கரைத்துச் சொரிந்து வைத்தாற் போலும் சுனையிற் குடைந்து விளையாடுங் கால், எங்கள் மனத்திற்கு விருப்பமான பல பாடல்களைப் பாடினேம். ஆனபின், எமது பின்னிய கூந்தலின் நீரைப் பிழிந்து, ஈரம் புலர்த்தி, உள்ளிடம் சிவந்த கண்ணினேமாய். ஆம்பல், அனிச்சம், செங்கழுநீர், குறிஞ்சி, வெட்சி முதலிய பல்வகைப் பூக்களையும், மிக்க வேட்கையுடன் பலகாலும் திரிந்து பறித்து வந்து, தூய்தான அகன்ற பாறையிலே குவித்துப் பறவைகளின்

ஓசையாகிய பல்லியங்களை யுடைய மலைப் பக்கத்திற் புனத்தே, தெளிந்த இசையுடன் கூடிய சொற்களால் இடையிடை கிளிகளை யோப்பியும், புறவிதழ்களைக் களைந் தெறிந்து, ஒழுங்கு பெறக் கொய்து இயற்றிய 'தழை' யென்னும் உடையினை இடையிலே உடுத்தியும், பல்வேறுருவின் அழகமைந்த மாலைகளை எம்முடைய மெல்லிருங் கூந்தலில் அழகுபெறச் சுற்றியும், நெருப்புப் போலும் நிறத்துடன் விளங்கும் அழகிய தளிரை யுடைய அசோகினது தாது உதிர்கின்ற தண்ணிய நிழலிலே மேவியிருந்தேம். அங்ஙனம் இருக்கையில், ஆண்டு, ஓர் தோன்றல் பன்னிறமுள்ள பல்வகைப் பூக்களாலும் தொடுக்கப் பெற்ற தொடையலையும், வெளிய தாழை மடலிற் பொருந்தச் செய்த கண்ணியையும் சென்னியில் அழகுறச் சூடியும், பிச்சி மலராற் றொடுத்த ஒரு சரமாகிய மாலையைச் சுற்றியும், அசோகினது தளிரைத் தோளில் வீழ்ந்தசையும்படி ஒரு காதிலே செருகியும், சந்தனம் பூசப்பெற்று, அகன்று, உயர்ந்து விளங்குகின்ற செம் பொறியை யுடைய மார்பிலே தொன்று பட்டு வரும் சிறந்த அணிகலங்களோடு, நறிய மாலைகளைப் பொலிவுற அணிந்தும், நுண்டொழிலமைந்த கச்சினை உடையின் மேல் இறுகக் கட்டியும், கையிலே வில்லை யெடுத்து அம்புகளைத் தெரிந்து பிடித்தும், பொன்னாற் செய்த வீரக்கழல், பெயரும் பொழு தெல்லாம் திருந்திய அடியிலே ஏற்றிழிவு செய்து விளங்கும் படியாகப் போந்தனன். போந்தவன், அணுகுதற்கரிய வலியமைந்த பகைவரைப் புறங்கண்ட வீரர் போலே, செருக்கும், சினமு முடைய நாய்கள், இமையாத கண்ணினவாய், எம்மை வளைத்துக் கொண்டு மேன்மேல் நெருங்கி வருதற்கு யாங்கள் அஞ்சி, அடி தளர்ந்து, வருத்தம் மிக்க மனத்துடன், வேறு புலத்தேறச் செல்லா நிற்பதனைக் கண்ணுற்றானாய், மாறாய விடைகளையெல்லாம் பொரு தோட்டியதும், வேறு புலத்திருக்கும் புதிய ஆவினைக் காணலுற்றதுமாகிய ஏறு போல அழகு பெறத் தோன்றி, யாங்கள் அஞ்சுவதற்குத் தான் அஞ்சி, மென்மையும், இனிமையுமுடைய சொற்களை எமக்குப் பொருந்து மாறு சொல்லி, எம் கூந்தலையும், அழகையும் புகழ்ந்து, 'ஒள்ளிய தொடியும், மெல்லிய சாயலும், அழகிய உந்தியும், மதரிய கண்ணும் உடைய இளையீரே! என்னைத் தப்பி, இவ்விடத்துப் போந்த யானை முதலியவற்றைக் கண்டீரோ?' என வினாவினான். அதற்கு யாங்கள் மறுமொழி தந்திலே மாகையால், அவ்வாண்டகை நெஞ்சழிந்து, 'நீவிர் அவற்றைக் காட்டித் தாரீராயினும், எம்முடன் ஒரு வார்த்தை சொல்லுதலும் நுமக்குப் பழியாமோ?' எனச்

சொல்லி, வண்டு மூசும் பூக்களையுடைய தழைபரந்த கொம்பை முறித்துப் பரிக்கோலைக் கைகடந்த மதயானைபோல ஓச்சி, கல்லென்னும் ஓசைபடக் கத்தும் வேட்டை நாய்களின் கடுங் குரலை மாற்றி, யாங்கள் வார்த்தை சொல்லுவதோர் காலத்தைப் பார்த்து நின்றனன். அப்பொழுது, வேறு புனத்திலே காவலாளர்கள் கள்ளுண்டு காவன் மடிந்திருந்த வளவில், ஓர் வேழமானது புனத்தினைத் தின்று நொக்கி விடுகையினால், அவர்கள் வருத்தம் மிக்குத் தமது பாம்புபோலும் வில்லை நாணேற்றி, அம்பினை யெய்து, காடெல்லாம் கல்லென்னும் ஓசை பிறக்க, வாயை மடித்து வீளையோசை யெழுப்பி, அதனைப் புனத்தினின்றும் ஓட்ட, அக்களிறு மதச் செருக்கினை யுடைத்தாகி, உருமேறு போல முழங்கி, மரங்களை முறித்து, கையைச் சுருட்டி நிலத்தே யெறிந்து, கூற்றுவனைப்போல எங்கள் மீது கடுக வந்தது. யாங்கள், உயிர்கொண்டு பிழைப்பதோரிடம் அங்கு வேறுணரேமாகி, உலைவுற்ற மனத்துடன், உயிரினுஞ் சிறந்த நாணினைப் பாதுகாத்தலை மறந்து, வளைகளொலிக்கும்படி விரைந்து சென்று, அவனைச் சேர்ந்து, தெய்வமேறின மயில்போல நடுங்கா நிற்க, அவன் கடுவிசைப் பகழியை நிரம்ப வலித்து, அவ்வியானையின் முகத்தே யெய்தமை யால், அம்பு பட்டுருவின புண்ணி னின்றும் குருதியொழுகா நிற்க, அது, தன்னை மறந்து, ஆண்டு நிற்க லாற்றாது புறங்கொடுத் தோடிற்று. அதன்பின், யாங்கள், முருகவேளுக்கு வரை மகளிர் கைகோத் தாடுவது போன்று, கடம்பின் அரையினை நெருங்கச் சூழ்ந்த மாலைபோல், கைகோத்துக் கொண்டு, யாற்றின் பெருக்கிலே குதித்து விளையாட லுற்று, இடிகரையினின்ற வாழைபோலே, கால் தளர்ந்து, நீரிற் செல்ல லுற்றேமாக, அது கண்டு, விரைந்து வந்தெடுத்து, அழகிய மலை பொருந்தின நாட்டையுடையனான அவ்வாண்டகை, 'யான் நினது அழகிய நலத்தை நுகர்வேன்; நின்னை நீங்குவேனெனச் சிறிதும் அஞ்சாதே.' என்று சொல்லி, ஒளி பொருந்திய நுதலினைத் துடைத்து, நெடுநாள் இக்கள வொழுக்கம் நிகழ வேண்டுமென நினைத்து, என் முகத்தை நோக்கிச் சிரித்தான். அப்பொழுது, தனக்கு இயல்பாகிய நாணமும், அச்சமும் வந்து தோன்றுகையால் இவள் தன்னிடத்து நின்று விரைந்து நீங்கவும் விடானாய், அங்ஙனம் நின்ற நிலையிலே கையாலணைத்து, இவள் மார்பு தன் மார்பிலே யொடுங்கும்படி தழுவா நின்று, பின், இவளுள்ளக் கருத்து மேல் வரைந்து கொண்டு இல்லறம் நிகழ்த்துதலா யிருக்குமென உட்கொண்டு

இவளை நோக்கி, ‘ஆருயிர்ப்பாவாய்! பலரும் வந்துண்ணுமாறு கதவு அகலத் திறந்து கிடக்கும் வாயிலையுடையதாய், மிடாச் சோற்றை வருவார்க் கெல்லாம் வரையாம லிடுகின்ற, விழாக் கொண்டாடினாற் போலும் செல்வத்தை யுடைய மனையகம் பொலிவு பெறும்படி, பைந்நிண மொழுகிய நெய்ம்மிக்க அடிசிலை நீ இடா நிற்க, குற்றமில்லாத உயர்குடிப் பிறந்தோர் தமது சுற்றத்தோடே விருந்துண்டு எஞ்சியுள்ள மிச்சிலை நீயும் யானும் உண்ணுதல் மேன்மையுடைத்து.’ என்று சொல்லி, இல்லறம் தங்களைக் கரையேற்றுவதாகத் தெளிவித்து, மலை யுச்சியிலுறையும் முருகவேளை வாழ்த்தி, வணங்கி, அவன் முன்பு வஞ்சினங் கூறி, அழகிய இனிய அருவி நீரைக் குடித்தனன். அதனால் இவள் நெஞ்சு பொருந்தியிருக்க, களிற்றினால் தரப்பட்ட கூட்டத்தைத் தேவர்களும் விரும்பும் பூக்கள் நிறைந்த சோலையில் அன்றைப் பகற் பொழுதெல்லாம் போக்கி, ஞாயிறு மலையின்கண் மறைய, மாலைப்பொழுது வருதல் கண்டு, ‘இலங்கிழையீர்! நும்முடைய சுற்றத்தார் நுமது நேரிழை முன்கை பற்றி எமக்குத் தர, நாடறியும் நன் மணத்தினைப் பின்பு நிகழ்த்துவேம். யாம் இக்கள வொழுக்கத்தாற் பெறும் பேரின்பம் நுகர்தற்குச் சிறிது நாள் இங்ஙனம் ஒழுகுவது பற்றி நெஞ்சு கலங்காதிருப்பீராக’ என்று அருளுடைத்தாகிய நன் மொழியை இவள் வருத்தந் தீரும்படி சொல்லி, ஆவைப் புணர்ந்த ஏறு போலே விடாமல் எம்முடன் கூட வந்து, முழவோசை யறாத நம் ஊர் வாசலில், பலரும் நீருண்ணுந் துறையில் எம்மை நிறுத்தி மீண்டு போனான். அது முதலாக, அன்றுபோலும் விருப்பத்தோடே, எந்நாளும் இரவுக்குறியில் வருதலைத் தனக்கியல்பாக வுடையன். அங்ஙனம் வரும் போதெல்லாம், ஊர் காவலர் கடுகிக் காத்தா ராயினும், சினத்தினை யுடைய நாய் குரைத்த தாயினும், நீ துயிலுணர்ந்தாயாயினும், நிலவு வெளியாக எறித்த தாயினும், மூங்கிலை யொத்த மென்றோளிற் பெறும் இன்றுயில் பெறாது போவன். அங்ஙனம் வாளா பெயரினும் அதற்கு வெறுத்தலைச் செய்யான். அவன்றான் இளமைப் பருவத்தைக் கடந்ததுமிலன். செல்வச் செருக்கால் எந்நாளும் தன் குலத்திற்குரிய நற்குணங் களின் நீங்கியது மிலன். அலர் முதலியவற்றால் அச்சத்தை யுடைய இவ்வூரின்கண், தனக்குப் பொய்யா யிருக்கின்ற இரவுக் குறியில் வருந்தன்மையை, இஃதொழுக்க மன்றென்று நினைத்து, அவன் வரைந்து கொண்டு இல்லறம் நிகழ்த்துதலே நல்லொழுக்க மென்று துணிகையினாலே, இவளுடைய பெரிய மதர்த்த குளிர்ந்த கண்கள், பெருந்துளி யெறிந்து மழை

பெய்யப்பட்ட மலர் போல் அழகு கெட்டு, இமை சோர்ந்து, ஈரத்தினையுடையவாய்க் கலங்கா நிற்கும். அதற்குமேலே, இவள், அவர் வருகின்ற மலையிடம் புலியும், யாளியும் முதலிய இடும்பை செய்வனவுடைய வாயிருக்கு மென்று நினைக்குந் தோறும், வலையிலகப்பட்ட மயில் போலே தனது நலம் போம்படி மெலிந்து, கண்ணில் அரித்து வீழ்கின்ற நீர் நாள் தோறும் மார்பிலே துளிப்பக் கலங்கா நிற்கும். இது காண் நல்வினை நிகழ்ந்த வண்ணம், என்றாள்''.

தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்குங் காலத்துத் தலைவனை எளியனாகக் கூறுதலும், உயர்த்துக் கூறுதலும், அவனது வேட்கை மிகுத்துரைத்தலும், அவன் தம்மைக் கைப்பற்றினமைக்குக் காரணமிட்டுரைத்தலும், தலைப்பட்டமை கூறுதலும், படைத்து மொழியாது உண்மை கூறுதலும் என்று இவ்வாற்றால் உணர்த்துதற் குரியள், என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறிய இலக்கணம் இப்பாட்டில் இடையிடை அமைந்திருத்தல் காண்க.

இவ்வாறு கூறக்கேட்ட செவிலியானவள், பின்பு நற்றாய்க்கு அறத்தொடு நிற்கும். நற்றாயும் தந்தைக்கும், தன்னையர்க்கும் அறத்தொடு நிற்கும். பின், தலைமகன் தமரொடும் போந்து, தலை மகளை வரைந்துகொண்டு, இல்லறம் நிகழ்த்தா நிற்பன் என்க.

இனி, களவொழுக்கம் குற்றமுடைய தன்றோ எனின், இதுதான், எவ்வாற்றானும் ஒப்புமையுடையா ரிருவர் மாட்டுத் தெய்வத்தான் நிகழ்ந்த தாகலானும், கந்தருவர் வழக்கத்தோடு ஒத்த தாகலானும், பின்பு இவ்விருவருமே நாடறிய நன் மணஞ் செய்து கோடலானும் குற்றமுடைத்தாகாது. தலைவனுக்கும் தலைவிக்கும் உள்ள தலையன்பு இவ்வொழுக்கத்தில் சிறந்து காணப்படுதலின், இது குணமுடையது மாகின்றது. இன்பத்திற்குக் காரணம் அன்பே யாகலின், மக்களுள் தலைவராயினாரிடத்து நிகழும் அன்பினை விளக்கி, அதன் காரியமாகிய இன்பத்தைக் காட்டுவது ஆன்றோர் கருத்தாம். இறையனாரும் முதற் சூத்திரத்து, 'அன்பி னைந்திணைக் களவெனப் படுவது' என்றும், இறுதிச் சூத்திரத்து, 'களவு கற்பெனக் கண்ணிய வீண்டை யோருள நிகழன்பி னுயர்ச்சிமேன' என்றும் கூறிவைத்துத் தலைமக்க ளொழுக்கம் அன்பினைச் சார்ந்து நிகழ்வதென்று காட்டி யருளினார். தலைவற்கும் தலைவிக்கும் இடையே தோன்றும் இவ்வன்பே, பின் எல்லா வுயிர்களிடத்தும் அன்பு செய்தற்கும், உலகெலாமாகி, வேறாய், உடனுமாயிருக்கும் முழுமுதற் கடவுளிடத்து

அன்பு செய்தற்கும், வித்துப் போன்றுள்ள தென்பது உய்த்துணர் வார்க்கு விளங்கும்.

இனி, 'பொய்யும் வழுவும்' மிக்குள்ள இக்காலத்திற்கு இவ்வொழுக்கம் பொருந்திய தன்றாமெனினும், மக்கள் அறிவு வரப்பெற்று, ஒருவரை யொருவர் அறிந்து, மனம் பற்றிய பின்னரே மணஞ் செய்தல் தக்கதெனவும், சிறுமியர் மரப்பாவைக்கு வதுவையாற்றுதல் போல் இளங் குழவிகட்கு மணம் முடித்தல் சிறிதும் தகாதெனவும் அறிக.

பெண்டிர்க் குரிய கடமை பலவற்றுள்ளும் முதலாக நிற்பது, அவர்கள் கற்பினின்றும் வழுவாது தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதலே. 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற - சொற்காத்துச் சோர்விலாள் பெண்.' என்று வள்ளுவனாரும் அதனையே முதலாக வைத்துக் கூறியுள்ளார். கற்பென்னும் ஒழுக்கமே அவர்கட்குச் சிறந்த அணிகலனாவது. உயர்குடிப் பிறந்த பெண்டிர் தம் கற்பினை நிலைநாட்டுதற்கு உயிரினை யிழக்க வேண்டு மெனின், அவ்வுயிரினையும் ஓர் துரும்பெனக் கருதி விடுவர்.

> [1] **உயிரினுஞ் சிறந்தன்று நாணே நாணினுஞ்**
> **செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்**
> **தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு.**

எனத் தொன்று தொட்டு வரும் தமிழ் நாட்டுப் பெண்டிரது கற்பின் திறத்தை ஆசிரியர் தொல்காப்பியனார் சிறந்தெடுத்துக் கூறுதலுங் காண்க. இப்பாட்டின் கண், தலைவியானவள், இரு முதுகுரவர் கொடுப்ப மணம் நிகழாவிடினும், ஊழால் தன்னை யுற்றானுக்கே தான் உரிய ளென்னும் உறுதிப் பாடுடையளாய், இதனை வெளிப்படுத்தா தொழியின், தாய் தந்தையரால் தன் கற்பிற்கு ஏலாதன கருதப்பட்டுத் தனக்கும், குடிக்கும் வடுவுண்டா மென்று அஞ்சி தோழியை நோக்கி, 'விலையுர்ந்த அணிகலன் கெடினும் மீண்டும் வந்து கூடும்; சால்பு முதலிய குன்றின் உண்டாய பழியைப் போக்கிப் பழைய புகழை நிறுத்தல் முனிவர்க்கும் அரிது என்பர் நூலோர்' எனவும், 'எமக்குள் நிகழ்ந்த இம்மன்றலைச் செவிலிக்கு அறிவுறுத்தலே நன்றாம்' எனவும், 'அதன்பின் தாய் தந்தையர் நம்மைத் தலைவர்க்கு அளிக்க நேர்ந்திலராயினும், இவ்வருத்தத்தைப் பொறுத்திருந்து உயிர் நீப்பின், மறுமையினும் இக்கூட்டம் நமக்கு இயைவதாகும்' எனவும் கூறினாளாக,

1. தொல்காப்பியப் பொருளதிகாரம் – 113.

*' முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை*
*நேர்வருங் குரைய கலங்கெடிற் புணரும்;*
*சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்*
*மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்*
*ஆசறு காட்சி யையர்க்கு மந்நிலை*
*யெளிய வென்னார் தொன்மருங் கறிஞர்;*
*இருவேம் ஆய்ந்த மன்ற லிதுவென*
*நாமறி வுறாலிற் பழியு முண்டோ?*
*ஆற்றின் வாரா ராயினு மாற்ற*
*ஏனையுல கத்து மியைவதால் நமக்கென'*

என்று கூறப்பட்டுள்ள தொடர்கள், எத்துணை உயரிய கருத்தைத் திட்பமுற விளக்கி மகிழ்வுறுத்துகின்றன பார்மின்! 'கலங்கெடிற் புணரும்' என்ற எடுத்துக்காட்டால், மக்கட்கு அஃது இல்லா தொழியினும், உயிர்க்கு அணியாய ஒழுக்க முடையாரே யாவரானும் புகழப்படும் மேன்மையுடைய ரென்பதும், அஃதுடைத்தாயிருப்பினும் ஒழுக்க மிலாதவர் போக்குதற்கரிய பழியினையே எய்துவரென்பதும் பெறப்படுகின்றன. இத்துணை அறிவும் உறுதியும் வாய்ந்த பெண் மக்களைப் பெற்றிருத்தலினும் ஒரு நாடு பெறுதற்குரிய பேறு யாதுளது?

இனி இப்பாட்டின்கண்,

*' குன்றுகெழு நாடனெம் விழைதரு பெருவிறல்*
*உள்ளத் தன்மை யுள்ளினன் கொண்டு*
*சாறயர்ந் தன்ன மிடாஅச் சொன்றி*
*வருநர்க்கு வரையா வளநகர் பொற்ப*
*மலரத் திறந்த வாயில் பலருணப்*
*பைந்நிண மொழுகிய நெய்ம்மலி யடிசில்*
*வசையில் வான்றிணைப் புரையோர் கடும்பொடு*
*விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை*
*நின்னோ டுண்டலும் புரைவ தென்றாங்கு*
*அறம்புணை யாகத் தேற்றி.'*

என இல்லற வியல்பு கூறப்பட்டுள்ளது. இது, தலைவியின் கருத்து வரைந்து கொண்டு இல்லறம் நிகழ்த்துதலா யிருக்குமென உட்கொண்ட தலைமகன், அவளை நோக்கிக் கூறிற்றாகத் தோழி கூறியதாகும். இதில், தலைவன்றன் மனையகம், பலரும் வந்து உண்ணும்படி கதவு அகலத்திறந்தே கிடக்கும் வாயிலையுடைய தென்றும், மிடாச் சோற்றை வருவார்க்கெல்லாம் வரையாமலிடு தலின், விழாக் கொண்டாடினாற் போலும் செல்வத்தை யுடைய

தென்றும் கூறியிருப்பது, தமிழ் மக்களது அறத்தின் மேம் பாட்டினை மலை விளக்காக்குகின்றது. 'படைப்புப் பல படைத்துப் பலரோ டுண்ணும், உடைப்பெருஞ் செல்வர்' எனப் புறத்திலும், 'புகழ்நிலைஇய மொழி வளர, அறநிலைஇய அகனட்டிற், சோறுவாக்கிய கொழுங்கஞ்சி, யாறு போலப் பரந்தொழுகி' எனப் பட்டினப் பாலையிலும் உணவளித்தலின் சிறப்புக் கூறியிருத்தலுங் காண்க. இவற்றால், பலருடனாக உண்ணுதலே செல்வத்துப் பயனாமென்பதும், இது பெற்றாரே செல்வராமென்பதும் பெறப்படுவ தாயிற்று. 'மலரத் திறந்த வாயில்' என்னுங் கருத்தினைக் கம்பரும், 'அடையா நெடுங்கதவு' என்று கூறுவர். பிறரும் பிறவாறு கூறுவர். இத்தகைய மனையின் கண், பசிய நிணமொழுகின நெய் மிக்க அடிசிலை நீ இடுகையினாலே, குற்றமில்லாத உயர்குடியிற் பிறந்த பெரியோர் தமது சுற்றத்தோடே விருந்துண்டு எஞ்சியுள்ள மிச்சிலை நின்னோடு உண்ணுதல் மேன்மையுடைத்து' என்றும், 'இவ் வில்லறமே நம்மைக் கரையேற்றுவதாகும்' என்றும் தலைவன் தலைவிக்குக் கூறினான் என்க. எனவே, வரைந்துகொண்டு இல்லறம் நிகழ்த்துவேம் என்றானாயிற்று. இல்லிலிருந்து செய்யப்படும் அறம் பலவற்றுள்ளும் விருந்தோம்பல் சிறப்புடைத்து. வள்ளுவனாரும் விருந்தோம்பலையே சிறந்தெடுத்து முதற்கட் கூறுவாராயினர். பிற அறம் புரியினும், விருந்தோம்பல் இல்வழி, இல்லறம் இல்லை யாயிற்றென்பது தேற்றம். இவ்வறம் தான் ஒத்த அன்புடைய கணவனும் மனைவியும் கூடியிருந்தல்லது செய்யலாகாது. 'தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை' என்று கண்ணகி கூறுவதாக இளங்கோவடிகளும், 'விருந்து கண்டபோ தென்னுறுமோ வென வெதும்பும்' என்று சீதை அழுங்குவதாகக் கம்பரும் கூறியிருக்கும் நுட்பம் உளங்கொளற் பாலது. இப்பாட்டில், 'பைந்நிணமொழுகிய நெய்ம்மலி யடிசில் என்றமையால்' விருந்தினர்க் களிப்பது சிறந்த வுணவாதல் வேண்டு மென்பதாயிற்று. 'வசையில் வான்றிணைப் புரையோர்' என்றமையால் விருந்தினர் தகுதி யளவே விருந்தோம்பலின் பயனளவா மென்பதாயிற்று. 'விருந்துண் டெஞ்சிய மிச்சில்' என்றமையால், விருந்தினர்க்கு இடுதற் பொருட்டே உணவு அடுதல் வேண்டுமென்பதாயிற்று. 'பெருந்தகை' என்றமையால், அங்ஙனம் மிச்சிலுண்பானே பெரிய தகுதிப் பாடுடையான் என்பதாயிற்று. 'நின்னோடுண்டலும்' என்றமையால், மனைவி முன்னிருந்து மன மகிழ்ந் தூட்ட உண்ண வேண்டு மென்பதாயிற்று.

***இனைத்துணைத் தென்பதொன்றில்லை விருந்தின்***
***றுணைத்துணை வேள்விப் பயன்.***
***வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி***
***மிச்சின் மிசைவான் புலம்.***

என்னும் மறை மொழிகள் இங்கு நினைக்கற் பாலன. ஒருவனையும் ஒருத்தியையும் படைத்துக் கொண்டு, அவர்கள் வாயிலாக உலகத்தார்க்கு இன்பத்தின் பெற்றியை அறிவிப்பான் புக்க ஆசிரியர், அவ்வின்பம் நிலைபெறுதற்கு அறம் பற்றுக்கோடாதலை யறிந்து, கற்பொழுக்கமும், விருந்தோம்பலும் முதலிய இல்லற முறைமைகளை இடனறிந்து கூறிவைத்தா ரென்க.

இனி, இப்பாட்டியற்றிய நல்லிசைப் புலவராய கபிலர், தாம் கூறும் இப்பொருளின் சுவையை மேம்படுத்துக் காட்டுதற்குப் பல திறப்பட்ட வனப்புடைய உலகியற் பொருட் காட்சியில் நம்மைக் கொண்டு செல்கின்றார். உலகத்தில் அழகு மிக்குடைய பொருள்களைக் காணுங்கால் மக்களது அறிவு, அவற்றில் அழுந்தி நின்று, இன்புறுதல் கண்கூடாம். அத்தகைய பொருள் களை வெவ்வேறிடத்துத் தனித்தனியாகக் காண்பதினும், அவை பலவற்றையும் தொகுத்து வைத்துள்ள காட்சி மன்றத்தில் ஒருசேர காணுங்கால், அவற்றின் நிறங்களும், வடிவுகளும், குணங்களும், செயல்களும், ஒற்றுமை, வேற்றுமைகளும் எண்ணிறந்த வகையாய்த் தோன்ற, அவைகளை அங்ஙனம் படைத்தருளிய முழுமுதற் கடவுளின் வரம்பிலா ஆற்றலை நினைந்து, வியந்து உருகுகின்றோம். அங்ஙனம் பல்பொருளும் தொகுத்து வைத்துள காட்சி மன்றம் தானும், எக்காலத்தும் எவ்விடத்துமுள்ள யாவர்க்கும் ஒருசேரப் பயன்படுவதின்று. நல்லிசைப் புலவராயினாரே அப்பொருள்களைத் தம் பாட்டுக்களில் தொகுத்து வைத்து, எக்காலத் தியாவருள்ளத்தும் நிலவுமாறு செய்ய வல்லுநர். இயங்கியற் பொருளும், நிலையியற் பொருளும் ஆகிய உலகத்துப் பொருள்கள் செய்யுளிற் கூறப்படும் பொழுது, அவற்றினியற்கை பிறழாமல் உள்ளவாறு கூறப்படுதல் வேண்டும். அவ்வாறு கூறுமிடத்தும், ஒரோவழிப் பொருள் புலப்படாதொழியினும், சுவை தோன்றாவிடினும் அவற்றோடு ஒப்புமையுடையவற்றைக் கண்டு சார்த்திக் கூறுதல் வேண்டும். ஒரு பொருளை அதன் தன்மை பிறழாமல் கூறக் கேட்குமிடத்தும், ஒத்த தன்மையுடைய வேறு பொருளோடு உவமித்துக் கூறக் கேட்குமிடத்தும் உண்டாகும் மகிழ்ச்சி பெரிது. இவற்றை முறையே தன்மை நவிற்சியெனவும், உவமை எனவும்

கூறுவர் அணிநூலார். ஆசிரியர் தொல்காப்பியனார் உவம மொன்றே கூறி, அதன்கட் பல அழகும் அடங்க வைத்த மாட்சி அளவிட்டுரைக்கற் பாலதன்று. பிற்காலத்தார் அலங்காரமெனப் பல நூல்கள் எழுதி வைத்தாரேனும், அவையெல்லாம் தமிழில் இல்லாத அழகினைக் கூறுவனவுமல்ல; உள்ள அழகினை எஞ்சாது எடுத்துரைப்பனவு மல்ல; இயற்கையின் வழாமல் இயம்புவனவு மல்ல. இவ்வுண்மையினை, 'நிரனிறுத்தமைத்த' என்னும் உவமவியற் சூத்திர வுரையில், 'இனி இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுட் சிலவற்றையும், சொல்லதிகாரத் தினுள்ளும், செய்யுளியலுள்ளும் சொல்லுகின்றன. சில பொருள் களையும் வாங்கிக் கொண்டு மற்றவை செய்யுட் கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் நூல் செய்தாரு முளர். அவை ஒருதலையாகச் செய்யுட்கு அணியென்று இலக்கணங் கூறப்படா. என்னை? வல்லார் செய்யின் அணியாகியும், அல்லார் செய்யின் அணியன்றாகியும் வரும் தாங்காட்டிய இலக்கணத்திற் சிதையா வழியுமென்பது' எனவும். 'அல்லதூஉம் பொருளதிகாரத்துட் பொருட் பகுதிகளெல்லாம் செய்யுட்கு அணியாகலான் அவையெல்லாந் தொகுத்து அணியெனக் கூறாது வேறு சிலவற்றை வரைந்து அணியெனக் கூறுதல் பயமில் கூற்றா மென்பது.' எனவும் பேராசிரியர் விளக்கிய வாற்றானறிக. பொருள்களைக் கிடந்தவாறு கூறியும், உவமித்துக் கூறியும், மெய்ப்பாடும், பயனுமுண்டாகச் செய்யுளியற்ற வேண்டில், புலவ ராயினார் பல்வகைப் பொருள்களையும் கண்டு கண்டு, அவற்றின் தன்மைகளை நுனித்தறிந்து உளத்தி லமைத்துக் கொள்ள வேண்டும். பல்திணை மக்களின் பழக்க வழக்கங்களையும், உணர்ச்சி வேறுபாடுகளையும் நன்கறிந்தாராதல் வேண்டும். மனவியற்கைத் தன்மைகளை மிக அறிந்திருந்தல் வேண்டும். சுருங்க உரைக்கின் உலகமே அவர்க்குக் கல்லூரியாகவும், உலகிலுள்ள எப்பொருளும் அவர் கற்கும் பாடமாகவும் அமைந்திருத்தல் வேண்டும். இங்ஙனம் உலக வியல்பை முற்ற வுணர்ந்த புலவர்களியற்றும் நூல்களே, எத் தேயத்தினும் எம் மொழியினும் யாவரானும் போற்றப்பட்டு வருகின்றன. நம் புலவர் பெருமானாகிய கபிலர் புல், மரம் முதலாகவுள்ள அனைத்துயிர்களின் பண்புகளையும், உலகத் தோற்றங்களையும் ஆராய்ந்தறிந்த அறிவு முதிர்ச்சி யுடையோராவர்.

இப்பாட்டிலே செங்காந்தட் பூ முதல் மலையெருக்கம் பூ இறுதியாகத் தொண்ணூற் றொன்பது வகைப் பூக்களை ஒரு சேரக் கூறியிருப்பதும், அவற்றுள் பலவற்றை, 'வள்ளி தழொண்

செங்காந்தள், எரிபுரை யெறுழம், வான் பூங்குடசம், மணிப்பூங் கருவிளை, பல்லிணர்க் குரவம், பல்லிணர்க்காயா, தேங்கமழ் பாதிரி, கொங்குமுதிர் நறுவழை, மணிக்குலைக் கட்கமழ் நெய்தல், தூங்கிணர்க் கொன்றை, சுடர்ப் பூந்தோன்றி' என அவ்வவற்றின் சிறப்பியல்பு தோன்றுமாறு ஏற்ற அடைகளுடன் கூறியிருப்பதும் மரம், செடி, கொடி வகைகளில் இவ்வாசிரியர்க்குள்ள பரந்த ஆராய்ச்சியையும், இவரது நினைவின் மாட்சியையும் நன்கு புலப்படுத்துகின்றன.

இன்னும் இப்பாட்டிலே உலகியற் பொருள்களைக் கூறுமிடத்து, நெல்லினைக் கொண்ட நெடிய மூங்கிலைத் தின்னற்கு மேல்நோக்கி நின்று வருந்தின யானை, அவ்வருத்தந் தீரும்படி தனது கையைக் கொம்பின் மேலேற்றித் தொங்க விட்டுக் கொண்டிருத்தலும்; ஞாயிற்றின் கதிர் காயும் வெம்மை மிக்க பொழுதில், வானிலே பறக்கும் பறவைகள் தாம் விரும்பும் சேக்கைகளிற் செல்லுதலும்; தினைத்தாளால் வேய்ந்த குறுங் காற் குடிசையில், மனைவி யெடுத்துக் கொடுப்ப மதுவையுண்டு களித்துப் புனங் காப்போன் காவற்றொழிலை மறந்திருத்தலும்; யானை புனத்தைத் தின்று அழித்து விடுகையைக் கண்ட கானவர், சினம் மிக்கு, வில்லை நாணேற்றி அம்பெய்தும், தட்டையைப் புடைத்தும், காடெல்லாம் கல்லெனும் ஓசையுண்டாக வாயை மடித்து வீளையெழுப்பி அதனை யோட்டுதலும்; அங்ஙனம் ஓட்டப்பட்டு மதச் செருக்குடன் புறப்பட்ட வேழம் மரங்களை முறித்து, இடியேறு போல் முழங்கி, கையைச் சுருட்டி நிலத்தே யெறிந்து கடுகி வருதலும்; தலைமகன் தலைவியது ஒளி பொருந்திய நுதலைத் துடைத்துத் தோழியின் முகம் நோக்கிச் சிரித்தலும்; அவன் தலைவியை வரைந்து கொண்டு இல்லறம் நிகழ்த்துதல் மெய்யென்று தெரிவித்தற் பொருட்டு, மலை உச்சியில் உறைகின்ற முருகக் கடவுளை வாழ்த்தி வணங்கி, வஞ்சினங் கூறி, இனிமை மிக்க அருவி நீர் குடித்தலும்; பிறவும், இயற்கை வழாமல், ஓவியம் வரைந்து காட்டினாற்போல அழகு பெறக் கூறியிருப்பதிலிருந்து, புள், விலங்குகளின் றன்மை களையும், மக்களின் பழக்க வழக்கங்களையும், மனவியற் கையையும் எவ்வளவு நன்றாக இவர் அறிந்துள்ளாரென்பது புலனாகின்றது.

மற்றும், இதில் தலைவன் றன்மை கூறுங்கால், 'நறிய மயிர்ச்சந்தனம் பூசி, அந்த ஈரம் புலரும்படி விரலாலலைத்துப் பிணிப்பு விடுத்து, அகிற் புகையூட்டுகையினாலே, வண்டுகள்

மொய்க்கும்படி அகிலின் நெய் கலக்கப் பெற்று, நீலமணி போலும் நிறத்தினை யுடைத்தாய்க் கடைகுழன்று வளர்ந் திருக்கும், எண்ணெய் பூசப்பெற்ற குடுமியிலே பல்வகை மலர் களாலும் தொடுக்கப்பெற்ற தொடையலையும், தாழை மடலிற் கட்டிய கண்ணியையும் முருகனென்று அச்சமுறும்படி சூடி, அழகிய பிச்சி மலராற் றொடுத்த ஒரு காழாகிய மாலையைச் சுற்றி, அசோகினது தளிரைத் திரண்ட தோளிலே வீழ்ந் தலைக்கும்படி ஒரு காதிலே செருகி, வலியமைந்து, அகன்று, உயர்ந்து, சாந்து பூசப்பெற்று, உத்தம விலக்கண மாகிய மூன்று வரிகளையுடைத்தாய் விளங்கும் மார்பிலே, தொன்று பட்டு வரும் பேரணிகலங்களோடே நறிய மாலைகளை யணிந்து, உடுத்தவுடை துளக்கமற நுண்ணிய தொழில்களையுடைய கச்சினை இறுகக் கட்டி, தடக்கையில் வில்லை யெடுத்து அம்பு களைத் தெரிந்து பிடித்து,பொன்னாற் செய்யப்பட்ட நல்ல வீரக்கழல் பெயரும் பொழுதெல்லாம் திருந்திய அடியிலே ஏற்றிழிவு செய்யும்படியாக, பகைப் புலத்தைப் பாழாக்கும் வலியமைந்த வேலினையுடைய வீரரைப் போலே சினத்தாற் செருக்குற்றுத் தம்மேல் ஒன்று நெருங்குந் தோறும் வெகுளும், மூங்கில் முளைபோலும் பற்களையும், பெரிய உகிரையு முடைய நாய்கள் இமையாத கண்களை யுடையவாய் வளைத்துக் கொண்டு போதர, ஆனேறு போல் வந்தான்' என்றும்;

மாலைப் பொழுதின் றன்மை கூறுங்கால், ஞாயிறு மலையைச் சேர்ந்து மறைதலால் மான்கணம் மரத்தடிகளிலே திரள, ஆன் கூட்டம் கன்றுகளை யழைக்கும் குரலையுடையவாய் மன்றுகள் நிறையப் புகுதலைச் செய்ய, வளைந்த வாயையுடைய அன்றில் பனையின் உண் மடலிலேயிருந்து பேட்டை யழைக்க, அரவுதான் மேய்தல் காரணமாக மணியினை யுமிழ, ஆயர்கள் பலவிடங்களினும் நின்று ஆம்பலென்னும் பண்ணினையுடைய குழலிடத்து இனிய இசையை எழுப்ப, ஆம்பலின் அழகிய இதழ்கள் தளையவிழ, அந்தணர் மாலைப் பொழுதிற் செய்யும் கடன்களை நிகழ்த்த, வளமிக்க மனைகளில் அழகிய தொடியினை யுடைய மகளிர், விளக்கினைக் கொளுத்தி வைத்துத் தாம் செய்யுங் கடன்களைச் செய்ய, வனத்தின் கண் வாழ்கின்றவர்கள் வானை யளாவிய பரணின்மேலே தீக்கடை கோலால் நெருப்பை யுண்டாக்கி யெரிப்ப, முகில் மலையிடத்தைச் சூழ்ந்து கறுப்ப, காட்டிலுள்ள விலங்குகளெல்லாம் கல்லென்னும் ஓசையுடை யவாய் ஒன்றற் கொன்று மாறிக் கூப்பிட, பறவைகள் குடம் பையிலிருந்து ஆரவாரிக்க மாலை துன்னிற்று' என்றும்;

அவ்வவற்றின் றன்மையை ஆராய்ந்து இயற்கை நெறி வழுவாது கூறியிருப்பது மிக மகிழ்ச்சி விளைப்பதாகின்றது.

இனி, இப்பாட்டின்கண் முப்பத்தைந்து உவமைகள் ஆண்டாண்டுக் கூறப்படுகின்றன. அவற்றுள், கருத்தொற்றுமை யுள்ள ஐந்தனை விடுத்து, ஏனைய முப்பது உவமைகளை ஈண்டுத் தருகின்றாம்.

செவிலியின் முனிவுக்கும் தலைவியின் வருத்தத்திற்கும் அஞ்சும் தோழியின் அச்சத்திற்கு, இகல்புரியும் இருபெரு வேந்தர்க் கிடை நின்று சந்து செய்விக்கும் சான்றோரது அச்சமும்; துய்யையுடைய தலை வளைந்து முற்றின பெரிய தினைக்கதிருக்கு, யானையது கொம்பின்மே லேற்றித் தொங்க விட்டிருக்கும் துதிக்கையும்; கார்காலத்து இடியின் முழக்கத்திற்கு, முரசின் அதிர்ச்சியும்; மின்னலுக்கு, முருகன் அசுரரைக் கொல்ல எடுத்த வேற்படையும்; மலையுச்சியினின்றும் விழுகின்ற அருவிக்கு, விளங்குகின்ற வெண்டுகிலும்; மலைப் பாறையிற் சுனையின் நீருக்கு, பளிங்கைக் கரைத்துச் சொரிந்து வைத்த நீரும்; சிறிய முதுகிலே தாழ்ந்து கிடக்கும் பின்னிய கூந்தலுக்கு, பொன்னிலே யழுத்தின நீலமணியும்; எறுழம்பூவின் நிறத்திற்கு, நெருப்பின் நிறமும்; செந்நிறப் பூக்களைப் பரப்பி வைத்தற்கு, அரக்கினை விரித்து வைத்தலும்; அசோகினது தளிரின் நிறத்திற்கு, நெருப்பின் நிறமும்; வேட்டை நாயின் சினத்திற்கு, வேல் வீரரின் சினமும்; நாயின் பல்லுக்கு, மூங்கில் முளையும்; தலைவியைக் கண்டு விரும்பியடையும் தலைவனுக்கு, வேறு புலத்துள்ள புதிய ஆவைக் கண்டு அணைய வரும் விடையும்; இம்மென இமிரும் வண்டினோசைக்கு, நட்டராகம் முற்றுப் பெற்ற பாலை யாழை வாசிக்க வல்லவன் தன் கையாலே வாசித்த நரம்பினோசையும்; தலை மகன் தழை பரந்த பூங்கொம்பை முறித்து வேட்டை நாய்களை யடித்தலுக்கு, மத யானை பூங்கொம்பை முறித்து ஓச்சி நிற்றலும்; குடிசையிலிருந்து புனங்காப்போனது மனைவியின் நோக்கிற்கு, மான் பிணையும்; கானவரது வில்லுக்கு, சினம் மிக்க பாம்பும்; மதயானையின் பிளிறுதலுக்கு, உருமேற்றின் முழக்கமும்; மதக்களிற்றின் வருகைக்கு, கூற்றுவனது வருகையும்; நடுக்கமுற்ற மகளிர்க்கு, தெய்வமேறின மயிலும்; மகளிர் கைகோத் திருத்தற்கு, கடம்பினது அடிமரத்தை நெருங்கச் சூழ்ந்த மாலையும்; மகளிர் அருவியிலே கால் தளர்ந்து செல்லுதற்கு, இடி கரையினின்ற வாழை சரிந்து செல்லுதலும்; மலைச்சாரலில் தேறலை அயின்ற மயில் தளர்வதற்கு, ஆடு மகள் கழாய்க் கயிற்றிலே ஏறி ஆடுகின்ற

தாளத்தினால் ஆற்றாது தளருதலும்; செங்காந்தட் பூக்கள் பரந்து கிடக்கின்ற நிலத்திற்கு, அழகிய பல கச்சுப் பரந்த நிலமும்; மனையின்கண் வருவோர்க்கெல்லாம் சோறிடுதற்கு, விழாக் கொன்டாடுதலும்; வளைந்த வாயையுடைய அன்றிலினோசைக்கு, ஊது கொம்பினோசையும்; பறவைகளினொலியோடு மாலைப் பொழுது துன்னுதற்கு, சினம் மிக்க வேந்தன் அமரின்கட் செல்லுதலும்; தலைவியின் றோளுக்கு, இள மூங்கிலும்; இமை சோர்ந்து அழகு கெட்டுக் கலங்கும் தலைவியின் கண்களுக்கு, பெருந்துளி யெறிந்து மழை பெய்யப்பட்ட மலரும்; இரவிலே தலைவன் வரும் வழியின் ஏதம் நினைந்து கலக்கமுறும் தலைவிக்கு, வலையிற்பட்ட மஞ்ஞையும்; உவமையாகக் கூறப்பட்டுள்ளன. சிறப்பு முதலியன நிலைக்களமாக, வினை, பயன், மெய், உரு என்பன பற்றித் தோன்றும் இவ்வுவமங் களெல்லாம், 'உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்' எனத் தொல்காப்பியனார் கட்டளையிட்டவாறே அமைந்து, பாட்டினை அழகு செய்து, இன்பம் விளைப்பனவாதல் காண்க.

இனி, வெளிப்படையாகக் கூறும் இவ் வுவமம் போலன்றி, நுண்ணுணர்வான் ஆராய்ந்து காணத்தக்க உள்ளுறை யுவமம் என்பதொன்றுண்டு. இவ்வுள்ளுறை யுவமந்தான் பண்டைச் சான்றோர் செய்யுட்களில் மலிந்து காணப்படுகின்றது. அகப் பொருட் செய்திகளில் வெளிப்படக் கூறுதல் நாகரிகமன்றெனத் தோன்றுமவைகளை மறைத்துக் கூறுதற் பொருட்டு, இஃது இன்றியமையாது வேண்டப்படுவதாயிற்று. தலைவன் முதலாயினார் நாடு முதலியவைகளைப் புனைந்துரைக்கு மிடத்து, கேட்போர் நுண்ணுணர்வான் ஆராய்ந்து, அப் புனைந்துரையை உவமை யாகக் கொண்டு வேறு பொருள் கொள்ளுமாறு கூறுவதே உள்ளுறை யுவமம் ஆகும். இங்ஙனம் கூறுவதால் நாகரிக முறை வழுவாமையும், இரு பொருளை ஒரு சொல்லிற் கூறலாகிய சுருங்கக் கூறுதலும், கேட்போர் அறிவு நுணுகி நின்றுணர்ந்து இன்புறுதலும் ஆகிய பல பயன் விளைகின்றன. தமிழின் ஒப்புயர்வற்ற மாட்சிக்கு இவ் வுள்ளுறை வுவமம் ஒன்று தானே சான்றாத லமையும். இப்பாட்டின் கண், தலைவற்கும் தலைவிக்கும் நிகழ்ந்த கூட்டத்தைச் செவிலிக்கு அறிவிக்கும் தோழியானவள், தலைமகன் எவ்வாற்றானும் தம்மின் மிக்கான் என்பதும், அவனுறவு தமக்கு எய்துதற் கரியதென்பதும், அத்துணைப் பெருமையுடையான் தமக்கு எளியனாய் வந்து தண்ணளி செய்தது தமது நல்வினைப் பயனே யென்பதும் உணர்த்தக் கருதினாள். இவற்றை வெளிப்படக் கூறின் இவள் தலைவியை

அவமதித்தா ளென்றும், இவளானேயே இச்செயல் நிகழ்ந்துள்ள தென்றும் செவிலிக்குச் சினமுண்டாகும். கூறாவிடின் கூட்ட முண்மை யுணர்ந்த செவிலிக்குத் தன் மகள் யாரோ இழி தகவுடையா னொருவனுக்கு உரிய ளாயினளேயென்று கவற்சி மிகும். இந் நிலைமையில் யாது செய்வாள் தோழி? தம்மை யாற்று நீர் இழுத்துச் செல்லும் பொழுது, கரையேற்றினவன் இத்தன்மையான நாட்டையுடையன் என்று நாட்டினைச் சிறப்பித்துக் கூறுவாளாய், தலைவன் பெருமை முதலாயின உய்த்துணருமாறு உள்ளுறையாகக் கூறிவிட்டாள். 'பழுத்த மிளகு சிந்திக் கிடக்கின்ற பாறையிடத்து, நீண்ட சுனையிலே, நெகிழ்ந்து உதிர்ந்த மாம்பழத்தாலும் பலாப்பழத்தாலும் விளைந்த தேறல் இறாலிலிருந்து ஈக்களைத் தள்ளி யுகுத்த தேனாலே வந்து திரள, அத்தேறலைத் தனக்கு எளிய நீராகக் கருதி யுண்ட மயிலானது, விழாச் செய் களத்தில் ஆடல் மகள் கழாய்க் களிற்றில் ஏறி யாடுகின்ற தாளத்தினால் தான் ஆற்றாது தளருமாறு போலத் தளருஞ் சாரலை யுடையதும், வானையளாவிய உச்சியிலே கிளைத்த செங்காந்தளின் பூக்கள், வரையர மகளிர் விளையாடுதலிற் றந்நலம் சிறிது கெட்டுக் கீழே வந்து பரந்து, நல்ல பல கச்சு விரித்த களம்போல அழகு பெற்ற இடத்தினை யுடையதுமாகிய மலை பொருந்தின நாடன், என்பது தோழி கூறியது. இதன்கட் கூறிய மிளகு, மா, பலா, தேனிறால், மயில், செங்காந்தட்பூ என்னும் குறிஞ்சிக் கருப் பொருள்களால் மலைவளம் வெளிப்படை. இதனை உள்ளுறை யுவமமாகக் கொள்ளுமிடத்து, 'மிளகு உக்க பாறை அந்நிலத்து மாக்களுறை கின்ற ஊராகவும், நெடுஞ்சுனை தலைவன் குடியாகவும், மாம்பழத்தாலும் பலாப் பழத்தாலும் விளைந்த தேறல் தந்தையாலும் தாயாலும் உளனாகிய தலைவனாகவும், இறாற்றேன் இவரைக் கூட்டின பால்வரை தெய்வமாகவும், தேறலையுண்ட மயில் உயர்ந்த தலைவனைத் தன் குலத்திற்கு ஒத்தானாகக் கருதி நுகர்ந்த தலைவியாகவும், அத்தேறலிற் பிறந்த களிப்புக் களவொழுக்கத்தாற் பிறந்த பேரின்பமாகவும், மயில் ஆடவாற்றாத் தன்மை வருந்திக் குறைந்த தன்மையாகவும்' கொள்ளப்படும். இன்னும், 'உயர்ந்த நிலத்தே நின்று மணக்கின்ற காந்தள், வரையர மகளிராற் கீழ் நிலத்தே பரந்து, அவ்விடத்தைக் கச்சு விரித்தாற் போல அழகு பெறுத்து மென்றதனால், நம்மி லுயர்ச்சியையுடைய தலைவன், நமது நல் வினையாற் றனது பெருமைகள் தானு மொழிந்து இவ்விடத்தே வந்து கூடி, நமக்கும் உயர்ச்சியுள தாக்கி, நம்மை அழகு பெறுத்துகின்றான்.' என்றமை

கொள்ளப்படும். உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் விரித்தபடி இங்கு உள்ளுறை யுவமம் காட்டப்பட்டதென்க.

இனி, இப்பாட்டிலிருந்து, வேறுபட்ட பல உருவினையுடைய கடவுளரை மலர்தூவியும், நறும்புகை யெடுத்தும், சந்தனம் முதலியவை கொடுத்தும் வழிபடுதலும், முத்து, மணி, பொன் முதலியவற்றால் சிறந்த அணிகலன்கள் செய்தலும், அரசர் தேர் உடையராதலும், இரண்டு வேந்தர் அமர் புரியும் பொழுது அறிவுடையோர் இடைநின்று சந்து செய்தலும், பெண் கொடுக்கும் முன் குடியும், குணமும், சுற்றத்துதவியும் முதலாய வற்றை ஒப்பித்துப் பார்த்து எண்ணித்துணிய வேண்டுதலும், முருகக் கடவுள் முரசினையும், பூணினையும், எஃகினையும் உடையராதலும், அருவியின்றிரை போலும் வெண்மையும், மென்மையும் உடைய துகில்கள் நெய்யப்படுதலும், வீரராயினார் வில், அம்பு, வேல் என்பனவற்றாற் போர் புரிதலும், நட்டராகம் முதலிய பண்களை யாழிலே வாசித்தலும், ஊர்களில் திருவிழா நடக்குமிடத்து விறலியர் கழாய்க் கூத்து ஆடுதலும், சோற்று விழாக் கொண்டாடப்படுதலும், கடவுளைச் சான்று வைத்து வஞ்சினங் கூறுதலும், சூளுறுதற்கு அடையாளமாகத் தண்ணீர் குடித்தலும், மாலைப் பொழுதிலே மகளிர் விளக்கேற்றி வைத்து இல்லுறை தெய்வத்தை வணங்குதலும், அந்தணர் சந்தி செய்தலும், கோவலர் குழல் வாசித்தலும், சுற்றத்தார் பெண் தர நாடறிய நன்மணஞ் செய்தலும், பிறவும் அக்காலச் செய்தி களாக அறியப்படுகின்றன.

இன்னும், இப்பாட்டில், தெய்வப் பகுதியாகக் கடவுளர், தேவர், வரையர மகளிர் என்போரும்; மக்கட் பகுதியாக முனிவர், அந்தணர், சான்றோர், அரசர், கானவர், கோவலர், ஊர்காவலர், விறலியர் என்போரும்; விலங்கின் பகுதியில் யானை, புலி, நாய், ஆன், விடை, பிணை, மான், யாளி, கரடி, ஆமானேறு, முதலை என்பனவும்; புள்ளின் பகுதியில் கிளி, மயில், அன்றில், வண்டு, சுரும்பு என்பனவும்; பறவைத் தொகுதியும்; ஓரறிவினவாகிய மரம் முதலியவற்றின் பகுதியில் ஒருவழித் தொகுத்துக் கூறப் பட்ட தொண்ணூற்றொன்பதுடன், கடம்பு, பலா, பனை, மிளகு, தினை என்பனவும் கூறப்பட்டுள்ளன. மடங்கல், சூர், பிசாசு, பாந்தள் என்பனவும் கூறப்பட்டுள. நிலம், நீர், தீ, வளி, வான் என்பனவும்; மலை, கடல், முகில், மின், இடி என்பனவும்; ஞாயிறு, திங்கள், ஞாயிற்றின் மண்டிலம்,ஞாயிற்றின் ஏழ் பரி, ஞாயிறு மறையும் மலை என்பனவும்;முத்து , மணி, பொன், பாம்பின் மணி, பளிங்கு, அரக்கு என்பனவும்; புவியின் வேறாய

உலகமும் கூறப்பட்டுள்ளன. மக்களின் உடை, அணி, உணவு முதலியவற்றுள், இப்பாட்டினால் அறியப் படுவன முன் எழுதியவற்றுட் காண்க.

கிளியோட்டுங்கருவிகள் தழல், தட்டை, குளிர் முதலியன வென்றும், முதலை, இடங்கர், கராம் என்பன இன வேறுபா டென்றும் அறியப்படுகின்றன.

'இருவேம் ஆய்ந்த மன்றல்' என்பதற்கு, 'தலைவனும், யானும், பெருமையும், உரனும், அச்சமும், நாணும் நுணுகிய நிலையாற் பிறந்த கந்தருவ மணம்' என்றும், 'அகலிரு வானம்' என்பதற்கு 'ஏனைப் பூதங்கள் விரிதற்குக் காரணமான கரிய ஆகாயம்' என்றும் நச்சினார்க்கினியர் கூறியிருக்கும் பொருள் நினைக்கத்தக்கன. எளிதிற் பொருள்படும் தொடர்களுக்கு இங்ஙனம் ஒரோ வழி அரிய பொருள் கூறுவது இவர்க்கியல்பு. இவர் சொற்களை மாட்டேற் றாகக் கொண்டு பொருள் செய்திருக்கு மிடங்களில், கிடந்தவாறே வைத்துப் பொருள் செய்தற் கேற்றவைகளை ஆராய்ந்தறிக.

இப்பாட்டில் ஏறக்குறைய ஆயிரத்து நானூற்று நாற்பது சொற்களிருக்கின்றன. இவற்றுள் அமயம், பாயம், சேமம், பிரசம், சமம் என்பன வடசொற்கள். முரசு, அந்தி, முத்து, மணி என்பன இரு மொழிக்கும் பொதுச் சொற்கள். ஞமலி, சொன்றி, பாணி என்பன திசைச் சொற்கள். இவ்வாற்றால் நூற்றுக்கு ஒரு சொல் விழுக்காடும் இதில் வேற்றுச் சொல் வரவில்லை யென்பது உணரத்தக்கது.

இனி, இப்பாட்டில் முப்பத்திரண்டு அளபெடைச் சொற்களும், ஆறு 'செய்யு' என்னும் வாய்பாட்டுச் சொற்களும் வந்துள்ளன. இக்காலத்தே சிலர் அளபெடையை இகழ்ந்து கூறுவர். வேறு சிலர் எவ்விடத்தும் அளபெடையாக எழுதுவர். இப்பாட்டினும், இதுபோன்ற ஏனைச் சங்கச் செய்யுளினும், அளபெடை வந்துள்ள இடங்களை அறிவுடையோர் நுணுகியுணரின், அவ்வவ்விடத்து அளபெடையிருத்தலின் இன்றியமையாமை புலப்படும். இங்கே சான்றாக ஒன்று காட்டுதும். 'தும்பை துழாஅய் சுடர்ப்பூந் தோன்றி' என்பது இப்பாட்டிலுள்ள ஓர் அடி. இதிலுள்ள அளபெடையை எடுத்துவிடின், 'துழாய்' என்பது ஒரு சீராதலில்லை. இது சீராதற் பொருட்டு வேறு சொல்லைச் சேர்த்திடில் மற்றொன்று விரித்தலும், ஓசையின்மையும் முதலிய குற்றங்கள் உண்டாதல் கூடும். இவ்வோர் அளபெடையால் சீர் செம்மையாதலும் ஓசையுடைத்

தாதலும், மோனை பெறுதலும், முன் பின் அடிகட்கு ஏற்றவாறு அமைதலும் ஆகிய பல நலன் விளைந்தன. சான்றோர் செய்யுட்களிலுள்ள இன்னோரன்ன நுணுக்கங்களைத் தமிழ்த் துறையில் இறங்கி யறியாதார் எங்ஙனம் காணவல்லராவர்?

இப்பாட்டில், விரிந்துள்ள வேற்றுமை யுருபு ஐம்பதுக்கு மேலில்லை. அவற்றுள்ளும் பல ஒப்புப் பொருளில் வரும் இன்னுருபாகும். பாட்டிலுள்ள சொற்களெல்லாம் பெரும் பாலும் இரண்டு மூன்று நான்கு எழுத்துக்களாலானவையே. இவ்வாற்றால் இஃது எவ்வளவு சொற் சுருக்கமும், திட்பமும் உடையதென்பது நன்கு விளங்கும். இப்பாட்டின் பொருளை இப்பொழுது உணர்த்துதற்கு மூன்று மடங்கிற்கு மேலான எழுத்துக்களும், சொற்களும் வேண்டியுள்ளன வென்க.

இனி, இக்குறிஞ்சிப் பாட்டின்கண் பிற திணைகட்குரிய பொழுதும், பூ முதலியனவும் ஒரோவழி வந்திருத்தற்கு விதி.

> **‘ உரிப்பொரு ளல்லன மயங்கவும் பெறுமே.**
> **எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்**
> **அந்நிலம் பொழுதொடு வாரா வாயினும்**
> **வந்த நிலத்தின் பயத்த வாகும்.’**

என்னும் அகத்திணை யியற் சூத்திரங்களாகும். ‘எந்நில மருங்கில்’ என்னும் சூத்திர வுரைக்கண், நச்சினார்க்கினியரும், ‘கபிலர் பாடிய பெருங் குறிஞ்சியில் வரையின்றிப் பூ மயங்கியவாறு காண்க’ என்றார். அதனால், பெருங்குறிஞ்சி யெனவும் இப்பாட்டுக்கு ஓர் பெயருண்டென்பது பெற்றாம். குறிஞ்சித் திணைப் பாட்டுக்களில் இதுவே அளவாற் பெரிதாயிருத்தலின், பெருங் குறிஞ்சி யெனப்பட்டது போலும்? மற்றும் இப்பாட்டின் அருமை, பெருமைகளை அறிவுடையோர் ஆராய்ந்து மகிழ்வாராக கபிலர் பாடிய ஏனைச் செய்யுட்களையும் இங்ஙனம் ஆராயின். மிக விரியுமாகலின், இனி அவற்றின் அமைதிகளைச் சுருங்கவே கூறுவாமென்க.

## பூவின் பகுதி

> **வள்ளித**
> **ழொண்செங் காந்த ளாம்ப லனிச்சம்**
> **தண்கயக் குவளை குறிஞ்சி வெட்சி**
> **செங்கொடு வேரி தேமா மணிச்சிகை**
> **உரிதுநா றவிழ்த்தொத் துந்தூழ் கூவிளம்**
> **எரிபுரை யெறுழஞ் சுள்ளி கூவிரம்**

*வடவனம் வாகை வான்பூங் குடசம்*
*எருவை செருவிளை மணிப்பூங் கருவிளை*
*பயினி வானி பல்லிணர்க் குரவம்*
*பசும்பிடி வகுளம் பல்லிணர்க் காயா*
*விரிமல ராவிரை வேரல் சூரல்*
*குரீஇப் பூளை குறுநறுங் கண்ணி*
*குருகிலை மருதம் விரிபூங் கோங்கம்*
*போங்கந் திலகந் தேங்கமழ் பாதிரி*
*செருந்தி யதிரல் பெருந்தண் சண்பகம்*
*கரந்தை குளவி கடிகமழ் கலிமாத்*
*தில்லை பாலை கல்லிவர் முல்லை*
*குல்லை பிடவஞ் சிறுமா ரோடம்*
*வாழை வள்ளி நீணறு நெய்தல்*
*தாழை தளவம் முட்டாட் டாமரை*
*ஞாழல் மௌவல் நறுந்தண் கோகுடி*
*சேடல் செம்மல் சிறுசெங் குரலி*
*கோடல் கைதை கொங்குமுதிர் நறுவழை*
*காஞ்சி மணிக்குலைக் கட்கமழ் நெய்தல்*
*பாங்கர் மராஅம் பல்பூந் தணக்கம்*
*ஈங்கை யிலவந் தூங்கிணர்க் கொன்றை*
*அடம்பம ராத்தி நெடுங்கொடி யவரை*
*பகன்றை பலாசம் பல்பூம் பிண்டி*
*வஞ்சி பித்திகம் சிந்து வாரம்*
*தும்பை துழாஅய் சுடர்ப்பூந் தோன்றி*
*நந்தி நறவம் நறும்புன் னாகம்*
*பாரம் பீரம் பைங்குருக் கத்தி*
*ஆரங் காழ்வை கடியிரும் புன்னை*
*நரந்தம் நாகம் நள்ளிரு ணாறி*
*மாயிருங் குருந்தும் வேங்கையும் பிறவும்*
*அரக்குவிரித் தன்ன பரேரம் புழுகுடன்*

## உரையிறுதியில் எழுதப்பட்டுள்ள இரு வெண்பாக்களில் ஒன்று

*‘ நின்குற்ற மில்லை நிரைதொடியும் பண்புடைய*
*ளென்குற்றம் யானு முணர்கலேன் - பொன்குற்*
*றருவி கொழிக்கு மணிமலை நாடன்*
*றெரியுங்காற் றீய திலன்.’*

# 5. குறிஞ்சிக்கலி ஆராய்ச்சி

குறிஞ்சிக்கலி என்பது சங்கத்துச் சான்றோராலே செய்யப் பட்டு அக்காலத்தே தொகுக்கப்பட்டனவாகிய [1]எட்டுத் தொகையு ளொன்றாகிய கலித்தொகையில் இரண்டாவது பகுதியாகும். கலித்தொகை கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும், பாலை முப்பத்தைந்தும், குறிஞ்சி இருபத்தொன்பதும், மருதம் முப்பத்தைந்தும், முல்லை பதினேழும், நெய்தல் முப்பத்து மூன்றும் ஆக நூற்றைம்பது செய்யுட்களை யுடையது. பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என இம்முறையே கோக்கப் பட்டுளது. ஐந்திணைகளைப் பல்வகையானும் முறைப்படுத்தல் தொல்காப்பியனார் கருத்தென உணர்க. பாலைக்கலி முதலிய ஐந்து பகுதியும் முறையே பெருங்கடுங்கோன், கபிலர், மருதனிளநாகனார், சோழன் நல்லுத்திரன், நல்லந்துவனார் என்பவர்களாற் பாடப் பட்டனவென்று,

> ***பெருங்கடுங்கோன் பாலை குறிஞ்சி கபிலன்***
> ***மருதனிள நாகன் மருதம் - அருஞ்சோழன்***
> ***நல்லுத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்***
> ***கல்விவலார் கண்ட கலி.***

என்னும் வெண்பாவாற் றெரிகின்றது. 'புரிவுண்ட' என்னும் நெய்தற் கலிச் செய்யுளுரையில், 'சொல்லெச்சமும் குறிப்பெச்சமு மாகத் தம் பேரறிவு தோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுட் **செய்தார்'** என்றும், கடவுள் வாழ்த்தின் உரையில், 'ஆதலான் ஈண்டுப் பாலைத்திணையையும் திணையாக ஆசிரியர் நல்லந்துவனார் **கோத்தா** ரென்று கூறுக' என்றும் நச்சினார்க்கினியர்

1. எட்டுத் தொகையாவன – நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன. இதனை,

> நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
> றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் சொல்லுங் கலியோ டகம் புறமென்
> றித்திறத்த வெட்டுத் தொகை.

என்னும் வெண்பாவாலுணர்க.

கூறியிருத்தலால், நெய்தற்கலியை இயற்றினாரும், பாலைக்கலி முதலியவற்றைக் கோத்தாரும் நல்லந்துவனா ரென்பது அவர் கருத்தாதல் பெறப்படும். இத்தொகையிலுள்ள ஐந்து பகுதியும் தனித்தனி ஒவ்வொருவராற் பாடப்பட்டிருத்தலின், ஐம் பகுதியையும் சேர்த்து ஓர் தொகை யாக்கினமையே தொகுத் தாரது செய்கை யாதல் வேண்டும். ஐங்குறுநூறும், பதிற்றுப் பத்தும் தொகுத்தாருடைய செய்கையும் இத்துணையே யாகும். இதிலுள்ள செய்யுட்க ளெல்லாம் கலிப்பா ஆகலின், இத்தொகை பாட்டாற் றொகுக்கப் பட்டதென்க. இது கலித்தொகை யென்றும், கலி யென்றும் வழங்கும்.

> '[1]**நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்**
> **பாடல் சான்ற புலனெறி வழக்கங்**
> **கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்**
> **உரியதாகு மென்மனார் புலவர்,'**

என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலின், அகத்திணைக்குச் சிறப்புரிமையுடையது கலிப்பாவாம் என்க. இத்தொகையிலுள்ள பாக்களின் ஓசையின்பமும், பிற அருமை, பெருமைகளும் கற்று வல்லோர் யாவரும் ஒருங்கே பாராட்டுந் தகையன.

இதிலுள்ள குறிஞ்சிக்கலி கபிலர் பாடியதென்று முன்னரே கூறப்பட்டது. வேறு யாவர்தாம் பாடியிருப்பர்? இவ்வாசிரியர் குறிஞ்சியைத் தமக்கே உரிமையாக்கிக் கொண்டனரென்னின், அது புனைந்துரை யாகாது. இதிலுள்ள பாக்கள் கலியின் வகையாகிய கலிவெண்பாவும், ஒத்தாழிசைக் கலியும், கொச்சகக் கலியும் முதலியவாக உள்ளன. இப்பாக்கள் கூறும் பொருளும் பல துறைப்பட்டன வாகும். இவை அறிதற்கு அரியவாதல் பற்றியே இத்தொகைக்கு உரைகண்ட ஆசிரியர் நச்சினார்க் கினியர் இன்ன இன்ன உறுப்புக்கள் கொண்டு இவ்வாறு முடிதலின், இஃது இன்ன பாவாகு மென்றும், இஃது இன்ன துறையையுடைய தென்றும் ஒவ்வொரு பாட்டிலும் விளக்கிச் செல்லுகின்றார்.

இதிலுள்ள இருபத்தொன்பது பாட்டுக்களிலும், தனிச் சீர் களொழிய எழுநூற்றைம்பது அடிகள் இருக்கின்றன. இவற்றில் நூற்றிருபத்து நான்கு உவமைகள் காணப்படுகின்றன. இவை யன்றி, உள்ளுறை யுவமங்களும், உருவகங்களும் பலவுள்ளன. மனோதத்துவ இயற்கை வழாமல் இன்பத்தின் காரணமாய

1. அகத்திணையியல், 53.

ஒழுக்கத்தினைக் கூறப்புகுந்த இப்பாட்டுக்களில், அவையேயன்றி, எத்தனையோ பல நீதிகளும், இயற்கை யுண்மைகளும் பொதிந்து கிடக்கின்றன. இவையிற்றை யுணர்வார்க்கு அக்காலத்தில் தமிழ் எவ்வளவு உயரிய நிலையில் இருந்த தென்பதும், தமிழராயினார் எவ்வளவு மேம்பாடுற் றிருந்தன ரென்பதும் அங்கை நெல்லி யென விளங்கா நிற்கும்.

இனி, இதிலுள்ள உவமைகளில் இன்றியமையாதவற்றை உரைநடைப் படுத்து இங்கு எழுதுகின்றாம். பூத்த வேங்கை மரத்தைப் புலியென்று கருதிக் கறுவுகொண்டு அதனடியிற் குத்திய மதயானை, தன் கொம்பினைப் பறிக்கலாற்றாது கூவிக் கொண்டு வருந்துவது, இறைவன் இறைவியுடன் வீற்றிருந்த கயிலை மலையை யெடுக்கலுற்ற அரக்கர் கோமா னாகிய இராவணன், அம்மலையின் கீழ்க் கிடந்து வருந்துவது போலும் எனவும்; தலைவனது கூட்டம் பெறாது தலைவி பொலிவழிந் திருப்பது, நீரற்ற நிலத்திற் பயிரும், பொருளில்லான் இளமையும், அறனின்றா மூப் பெய்தினான் மறுமையும் பொலிவிழந்திருத்தல் போலும் எனவும்; தலைவன் கூட்டத்தால் தலைவி அழகு பெற்றிருப்பது, மழையினைப் பெற்ற நிலத்திற் பயிரும், அருளுடையா னிடத்து உண்டாகிய ஆக்கமும், செய்யுங் கூறுபாடறிந்தவன் செல்வமும் அழகு பெற்றிருத்தல் போலும் எனவும்; தினைப்புனங் காப்பார் பரணிலே யெரித்த அகிற் புகையால் ஒளி மழுங்கிய மதியம் மலைத்தலையில் பொருந்தி யிருப்பது, அம்மலையில் தேனின் இறால் இருப்பது போலும் எனவும்; தினைக்கதிர் முற்றித் தாழ்ந்திருப்பது. நற்குணமுடைய மகளிர் நாணத்தால் இறைஞ்சியிருப்பது போலும் எனவும்; மலையிடத்தில் காந்தளின் கொத்து உயர்ந்து அசைவது, கொடிச்சியர் முருகவேளைக் கை குவித்துத் தொழுவது போலும் எனவும்; தலைமகன் மாதரார் நலத்தை நுகர்ந்து அவரைத் துறப்பது, வண்டு தாதினையுண்டு பூவைத் துறப்பது போலும் எனவும்; தலைமகன் வாய்மையில் பொய் தோன்றுமாயின், அது திங்களிடத்தே நெருப்புத் தோன்றியது போலும் எனவும்; அவனது அருளிலே கொடுமை தோன்றுமாயின், அது நிழற்குளத்து நீரில் நின்ற குவளை வெந்தது போலும் எனவும்; அவனது தொடர்பில் நட்பின்மை தோன்றுமாயின் அது ஞாயிற்றிலுள்ளே இருள் தோன்றியது போலும் எனவும்; தலைவனது அறத்தையே விரும்பின கோடுதலில்லாத நெஞ்சம், ஒரு கூற்றிற் சாயாத துலாக்கோல் போலும் எனவும்; கோங்கு பூத்த பக்க மலைகள் பொன்னணி யணிந்த யானைகள் போலும்

எனவும்; காந்தள் முகைமேற் பொருந்தியிருக்கும் தும்பி, மாதரார் கையிலணிந்த நீலக் கடைச் செறி போலும் எனவும்; மூங்கில் முளையின் கண்ணைப் பொதிந்திருந்து கழன்று விழும் பாளை, நுண் பொறியை யுடைய மானின் செவியைப் போலும் எனவும்; வாழைக் குலையில் தூங்கும் வளைந்த காய், புலியின் அடியைப் போலும் எனவும் உவமிக்கப் பட்டுள்ளன.

எதிரெதிர் ஓங்கிய மலையின் சாரலில் இளஞாயிற்றின் கதிரழகைக் கொண்ட மாணிக்கப் பாறையில் நிற்கும் வேங்கை மரம், தன் அழகிய கொம்புகளின் மேலே இரு மலையினின்றும் அருவி வீழப் பெற்றிருப்பது, செந்தாமரை மலரின் அகவிதழில் வீற்றிருக்கும் திருமகள் தனது திருமுடியின் மேலே அழகிய இரண்டு யானைகள் பூவுடன் கூடிய நீரைச் சொரியும்படி யிருப்பதனையும்;[1] சுனையிடத்து வளர்ந்த காந்தட் குலையானது, நீருண்ணுகின்ற மணியுடன் கூடிய பாம்பினையும்; யானையும், புலியும் போர் செய்யுமிடத்தே, வேங்கையின் பூங்கொம்பென்று கருதிப் புலியைச் சூழ்ந்தும், வேங்கைச் சினையென்று கருதி யானையின் புகர் முகத்தை யணுகியும் திரிந்து கொண்டிருக் கின்ற வண்டு, சினமிக்குப் போர்புரியும் இரு வேந்தரை நட்பாக்கும் திறனறிந்து சந்து செய்வாரையும்; தலைமகள் தலைவனது அளியை நச்சியிருப்பது, வானம் பாடிப்புள் வானின் துளியை நச்சியிருப்பதையும்; தலைவன் கூறுவதனையே தலைவி கூறுவது, சார்ந்தார் கூறுவதனையே மலை எதிரொலியாகக் கூறுவதையும்; தலைவியின் கைவளையுகுவது, தலைவனது மலைச் சாரலிற் கோடற் பூ உகுவதையும்; நீர் சொரியும் கண்கள், மழையேற்ற நீலத்தையும்; தலைவியின் மாமைநிறம், பொன்னுரைத்த மணியின் நிறத்தையும்; வில்லின் மேலுள்ள பொறிகள், பாம்பின் பொறியையும்; தலைவன் தலைவியைப் பாராட்டுவது, மலைச்சாரலில் மான்குழவி வளர்ப்பார் செயலையும் போலுமெனக் கூறப்பட்டுள.

புலியானது தன் செவியிலே மறைந்து வந்து பாய்ந்த விடத்து, அதன் மார்பினைத் தன் கோட்டின் நுதியாற் குத்தித் திறந்து மாறுபாடு தீர்ந்து நின்ற யானைக்கு, நூற்றுவர் தலைவனாகிய துரியோதனனைக் குறங்கினின்றும் உயிர்போக்கி நின்ற வீமசேனனையும்; புலியைக் குத்தி மாறுபாடு தீர்ந்து தன் சுற்றத்திற்கு நடுவே கூடித் திரியும் யானைக்கு, மல்லரது மறத்தினைக் கெடுத்தருளிய திருமாலையும்; காந்தளின் செவ்விய

1. கஜலக்ஷ்மியின் தோற்றம் இங்கே குறிக்கப்பட்டுள்ளது.

முகைக்கு, பகை வேழத்தின் நுதலினைக் குத்தி விளங்கும் யானையின் கொம்பையும்; தலைவி கண் பனி கலுழ்வதற்கு, கயல்மீன் நீருமிழ்வதையும்; தலைவியது நுதலின் வேறுபட்ட நிறத்திற்கு, பீர்க்கம் பூவின் நிறத்தையும்; தலைவியின் மெல்லிய விரலையுடைய கைக்கு, மலர்ந்த நறவம் பூவையும்; தலைவன் தலைவியின் கைகளையெடுத்துத் தன் கண்கள் மறையும்படி வைத்து வெய்தாக உயிர்ப்பதற்கு, கொல்லன் உலைமூக்கு வெவ்விதாக உயிர்ப்பதையும்; தலைவன் தலைவியின் மெய்ம் முழுதும் தடவி இன்புறுத்துவதற்கு, யானை தான் விரும்பிய பிடியை அருள் செய்வதையும்; பொன் வகிர்களை யணிந் திருக்கும் ஐம்பாலாகிய கூந்தலுக்கு, மின்னல்கள் இடையே பிளந்தோடும் கொண்மூவையும்; முத்துக்கள் பதித்த தொடி களுக்கு, வளர்ந்த தாமரை வளையத்தையும்; தோழியிடத்தே தன்குறை கூறுதற்குச் சென்ற தலைவன், பின்பு அதனைக் கைவிட்டு, அவள் முகத்தைப் பலமுறையாகப் பார்த்து நிற்பதற்கு, அறிவுடையோர் செல்வம் குன்றி வறுமையுற்றபொழுது தம் இடுக்கண் களையத் தக்க கேளிரிடஞ் சென்று, தம் குறையை அவர்க்கு வாய்விட்டுச் சொல்லத் தொடங்கிப் பின்பு சொல்ல மாட்டா திருப்பதனையும்; தலைவியின் முகத்தைச் சார்ந்து விளங்கும் கூந்தலுக்கு, மதியைப் பொருந்திய கரிய முகிலையும்; பின்னிய மயிரின்கண் நுண்ணிய நூலாற் கட்டிய மலர்களுக்கு, கரும் பாம்பிடத்தே அதன் கரிய நிறத்தோடு மாறுபட்டு விளங்கும் கார்த்திகை யென்னும் மீனையும் உவமை கூறியுள்ளன.

பின் வரும் செய்யுட் பகுதிகளில் உள்ள உவமைகளும் காண்க:

**‘ நில்லென நிறுத்தா னிறுத்தே வந்து**
**நுதலு முகனுந் தோளுங் கண்ணும்**
**இயலுஞ் சொல்லு நோக்குபு நினைஇ**
**ஐதேய்ந் தன்று பிறையு மன்று**
**மைதீர்ந் தன்று மதியு மன்று**
**வேயமன் றன்று மலையு மன்று**
**பூவமன் றன்று சுனையு மன்று**
**மெல்ல வியலு மயிலு மன்று**
**சொல்லத் தளருங் கிளியு மன்று**
**எனவாங்கு,**
**அனையன பலபா ராட்டி.’** **(குறிஞ்சி - 16)**

'அகன்மதி
*தீங்கதிர் விட்டது போல முகனமர்ந்*
*தீங்கே வருவா ளிவள்யார்கொ லாங்கேயோர்*
*வல்லவன் றைஇய பாலைகொல் நல்லார்*
*உறுப்பெலாங் கொண்டியற்றி யாள்கொல்*
*வெறுப்பினால்*
*வேண்டுருவங் கொண்டதோர் கூற்றங்கொல் ஆண்டார்*
*கடிதிவளைக் காவா விடுதல்.*

*' ஆய்தூவி யனமென வணிமயிற் பெடையெனத்*
*தூதுணம் புறவெனத் துதைந்தநின் னெழினலம்*
*மாதர்கொண் மானோக்கின் மடநல்லாய் நிற்கண்டார்ப்*
*பேதுறூஉ மென்பதை யறிதியோ வறியாயோ.'*

*' நுணங்கமைத் திரளென நுண்ணிழை யணையென*
*முழங்குநீர்ப் புணையென வமைந்தநின் றடமென்றோள்*
*வணங்கிறை வாலெயிற் றந்நல்லாய் நிற்கண்டார்க்*
*கணங்காகு மென்பதை யறிதியோ வறியாயோ.'*

*(குறிஞ்சி - 20)*

*வேயெனத் திரண்டதோள் வெறிகமழ் வணரைம்பால்*
*மான்வென்ற மடநோக்கின் மயிலியற் றளர்பொல்கி*
*ஆய்சிலம் பரியார்ப்ப வலிரொளி யிழையிமைப்பக்*
*கொடியென மின்னென வணங்கென யாதொன்றுந்*
*தெரிகல்லா விடையின்கட் கண்கவர் பொருங்கோட*
*வளமைசா லுயர்சிறப்பி னுந்தைதொல் வியனகர்*
*இளமையா னெறிபந்தோ டிகத்தந்தாய் கேளினி.*

*(குறிஞ்சி - 21)*

*வாருறு வணரைம்பால் வணங்கிறை நெடுமென்றோட்*
*பேரெழின் மலருண்கட் பிணையெழின் மானோக்கிற்*
*காரெதிர் தளிர்மேனிக் கவின்பெறு சுடர்நுதற்*
*கூரெயிற்று முகைவெண்பற் கொடிபுரையு நுசுப்பினாய்*

*(குறிஞ்சி - 21)*

*இனி, இதில் வந்துள்ள உள்ளுறை யுவமங்கள் பல. பாட்டின் முதலுறுப்பாகிய தரவுகளிற் பெரும்பாலன உள்ளுறை அமைந் தனவே. அவையனைத்தையும், காட்டலுறின் மிக விரியுமாதலின், சான்றாக ஒன்று காட்டுதும்.*

தோழியிற் கூட்டம் நிகழ்ந்த பின்னர், தோழியானவள் தலைவனை யெய்தி, 'நீ தலைவியை வரைந்து கொண்டு இல்லறம் நிகழ்த்துதல் வேண்டும்' என்பது தோன்றக் கூறுகின்றவள், 'வளைகின்ற மூங்கிலின் கோலை நெல்லுடனே வளைத்துத் தின்கின்ற பெண் யானை, இலை பொதுளிய வாழைகள் செறிந்த இடத்தே புகுந்து, பழத்தை நுகர்ந்து, வருடைமானின் மறி பரந்து திரிதரும் இடத்தில், விடியற் காலத்தே, துயில் கொள்ளும் வெற்பினையுடையானே' என்று விளிக்கின்றாள். மூங்கில் நெல் விளைந்திருப்பதும், வாழை செறிந்திருப்பதும், யானை அவற்றை யுண்பதும், வருடை மான் பரந்து திரிவதும் ஆகிய இவையெல்லாம் மலையிலே காணப்படுவன. இங்ஙனம் மலையியற்கை கூறு முகத்தால், தோழி தான் கருதிய வேறு பொருளைத் தலைவனுக்கு உணர்த்துகின்றாள். 'முன் தம்மிடத்துத் தாழ்ந்து நின்ற அரிய தலைவனைத் தலைவி இப்பொழுது பெற்று நுகருந் தன்மையும், அவன் வரைந்து கொண்டுழி, அவள் அவனது மனைக்கண் நலிவற இருந்து இன்பந் துய்த்து, அவன் சுற்றத்திடை இல்லறம் நிகழ்த்தித் தங்குந் தன்மையும்' தோழி கருதிய உள்ளுறையாகும். 'மூங்கிலை மிசைந்த பிடி, தம்மிடத்துத் தாழ்ந்த தலைவனைப் பெற்று நுகர்ந்த தலைவியாகவும், பின்னர் அது வாழைச் செறிவிலே புகுந்து பழத்தை நுகர்ந்த தன்மை, அவன் வரைந்து கொண்டுழி, அவள் மனைக்கண் நலிவற இருந்து அவனை நுகர்ந்ததாகவும், புலி முதலியனவின்றி மறி பரந்து திரியுமிடத்தே துயிலுதல், அலர் கூறுவாரின்றி அவனது சுற்றத்திடை இல்லறம் நிகழ்த்தித் தங்குந் தன்மையாகவும் உள்ளுறை யுவமங் கொள்க.' இங்ஙனம் அளவின்றிக் கிடக்கும் உள்ளுறையும், வெளிப்படையும் ஆன உவமைகளின் பெற்றியை ஆராய்ந்து காணுங்கால், அக் காலத்துப் புலவராயினார் எவ்வளவு நுண்ணறிவு வளமும், செந்நா வன்மையும் படைத்த மேதக்கோ ரென்பதும், தமிழ் மொழி எத்துணைச் செவ்வியும், சுவையும், சீர்மையும், கூர்மையும் பொருந்தியிருந்த தென்பதும் யாவர்க்கும் புலனாம்.

இனி, இதில் நாடகத்திற்கு இன்றியமையாத இன்பச் சுவையும் நகைச் சுவையும் தோற்றுவிக்கும் தொடர்கள் ஆண்டாண்டுக் காணப்படுகின்றன. அவற்றுட் சிலவற்றை உரைப்படுத்துக் காட்டுதும்.

களவிற் கூட்டத்தின் பின்பு, தலைவன் மணம் பேசியதற்குத் தமர் ஒருவாற்றால் உடன்பட்டமையைத் தோழி தலைவிக்குக் கூறித் தானும் அவளும் வரைவு கடிதின் முடிதற் பொருட்டு

வரையுறை தெய்வத்திற்குக் குரவையாடுங்கால் பாடிய **'கொண்டு நிலை'**களில், தோழியானவள் தலைவியை நோக்கி, 'மலை நாடனாகிய தலைவனும் நீயும் கலியாண காலத்தே பண்டு ஒருவரை யொருவர் கண்டறியாதீர் போல நடப்பீர்களோ! யானும் உங்கள் பழங் கேண்மையைக் கண்டறியாதேன் போல் மறைப்பேன்மன்!' என்று கூறியவள், பின்பு, 'தலைவன் மணக் கோலத்தைக் காணாமல் கையால் மறைக்கப்படும் கண்களும் கண்களென்று கூறப்படுமோ?' என்றாள்; அது கேட்ட தலைவி 'ஏடி! யான் நின்னுடைய கண்ணாலே தலைவன் கோலத்தை மிகவும் காண்பேனன்றோ?' என்றாள். அதற்குத் தோழி, 'அப்படி யாயின், நெய்த லிதழ்போலும் நின்கண் தானே என்கண் ஆவதாக!' என்று கூறி மகிழ்ந்தனள்; என்னும் கருத்துக்கள் உள்ளன (குறிஞ்சி - 3).

தலைவியானவள் தலைவனுடைய காட்சி விருப்பும், ஆற்றாமையும், தனது வேட்கையும் புலனாமாறு தோழிக்குக் கூறிற்றாகவுள்ள ஓர் பாட்டின் பொழிப்பு: "ஒண்டொடீஇ, ஈதொன்றைக் கேட்பாயாக; தெருவின்கண் நாம் விளையாடும் மணலாற் செய்த சிற்றிலைக் காலால் அழித்தும், நம் கூந்தலின் மாலையைக் கையால் அறுத்தும், விளையாடும் பந்தினை யெடுத்துக் கொண்டு ஓடியும், நாம் நோவத் தக்க தொழில்களைச் செய்யும் சிறு பட்டியானவன், முன்னொரு நாள் அன்னையும் யானும் ஒருங்கிருந்த வளவிலே வந்து, 'இல்லில் உறைவோர்களே! நீர் வேட்கை யுடையேன்' என்று கூறினான்; கூற, அன்னையும், 'அவனுக்கு உண்ணு நீரைப் பொன் வள்ளத்தால் ஊட்டி வா' என்று சொன்னமையின், யானும் அவனுடைய பட்டிமையை அறியாது சென்றேன்; சென்ற பின், அவன் என்னுடைய வளையணிந்த முன் கையைப் பற்றி, என்னை நலிந்தமையால், யான் அலமந்து, 'தாயே! இவனொருவன் செய்ததனைப் பாராய்' என்று கூவினேன்; உடனே தாய் அலறிக் கொண்டு ஓடிவர, யான் அவன் செய்ததனை மறைத்து, 'உண்ணு நீர் விக்கி வருந்தினான் காண்' என்று ஒரு பொய் கூறினேன்; தாயும் அவனது முதுகைப் பலகால் அழித்தழித்துத் தடவ, அவ் வஞ்சகன்றான், என்னைத் தன் கடைக்கண்ணாலே கொல்வான் போற் பார்த்து, நகைக் கூட்டம் செய்து சென்றான்; இது காண் நிகழ்ந்தது என்று தலைவி தோழிக்குக் கூறினாள்" என்பது. (குறிஞ்சி - 15).

தலைவன் தம் வேட்கை மிகுதியால் நிகழ்த்தியன இவை யென்று தலைவி தோழிக்குக் கூறுவாளாய், "தோழி! அவன்றான், 'பொற்பூவாற் செய்த கோதையும், தொடி செறிந்த முன்கையும்,

அணைபோலும் மென்றோளும் உடையாய்! நின் அடியிலே யான் உறைதற்கு நீ அருளாதிருத்தல் நினக்குப் பொருந்திய தொன்றோ?' என்று கூறி, கரிய கூந்தலின் முடியை இடைவிடாது மிகப்பிடித்து, அதில் நலமுறக் கட்டின ஒரு மாலையை விரலால் முறையாகச் சுற்றி, அதனை மோந்து பார்த்தலுஞ் செய்தான்; அதுவேயன்றி, நறவம்பூ அலர்ந்தாற் போலும் என் மெல்லிய கையைத் தாங்கிக்கொண்டு, அருள் பொருந்திய தம் சிவந்த கண் மறையும்படி வைத்துக் கொல்லன் உலைமூக்குப் போல வெவ்விதாக உயிர்தலுஞ் செய்தான்; அதுவேயன்றி, தொய்யில் எழுதின மார்பை இனியவாகத் தடவி அத்தொய்யிலைக் கொண்டு வந்த தடக்கையாலே, தான் விரும்பின பிடியை அருள் செய்யும் மதயானை போல மெய்ம் முழுதினையும் தடவுதலுஞ் செய்தான்; அச்செயலால் யான் கைப்பட்டுக் கலங்கிய வருத்தத்தைப் போக்கினேன் என்றாள்." (குறிஞ்சி - 18.)

தலைவனும், தலைவியும் உறழ்ந்து கூறும் பகுதி: "இவனொருத்தன், தன்னோடு கூடுங் குறிப்பின்றி நிற்பாரையும், தான் கூடுங் குறிப்புடையனாய்க் கையாலே வலிதிற் பிடித்துக்கொள்ளும், ஆதலால், ஏஎ! நாணிலனாயிருந்தான்" எனத் தலைவி கூறினாள்; அது கேட்ட தலைவன், 'அக்குறிப்பால் நிகழ்வனவெல்லாம் நீ அறிவாய்; யான் அறியேன். மெல்லிய பூங் கொத்துக்களையுடைய கொடியை யொப்பாய்! நின் மேனி புல்லுதற்கு இனிதாயிருத்தலால் நின்னை யான் புல்லினேன்' என்றான்; என்றலும் தலைவி, 'ஏடா! தமக்கு இனிதாயிருக்கு மென்று கருதிப் பிறர்க்கு இன்னாவற்றை வலிதிற் செய்வது இன்பத்தைத் தருமோ?' என்றாள்; அதனைக் கேட்ட தலைவன், 'சுடர்த் தொடீஇ! நின் முதுக்குறைவினை ஈண்டுப் போற்றாது கைவிடு; யான் கூறுகின்றதனைப் பேணிக் கேள்; நீருண்பார் சிலர், வேட்கையுற்ற தமக்கு அஃது இனிதாயின் உண்பதல்லது, அந்நீர்க்கு இனிதாயிருக்குமென்று உண்பரோ? உண்ணார் காண்' என்றான்" என்பது. (குறிஞ்சி - 26)

'திருந்திழாய் கேளாய்' என்னும் இறுதிப்பாட்டில் தோழி புனைந்துரை வகையாற் படைத்து மொழியுந் திறனும், ஆண்டுத் தோன்றும் சுவையுமெல்லாம் படித்தறிந்தின்புறற் பாலன.

இனி, தலைவியும் தோழியும் வள்ளைப்பாட்டிலே, நெல் முதலிய குற்றும் இயல்பு, 'முற்றி வளைந்த தினைக் கதிரை யுருவிச் சந்தன மரத்தாற் செய்த உரலிலே பெய்து, யானைக் கொம்பாற் செய்த உலக்கையாற் குற்றி, தலைவனை விளித்துப் பாடுவேம்'

(4) என்றும், 'மூங்கிலின் நெல்லைப் பாறையாகிய உரலிலே பெய்து, யானைக் கொம்பு உலக்கையாகக் குற்றி, நல்ல சேம்பினிலை சுளகாகப் புடைத்து, பாடுவேமாக' (5) என்றும், 'ஐவனமாகிய வெண்ணெல்லைப் பாறையாகிய உரலிலே சொரிந்து, புலியைக் கொன்ற யானையின் கொம்பாலும், சந்தன மரத்தாலும் செய்த உலக்கைகளாலே குற்றி, மலை பொருந்திய நாட்டை யுடையானைப் பாடுவேம்' (7) என்றும் பலபடியாக அணிந்துரைக்கப் பட்டுள்ளது.

இனி, இதில், தலைவன் பண்பும், தலைவி பண்புமாகக் கூறியுள்ள சிற்சில தொடர்கள் அறிந்து மகிழற்பாலன. தலைவன், தலைவி என்போர் ஆசிரியனாற் படைத்துக் கொள்ளப் பெற்றோரே யெனினும், அக்காலத்து நன் மக்களின் இயல்புகளே அங்ஙனம் அவர்கள் மேல்வைத்து விளக்கப்படுகின்றன என்பது ஒருதலை.

தலைவன் பண்பு,

**' தன்னுற்றார் இடுக்கண் டவிர்ப்பான்'**

என்றும்,

**' ஓர்வுற் றொருதிற மொல்காத நேர்கோ**
**லறம்புரி நெஞ்சத் தவன்'**

என்றும்,

**' தன்மலை**
**நீரினுஞ் சாய லுடையன் நயந்தோர்க்குத்**
**தேரீயும் வண்கை யவன்'**

என்றும்,

**' அஞ்சுவ தஞ்சா அறனிலி யல்லன்'**

என்றும்,

**'பகையெனில்**
**கூற்றம் வரினுந் தொலையான்றன் நட்டார்க்குத்**
**தோற்றலை நாணா தோன்'**

என்றும்,

**' மாறுகொண் டாற்றா ரெனினும் பிறர்குற்றம்**
**கூறுதல் தேற்றாதோன்'**

என்றும்,

***'இடும்பையால்***
***இன்மையுரைத்தாற் கதுநிறைக்க லாற்றாக்கால்***
***தன்மெய் துறப்பான்!'***

என்றும்,

***'உலகம்***
***புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்***
***வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போல்***
***நல்லார்கட் டோன்று மடக்கமு முடையன்***
***இல்லோர் புன்கண் ஈகையிற் றணிக்க***
***வல்லான் போல்வதோர் வன்மையு முடையன்'***

என்றும் கூறப்பட்டிருக்கின்றன.

***தலைவி பண்பு,***
***'அருமழை தரல் வேண்டில் தருகிற்கும் பெருமையள்'***

என்று கூறப்பட்டுள்ளது.

முன் எடுத்துக் காட்டிய, 'தன்மலை நீரினுஞ் சாயலுடையன் நயந்தோர்க்குத் தேரீயும் வண்கையவன்' என்னும் தொடரும்,

***நீயே, வளியின் இகன்மிகுந் தேரும் களிறும்,***
***தளியிற் சிறந்தனை வந்த புலவர்க்கு,***
***அளியோடு கைதூவலை.***

என்னும் தொடரும், வேறுசில தொடர்களும், கபிலர், தம் அரும் பெறல் நண்பனாகிய வேள்பாரியை உளத்திற் கொண்டு பாடியன வாகல் வேண்டும். என்னை? பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீரும், அவனது மாரியனைய வண்மையும், தேர்க் கொடையும் வேறு பல்லிடத்தும் எடுத்துரைக்கப்படுதலின் என்க.

மற்று இவர், 'பூந்தண்டார்ப் புலர் சாந்திற் றென்னவனுயர் கூடல்' என்றும், 'பொழிபெயல் வண்மையான் அசோகந் தண்கா வினுள்' என்றும் கூறுவன, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் போல்வானோர் பாண்டியன் அப்பொழுது வள்ளியோனாய் விளங்கினன் என்பது குறிப்பனவாம்.

***' மன்னா வுலகத்து மன்னியது புரைமே'***

எனவும்,

***' ஈத லிரந்தாற்கொன் றாற்றாது வாழ்தலிற்***
***சாதலுங் கூடுமோ மற்று'***

*எனவும் போந்த தொடர்களும் இங்கே அறிதரற் பாலன.*

*இங்கெடுத்துக் காட்டிய தொடர்களில் பலவற்றின் கருத்துக்கள் பின்வரும் குறட்பாக்களிலும் ஒருவாறு அமைந் திருத்தல் காண்க.*

***' உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே***
***யிடுக்கண் களைவதா நட்பு.'***

***' சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்***
***கோடாமை சான்றோர்க் கணி. '***

***' அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ***
***தஞ்ச லறிவார் தொழில். '***

***'கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கும்***
***ஆற்ற லதுவே படை.'***

***' துன்னியார் குற்றமுந் தூற்று மரபினார்***
***என்னைகொ லேதிலார் மாட்டு.'***

***' சாதலி னின்னாத தில்லை யினிததூஉம்***
***ஈத லியையாக் கடை. '***

***' தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்***
***பெய்யெனப் பெய்யு மழை.'***

*இனி, தமர் வரைவு மறுத்துழித், தோழி முதலியோர் அறத்தொடு நிற்குங்கால், 'இம்மலையில் வாழ்வார், முன் உயிருதவி புரிந்த தலைவற்குத் தலைவியைக் கொடுக்க நினையாது நொதுமலர்க்குக் கொடுக்க நினைந்து, அறம் அல்லன விரும்பி யொழுகுதலின், இனி, இவ்விடத்து வள்ளியும் கிழங்கு விழா; மலை மிசையில் தேனும் தொடா; கொல்லையில் தினைகளும் கதிர்வாங்கி யீனா' என்றும், 'மலையிடத்துக் குறவர் மடமகளிர், தாம் தம் கணவரைப் பிழையாராய், அவரே தெய்வமென்று வணங்கி யெழுதலால், அவருடைய ஐயன்மார் தாமும் தாம் தொடுத்த அம்புகள் பிழையாராயினார்' என்றும் கூறியிருப்பன வியக்கற்பாலன. வேட்டமாடுந் தொழிலுடைய மலைவாழ்நர் மகளிர், இத்துணை உறுதியான கற்புடையராயும், அறத்தின் நுட்பங்களை அறிந்தோராயும் இருந்தாரென்னில், இந்நாட்டு மகளிரது பெருமையை யாதென்று உரைக்கலாகும்?*

இனி, இதில் சிறுமகளிர் தைத்திங்களில் நீராடுதலும், பிறர் மனையின் கண்ணே சென்று, பாடி, ஐயமேற்று, ஆண்டுப் பெற்ற வற்றைப் பிறர்க்கு அளித்தலும், குழ மகனை (பொம்மையை) வளர்த்து, அவனுக்குப் பெண் கோடற்குச் சிறுசோறு சமைத்து, ஆயத்திற்கிட்டு மகிழ்தலும் என்னும் மூவகை நோன்புகள் கூறப்பட்டுள.

'நல்கூர்ந்தார் செல்வமகள்' என்று தலைவி அருமை பாராட்டிக் கூறப்படுகிறாள். 'பிள்ளையால் மிடிப்பட்டாருடைய செல்வத்தையுடைய மகள்' என்பது இதன் பொருளாம்.

'நெறியறி செறிகுறி புரிதிரி பறியா வறிவன்' என்று கணி கூறப்படுகிறான். 'நூனெறியாலே அந்த இருவரும் கூடுதற் கேதுவாகிய முழுத்தம் வேறுபட்டுத் தப்புதலை, ஒருகாலத்தும் அறியாத கணி' (சோதிடன்) என்பது இதன் பொருளாம்.

'பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை வெரூஉம் புலிதாக் குறின்' என்று தமிழ் மறை கூறுதற்கு வேறாக, வேழம் புலியினைப் போர் தொலைத்த செய்தி பல்காற் கூறப்படுகின்றது.

'என் செய்வாம்' என்றார்க்குப் 'பொன்செய்வாம்' என்பது ஓர் நாகைக் குறிப்பு மொழியாகக் கூறப்பட்டுளது.

மெய் தொட்டுச் சூளுறுதல் கூறியுள்ளது.

கயிலைமலையிலே, இறைவன் இறைவியோடிருக்க, இராவணன் அதனை யெடுக்கலுற்றதும், யானைகள் பூவோடு கூடிய நீரை மேலே சொரியா நிற்கச் செந்தாமரை மலரின் அகவிதழில் திருமகள் வீற்றிருப்பதும், நூற்றுவர் தலைவனாகிய துரியோதனனை, வீமன் குறங்கிலடித்து உயிர் செகுத்ததும், திருமால் மல்லரது மறத்தைக் கெடுத்ததும் ஆகிய புராண விதிகாச கதைகளும், வாரணவாசி யென்னும் ஊரிலுள்ளாரது அருளும் கூறப்பட்டுள்ளன.

இதிலுள்ள திரிசொற்களைக் காணுங்கால், இவ்வாசிரியர், சொற்களைத் தம் வழிப்படுத்து ஆண்டுளார் என்பது புலனாம். 'உரைத்தைக்காண், பாடித்தை, சிதைத்ததை, கேட்டீ, வருவதை, இறந்தீவாய், இகத்தந்தாய், அறிந்தீ யாது, போத்தந்த, இகத்தர, இஃதொத்தன், மறாதீவாள், வந்தை, கண்டை, தின்றி, கொண்டீ, என்பன காண்க. இவை முறையே உரைத்துக்காண், பாடு, சிதைத்தது, கேள், வருவது, இறப்பாய், இகந்தாய், அறியாது, போதல் தந்த, இகக்க, இவனொருத்தன், மறாள், வா, காண், தின், கொள்;' என்பவற்றின் திரிபாகும்.

*பின்வரும் பாட்டுக்களிலுள்ள இயற்கை நவிற்சியும், பிற அழகும் ஓர்ந்து கொள்க.*

## கொச்சகவுறுப்பு

*' இடியுமிழ் பிரங்கிய விரவுப்பெய னடுநாட்*
*கொடிவிடு பிருளிய மின்னுச்செய் விளக்கத்துப்*
*பிடியொடு மேயுஞ் செய்புன் யானை*
*அடியொதுங் கியக்கங் கேட்ட கானவன்*
*நெடுவரை யாசினிப் பணவை யேறிக்*
*கடுவிசைக் கவணையிற் கல்கை விடுதலின்*
*இறுவரை வேங்கையி னொள்வீ சிதறி*
*ஆசினி மென்பழ மழிந்தவை யுதிராத்*
*தேன்செ யிறாஅல் தளைபடப் போகி*
*நறுவடி மாவின் பைந்துண ருழக்கிக்*
*குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப்*
*பலவின் பழத்திற் றங்கு மலைகெழு வெற்பனைப்*
*பாடுகம் வாவாழி தோழிநற் றோழி பாடுற்று '* *(5)*

*' இமயவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தணன்*
*உமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக*
*ஐயிரு தலையி னரக்கர் கோமான்*
*தொடிபொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை*
*எடுக்கல் செல்லா துழுப்பவன் போல*
*உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்*
*கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை*
*நீடிரு விடரகஞ் சிலம்பக் கூய்த்தன்*
*கோடுபுய்க் கல்லா துழக்கு நாட கேள்!*

*ஆரிடை யென்னாய்நீ யரவஞ்சாய் வந்தக்கால்*
*நீரற்ற புலமேபோற் புல்லென்றாள் வைகறை*
*கார்பெற்ற புலமேபோற் கவின்பெறு மக்கவின்*
*தீராமற் காப்பதோர் திறனுண்டே லுரைத்தைக்காண்!*

*இருளிடை யென்னாய்நீ யிரவஞ்சாய் வந்தக்காற்*
*பொருளில்லா னிளமையோற் புல்லென்றாள் வைகறை*
*அருள்வல்லா னாக்கம்போ லணிபெறு மவ்வணி*
*தெருளாமற் காப்பதோர் திறனுண்டே லுரைத்தைக்காண்!*

*மறந்திருந்தா ரென்னாய்நீ மலையிடை வந்தக்கால்*
*அறஞ்சாரான் மூப்பேபோ லழிதக்காள் வைகறை*

*திறஞ்சேர்ந்தா னாக்கம்போற் றிருத்தகு மத்திருப்*
*புறங்கூற்றுத் தீர்ப்பதோர் பொருளுண்டே லுரைத்தைக் காண்!*

*எனவாங்கு,*

*நின்னுறு விழுமங் கூறக் கேட்டு*
*வருமே தோழி நன்மலை நாடன்*
*வேங்கை விரிவிட நோக்கி*
*வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே’* (2)

# 6. மற்றைய அகப்பகுதிகள்

## நற்றிணை

எட்டுத்தொகையுள் ஒன்றாகிய இந்நூல் கடவுள் வாழ்த்து உட்பட நானூற்றொரு அகவற்பாக்களையுடையது; அகத்தின் பகுதிகளையே பொருளாக வுடையது. இதிலுள்ள பாக்களெல்லாம் ஒன்பதடிச் சிறுமையும், பன்னிரண்டடிப் பெருமையும் உள்ளன. இதில் இருபது பாட்டுக் கபிலர் பாடியன.

இப்பாக்களில், தலைமக்களின் கேண்மைக்கு, தாமரையின் தண்ணிய தாதினையூதிச் சந்தனமரத்தில் வைக்கப்பட்ட தேனும்; தலைவி, தலைவனையின்றி யமையாமைக்கு, உலகம் நீரையின்றி யமையாமையும்; தலைவியின் செவ்வரி பரந்த கண்களுக்கு, ஏனல் காவலர் விலங்கினை யெய்து பறித்த பகழியும்; வேங்கையின் மலருதிர்தற்கு, கொல்லன் உலைக்களத்து அடிக்கும் இரும்பின் பொறி சிதறுதலும்; மலைக்கு, மாயோனும்; மலைப்பக்கத்து ஒழுகும் அருவிக்கு, வாலியோனான பலதேவனும்; களிற்றி யானை காணுந்தோறும் பொலிந்து விளங்குதற்கு, புகழுண்டாக வாழ்வாருடைய செல்வம் பொலிதலும்; கடுஞ்சினத்துடன் போர்செய்த வலிமிக்க யானைக்கு, முருகவேளும்; வாழை அப்பொழுது ஈன்ற கூரிய முகைக்கு, யானையின் குருதி படிந்த கொம்பும்; வாழைப்பூவுக்கு, மகளிரது கூந்தலும்; தலைவனது வெய்துயிர்ப்புக்கு, படுக்கையிலே கிடந்த யானையின் உயிர்ப்பும்; ஞெண்டின் கண்ணுக்கு, நொச்சியின் கரிய அரும்பும்; ஞெண்டின் கூட்டம் ஞாழலின் உதிர்ந்த மலரைக் காலால் வரித்துக் கோலஞ் செய்தற்கு, மகளிர் வெயிலிலே காயுந் தினையைக் கைவிரலாலே துழவுதலும்; மீனைத் தின்னுமாறு வந்து கூடும் புட்களின் குரலுக்கு, சிறிய நாவையுடைய மணியின் தெளிந்த ஓசையும்; நீர் வற்றிய சேற்றிலுள்ள கொழுவிய மீனை நுகர்தற் பொருட்டு மணன் மேட்டிலே கூடியிருக்கும் நாரை களுக்கு, அரசரது படைத் தொகுதியும்; காற்றால் அலைகின்ற முகிலுக்கு, நூற்கின்ற நுண்ணிய பஞ்சும் உவமிக்கப்பட்டுள்ளன.

தலைவி யானவள் பாரியின் பறம்புமலை போலப் பெருங்கவி னெய்தினமையால், அரிய காவலை யுடைய

*ளாயினாள் என்றும்; தலைவியின் அழகு, முள்ளூர் மன்னனாகிய மலையமான் திருமுடிக்காரி பரியேறிச் சென்று; இரவிலே அடித்துக் கொண்டுவந்த ஆனிரைக்குரியோர் அவனோ டெதிர்த்துப் போர் முனையில் அழிந்தாற்போல், அழிந்தது என்றும்; கொல்லிமலைத் தலைவனாகிய வல்வில்லோரியைக் கொன்ற திருமுடிக்காரியானவன், உடனே அவ்வோரியின் பெருந் தெருவிலே புகுந்ததைக் கண்ட ஓரியைச் சார்ந்தார் யாவரும் ஒரு சேர நின்று, பேரிரைச்சலிட்டாற் போல, இவ்வூரிலே கல்லென்னும் நகையொலியுண்டாயிற்று என்றும்; கூறப் பெற்றுள்ளன.* **கிடங்கில்** *என்ற ஊரும் சிறப்பிக்கப் பெற்றுளது.*

**'ஆளில்** *பெண்டிர் தாளிற் செய்த, நுணங்கு நுண்பனுவல்' என்னும் தொடர் நினைவு கூரத்தக்கது. கணவனை யிழந்த கைம்மை மகளிர் தம் உயிர்வாழ்க்கைக்கு வேண்டும் பொருளின் பொருட்டு முயன்று நூற்கின்ற மிக நுண்ணிய பஞ்சு என்பது இதன் பொருள். புறப்பாட்டிலும், 'பருத்திப் பெண்டின் பனுவல்' என்று கூறப்பெற்றுள்ளது. அக்காலத்து இல்லிலிருந்து மகளிரும் புரிந்து சிறப்பெய்திய இத்தொழில் இப்பொழுது நம் நாட்டில் அருகினது பெரிதும் இரங்கத்தக்கது. மலையினிடத்தே துயில் கின்ற பிடியின் பக்கத்தில் மேகம் மறைத்தலால், ஆண்யானை அதனைக் காணப்பெறாது பிளிறா நிற்கும் என்றும்; மலைச் சாரலில் உழுதொழில் புரியும் குறவரது இளமகளிர் கரிய விரலையுடைய மந்தியை விருந்தாக ஏற்றுக் கொண்டு, குடம் போலும் பலாப்பழத்தின் சுளையை அதற்கு அளிப்பர் என்றும் கூறியிருப்பன வியக்கற் பாலன. காட்டகத்து வேட்டுவன் பெறும் உணவுப் பொருள்களும் (59), தலைவி கிளியைத் தூது விடுதலும் (376) நன்றாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றிலுள்ள உள்ளுறை யுவமங்களெல்லாம் வியக்கற் பாலனவே.*

*'நீரின்றமையா வுலகம் போல', 'பெரியோர் நாடி நட்பினல்லது - நட்டு நாடார்தம் மொட்டியோர் திறத்தே' என்னும் தொடர்கள்,*

***' நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்***
***வானின் றமையா தொழுக்கு.'***

***' நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்***
***வீடில்லை நட்பாள் பவர்க்கு.'***

*என்னும் குறட்பாக்களின் கருத்தைத் தழுவியுள்ளன.*

*நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்*
*என்று மென்றோள் பிரிபறி யலரே*
*தாமரைத் தண்டா தூதி மீமிசைச்*
*சாந்திற் றொடுத்த தீந்தேன் போலப்*
*புரைய மன்ற புரையோர் கேண்மை*
*நீரின் றமையா வுலகம் போலத்*
*தம்மின் றமையா நந்நயந் தருளி*
*நறுநுதல் பசத்த லஞ்சிச்*
*சிறுமை யுறுபவோ செய்பறி யலரே.*

## குறுந்தொகை

எட்டுத்தொகையுள் ஒன்றாகிய இந்நூல் கடவுள் வாழ்த்து உட்பட நாநூற்றிரண்டு அகவற்பாக்களையுடையது. இதிலுள்ள பாக்களெல்லாம் நான்கடிச் சிறுமையும், எட்டடிப் பெருமையும் உள்ளன. இதில் கபிலர் பாடியன இருபத்தொன்பது பாட்டு.

இவற்றில், சிறுமலைக்கு, யானையும்; நாரையின் சிறிய பசிய காலுக்கு, தினையின் தாளும்; மலையினின்று இழியும் அருவிக்கு, இற்றி மரத்தினது கல்லிடத்தே பரவிய வெள்ளிய வேரும்; [1]தலைவன் பெருமூச்சுக்கு, பாதியிரவில் துயிலும் யானையின் உயிர்ப்பும்; தாமரை யிலைக்கு, களிற்றின் செவியும் உவமையாக வந்துள்ளன. சிறிய கோட்டில் பெரிய பழம் தூங்கினாற் போன்று, தலைவியின் உயிர் மிகச் சிறிது, அவளுற்ற காமம் மிகப் பெரிது என்றும்; தலைவியின் நீரையொத்த சாயல், தலைவனது தீயையொத்த மனவலியைக் கெடுத்திட்டது என்றும் கூறப்பட்டுள. தலைவிக்குக் கொல்லி மலையிலுள்ள பாவை உவமிக்கப் பட்டுளது. மிளகின் றழையைக் குரங்கு அருந்தும் என்று கூறியிருக்கிறது. மற்றும், இவ்வாசிரியர், 'கேடுற்றவிடத்துச் செய்த உதவியை அரசுரிமைச் சிறப்பெய்தி மறந்த மன்னன் போல நன்றி மறந்தனையாயின்' என்று தோழி தலைவற்குக் கூறுவ தாகவும்; 'தலைவனது கேண்மையால் வந்த இன்னாமையினும் துறக்கவின்பம் இனிதாமோ' என்றும், 'அன்னை செய்த உதவிக்கு உயர் நிலைஉலகமும் ஆற்றுதற் கரிது' என்றும் தலைவி தோழிக்குக் கூறுவதாகவும் கூறியுள்ளார். சிறுகுடி பசிப்பின் யானையின் கொம்புகளை விற்று உண்பிக்கும் ஓரி யென்பானது கொல்லிமலை என்கின்றார். மலையனது முள்ளூர்க் கானத்தைப் பலவிடத்துச் சிறப்பித் தோதுகிறார். இவர் கூறிய, 'கானமஞ்ஞை

1. இவ்வுவமை நற்றிணையிலும் இவர் கூறியிருப்பது காண்க.

*யறையீன் முட்டை, வெயிலாடு முசுவின் குருளை யுருட்டுங், குன்றநாடன்' என்பதன் கருத்து,'வந்தாய் பவரையில்லாமயின் முட்டை யிளையமந்தி, பந்தா டிரும்பொழிற் பல்வரை நாடன்' என மாணிக்கவாசகப் பெருமானால் திருச் சிற்றம்பலக் கோவையாரில் எடுத்தாளப் பெற்றது.*

## ஐங்குறுநூறு

*எட்டுத் தொகையுள் ஒன்றாகிய இந்நூல் அகத்தின் பகுதி யாகிய மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்னும் திணைகள் ஒவ்வொன்றனையும் பற்றித் தனித்தனி கூறும் நூறு நூறு அகவற் பாக்களை யுடையது. இவ்வைந்து நூற்றையும் இயற்றினார் முறையே ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் என்போர்.[1] மற்றைத் தொகைகளில் போலவே, பாரதம் பாடிய பெருந்தேவனாரியற்றிய கடவுள் வாழ்த்து இதில் முதற்கண் உள்ளது. இதிலுள்ள பாக்களெல்லாம் மூன்றடிச் சிற்றளவும், ஆறடிப் பேரளவும் உள்ளன. இதன் ஒவ்வொரு நூறும் பப்பத்துப் பாக்கள் ஒல்வொரு தன்மையினவாக இயன்றுள்ளன. கபிலர் பாடிய குறிஞ்சிப் பகுதியில் உள்ள பத்துக்கள், முறையே அன்னாய் வாழிப் பத்து, அன்னாய்ப் பத்து, அம்மவாழிப் பத்து, தெய்யோப் பத்து, வெறிப்பத்து. குன்றக்குறவன் பத்து, கேழற் பத்து, குரக்குப்பத்து, கிள்ளைப்பத்து, மஞ்ஞைப்பத்து என்பனவாகும். இவற்றின் இவ்வொரு பாட்டிலும் 'அன்னாய் வாழி' என்பது முதலிய சொற்களேனும், அவற்றின் பரியாயச் சொற்களேனும் வருதலின், இவை இப்பெயரின வாயின. இதிலுள்ள பாக்களெல்லாம் சொற்சுவை, பொருட்சுவை துவன்றிக் கற்பார்க்குக் கழிபேரினிமை பயப்பன. இயற்கை வளங்களை யெழில் பெற விளக்குவன.*

***அன்னாய் வாழிவேண் டன்னைநம் படப்பைத்***
***தேன்மயங்கு பாலினு மினிய வவர்நாட்***
***டுவலைக் கூவற் கீழ***
***மானுண் டெஞ்சிய கலிழி நீரே.***

1. இதனை,

மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்
கருதுங் குறிஞ்சி கபிலன் – கருதிய
பாலையோத லாந்தை பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு.

என்னும் வெண்பாவானறிக.

இவ்வொரு பாட்டிலிருந்தே இந்நூலின் அருமை, பெருமைகளைத் தெரிந்து கொள்ளலாகும். தலைவனுடன் அவனூர்க்குச் சென்று மீண்ட தலைமகள், 'நீ சென்ற நாடு எவ்வியல்பிற்று?' என வினாவிய தோழிக்குக் கூறியது இது. இதன் பொருள்: 'அன்னையே! வாழ்வாயாக! யான் சொல்லு மிதனை விரும்பிக் கேள். அன்னை! நம் மலைப் பக்கத்து இறாலினின்றும் பிழிந்தெடுத்த தேன் கலந்த பாலினுங் காட்டில், நம் தலைவர் நாட்டிலே தழைகள் விழுந்து அழுகிக் கிடக்கும் சிறு குழிகளின் கீழிடத்தவாய், விலங்குகளால் உண்ணப்பட்டு எஞ்சியுள்ள கலங்கற் சின்னீர்கள் எனக்கு மிக்க இனிமையுடையன காண்.' என்று தலைவி கூறினாள் என்பது. தலைவரது நாடு இதுவே போற் சிறந்தது என்றேனும், இதனினும் சிறந்தது என்றேனும் தலைவி கூறியிருப்பின், அவட்குத் தலைவன் பாலுள்ள அன்பு ஒரு சிறிதும் விளங்குவ தின்று. 'தலைவரது நாடு எவ்வியல்பிற்று எனினும், அதுவே எனக்குச் சிறந்ததாவது' என்று கூறுவதே தலைவியின் அன்பின் திறனைப் புலப்படுப்பதாகும். அதனையே, 'அவர் நாட்டு உவலைக் கூவற் கீழ மானுண்டு எஞ்சிய கலிழிநீர் நம் படப்பைத் தேன் மயங்கு பாலினும் இனிய' என்று இங்ஙனம் கூறினாள். தழைகள் அழுகிக் கிடக்கும் சேற்றிடத்தில், விலங்குகள் உண்ணக் கலங்கிய சிறிய நீரை, இறப்ப இழிந்தாரும் எத்துணை நீர் வேட்கையுற்ற பொழுதும் உண்ணுதற்கு அருவரா நிற்பர். உண்ணின், அஃது அப்பொழுது இனிமை சிறிதும் இலதாதலே யன்றிப் பின்பு பல பிணியும் உண்டாக்கிப் பெருந்துன்பத்தை விளைப்பதுமாகும். தேனும், பாலும் தனித்தனி மிக்க இனிமை யுடையவாய், எத்துணைப் பெரியாராலும் விரும்பி யுண்ணப்படுவன. அவற்றுள் ஒன்று மற்றையதுடன் கலக்கப்பெறின், அக்கலவை பருகுதற்கு அதன் மேலும் இனிமையுடைத்தாகும். அவ்வளவன்றி, அஃது உடம்பிற்கு உறுதி பயந்து, பிற் பொழுதுகளில் இன்பம் விளைப்பது மாகும். 'கலங்கற் சின்னீர் தெருளாமையால் உண்பான்' என்னும் இறையனாரகப் பொருளுரையும், 'பாலொடு தேன் கலந்தற்றே' என்னும் திருக்குறளும் இங்கு நினைக்கற்பாலன. இவ்வாற்றால், யாவரானும் வெறுக்கத்தகும் கலங்கல் நீர், யாவரானும் விரும்பத் தகும் தேன்பாற் கலவையினும் தலைமகட்கு இனிமை யுடைத்தாயிற்று. இதற்கு என்னை காரணம்? அன்பு என்பதொன்று எத்துணை யிழிந்த பொருளையும் உயர்ந்த பொருளாக்க வல்ல மருந்தாகவுள்ளது.

***' செருப்படியவ் விளம்பருவச் சேயடியிற் சிறப்புடைத்தால்.'***

***' எனக்கவன்றன் வாயுமிழும் புனல் புனிதம்[1].'***

*என்று சிவன் கூறிற்றாக வுள்ள திருப்பாட்டுக்களும் இவ்வுண்மை தெரிப்பன வன்றே? 'அன்பு என்ப தொன்றின் தன்மை அமரரும் அறிந்ததன்று'[2] என்னில், இதன் பெருமையை யாம் எங்ஙனம் உரைக்கேம்? தலைவனது நாட்டிலுள்ள தென்ப தொன்றே பற்றி, அவ்விடத்துள்ள மிக இழிந்த பொருளையும் தலைவியானவள் பிறவிடத்துள்ள மிகவுயர்ந்த பொருளினும் உயர்ந்ததாகக் கொண்டாள் என்றால், அவள் தலைவனிடத்து எத்தகைய அன்புடையளாதல் வேண்டும்? தேன் என வாளா கூறாது, 'நம் படப்பைத் தேன்' என்றது, அது பிறவிடத்துள்ளதினும் இனிது என்பது தோற்றுதற்கு. இதனால், கற்புடை மகளிராவார், தம் பிறந்தகத்து எத்துணைப் பெருஞ் செல்வம் நிறைந்திருப்பினும், அதனினும் தாம் புக்ககத்து வறுமையை மிகு மேன்மை யுடைத் தென்று கொள்வர் என்பது பெறப்படும். தோழியை அன்னாய் என்றது அருமை பாராட்டி. இரு முறை விளித்தது ஆர்வம் பற்றி. வாழியென்றது அவள் உடன் போக்கிற்குத் துணை புரிந்த உதவி பற்றி. வேண்டு என்றது தான் சொல்லும் பொருளின் இன்றியமையாமை பற்றி. இவ்வாறு இவ்வாசிரியர் அன்பினது திறத்தை இரண்டு மூன்றடிகளால் விளங்க வைத்த மாட்சியை எங்ஙனம் வியந்துரைக்க வல்லேம்?*

*இனி, குரக்குப்பத்தில், குரங்கின் தலைவனான கடுவன், சிறிய பிரப்பங்கோல் கொண்டு, மாரி மொக்குளைப் புடைத்து அழிக்கும் என்றும், மலையிடத்துள்ள கடுவன் நறைக்கொடி கொண்டு கருக்கொண்ட இளமுகிலைப் புடைக்கு மென்றும், குரங்கு தன் மீதிருந்து பாய்தலால் வளைந்து நிமிரும் மூங்கிற்கோல், மீனெறி தூண்டில் போல் தோன்றும் என்றும் கூறியுள்ளனவும்; மஞ்ஞைப் பத்தில் மலர்ந்த வேங்கை மரத்திலிருந்த மயில், அணிகலன் அணிந்த மகளிர் போலத் தோன்றும் என்றும், பூக்கொய்யும் மகளிர் போலத் தோன்றும் என்றும், தினையரி தாளிலிருந்த குருவி எழுவது விழுவதாய் வருந்துறச் சிறகை விரித்து ஆடிச் செல்லும் மயில், பந்தாடும் மகளிர் போலத் தோன்றும் என்றும் கூறியுள்ளனவும் படித்து இன்புறற் பாலன. இங்குக் கூறிய 'மீனெறி தூண்டில்' என்ற உவமம், 'கான யானை கைவிடு பசுங்கழை, மீனெறி தூண்டிலினி*

1. பெரிய புராணம். 2. கம்ப ராமாயணம்.

வக்கும்' எனக் குறுந்தொகை யுள்ளும் (54) போந்துளது. மதவேழமானது, கரிய மலைப்பாறையைப் பிடியென்று கருதித் தழுவும் நாடன் என்பதும், வெறிப்பத்தில், 'பொய்யா மரபினூர் முதுவேலன்' எனவும், 'பொய்படு பறியாக் கழங்கே' எனவும் குறிப்பிற் கூறி, வெறியாட்டாளனது (பூசாரி) பொய்ம்மையை விளக்குவனவும் போல்வன நகைச்சுவை பயப்பனவாகும். இவள் தினைப்புனம் காத்தொழிந்தால் வரைவல் என்ற தலைவற்குத் தோழி கூறுவதாக, 'கொடிச்சி கிளியோட்டுங் குரலைக் கிளியின் குரலெனக் கருதிப் பிறவிடத்துள்ள கிளிகளும் தினைப் புனத்திற் போந்து அழிக்கும் என்று காவலை விலக்குவர் போலும். ஆகலால், பெரிய மலை நாடனே! இவளை விரைய வரைந்து கொள்வாயாக.' என்று வியப்புத் தோன்றக் கூறப்பட்டுளது. பின்னுளோரும், 'ஆயோ வெனுங் குரலையோ புனத்தை யழிக்கின்றதே' என இக்கருத்தை எடுத்தமைத்துளார். தலைவி பின்னாக வந்து கண் பொத்திய விடத்து, 'அழகிய காந்தட் பூப்போலும் கையால் என் கண்களைப் புதைத்தோயே!' என் நெஞ்சம் விரும்பினவர் நீயலதும் உளர் கொல்லோ?' என்று தலைவன் கூறிற்றாக வுள்ளது இன்பம் விளைக்கின்றது. கம்பநாடரும், 'காரன்ன கூந்தற் குயிலன்னவள் கண்புதைப்ப, ஆரென்ன லோடு மனலென்ன அயிர்த்துயிர்த்தாள்' என இக்கருத்தை யெடுத்து [1]இராமாயணத்திற் பதித்து வைத்தார்.

தலைவன் ஊர்ந்த குதிரை பார்ப்பனக் குறுமகவுபோல் குடுமித் தலையது எனவும்; அசோகின் றழை நெய்யோடு பிசைந்த உழுந்து மாப்போலும் எனவும்; பொன்போலும் தினையைக் கட்டளை (பொன் உரையாணி) போலும் கேழல் மாந்தும் எனவும்; அவரையை நிரையத் தின்ற மந்தி, பண்ட வாணிகர் பைபோலத் தோன்றும் எனவும் கூறியுள்ள உவமைகள் பெரிதும் மகிழ்ச்சி விளைப்பனவா கின்றன. மற்றும் பல உவமை களும், உள்ளுறைகளும் இதிற் கூறப்பட்டுள்ளன. 'வெள்ள வரம்பின் ஊழி' என இதில் வந்துளது. தொல்காப்பியனார், 'ஐ அம் பல் என வரூஉம் இறுதி' என்பதனால், தாமரை, வெள்ளம், ஆம்பல் என எண்ணுப் பெயர்கள் கூறியிருப்பது இங்கே கருதற் பாலது. ஆண் குரங்கினை, 'மந்திக் கணவன் கல்லாக்கடுவன்', 'குரங்கின்றலைவன்' என்றிங்ஙனம் இதிற் கூறியிருக்கிறது. 'குரங்கி னேற்றினைக் கடுவனென்றலும்' எனத் தொல்காப்பியனார் வழுவமைத் திருத்தலும் காண்க. புலியின் ஏற்றை, பிடியீன்ற குழவி,

1. பாலகாண்டம் – பூக்கொய்படலம்.

*தகர், புருவை, பன்றிக் குருளை, பன்றி யொருத்தல், மந்திப்பறழ், மந்திப் பார்ப்பு என்றிவை முதலிய மரபுகளும், பல வழக்கங்களும் இதிற் காணப்படுகின்றன.*

## அகநானூறு

*எட்டுத் தொகையுள் ஒன்றாகிய இந்நூல், கடவுள் வாழ்த்து உட்பட நானூற்றொரு அகவற் பாக்களை யுடையது. இஃது, அகம் எனவும், அகப்பாட்டு எனவும்,* **நெடுந்தொகை** *எனவும் வழங்கும். இதிலுள்ள பாக்களின் அடியளவு சிறுமை பதின்மூன்று, பெருமை முப்பத்தொன்று. இத்தொகையின் முதல் நூற்றிருபது பாக்களைக்* ***களிற்றுயானை நிரை*** *எனவும், அடுத்த நூற்றெண்பது பாக்களை* ***மணிமிடை பவளம்*** *எனவும், இறுதி நூறு பாக்களை* ***நித்திலக்கோவை*** *எனவும் ஆன்றோர் வழங்குவர். இதிற் கபிலர் பாடியன பதினெட்டுப் பாக்கள்.*

*இவற்றில், வாழைக்கனி, பலாக்கனிகளால் சுனையிடத்து நிறைந்த தேனை, வேட்கை மிகுதியால் நீரென்று கருதியுண்ட கடுவன், அயலிலுள்ள மிளகு கொடி வளரப் பெற்ற சந்தன மரத்தின் மேல் ஏறமாட்டாது மலர்ப்படுக்கையில் கண்படை கொள்ளும் என்றும்; பலவின் பழங் கொள்ளுமாறு குரவர் நாட்டிய குரம்பை உதிர்ந்த வேங்கைப் பூவால் மூடப் பட்டிருப்பதனைப் புலியென்று கருதி அஞ்சுதலுற்ற வேழம், மழை தவழும் மலையிலே கழை மடியப் பாய்ந்து ஓடா நிற்கும் என்றும்; மூங்கிலின் றுளையில் காற்றுப் புகும் ஓசை குழலிசையாகவும், அருவி நீர் வீழ்ச்சியினோசை முழவின் குரலாகவும், கலையின் குரலோசை பெரு வங்கியமாகவும், வண்டின் பாட்டு யாழிசையாகவும் கொண்டு, மந்தியின் அவை நோக்கி வியப்புறும்படி, மூங்கில் வளர்ந்த பாறையில் அசைந் தாடும் மயில் விறலி போலத் தோன்றும் என்றும்; அருவியிற் பாய்ந்த கருவிரலை யுடைய மந்தி, பலாப்பழத்தைத் தெப்பமாகக் கொண்டு, சாரலிலுள்ள ஊர் முன்றுறையிற் சென்று சேரும் என்றும்; உள்ளுறை பொருந்த அழகாகக் கூறப்பட்டுள்ளன.*

*தலைவன் வரைந்து கொள்ள வருகின்றமையைத் தலைவிக்கு அறிவிக்கலுறும் தோழியானவள், 'குளிர்ந்த கண்ணும், தளிர் போலும் மேனியும் உடையாளே! வானளாவிய மலையினையுடைய நம் தலைவர் வரைதற் பொருட்டு வந்தமையால், எனக்கு உண்டாகிய மகிழ்ச்சியின் அளவு சொல்லின், நாடு வறங்கூரவும் கலப்பை தொழிலின்றித் துஞ்சவும் கோடை மிக்க*

*பசுமையற்ற காலையில், மலை போலும் கரைகளையுடைய பெரிய குளம் நிறையும் படியாகப் பெருமழை பொழிந்த வைகறையில் பல்லோரும் உவந்த உவகை யெல்லாம் என்னுள்ளத்தே பெய்து வைத்தாற் போலும்' என்று தன் மகிழ்ச்சியைப் புலப்படுத்துரைப்பதாகக் கூறியிருக்கிறது.* '**ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்**' *என்ற தேவாரம் இங்கே கருதத்தக்கது.*

*தலைமகன் சிறைப் புறத்தானாகத் தலைமகள் தோழிக் குரைக்கு மிடத்து, 'தோழீ! நாம், அவர் இருளிடை வருதலின் ஏதத்தை யஞ்சி அகன்று வலித்திருப்பவும், எனது நெஞ்சு என்னையும் நின்னையும் கேளாது கையிகந்து, படுகுழி களையுடைய வழியில் இருளில் மிதிக்கு மிடத்து அவரது தளர்ந்த அடியைத் தாங்குமாறு செல்லா நின்றது' என்றதாகக் கூறியிருக்கிறது. 'கரு நாயிறு போல்பவர் காலொடு போய், வருநா ளயலே வருவாய் மனனே' என்று கம்பர் கூறியது இங்கே நினைக்கத்தக்கது.*

*'வேங்கையினது பொன்போலும் பூங்கொத்துக்களைச் சூடி, வளைந்த வில்லைத் தோளின் மீதிருத்தி, பலாப்பழத்தில் விளைந்த தேறலை இளையரொடும் மாந்தி, குறிபிழையாத வென்றியையுடைய நாய் பின்னே வர வேட்டைக்குச் சென்ற குறவன் குளவியின் புதல் குருதியொடு பொருந்துமாறு முள்ளம் பன்றியை எய்து வீழ்த்தும் குன்று' என்று கானவரது வேட்டை கூறியிருக்கிறது.*

*'ஈன்று இளைத்த பெண் புலியின் பசிக்கு உணவு தருமாறு மலைக் குகையினின்றும் புறப்பட்ட புலிப்போத்து, ஆமானின் பெண் அலரும்படி, ஆமானேற்றைப் பாய்ந்து, வலமுற வீழ்த்தி, கரிய கல்லிடமெல்லாம் சிவக்கும் படி இழுத்துவரும்' எனப் புலிவேட்டம் கூறப்பட்டுளது.*

*பிறருற்ற துன்பத்திற்குப் பிறரும் வருந்துவர் தம்மையுற்ற துன்பம் தமக்கோ எளிது என்னும் பொருளுடைத்தாக,*

> ***' பிறருறு விழுமம் பிறரும் நோப***
> ***தம்முறு விழுமம் தமக்கோ தஞ்சம் ,'***

*என்று கூறப்பட்டுளது.*

*வண்டினை, 'அறுகால் யாழிசைப் பறவை' என்று கூறியிருக் கிறது.*

இருதலைப் புள் போல இருவர்க்கும் உயிர் ஒன்றாகிய கேண்மையர் என்றும்; மழையிற் கலித்த பிச்சி முகையின் வெரிந் போலும் கண் என்றும்; யானைக் கயிற்றுப் புறம் போலும் கல்லின் மேல் ஓங்கிய சிறு நெறி என்றும்; ஏற்றின் இமிலிற் பூட்டிய கயிறு போலத் தலைவனது திரண்ட தோளில் அணிந்த மாலை புரள என்றும் உவமைகள் கூறப்பட்டுள்ளன. நள்ளி யானவன், இரப்போர்க்கு மழை சுரந்தாற்போல், தேரும், களிறும் நல்குவன் என்று கூறப்பட்டிருக்கிறது.

# 7. புறப்பொருட் பகுதியும் பிறவும்

## புறநானூறு

எட்டுத் தொகையுள் ஒன்றாகிய இந்நூல் கடவுள் வாழ்த்து உட்பட நானூற்றொரு அகவற் பாக்களையுடையது. புறத்தின் பகுதியாகிய வெட்சி முதலிய திணைகளுக்குரிய துறைப் பொருளமைந்த நானூறு பாக்களை யுடைமையின் புறநானூறு எனப் பெயர் பெற்றது. இது புறம் எனவும், புறப்பாட்டு எனவும் வழங்கும். இந்நூலின் இறுதியிலுள்ள பாடல்கள் பல சிதைந்து விட்டமையின், பாக்களினுடைய அடிகளின் சிறுமை பெருமை தெரிந்து கொள்ளக் கூடவில்லை. ‘இந்நூலால், பண்டைக் காலத்து இத்தமிழ் நாட்டிலிருந்த சேர, சோழ, பாண்டியர் களாகிய முடியுடை வேந்தர், சிற்றரசர், அமைச்சர், சேனைத் தலைவர், வீரர் என்கிற பலருடைய சரித்திரங்களும், கடையெழு வள்ளல்களின் சரித்திரங்களும், கடைச் சங்கப் புலவர் பலருடைய சரித்திரங்களும், அக்காலத்துள்ளாருடைய நடை முதலியனவும், இன்னும் பற்பலவும் நன்குப் புலப்படும்’

இதிலுள்ள பாக்களில், கபிலர் பாடியன இருபத்தெட்டு. அவற்றுள், இரண்டு பாட்டுச் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடியவை; திருமுடிக்காரியைப் பாடியவை நான்கு. பேகனைப் பாடியது ஒன்று. பாரியைப் பாடியவை ஏழு. பாரி துஞ்சிய வழி இரங்கிப் பாடியவை எட்டு. பாரி மகளிரைக் கொண்டு சென்று விச்சிக்கோனைப் பாடியது ஒன்று. இருங்கோவேளைப் பாடியவை இரண்டு. தாம் வடக்கிருக்கும் பொழுது பாரியை விளித்துப் பாடியது ஒன்று. மகட்பாற் காஞ்சியாகப் பொதுவே பாடியவை இரண்டு. பாரி துஞ்சியதற்கு இரங்கிப் பாடிய பாட்டுக்கள் மிகவும் உருக்கமானவை.

செல்வக் கடுங்கோ வாழியாதன் தம் கையைப் பற்றி, ‘நும்கை மெல்லிய’ எனக் கூறியபொழுது, ‘யானை, குதிரை, தேர்களை முறையானே செலுத்தியும், வில்லை நாணேற்றி அம்பினை வழங்கியும் போர் புரியவும், பரிசிலர்க்கு அரிய அணிகலங்களை யளிக்கவும் நின் கைகள் வலிய வாகும்; ஊனையும், துவையையும், கறியையும், சோற்றையும் உண்டு வருந்தும் செயலல்லது வேறு

செயல் அறியாவாகலின், நின்னைப் பாடுவார் கைகள் மெலியவாயின' என்றும்; பாரி துஞ்சிய பின், பறம்பினை நோக்கி நின்று, 'பெரும் புகழை யுடைய பறம்பே! மதுவுடனே, துவையையும், ஊனையு முடைய சோற்றை விரும்பியவாறே தரும் மிக்க செல்வம் முதிர்ந்து, முன்பு எம்மொடு நட்புச் செய்தாய்; இப்பொழுது, பாரி இறந்தானாகக் கலங்கிச் செயலற்று, நீர்வார் கண்ணை யுடையேமாய்த் தொழுது நின்னை வாழ்த்திச் செல்லுதும்' என்றும் கூறியிருத்தலால், இவ்வாசிரியர் மதுவும், ஊனும் உண்ணு மியல்பினர் எனச் சிலர் கருதாநிற்பர். மிக பழைய நாளில், எவரும் இவ்வழக்கங்களைக் குற்ற மென்று கருதிற்றிலர் என்பதற்கு, வடமொழியிலுள்ள மனு முதலிய மிருதி நூல்களே தக்க சான்றாகும். எனினும், நல்லிசைப் புலவராகிய கபிலர் இவ்வழக்கமுடையார் என்பதற்கு யாம் எளிதில் இணங்கக் கூடவில்லை. இவ்வாசிரியர் தாமே இன்னா நாற்பதில் இவற்றைக் கடிந்திருக்கின்றனர். பெரும்பாணாற்றுப் படையில், அந்தணர்க்கு வேறு தூய உணவு கூறப்பட்டிருத்தலும் கருதற்பாலது. புலவர்கள் தம்மைப் பாணர் முதலியோர் போல் வைத்துப் பாடும் வழக்கமுடையராகலின், கபிலரும் தம்மைப் பாணர்போல் வைத்துப் பாடியுள்ளா ரெனக் கொள்ளுதல் நேரிது எனத் தோன்றுகிறது. இங்ஙனம் பாடுவதுண் டென்பது, சிறுகுடி கிழான் பண்ணனைக் கிள்ளிவளவன் பாடிய, 'யான் வாழுநாளும் பண்ணன் வாழிய . . . பசிப்பிணி மருத்துவனில்லம், அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே' என்னும் புறப் பாட்டால் நன்கு துணியப்படும். அந்நாளில், அரசர் முதலியோரும், பாணர் போல்வாரை இறப்ப விழிந்தாராக வொதுக்காது, அவர்கள் பால் மிக்க அன்புபாராட்டி வந்திருக்க வேண்டும் என, இது போன்றவைகளால் கருதப்படுகிறது.

செல்வக்கடுங்கோவைப் பாடிய பாட்டு ஒன்று மிக்க பொருட்சிறப்புடைத்தா யிருத்தலின், அதனையும், அதற்கு, 'வேறுபட வந்த வுவமத் தோற்றம்' என்னும் உவமவியற் சூத்திர வுரையில், பேராசிரியர் தம் நுண்ணறிவு மாட்சியாற் கண்டு எழுதிய உரையையும் ஈண்டுத் தருகின்றாம்.

**' வையங் காவலர் வழிமொழிந் தொழுகப்**
**போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅ**
**திடஞ்சிறி தென்னு மூக்கந் துரப்ப**
**வொடுங்கா வுள்ளத் தோம்பா வீகைக்**
**கடந்தடு தானைச் சேர லாதனை**

***யாங்ஙன மொத்தியோ வீங்குசெலன் மண்டிலம்[1]***
***பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி***
***மாறி வருதி மலைமறைந் தொளித்தி***
***யகலிரு விசும்பி னானும்***
***பகல்விளங் கலையாற் பல்கதிர் விரித்தே'*** ***(புறம் - 8)***

இப்பாட்டு, உவமிக்கப்படும் பொருளாகிய சேரலாதனை உவமையாக்கியும், உவமையாகிய திங்கள் மண்டிலத்தைப் பொருளாக்கியும் வைத்து, உள்ளுறை உவமம் போல, உவமையடை பொருளுக்கும், பொருளடை உவமைக்கும் மறுத்துக் கொள்ளுமாறு இயற்றப்பட்டுளதெனக் கொண்டு, பின் வருமாறு விளக்குகின்றார் பேராசிரியர்.

"வையங் காவலர் வழிமொழிந் தொழுக" என்றமையால், இவன் தன் றன்மையனா யொழுகுவ தன்றிப் பிற வரசர் வழிப்பட மாட்டான்; மதியமாயின், ஒழிந்த கோளும் செல்லத் தானும் செல்லும் என்றும்; 'போகம் வேண்டிப் பொதுச் சொற் பொறாது' என்றமையாமல், இவன் இன்ப நுகர்ச்சியின் பொருட்டுச் சிறப்பில்லாக் கட்டுரை யெய்தான்; மதியமாயின், இருபத் தெழுவர் மகளிரொடு போகந் துய்த்து, எல்லார்க்கும் ஒப்ப அறஞ்செய்யாது, உரோகிணி மேற் கழி பெருங் காதல் கொண்டு சிறப்பில்லாக் கட்டுரை யெய்தும் என்றும்; 'இடஞ் சிறிதென்னு மூக்கந் துரப்ப' என்றமையால், மதிமண்டிலம் எஞ்ஞான்றும் தன் னெல்லைக் கண்ணே வரும் என்றும்; 'ஒடுங்கா வுள்ளம்' என்றமையால், மதியம் தேய்ந்து ஒடுங்கும் என்றும்; 'ஓம்பாவீகை' என்றமையால், மதியமானது நாடோறும் ஒரோவோர் கலையாகப் பல்லுயிர்க்கும் இன்பம் பயக்குமாறு தருவதல்லது, உடைய வெல்லாம் ஒரு காலே கொடாது என்றும்; 'கடந்தடு தானை' என்றமையால், மதிக்குத் தானையாகிய தாரகை யெல்லாம் பகைக் கதிராகிய பரிதி மண்டிலத்திற்குத் தோற்கும் என்றும்; இவ் வாற்றால் உவமை யடையெல்லாம் எதிர் மறுத்துக் கொள்ளப்பட்டன. 'வீங்கு செலல் மண்டிலம்' எனவே, மதியம் கடையாயினார் கதியிற் செல்லும்; பாட்டுடைத் தலைவன் தலையாயினார் கதியிற் செல்லும் என்றும்; 'பொழுதென வரைதி' எனவே, நாடோறும் நாழிகை வேறுபட்டு எறித்தி என்றதனால், அவன் பொழுது செய்யான் என்றும்; 'புறக்கொடுத் திறத்தி' எனவே, தோற்றோர் போன்று ஒளி

1 புறப்பாட்டுரைகாரர், 'பகல் விளங்குதி' எனப் பாடங்கொண்டு, ஞாயிற்று மண்டில மாக்கி யுரைத்தனர்.

மழுங்கிச் செல்கின்றா யென்றதனால், அவன் பிறர் தோற்றோடக் காய்ந்து சுடர் போல விளங்குவன் என்றும்; 'மாறி வருதி' எனவே, திங்கடோறும் மாறிப் பிறத்தி யென்றதனால், அவன் ஒரு பெற்றியே நிலை பெற்றான் என்றும்; 'மலை மறைந் தொளித்தி' எனவே, மலை சார்ந்த வழித் தோன்றா யென்றதனால், அவன் தன்னாட்டு மலையினும் மீக்கூறப்படும் என்றும்; 'அகலிரு விசும் பினானும்' எனவே, அவன் இவ்வுலகத்து நிலை பேறுடையன் என்றும்; 'பகல் விளங்கலை' எனவே, அவன் இருபொழுதும் விளங்கும் என்றும்; பொருட் குரிய அடையெல்லாம் அவ்வாறே எதிர் மறுத்துக் கொள்ளப்பட்டன." கபிலரது பாட்டு என்னும் மாணிக்கத்தை மதிக்க வல்லார் பேராசிரியரே போலும்!

*' நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்*
*புல்லிலை யெருக்க மாயினு முடையவை*
*கடவுள் பேணே மென்னா வாங்கு*
*மடவர் மெல்லியர் செல்லினுங்*
*கடவன் பாரி கைவண் மையே.'* (புறம் - 106)

*' பாரி பாரி யென்றுபல வேத்தி*
*யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்*
*பாரி யொருவனு மல்லன்*
*மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே.'* (புறம் - 107)

*' நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்*
*பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்*
*வறிது பெயர்குவ ரல்லர் நெறிகொளப்*
*பாடான் றிரங்கு மருவிப்*
*பீடுகெழு மலையற் பாடி யோரே.'* (புறம் - 124)

## பதிற்றுப்பத்து

எட்டுத்தொகையுள் ஒன்றாகிய இந்நூல், முடியுடை வேந்த ராகிய சேரர் பதின்மரைச் சங்கப்புலவர் பதின்மர் பாடிய நூறு அகவற்பாக்களை யுடையது. பப்பத்துப் பாக்களுள்ள பத்துப் பகுதிகளைத் தொகுத்த தாகலின், இது பதிற்றுப்பத்து எனப் பட்டது. இதிலுள்ள பாக்களெல்லாம் புறத்திணைக்குரிய துறைப் பொருளமைந்தன. ஒவ்வொரு பாட்டிற்கும் அவற்றிலுள்ள சிறப்புடைய தொடரால் பெயரிட்டிருப்பதும், வண்ணமும், தூக்கும் எழுதியிருப்பதும், ஒவ்வொரு பத்தின் ஈற்றிலும் பாடப் பட்டோர் வரலாற்றை யுணர்த்தும் பதிகம் கூறியிருப்பதும் இந்நூலின் சிறப்பாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு சிறப்புடைய

தொடரால் பாடடுக்களுக்குப் பெயர் வைத்திருப்பது கொண்டு, பண்டையோர், பாட்டுக்களின் ஒவ்வொரு சொல்லையும் நன்கு ஆராய்ந்து, அவற்றுட் சிறப்புடையன கண்டு வந்தனர் என்னும் உண்மை புலனாகின்றது. இங்ஙனம் பெயர் முதலியவும், பதிகமும் எழுதினோர் இன்னாரின்னாரெனத் துணியக் கூடவில்லை எனினும், அவை மிக்க பழமையுள்ளனவென்றே தெரிகிறது. ஒவ்வொரு பதிகத்தின் பின்பும், அவ்வரசர்கள் பாடினோர்க்கு அளித்த பரிசில் இன்னவென்றும், அவர்கள் அரசு வீற்றிருந்த காலம் இத்துணைய வென்றும் தெரிவிக்கின்ற கட்டுரைத் தொடர்கள் வரையப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து, அவ் வரசர்கள் தமிழினிடத்தும், தமிழ்ப் புலவரிடத்தும் எத்துணைப் பெருமதிப்புடைய ரென்பதும், எத்துணைப் பெருவண்மை யுடைய ரென்பதும் நன்கு புலனாகின்றன. பதிற்றுப்பத்தில், எழாம் பத்துக் கபிலர் பாடியதாகும். அதனாற் பாடப்பட்டோன் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்னும் சேரர் பெருமானாவன். ஏழாம் பத்தின் முதற்பாட்டிலிருந்து, வேள்பாரி துஞ்சிய பின்பு கபிலர் செல்வக்கடுங்கோவை யடுத்து இது பாடினாரென்று தெரிகின்றது. இதிலுள்ள,

***புலர்ந்த சாந்திற் புலரா வீகை***
***மலர்ந்த மார்பின் மாவண் பாரி***
***முழவுமண் புலர விரவல ரினைய***
***வாராச் சேட்புலம் படர்ந்தோன் அளிக்கென***
***இரக்கு வாரே னெஞ்சிக் கூறேன்***
***ஈத்த திரங்கா னீத்தொறு மகிழான்***
***ஈத்தொறு மாவள் ளியனென நுவலுநின்***
***நல்லிசை தரவந் திசினே***

என்னுந் தொடர்கள் பாரியின் அருமையையும், கபிலரது பெருந் தன்மையையும், செல்வக் கடுங்கோவின் வண்மையையும் தெரிவித்து, உள்ளத்தைக் கரையச் செய்கின்றன.

செல்வக் கடுங்கோ வானவன் அந்தணர்க் கல்லது பணிதலறி யான் என்றும், நட்டோர்க் கல்லது கண்ணஞ்சான் என்றும், நிலந்திறம் பெயருங் காலையாயினும் கிளந்த சொல் பொய்த்த லறியான் என்றும், நகையினும் பொய்யா வாய்மையும், பகைவர் புறஞ்சொற் கேளாப் புரைதீ ரொண்மையும் உடையன் என்றும், வேள்வியாற் றேவர் கடனும், கேள்வியால் முனிவர் கடனும், புதல்வராற் பிதிரர் கடனும் செலுத்தியவனென்றும், அவனது மாதேவி காமர் கடவுளுமாளுங் கற்பினள் என்றும் இப்பத்திலே

கபிலர் பாராட்டிக் கூறியுள்ளார். கொடுமணம், பந்தர் என்ற ஊர்களும், **நேரி, அயிரை** என்ற மலைகளும் செல்வக்கோவுக்கு உரியவாகக் கூறப்பட்டுள்ளன. இன்பமே துய்க்கும் வடபுலம் (உத்தர குரு) இதிற் கூறப்பட்டுள்ளது.

இவ்வரசர் பெருமகன், மாய வண்ணனை மனனுறப் பெற்ற வனென்றும், அக்கடவுளுக்கு ஒகந்தூர் என்னும் பதியினை யளித்தவ னென்றும் பதிகம் கூறுகின்றது. இவன் இருபத்தைந்தி யாண்டு அரசு வீற்றிருந்தா னென்றும், கபிலருக்குச் **'சிறுபுறமென நூறாயிரங் காணங் கொடுத்து, நன்றா வென்னும் குன்றேறி நின்று, தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான்'** என்றும் பதிகத்தின் பின்னுள்ள கட்டுரைகள் தெரிவிக்கின்றன. சேரமான்பாற் கபிலர் இங்ஙனம் பெரும் பரிசில் பெற்ற செய்தி, இளஞ்சேரலிரும் பொறையைப் பெருங்குன்றூர்க் கிழார் பாடிய ஒன்பதாம் பத்தில், 'கபிலன் பெற்ற வூரினும் பலவே' என்று உவமையில் வைத்தோதி யிருந்தலாலும் நன்கு வலியுறுத்தப் படுகின்றது.

## இன்னா நாற்பது

பதினெண் கீழ்க்கணக்கினுள் [1]ஒன்றாய இந்நூல், கடவுள் வாழ்த்து உள்பட நாற்பத்தொரு வெண்பாக்களை யுடையது. இதிலுள்ள ஒவ்வொரு பாட்டும், இன்னது இன்னது 'இன்னா' எனக் கூறுதலின், இஃது இன்னா நாற்பது எனப் பெய ரெய்திற்று. இதற்கு எதிராக, இன்னது இன்னது 'இனிது' எனக் கூறும் பாக்களை யுடைய நூல் **இனியவை நாற்பது** என வழங்குகிறது. இவற்றுள் ஒன்று மற்றொன்றைப் பார்த்துப் பாடியதாகும் எனக் கருதற்கு இடனுண்டு. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், கடைச் சங்கப் புலவர்களாலும், சிறிது பிற்காலத்து விளங்கிய புலவர் களாலும், இயற்றப் பட்டனவெனத் தெரிகிறது. இவற்றுட் சில நூல்கள் அகப் பொருளாகிய இன்பத்தைக் கூறாநிற்க, பல

1. பழைய நூல்களை மேற் கணக்கெனவும், கீழ்க் கணக் கெனவும் வகுத்து இலக்கணங் கூறி வருகின்றனர்.

   ஐம்பது முதலா ஐந்நூ றீறா
   ஐவகைப் பாவும் பொருணெறி மரபின்
   தொகுக்கப் படுவது மேற்கணக் காகும்.
   அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
   அறம்பொரு ளின்பம் அடுக்கி யவ்வத்
   திறம்பட வுரைப்பது கீழ்க்கணக் காகும்.

என்னும் சூத்திரங்களால் முறையே இருவகைக் கணக்கினிலக்கணமும் காண்க.

நூல்கள் அறம் முதலியன பற்றிய நீதிகளைக் கூறுகின்றன. அவை கூறும் நீதிகள் தாம், பெரும்பாலும் எல்லா மக்களும் மேற் கொள்ளத் தக்கவாயும், உறுதி பயப்பனவாயும் உள்ளன. தமிழிலுள்ள ஒப்புயர்வில்லா நீதி நூல்களிலிருந்தே தமிழ்ப் பெருமக்களின் மேன்மை மலைமிசை விளக்குப் போல் யாவர்க்கும் விளங்கா நிற்கும். நடுவு நிலையுடைய மேனாட்டுப் புலவர்களும் இவ்வுண்மையினை அறிந்து கூறி வைத்திருக் கின்றனர். இவ்வாறிருக்கவும், திரு. எம். சீனிவாச ஐயங்கார், M.A. அவர்கள், தாம் எழுதிய தமிழாராய்ச்சி (Tamil Studies) என்ற புத்தகத்தில், தமிழ் மக்களை வரம்பின்றிப் புறம் பழித்துக் கூறி வருமிடையே, 'பழங்காலத்தில் தமிழ் மக்கள் ஒழுக்கத்தில் மிகத் தாழ்ந்த நிலையிலிருந்தனர்; ஆதலாற்றான் திருக்குறள் முதலிய நீதி நூல்கள் பல தோன்றுவவாயின.' என்கின்றனர். நீதி நூல் ஒன்று மில்லையாயின், அக்காலத்து மக்களெல்லாம் ஒழுக்கத்திலுயர்ந்தவர் என்பது அவரது கருத்துப் போலும்! அவரது தருக்க வறிவுதான் இருந்தவா றென்னே! அவர் பிழையினை அவரது நெஞ்சமே யெடுத்துக் காட்டியிடை விடா தொறுக்கும் என்பது துணிபு.

இனி, இவ்வாசிரியர், துன்பின் மூலங்கள் இன்னின்ன வெனக் கண்டு, அவற்றையே தொகுத்தெடுத்துக் கூறியிருப்பது பாராட்டற் பாலதொன்றாம். மக்கள் யாவரும் தாம் விரும்புவது இன்பமே யாயினும் இன்ப துன்பங்களின் காரணங்களை யறிந்து, ஏற்றம் பெற்றி நடவாமையால், துன்பமே பெரிதும் எய்து கின்றனர். இஃது எக்காலத்திற்கும் பொதுவாக ஒக்கும், இன்பத்தின் காரணத்தை யறிந்து மேற்கொள்ளுதலினும், முதற்கட் செய்யற் பாலது, துன்பத்தின் காரணத்தை யறிந்து, அதனின் நீங்கு தலாகும். ஆதலாற்றான், அந்தண்மை பூண்ட கபிலர், துன்பின் காரணங்களைத் தொகுத்துரைப்பாராயினர் என்க.

---

**பதினெண்கீழ்க் கணக்காவன :–**

'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலை சொற்காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க்கணக்கு'

என்றபடி, நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது, ஐந்திணையைம்பது, ஐந்திணையெழுபது, திணைமொழியைம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், இன்னிலை, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி என்பனவாம். வெண்பாவிலுள்ள, 'ஐந்திணை' என்பதன்முன், 'நால்' கூட்டி, நாலைந்திணை யெனக் கொள்ள வேண்டும். இன்னிலை யென்ற விடத்து வேறு பாடமோதிக் கைந்நிலையை ஒன்றாகச் சேர்த் தெண்ணுவாரும், பிறவாறு கூறுவாரும் உளர்.

இந்நூல், திருக்குறள் முதலியன போன்று கூற வேண்டும் பொருள்களையெல்லாம் அடைவுபட வகுத்துக் கூற வந்த தன்று ஆகலின், இதனை, அவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்தல் பொருந்தாது. ஒரு பேரறிஞர் ஒருவாறாக உலகியலை விரைந்து நோக்குங்கால், அவருள்ளத்தில் இன்னாவெனத் தோன்றியவைகள், இதில் அவ்வப்படியே வைக்கப் பட்டுள்ளனவென்றே கொள்ள வேண்டும். இதில், நீதிகளே யல்லாமல், சிற்சில மக்களியற்கை முதலியவும் கூறப்பட்டுள. ஒரே கருத்துப் பலவிடத்தில் வெவ்வேறு தொடர்களாற் கூறப்பட்டு மிருக்கிறது. கள்ளுண்டல், கவறாடல், ஊனுண்டல் என்பன இதிற் கடியப்பட்டுள்ளன. இந்நூலில் வந்துள்ள, 'ஊனைத் தின்றூனைப் பெருக்குதல் முன்னின்னா,' 'குழவிகளுற்ற பிணியின்னா', 'கல்லாருரைக்குங் கருமப் பொருளின்னா' என்னும் தொடர்களோடு, இனியது நாற்பதில் வந்துள்ள 'ஊனைத் தின்றூனைப் பெருக்காமை முன்னினிதே', 'குழவி பிணியின்றி வாழ்த லினிதே', 'கற்றறிந்தார் கூறுங் கருமப் பொருளினிதே' என்னும் தொடர்கள் ஒற்றுமை யுறுதல் காண்க.

***பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா***
***இருள்கூர் சிறுநெறித் தாந்தனிப்போக் கின்னா***
***அருளில்லார் தங்கட் செலவின்னா வின்னா***
***பொருளில்லார் வண்மை புரிவு.*** *(10)*

## மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை

இதுவும், பின்வரும் இரண்டு பிரபந்தங்களும், பதினோராந் திருமுறைத் தொகுப்பிற் சேர்ந்துள்ளன. இவற்றுக்கும், சங்கப் புலவர் பாடிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டுக்களுக்கும் உள்ள வேற்றுமைகள், '**நக்கீரர்**' என்னும் நூலிற் காட்டப்பட்டுள்ளன.[1] 11-ஆம் திருமுறையில் வந்துள்ள மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி யென்னும் பிரபந்தங்கள் மூன்றையும் அருளிச் செய்த கபில தேவநாயனா ரென்பவர் இவரேயென்று பெரியோர் கூறுவர்' என்று மகா மகோபாத்தியாயர், திரு. உ.வே. சாமிநாதைய ரவர்களும் [2]'கபிலர் செய்த வேறு பிரபந்தங்கள் சில பதினோராந் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளன' என்று, திரு. அ நாராயணசாமி ஐயரவர்களும் ஒருவாறு நெகிழ்ந்து கூறியுள்ளமையும் காண்க. 'எனையந்தாதி சொன்னவன் கபிலன்' என்று சிவபிரான் கூறியதாகத் திருவிளையாடல் கூறுகின்றது.

1. பதிற்றுப்பத்து, நூலாசிரியர்கள் வரலாறு.
2. நற்றிணை, பாடினோர் வரலாறு.

இது, வெண்பாவும், கட்டளைக் கலித்துறையுமாகச் சொற்றொடர் நிலையாய் மண்டலித்து வரும் இருபது பாட்டுக்களையுடையது. தமிழில் மூத்த பிள்ளையாராகிய விநாயகக் கடவுளைப் பற்றிக் கூறுவதில் இந்நூலே முதன்மையுடையது எனத் தோன்றுகிறது. இதிலிருந்த இரண்டு செய்யுட்கள் இளம்பூரண வடிகளால் மேற்கோளாக எடுக்கப்பட்டுள்ளன.

**திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்**
**பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்**
**ஆதலால் வானோரு மானை முகத்தானைக்**
**காதலால் கூப்புவர்தங் கை.** *(1)*

## சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை

இது, வெண்பாவாலும், கட்டளைக் கலித்துறையாலும் சிவபெருமானைப் பாடியதோர் பிரபந்தம்; சொற்றொடர் நிலையாக வுள்ளது. இதில் முப்பத்தேழு பாட்டுக்கள் இப்பொழுது காணப்படுவன.

**அடியோமைத் தாங்கியோ வாடை யுடுத்தோ**
**குடியோம்ப மாநிதியங் கொண்டோ - பொடியாடு**
**நெற்றியூர் வாளரவ நீள்சடையாய் நின்னுரை**
**யொற்றியூ ராக்கிற் றுரை.** *(15)*

## சிவபெருமான் திருவந்தாதி

இது, நேரிசை வெண்பா நூறுடையதாய்ச் சொற் றொடர் நிலையாய், இறுதிப் பாட்டின் இறுதிச் சீர் முதற்பாட்டின் முதற் சீராக மண்டலித்து முடியப் பெற்றுளது. இதன்கண் அகப் பொருட்டுறையமைந்த பாக்களும் உள்ளன. இதிலுள்ள பாக்களெல்லாம், மடக்கும், திரிபும் பொருந்தியன. சிவபெருமானைப் பற்றிய இவ்விரண்டு பிரபந்தங்களிலும் திருவொற்றியூர், திருமுதுகுன்று, திருவண்ணாமலை, திருக்கோவலூர், திருவலஞ்சுழி, திருச்சத்திமுற்றம், திருவாரூர், திருப்பழனம், திருவையாறு, திருக்கொடுமுடி முதலிய பல திருப்பதிகள் பாடப்பட்டுள்ளன.

**‘ ஊரும தொற்றியூ ருண்கலனும் வெண்டலையே**
**யூரும் விடையொன் றுடைதோலே - யூரும்**
**படநாக மட்டார் பணமாலை யீதோ**
**படநாக மட்டார் பரிசு. ’** *(6)*

## கபிலம்

தமிழிலுள்ள பிரபந்தங்களுக்கு இலக்கணங் கூறுநூல் பாட்டியல் எனப்படும். பன்னிரு பாட்டியல் என வழங்கும்

நூலிலுள்ள சூத்திரங்களின் பின் எழுதியுள்ள பெயர்களால், அவற்றை இயற்றினோர் சங்கப் புலவர் பன்னிருவ ரெனக் கொள்ளப்படுகிறது. இப்பொழுது பன்னிருபாட்டியல் என வழங்குவது, பன்னிருவர் தனித்தனி யியற்றிய பாட்டியல் களிலிருந்து சிற்சில சூத்திரங்களை யெடுத்துத் தொகுத்து வைத்த தாகல் வேண்டும். அதிலிலுள்ள சூத்திரங்கள் சங்கப் புலவரி யற்றியன வென்பது துணிபாயின், அதனுள் கபிலர் பெயரும் காணப்படுவதால், அவரும் பாட்டியல் இயற்றியுள்ளாரென்றும், அது கபிலம் என வழங்கற்குரியதாகும் என்றும் கொள்ளலாகும்.

## முடிபு

இதுகாறும் செய்த ஆராய்ச்சியால், தமிழ் மொழியை வளர்த்தற் பொருட்டாகப் பண்டை நாளிலே மதுரையம்பதி யிற்றமிழ்ச் சங்கம் நடைபெற்று வந்ததென்பதும், சங்கத்து வீற்றிருந்த நல்லிசைப் புலவர் பெருமக்களுள்ளே கபிலரானவர் கல்வியிலும், செய்யுளியற்றுவதிலும், வாய்மை, அன்பு முதலிய குணங்களிலும் ஒப்புயர் வில்லாராய் விளங்கினரென்பதும், அவரது பெருமையை அக்காலத்து வேந்தர்களும் புலவர்களும் ஒருங்கு பாராட்டி யுள்ளார்களென்பதும், வள்ளலாகிய வேள்பாரிக்கு அவர் ஆருயிர்த் தோழராய் விளங்கினரென்பதும், வேள்பாரி துஞ்சிய பின் அவனது பிரிவிற்கு ஆற்றாது பலவாறு புலம்பினரென்பதும், பாரிமகளிரைத் தகுதியுள்ள ஆடவர்க்கு வாழ்க்கைப் படுத்த வேண்டி மிக முயன்றனரென்பதும், சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன், மலையமான் திருமுடிக்காரி, வேள்பேகன் முதலாயினாரையும் அவர் பாடியுள்ளாரென்பதும், குறிஞ்சித்திணை பாடுவதில் நிகரற்ற ஆற்றலுடையவரென்பதும், ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவுறுத்த அவர் பாடிய குறிஞ்சிப்பாட்டும், குறிஞ்சிக்கலியும் முதலிய செய்யுட்கள், சொற் செறிவும், பொருட் பொலிவும் உடையவாய், அனைத்தழகும் பொருந்தி விளங்குகின்றன வென்பதும், அவற்றிலிருந்தே பண்டை நாளில் தமிழ் அடைந்திருந்த மேன்மையும், தமிழ் மக்களின் உள்ளப் பெருமையும் நன்கு வெளியாகின்றனவென்பதும், பிறவும் தெளிவுறுத்தப் பெற்றமை காண்க.

**வாழ்க மன்னவன் வாழ்க மன்னுயிர்**
**வாழ்க செந்தமிழ் வாழ்க செம்மையே.**

♦ ♦ ♦

# அ
# க
# த்
# தி
# ய
# ர்

## வரலாறு

# 3. அகத்தியர் வரலாறு

தமிழ்ப் புலவர்களாக இப்பொழுது அறியப்படுவோர் யாவரினும் காலத்தால் முந்தியவரும், இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழுக்கும் சிறந்ததோர் இலக்கணஞ் செய் தருளியும், தமிழ்ச் சங்கம் நிறுவியும், நன்மாணாக்கர் பலர்க்கு நூலறிவுறுத்தியும் தமிழ்மொழியைப் போற்றி வளர்த்த பெருமையில் முதன்மை யுற்றிருப்போரும் ஆசிரியர் **அகத்திய னாராவர்**. அகத்தியர் வடக்கினின்றும் போந்தவரெனப் பல கதைகளும் கூறாநிற்ப, அவர் தெற்கின்கண் இருந்தவரேயென ஒருசாரார் கூறுப. **'செங்கோன்றரைச் செலவு'** என்னும் ஓர் பழைய நூலில் சிறப்புப்பாயிரம் போற் காணப்படும் ஒரு செய்யுள் 'பஃறுளியாற்றுத் தலைப்பாய்ச்சல் ஏழ் தெங்க நாட்டு முத்தூர் அகத்தியன் கூற்று' என அவ்வுரை கூறுகின்றது . அகத்தியர் வடக்கினின்றும் போந்தவராக, தெற்கிலே தான் இருந்தவராக,தெற்கிலிருந்தும் வடக்கே சென்று பின்னும் தெற்கின் கண் மீண்டவராக, எங்ஙனம் ஆயினும் ஆகுக. அவர் இன்ன நாட்டினர், இன்ன குடியினரென யாம் இப்பொழுது ஆராய்ந்து முடிவு கட்டவல்லே மல்லேம். அவருக்கும் தமிழுக்கும் இயைபு காட்டித் தொல்லோர் பலரும் கூறியவை களை ஒருவாறு தொகுத்துரைத்துச் சிறிது ஆராய்ச்சி நிகழ்த்துதலே இப்பொழுது செயற்பாலது.

சிவபெருமான் மலையரையன் பாவையாரைத் திருமணம் புரிதரு காலத்தே தேவர், முனிவர் முதலாய பல் கணத்தாரும் இமயத்தில் திரண்டிருந்தமையின் பொறையாற்றாது வடபுவி தாழ்ந்து தென்புவி யுயர்ந்ததாக, அப்பொழுது இறைவர் அகத்தியனாரைத் தெற்கின்கண் பொதியிலிற் சென்றிருக்குமாறு வேண்டிக் கொள்ள அவரும் அங்ஙனமே போந்திருந்தனர்; புவியும் துலையொத்தது என்று கந்தபுராணம் கூறுகின்றது. அகத்தியர் இறைவரிடம் விடை பெற்றுச் செல்லும் பொழுது; 'தென்றேயம் தமிழ் நாடென்றும், அங்குள்ள மாந்தரெல்லாம் தமிழ்க்கல்வி மிக்காரென்றும் கூறுவர்; அனையவர் கேட்ப

வற்றுக்கும் விடையிறுத்தல் வேண்டுமாகலின் செந்தமிழ் இயல் நூலினை எம்பெருமான் அடியேற்கு அருளிச் செய்யவேண்டும்' என்று குறையிரப்ப, அங்கணர் அவர்க்கு முதனூல் அருளிச் செய்தனர் என்று **திருவிளையாடற் புராணம்** கூறுகின்றது. இதனை யுணர்த்தும் செய்யுட்கள்,

***' விடைகொடு போவா னொன்றை வேண்டின னேகுந் தேயம்***
***தொடைபெறு தமிழ்நா டென்று சொல்லுப அந்த நாட்டின்***
***இடைபயின் மாந்த ரெல்லாம் இன்றமி ழாய்ந்து கேள்வி***
***உடையவ ரென்ப கேட்டார்க் குத்தர முரைத்தல் வேண்டும்,'*** [1]

***' சித்தமா சகல வந்தச் செந்தமி ழியனூல் தன்னை***
***அத்தனே யருளிச் செய்தி யென்றனன் அனையான் றேற***
***வைத்தனை முதனூல் தன்னை மற்றது தெளிந்த பின்னும்***
***நித்தனே யடியேன் என்று நின்னடி காண்பே னென்றான்'*** [12]

என்பன, சிவபெருமானே அகத்தியர்க்குத் தமிழறிவுறுத்த முதற் குரவ ரென்பதனை,

***இருமொழிக்கும் கண்ணுதலார் முதற் குரவர்'*** [3]

***தென்மொழியை உலகமெலாந் தொழுதேத்து,***
***குடமுனிக்கு வலிவுறுத்தார் கொல்லேற்றுப் பாகர்'*** [4]

என்று **காஞ்சிப்புராணமும்** கூறுகின்றது. எனினும் காஞ்சிப் புராண ஆசிரியராகிய **சிவஞான முனிவர்** அகத்தியர்க்கு வணக்கம் கூறுமிடத்து, அவர் காசியினின்றும் போந்ததாகக் கூறுகின்றனர் . அச்செய்யுள் பின் வருவது:

***' காசியி னின்றும் போந்து கம்பர்தா மருளப் பெற்று***
***மாசிலாக் கச்சி மூதூர் மன்னிவீற் றிருந்து பூமேல்***
***ஆசிலாத் தமிழ் பரப்பி யருந்தமிழ்க் குரவு பூண்ட***
***தேசினான் மலய வெற்பிற் குறுமுனி திருத்தாள் போற்றி'*** [5]

அகத்தியர் வடக்கினின்றும் போந்த வரலாறாகத் **தொல் காப்பியப் பாயிர வுரையில் நச்சினார்க்கினியர்** கூறுவது, 'தேவரெல்லாருங்கூடி யாம் சேர விருத்தலின் மேருத் தாழ்ந்து தென்றிசை யுயர்ந்தது , இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்

1. திருவிளையாடற் புராணம் – கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம் பா – 11
2. திருவிளையாடற்புராணம் – கீரனுக்கு இலக்கணம் உபதேசித்த படலம் பா – 12
3. காஞ்சிப் புராணம் – தழுவக் குழைத்த படலம். பா – 249
4. காஞ்சிப்புராணம் – தழுவக் குழைந்த படலம். பா –248
5. காஞ்சிப்புராணம் – கடவுள் வாழ்த்து பா –9

குரிய ரென்று, அவரை வேண்டிக்கொள்ள, அவரும் தென்றிசைக்கட் போதுகின்றவர் கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு, பின்னர் எமதங்கியாருழைச் சென்று, அவர் மகனார் திரணதூ மாக்கினியாரை வாங்கிக்கொண்டு புலத்தி யனாருழைச் சென்று, அவருடன் பிறந்த குமரியார் உலோபா முத்திரையாரை அவர் கொடுப்ப நீரேற்று இரீஇப் பெயர்ந்து, துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடு முடியண்ணல்வழிக்கண் அரசர் பதினெண்மரையும், பதினெண்குடி வேளி[1] ருள்ளிட் டாரையும், அருவாளரையும் கொண்டு போந்து, காடு கெடுத்து நாடாக்கிய, பொதியிலின்கண் இருந்து, இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கினர், என்பது.

இதில் திருக்கல்யாணமும் தமிழ் கேட்டதும் கூறப்படா விடினும் தென்றிசை யுயர்ந்த நொய்ம்மைதீர அகத்தியர் வடக் கினின்றும் போந்தார் என்பது வேறு சில செய்திகளுடன் கூறப்பட்டிருத்தல் காண்க.

**வீரசோழியத்தின்** அவையடக்கச் செய்யுளொன்று அவலோகிதன் பால் அகத்தியர் தமிழ் கேட்டனரெனக் கூறும்.

அது,

***ஆயுங் குணத்தவ லோகிதன் பக்க லகத்தி யன்கேட்***
***டேயும் புவனிக் கியம்பிய தண்டமி ழீங்கு ரைக்க***
***நீயு முளையோ வெனிற்கரு டன்சென்ற நீள்விசும்பி***
***லீயும் பறக்கு மிதற்கென்கொ லோசொல்லு மேந்திழையே"[2]***

என்பது.

அவலோகிதன் என்பான் வைசேடிக தரிசனத்தின் ஆசிரியனாகிய கணாதன் என்பர். ஓர் சமணமுனி யெனக் கூறுவாரும் உளர் .

அகத்தியனார்க்கு ஆசிரியர் முருகக்கடவுள் என்று கூறும் வழக்கு முண்டு. **சிவஞான சித்தியாரிலும்,சிவப்பிரகாசத்திலும்** முறையே,

***' அருமறையா கமமங்கம் அருங்கலை நூல் தெரிந்த***
***அகத்தியனுக் கோத்துரைக்கும் அருட்குருவாங் குருளை"[3]***

---

1. பதினெண்கோடி வேளிர் எனவும் பாடமுண்டு
2. வீரசோழியப் பாயிரம் பா – 2
3. சிவஞான சித்தியார் பரபக்கம் பா – 5

***' அலகில்பல கலையங்கம் ஆரணங்க ளுணர்ந்த
அகத்தியனுக் கோத்துரைக்கு மண்ணல்'***[1]

*என்று **முருகப்பெருமான்** அகத்தியர்க்கு உரைத்தமை கூறியிருக் கிறது. இவற்றில் தமிழ் உரைத்தன ரெனக் கிளந்தோதப் படா விடினும் 'அருமறையாகமம் அங்கம் அருங்கலை நூல்'எல்லாம் உணர்ந்தவர்க்கு உரைக்கு மென்ற குறிப்பால் ஒத்ததென்பது தமிழ் நூலை யுணர்த்தும்போலும் என்று கருத வேண்டியிருக் கிறது. இது துணிபன்று, **தொல்காப்பியப் பாயிர விருத்தியில்**, **சிவஞான முனிவர்** 'தமிழ் நாட்டிற்கு வடக்கட் பிற வெல்லையு முளவாக வேங்கடத்தை யெல்லையாகக் கூறினார். அகத்தியனார்க்குத் தமிழைச் செவியறிவுறுத்த செந்தமிழ்ப் பரமாசாரியனாகிய அறுமுகக்கடவுள் வரைப் பென்னும் இயைபுபற்றி யென்பது' என்றனர். இவை யெல்லாம் அறிஞர் ஆராய்ச்சிக் குரியன.*

*அகத்தியர் சிவபிரான்பால் தமிழ் கேட்டனர் என்பதற் குரிய சான்றுகளே மிகுதியாக வுள்ளன. கல்வியிற் பெரியராய கம்பரும் தமது **இராமாயணத்து** அகத்தியப் படலத்தில்,*

***' உழக்குமறை நாலினு முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்க வியினும்மரபி னாடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்.'***[2]

*என்பதனால் சிவபிரான் றந்த தமிழை உலகிற்குத் தந்தவர் என்று அகத்தியரைக் கூறியுள்ளார்.*

*இனி, முன் காட்டியவற்றானே அகத்தியர் வேறு வேறிடங் களிலிருந்தும் தெற்கிலே போந்தன ரென்பது பெறப்பட்டு வரலாறுகள் தம்மிலே மலைவனபோல் கந்தபுராணத் தினின்றும் கிடைக்கின்றன. அவை:*

*"ஒரு காலத்தில் தேவ இருடியாகிய நாரதன் சூழ்ச்சியால் விந்தமலையானது மேருவுடன் மாறுகொண்டு மேலெழுந்து வான் வழியெல்லாம் அடைத்திடா நின்றது. அதனால் ஞாயிறு, திங்கள் முதலிய புத்தேளிர் தாம் இயங்குமாறு காணாது கவற்சியுற்று, அப்பொழுது மேருவின் ஒருசார் தவம்புரிந்து கொண்டிருந்த அகத்தியனாரை யுன்னிக் குறையிரப்பாராயினர். அன்னவர் குறிப்பு தம் உள்ளத்தே தோன்றப்பெற்ற குறு*

1. சிவப்பிரகாசம் பா –4
2. கம்பராமாயணம் ஆரண்ய காண்டம் – அகத்தியப் படலம் பா – 41

முனிவரும் 'விந்தத்தின் ஆற்றலை யொடுக்கி வானவர் குறையினை நீக்குவேம்' என எண்ணி, அருட் கடலாய சிவபெருமானை நினைந்து அன்பினால் உள்ளங் குழைந்து உருகிநின்றனர். அன்பர் அன்புக்கெளியராய இறைவரும் அகத்தியனார்க்குக் காட்சி தந்து 'விந்தமலையை வேரொடுங் கெடுக்கும் ஆற்றல் நினக்கு வழங்கினாம். நீ சென்று அதனை யழித்துப் பின்பு பொதியிலை யடைந்து அங்கண் வைகியிருப்பாய்' எனக் கூறி, **கைலையின்கண்ணுள்ள ஏழ் நதியுள்ளும் தூய்மை மிக்கதாகிய காவிரியை அழைத்து,**'நீ குற்றமற்ற குறுமுனி தன்னொடும் செல்வாயாக' எனப் பணித்து மறைந்தருளினர். விதர்ப்ப மன்னன் பாவை உலோபா முத்திரையாரை மணந்து மெய்யறிவு முற்றிய சித்தன் என்னும் மைந்தனை யளித்த வள்ளலாய அகத்தியனாரும் அங்கணர் திருவருளிற் றோய்ந்து, காவிரியைக் கமண்டலத்திற் பெற்றுக் கொண்டு, தென்றிசை நொக்கிச் சென்றனர். சென்றவர், வழியிடை வஞ்சனை யிழைத்த கிரவுஞ்சன் என்னும் அரக்கனை, மலையாய்க் கிடந்து பின் குமாரக் கடவுளின் திருக்கை வேலால் விளியுமாறு விதித்தும், காசித் திருப்பதி யடைந்து உலக நாதராய கண்ணுதற் பெருமானை வழிபட்டு ஏத்தியும், விந்த மலையைப் பிலத்திலே புகுமாறு அழுத்தியும், வில்வலன் வாதாவி யென்னும் அரக்கர் இருவரை மடிவித்தும், கொங்கு நாட்டிலே சிவலிங்கப் பெருமானை யெழுந்தருள்வித்துப் பூசனை புரிந்தும், ஆனை முகனருள்பெற்றுக் காவிரியைப் பெருகவிடுத்தும், திருக் குற்றாலத்திலே திருமாலுருவைத் தமது திருக்கையாலே குழைவித்துச் சிவலிங்கமாக்கி வழிபட்டும், பொதியிலை யடைந்து வீற்றிருந்தருளினர்" என்பன. பின்வரும் செய்யுட்கள் இங்கு நோக்கற் பாலன:

*' செம்பொன்மால் வரையின் பாங்கிற் சிவனடி யுன்னி நோற்றே*
*அம்புரா சியைமுன் னுண்டோ னமர்ந்தன னவனீண் டுற்றால்*
*உம்பர்போய் நின்ற விந்த மொடுங்குமென் றியாரு மோர்ந்து*
*கும்பமா முனியை யுன்னி யினையன கூற லுற்றார்.'*[1]

(கந்த - விந்தகிரிப் படலம்)

*' அனைய காலை யருங்கயி லாயமேல்*
*இனிது வைகிய வேழ்நதி தன்னுளும்*
*புனித மாகிய பூம்புனற் பொன்னியைப்*
*பனிம திச்சடைப் பண்ணவன் முன்னினான்.'*[2]

(மேற்படி - அகத்தியப்படலம்)

1. கந்தபுராணம் – விந்தகிரிப் படலம் பா – 29
2. கந்தபுராணம் – அகத்தியப் படலம் பா – 18

*"அத்தனங் கொருவ வன்னா னருளடைந் தங்க ணீங்கி*
*மெய்த்தகு மதலை வேண்டி விதர்ப்பர்கோன் பயந்த லோபா*
*முத்திரை தனைமுன் வேட்டு முதுக்குறைத் திண்மை சான்ற*
*சித்தனை யளித்த வள்ளல் தென்றிசை நோக்கிச் சென்றான்."[1]*

(மேற்படி - விந்தம்பிலம்புகு படலம்)

*"பைந்தமிழ் முனிவன் வான்றோய் பனிவரை யதனை நீங்கிக்*
*கந்தரஞ் செறிபொற் கோட்டுக் கடவுளர் வரைச்சா ரெய்தி*
*அந்தம தடைந்தோர்க் கங்க ணருளினாற் றனது மூல*
*மந்திர முணர்த்து முக்கண் வானவன் காசி புக்கான்."[2]*

(மேற்படி - விந்தம்பிலம்புகு படலம்)

*"கங்கைசென் றொழுகுங் காசிக் கறைமிடற் றகில நாதன்*
*பங்கய வடிகள் தாழ்ந்து பரவல்செய் தாண்டு நீங்கித்*
*துங்கதை கொண்ட விந்தத் தொல்வரைக் கொருசா ரேகி*
*அங்கத நிலைமை நோக்கி யறிவனொன் றியம்ப லுற்றான்."[3]*

(மேற்படி - அகத்தியப் படலம்)

*"அறுகுமதி நதிபுனையுஞ் செஞ்சடையெம் பெருமானை யகத்துட் கொண்டு*
*சிறுகுமுரு வுடையமுனி நாரணனார் திருமுடிமேற் செங்கை யோச்சிக்*
*குறுகுகுறு கெனவிருத்தி யொள்ளரக்கிற் புனைபாவைக் கோல மீது*
*மறுகுதழ லுற்றென்னக் குழைவித்தோர் சிவலிங்க வடிவஞ் செய்தான்."[4]*

(மேற்படி - திருக்குற்றாலப் படலம்)

இவ்வாறு பொதியிலின்கட் போந்திருந்த அகத்திய முனிவர் உமையம்மையார் திருக்கல்யாணத்தின்பொழுது இமயத்திற்குச் சென்றிருந்து புவியின் றடுமாற்றத்தைப் போக்குமாறு பெருமான் கட்டளையால் மீட்டும் பொதியிலை யடைந்தனர் எனத் தெரிகின்றது. இதனை,

1. கந்த புராணம் – அகத்தியப் படலம் பா – 28
2. கந்த புராணம் – விந்தம் பிலம்புகு படலம் பா – 2
3. கந்த புராணம் – விந்தம் பிலம்புகு படலம் பா – 3
4. கந்த புராணம் – திருக்குற்றாலப் படலம் பா – 15

*"கிற்புறு மாயை வல்ல கிரவுஞ்ச வரையும் விந்த*
*வெற்பதும் வன்மை சிந்த வில்வல னொடுவா தாவி*
*கற்பனை யகன்று மாயக் காவிரி நீத்தத் தோடு*
*முற்பகல் படர்ந்த தென்ன முனிவரன் றென்பாள் போனான்."*[1]

**(கந்த - திருக்கல்யாணப் படலம்)**

என்னும் திருப்பாட்டான் அறிக. இவ்வாற்றால் அகத்தியர் வெவ்வேறிடத்து நின்றும் போந்தமைபற்றி எய்துவதோர் மாறுபாடும் இன்மை காண்க. கந்தபுராணம் உலோபா முத்திரை யாரை விதர்ப்பநாட்டரசன் புதல்வியெனக் கூறாநிற்ப, நச்சினார்க்கினியர் அவரைப் புலத்தியனாருடன் பிறந்தாராகக் கூறுவது ஓர் மாறுபாடாம். திருக்கைலையிலிருந்த காவிரியைச் சிவபிரான்பாற் பெற்றாரென்பதும், கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டா ரென்பதும் போல்வன ஒருமைப்படுத்து நோக்கற்பாலன.

*"அமர முனிவன் அகத்தியன் றனாது*
*கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை"*[2]

என **மணிமேகலையும்** இவ்வரலாறு தெரிக்கின்றது. திருக் கல்யாணத்தின் முன்பே முனிக்கரசர் பொதியிலில் இருந்தார் என்பதனால் அப்பொழுதே அவர் தமிழ் அறிந்திருந்தாராதலும் வேண்டும். அகத்தியர் சிவபிரான் பக்கல் தமிழ் அறிந்தமை கூறும் இருவேறு திருவிளையாடற் புராணமும் 'வெள்ளிமலையில் தேவர், முனிவர் முதலாயினார் கூடியிருந்துழிப் புவியின் வடகீழ் எல்லைதாழ்ந்து தென்மேற் கெல்லை உயராநிற்க, அப்பொழுது அகத்தியனாரைப் பொதியிலுக்குச் செல்ல விடுத்த இறைவர் அவர்க்குத் தமிழ் முதனூல் அருளிச் செய்தார் ' என்று பொதுவே கூறுகின்றனவன்றித் திருமணத்தைச் சுட்டிக் கூறுகின்றில. இனி, அகத்தியனார் கடலுண்டா ரென்பதும், அவர் மேருவில் தவமியற்றும்பொழுது விந்தமலை உயர்ந்து பின்பு அவரால் பாதலத்தில் அழுத்தப்பட்டதென்பதும், மற்றும் ஒருகால் அவர் வடக்கில் இருக்கும்பொழுது வடபால் தாழ்ந்து தென்பால் உயர்ந்து நிலைதடுமாறிய புவி அவர் பொதியிலை யடைந்தவுடன் சமனெய்திற்றென்பதும் ஆகிய செய்திகள் நிலநூல் உண்மைகள் பலவற்றை நம் நினைவின்கட் கொண்டு வருகின்றன. கடலுண்ட செய்தி ஒரு காலத்தில் இமயப்பகுதி

1. கந்த புராணம் – திருக்குற்றாலப் படலம் பா – 61
2. மணிமேகலைப் பதிகம் அடிகள் – 11,12

கடலாகவிருந்து பின் மேலெழுந்ததனையும், விந்தத்தின் செருக்கடக்கியது இமயம் மேலோங்கிய பொழுது விந்த மலையின் எழுச்சி குறைந்ததனையும், வடகீழ்த்திசை தாழ்ந்தது ஆங்கண் ஓர் நிலப்பகுதி கடல் (சாகரம்) ஆயதனையும், தென்மேற்கு உயர்ந்தது குமரிகண்டமாகிய தமிழகத்தின் பெரும்பகுதியை வெளவிய பழைய கடல்கோளின் பின்பு ஒருசார் கடற்பகுதி நிலம் (பரசுராமன் பெறுநாடு) ஆகியதனையும் தோற்றுவிக்கின்றன. இந்நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணரா யிருந்தவர் இறைவன் செய்யலாகும் செயலை அவனுக்கு ஒத்தபடியாகவிருந்து செய்யும் பெருமை வாய்ந்தவர் என்னலால் இவையெல்லாம் இறைவன் செயலென்பது பெறப்படும். நிற்க.

அகத்தியனார் ஒருமுறை மேருவில் இருந்தபொழுது விந்தம் உயர்ந்ததென்றும், மற்றொருமுறை இமயத்தை அடைந்த பொழுது வடதிசை தாழ்ந்து தென்றிசை யுயர்ந்ததென்றும், ஒவ்வொரு முறையும் அவர் தெற்கில் வந்து அப்பிறழ்ச்சிகளைப் போக்கிய ருளினா ரென்றும் கேட்கப்படுதலினாலே நிலமானது பிறழ் வெய்தாமைப் பொருட்டு முனிவர்பிரான் எக்காலத்தும் பொதியிலின்கண் இருத்தற்பாலர்போலும் என்று கருத வேண்டியிருக்கின்றது. அவர் யாண்டும் தமிழ்முனியென்றும், பொதியின் முனியென்றும் கூறப்படுதல் சிந்திக்கத்தக்கது.

***" தென்றமிழ்நாட் டகன்பொதியிற் றிருமுனிவன்***
***றமிழ்ச்சங்கஞ் சேரு வீரேல்***
***என்றுமவ னுறைவிடமா மாதலினா***
***னம்மலையை யிறைஞ்சி யேகிப்***
***பொன்றிணிந்த புனல்பெருகும் பொருநையெனுந்***
***திருநதியின் பொழிய நாகக்***
***கன்றுவளர் தடஞ்சாரன் மகேந்திரமா***
***நெடுவரையுங் கடலுங் காண்டிர்."[1]***

என இராமாயணத்து நாடவிட்ட படலம் கூறுவதும் காண்க.

இம்முனிவர் பெருமான் புகழ் பன்னூல்களிலும் பரந்து கிடக்கின்றது. சுருங்கவுரைக்கின் சிவபிரானும், சிவகுமாரருமன்றி வேறு யாரையும் தனியே ஒப்புச்சொல்ல வொண்ணாத அத்துணைப் பெருமை வாய்ந்தவர் இவர் எனல் அமையும். சிலப்பதிகார மங்கல வாழ்த்தின்கண்ணே புகாரைச் சிறப்பிக்க வேண்டிய விடத்து,

1. கம்பராமாயணம்– கிட்கிந்தா காண்டம் – நாடவிட்டபடலம் பா – 31

*" பொதியி லாயினும் இமய மாயினும்*
*பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய*
*பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்*
*நடுக்கின்றி நிலைஇய வென்ப தல்லதை*
*ஒடுக்கங் கூறார் உயர்ந்தோ ருண்மையின்*
*முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே"*[1]

என **இளங்கோவடிகள்** கூறிய பொருண் மொழி இங்கே போற்றற் பாலதாகும். அடியார்க்கு நல்லாரும் 'உயர்ந்தோர்' என்பதற்கு 'முனிவனும் இறைவனும் அரசனும்' என்று பொருள் கூறினார். அகத்தியனார் புரிந்தனவாகக் கூறப்படும் கடல் குடித்தல் முதலிய செய்திகளுக்கு வேறு உள்ளுறைப்பொருள் கொள்ளுதல் சாலாது எனினும், அவை, இறைவனருள் நிறையப் பெற்ற பெரியாரால் உலகிலே செய்யலாகாத பொருள் ஒன்று மில்லை யென்னும் பொதுவுண்மையை விளக்குவனவாகக் கோடல் அமையும்.

*" கைதவன் கரந்து வைகுங் கடலைவெற் படக்குங் கையிற்*
*பெய்துழுந் தெல்லைத் தாக்கிப் பருகினான் பிறைசேர் சென்னி*
*ஐயன தருளைப் பெற்றார்க் கதிசய மிதென்கொல் மூன்று*
*வையமுத் தொழிலுஞ் செய்ய வல்லவ ரவரே யன்றோ?"*[2]

என்று பரஞ்சோதியார் **திருவிளையாடற் புராணம்** கூறுவது ஈண்டு நோக்கத் தக்கது.

இனி, இத்தகைய பெருமை வாய்ந்த அகத்தியனார் தமிழ்ச் சங்கப் புலவருள்ளே முதல்வராக வைத்தெண்ணப் படுகின்றனர். இவர் காசியி லிருந்த வடமொழிச் சங்கத்தாரொடு மாறுபட்டு, அவர் செருக்கை யடக்குதற் பொருட்டுத் தமிழ்ச் சங்கம் நிறுவினர் என்பது போலும் கதைகள் பல வுள. தென்மதுரை யகத்தே தலைச்சங்கம் நிலவிய ஞான்று வடமொழியும் தமிழ் போன்று சிறந்து விளங்கிய தென்பதும், வடமொழி வளர்ச்சிக்கும் சங்கமிருந்த தென்பதும் மெய்ம்மையாகுமேல், இது போலும் கதைகள் எத்துணைக் காலமாக வழங்கி வருகின்றன வென்பது பின் ஆராய்தற் பாலது. **இறையனாரகப் பொருளுரையில்** தலைச்சங்க வரலாறாகக் கூறப்படுவது:

'தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூவகைப் பட்ட சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள், தலைச்

1. சிலப்பதிகாரம் – மங்கலவாழ்த்துப் பாடல் – அடிகள் – 14–19
2. திருவிளையாடல் புராணம் – இந்திரன் பழிதீர்த்த படலம் பா – 53

சங்கமிருந்தார் அகத்தியனாரும், திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடி நாகராயரும், நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினர் ரென்ப. அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையும் என இத்தொடக் கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்றுநாற்பதிற் றியாண்டு சங்க மிருந்தா ரென்ப. அவர்களைச் சங்கம் இரீஇயினார் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத் தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார். எழுவர் பாண்டிய ரென்ப. அவர் சங்க மிருந்து தமிழாராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரை யென்ப. அவர்க்கு நூல் அகத்தியம்' என்பது.

களவியற்பொருள் கண்டார் கடைச்சங்கத்தாருட் கணக் காயனார் மகனார் நக்கீரனார் ஆகலின், இவ்வரலாறு ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளின் முன்பே நிலைபெற்ற தொன்றாகும். களவியலுரை இப்பொழுது காணப்படும் வடிவில் எழுதப் பெற்றது 7,8-ம் நூற்றாண்டுகள் என்று கொள்ளினும், அக்காலந் தானும், உலகத்தில் எத்தனையோ பல புராணங்களும், வரலாறு களும் தோன்றுதற்கு முந்திய தாகலின், அத்துணைப் பழங் காலத்தில் பொய்யா நோன்புடைய புலவர் பெருமக்களால் உருப்பெற்று வழங்கும் செய்திகளைப் புறக்கணித் திடுவது நெறியுடைமை யாகாது. தலைச்சங்கப் புலவர்களில் திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளுக்கும், குன்றெறிந்த முருகவேளுக்கும் முன்பு அகத்தியனார் முதலில் வைக்கப்பட்டிருப்பது அறிஞர் சிந்தனைக்குரிய தொன்றாம். இடைச்சங்கப் புலவருள்ளும் அவர் முன் வைக்கப் பட்டிருக்கின்றனர். சங்கம் இரீஇயினார் பாண்டியர் என்றே கூறப்பட்டிருத்தலின், அகத்தியரால் சங்கம் நிறுவப்பட்டதென்று கொள்ளுதற்கு இடனில்லை. எனினும் அவர் சங்கப் புலவருள்ளே முதன்மையுற்றிருந்தமையானும், பிறவாற்றானும் அவ்வாறு கூறுதலும் அமையும் என்க. ஆசிரியர் அகத்தியனாரால் இயற்றப் பட்ட இலக்கணம் அகத்தியம் என்பது. அது முச்சங்கத்தார்க்கும் நூலாயிருந்த தென்பது களவியலுரையால் அறியப்படுவது. அகத்தியத்தைக் குறித்த வேறு செய்திகள் இறுதிக்கட் கூறப்படும்.

இனி, அகத்தியனாரே தமிழ் மொழியை உண்டாக்கினவ ரென்றும் சிலர் கூறுவர். 'அகத்தியன் பயந்த செஞ்சொலாரணங்கு' என்பது போன்றவை அவர்க்கு மேற்கோளாம். அகத்தியர்

சிவபிரான் பக்கல் தமிழ் கேட்டன ரென்பதற் குரிய சான்றுகள் முன் காட்டப் பட்டன. முருகவேளிடம் கேட்டன ரென்பாரும் உண்டென்பது தெரிந்ததே. அவர் முருகப் பெருமான்பால் தமிழ் பெற்றன ரென்பதற்கு ஒரு கதை கூறுவாரும் உளர். அது, "அகத்திய முனிவர் காசியிலிருந்த வடமொழிவாணரொடு மாறுபட்டு, அம்மொழிக் கிணையான மற்றொன்றை யருளுமாறு முருகக் கடவுளை வேண்ட, அவர் ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டி, 'அம்மூலையில் உள்ளது; சென்று கொள்க. என்னலும், முனிவர் விரைந்து சென்று, தமிழ்! தமிழ்! எனக் கூவி, அங்கிருந்த ஓலைச்சுவடிகளை வாரிக்கொண்டு போந்து செவ்வேளை வணங்கி விடைபெற்றுத் தமிழ் மொழியை இவ்வுலகில் நிலவச் செய்தனர்' என்பது. இக்கதை எப்பொழுது தோன்றிற் றென்பது புலப்படவில்லை. அகத்தியர் வடமொழி வாணரொடு மாறுபட்டமை மெய்யோ பொய்யோ? இக்கதை யெழுதினவர் மாறுபட்டவர் என்பது மெய்யே. தமிழ் அகத்தியரால் உண்டாயிற்று என்பார்க்கு இக்கதைகளும் ஆதரவுகளாம்.

மற்றொரு சாரார் இக்கதைகளி லிருந்தே தமிழ் அகத்தியனார்க்கு முன்பே விளங்கினமை பெறப்படும் என்று தம்கோள் நிறுவுவர். அகத்தியர் தெற்கில் வரும்பொழுது, தென்றேயம் தமிழ் நாடாகலின் அங்குள்ளார் கேட்பவற்றுக்கு விடையிறுத்தல் வேண்டுமேயேன எண்ணிச் சிவனார்பால் தமிழ் முதனூல் கேட்டு வந்தனர் என்று புராணங் கூறுவது, அவர்க்கு முன்பே தமிழ்மேன்மையுற்றிருந்த தென்பார்க்கு அமையும் சான்றன்றோ? புராணங்களின் படியே தமிழ் அகத்தியரது படைப்பன்றென்பது தெளிவாம். தமிழை அகத்தியர்க்கும், வடமொழியைப் பாணினிக்கும் சிவபெருமான் அருளினரென்றும் புராணம் கூறுகின்றது. இது கொண்டு தமிழ் அகத்தியராலும், வடமொழி பாணியாலும் ஆக்கப்பட்டன வென்று எவ்வறி வுடையார் கூறுவர்? சிவனார் அகத்தியர்க்கு அருளியதும் இலக்கணம். அகத்தியர் தமிழுக்கு அருளியதும் இலக்கணம். மொழி ஒருவராலும் உண்டாக்கப்படவில்லை. அஃது இயற்கையும் அன்று. இவ்வுண்மை தெரித்தற்கன்றே கல்வியிற் பெரியராய **கம்பர்** அகத்தியரைக் குறிக்கு மிடத்து, **'தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்'**[1] என்று கூறினவர், **'என்று முள தென்றமிழியம்பி யிசை கொண்டான்'**[2] என்றும் கூறிப் போந்தனர். இனி, புராணங்களும் செவியாறற் கதைகளும்

1. கம்பராமாயணம் – ஆரண்யகாண்டம் அகத்தியப் படலம் பா – 41
2. கம்பராமாயணம் – ஆரண்யகாண்டம் அகத்தியப் படலம் பா – 49

கூறுவனவற்றை விடுத்து, இக்கால ஆராய்ச்சி முறையினை மேற்கொண்டு பார்த்தல் கடனாம்.

இதுகாறும் காட்டியவற்றி லிருந்து, இரண்டு **திரு விளையாடற் புராணங்களும், காஞ்சிப் புராணமும், இராமாயணமும்** அகத்தியர் சிவபிரானிடத்தே தமிழ்நூல் கேட்டனரெனக் கூறுகின்றன என்பதும், **சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், தொல்காப்பியப் பாயிர விருத்தி** என்பன அவர் முருகக் கடவுள்பாற் கேட்டன ரென்கின்றன என்பதும் போதரும். **பழனித் தலபுராணம்** முதலாயினவும் அவர் **முருகவேளிடத்தே** தமிழ் நூல் கேட்டமை கூறாநிற்கும். எனவே, அவர் சிவபிரான், முருகவேள் இருவரிடத்தும் தமிழ் கேட்டனரென்றே கொள்ள வேண்டும். சிவபெருமான் அருளியது **இசை நுணுக்கம்** (இடைச் சங்கத்தார்க்கு நூலாய இசை நுணுக்கத்தின் வேறு) என்றும், குமரவேள் அருளியது குமரம் எனப்படுவது என்றும் கூறுவாரும் உளர். ஆயின், சொல்லுக்கும் நினைவுக்கு மெட்டாத நுண்பொருளாய இறைவர் அன்பர் உளத்தின்கண் மேவி உண்மை விளங்குமாறு தேற்றி யருளினர் எனக் கூறின் அமையும்; அவ்வாறன்றித் தாமே சொற்றொடர் வடிவினதாக ஓர் நூலியற்றி அதனை அறிவுறுத் தருளின ரென்பது பொருந்துமாறு யாங்ஙனம் என்னும் ஐயம் அல்லது தடுமாற்றம் நம்மனோர்க்கு உண்டாதல் இயல்பே. முற்றறிவுடைய இறைவர் உயிர்களெல்லாம் உய்திகூட வேண்டு மென்னும் இரக்கத்தினால் மறைகளையும் ஆகமங்களையும் தோற்றுவித்துப் பக்குவமுடையார்க் கருள் செய்து அவற்றை உலகின்கண் நிலவ வைப்பர் என்பது தேவாரம், **திருவாசகம், திருமந்திரம்** முதலிய அருணூல்களில் வெளிப் படையாகக் கூறப்பெற்றுள்ளது. **சிவஞான சித்தியார்** போல்வன அதனை ஆராய்ந்தும் முடிபு கட்டுகின்றன. மறை, ஆகமங்களையே யன்றி எல்லாக் கலைகளையும், இறைவரே தோற்றுவித்தருளு கின்றன ரென்றும் நூல்கள் கூறுகின்றன. அவர் ஆறங்கமும் அருளின ரென்று **தேவாரத் திருமுறை** பல விடத்துக் கூறுவது காணலாகும். இறைவரால் அருளப்படுவதொரு நூல் உளதாயின் அஃது எம்மொழியின் கண்ணதேனும் யாவரானும் போற்றற் பாலதேயாம். அது குறித்து அம்மொழியே சிறந்ததென்றால், அம்மொழியின் வழக்கும் செய்யுளு மெல்லாம் உயர்ந்தன வென்றாதல் கொள்ளப் படுமாறில்லை. இறைவரால் அருளப்படும் நூல் உண்டென்னும் கொள்கை தமிழ் மக்களிடத்துப் பண்டைக் காலத்தும் இருந்துள தென்பதற்கு,

*" வினையி னீங்கி விளங்கிய வறிவின்*
*முனைவன் கண்டது முதனூ லாகும்."* [1]

என்னும் தொல்காப்பியச் சூத்திரமே சான்றாகும்

*" சிதைவில வென்ப முதல்வன் கண்ணே,"* [2]

என்பதும் அதனை வலியுறுத்தும். எனினும், நம்மனோர் போன்று முதல்வரால் நூல் அருளப்படுமென்பது பொருத்தமற்ற தென்று கண்டார் முன்பும் இருந்துளா ரென்பதும், அவர்கள் முதல்வர் அருளிய நூல் என்பதற்கு வேறு வேறு வகையாகக் கருத்துக் கொள்வாராயின ரென்பதும் 'வினையினீங்கி' என்னும் சூத்திரத்துப் பேராசிரியர் உரைக்குமாற்றா னறியலாகும். அது, 'இனி முனைவனாற் செய்யப்படுவதோர் நூலில்லை யென்பார் அவன் வழித்தோன்றிய நல்லுணர்வுடையார் அவன்பாற் பொருள் கேட்டு முதனூல் செய்தாரெனவும், அம்முனைவன் முன்னர் ஆகமத்துப் பிறந்ததோர் மொழியைப் பற்றி அனைத்துப் பொருளுங் கண்டு பின்னர் அவற்றவற்றுக்கு நூல் செய்தார் அவரெனவும், அவ் வாகமத்தினையே பிற்காலத்தாரும் ஒழுக்கம் வேறுபடுந்தோறும் வேறுபடுத்து வழி நூலும் சார்புநூலு மெனப் பலவுஞ் செய்தாரெனவும் கூறுப' என்பது.

முக்குற்றமற்ற பெரியோர்கள் தெளிந்த உணர்வு நிலையினின்று கண்டு கூறுவன வெல்லாம் எக்காலத்தும் பிறழாத உண்மைகளாதல் பற்றியும், அவை இறைவர் அருள் வழித் தோன்றுவன என்பது பற்றியும் அவற்றை யருளினார் இறைவரே யென ஆன்றோர் கூறி வந்தனர் போலும்? எனினும்,

*" ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்,*
*கேட்பான் புகில் அளவில்லை."* [3]

என்பது போலும் நிறைமொழி மாந்தர் ஆணையாகிய மறைமொழி கடைப்பிடித்து அடங்கி நிற்பதன்றி, தொன்று தொட்டுப் பேரருளாளராய எம்பெருமக்கள் பல்லோரானும் பேசப்பட்டு வந்ததொரு செய்தியை எமது சிற்றறிவின்கண் முனைத்தெழுகின்ற ஆராய்ச்சியின் முடிபுக்கு இலக்காக்கி விடுதல் தக்கதன்றாகலின் இதனை இவ்வளவில் நிறுத்துதும். தமிழ் அகத்தியரால் உண்டாக்கப் பட்டதாமோ என்பதே இவணை யாராய்ச்சி அன்றென்பது புராண கதைகளாற்

1. தொல்காப்பியம் – பொருளதிகாரம் மரபியல் நூற்பா – 96
2. தொல்காப்பியம் – பொருளதிகாரம் மரபியல் நூற்பா – 108
3. திருஞான சம்பந்தர் தேவாரம் – திருவாலவாய்த்திருப்பாசுரம் – பொது – 4

பெறப்பட்ட தெனினும் இற்றை நாள் ஆராய்ச்சியாளர் அவ்வளவில் அமைதியுறுவாரல்லர்.

இனி, அகத்தியரியற்றியது இலக்கணமே யாகலானும்,

**“இலக்கிய மின்றி யிலக்கண மின்றே**
**எள்ளின் றாகில் எண்ணெயு மின்றே**
**எள்ளினின் றெண்ணெ யெடுப்பது போல**
**இலக்கி யத்தினின் றெடுபடு மிலக்கணம்,”** [1]

என அவர் தாமே அகத்தியத்துட் கூறுதலின் அவ்விலக்கணத் திற்கு முதலாய இலக்கியம் இருந்திருக்க வேண்டுமாகலானும் அகத்தியனார்க்கு முன்பே தமிழ்மொழி நிலவியதாகும் என்று ஒரு சாரார் கூறுவர். இச்சூத்திரம் அகத்தியர் கூறியதென்னும் துணிபுடையார்க்கு இஃதே யமையும். அல்லாதார்க்கு வேறும் கூறுதல் வேண்டும்.

தமிழ் அகத்தியரால் உண்டாயிற்று என்பார் உலகின்கண் வழங்கும் பன்னூறு மொழிகளும் யாவரால் உண்டாயின என்று வினவுவார்க்கு யாது விடை கூறுவர்? மொழி (பாடை) யியல்பு சிறிதும் அறியாதாரே மொழி ஒருவரால் படைக்கப்பட்ட தென்று கூறுவார். கடவுள்தானும் ஒலியும் பொருளுமாகிய இரு கூற்றுலகின் இயக்கத்திற்கும் பொதுவே காரணமா யிருப்ப தன்றித் தனியே ஒரு மொழிக்குக் காரணமாவ தில்லை. கடவுள் ஓர் மொழியில் எழுத்தோ அல்லது நூலோ அருளினார் என்று கூறுவதன்றி, ஓர் மொழியை யுண்டாக்கினரென இதுகாறும் யாரும் கூறியது மில்லை. அவ்வாறிருக்கத் தமிழ்மொழியை அகத்தியர் உண்டாக்கின ரென்று கூறுவது நகைக்கத் தக்கதன்றோ? மொழியானது வழக்கும் செய்யுளுமென இருகூறுடைய தாயினும் செய்யுட்கும் முதலாக வுள்ளது வழக்கே. அவ்வழக்குத்தான் பல்வேறிடத்தும் உயர்ந்தோர் பாலும் அல்லோர் பாலும் வேற்றுமையுடையதாகிக் காலந்தோறும் பலகாரணங்களாற் பற்பல திரிபினையேற்று நிகழ்வதொன்றாக வுளது. உலகிலுள்ள எல்லா மொழிகளும் நாளடைவில் இங்ஙனமே திரிபுற்று வருகின்றன. தொன்மையவாய் வளர்ச்சி யுற்றிருந்த மொழிகள் சில வழக்காறற் றொழிதலையும், சில மொழிகள் புதியவாய்த் தோன்றி வளர்ந்து வருதலையும் கண்கூடாகக் காண்கின்றோம். மொழி வளர்ச்சியின் நிலைவேறுபாடுகளிலிருந்து அம்மொழி களின் காலம் முதலியனவும் கருதப்படுகின்றன. அன்றியும்

1. பேரகத்தியத்திரட்டு மேற்கோள் – 1

நாட்டின் தட்ப வெட்பங்களுக்கும், மக்களின் பண்புகளுக்கும், பிறவற்றுக்கும் ஏற்ப மொழிகள் இயற்கை வேற்றுமையுடைய வாதலும் ஆராய்ச்சியாற் றெளியப்படும். இவ்வாற்றால் மொழி களெல்லாம் மக்களிடையே இயல்பாகத் தோன்றி வளர்ந்து வருவனவே யென்பது பெறப்படும். எனினும் ஒவ்வொரு மொழி யிலும் முதன் முதலில் மக்கள் குறிப்பின்றி யெழுந்த சில ஓசை களும் சொற்களுமே இயற்கை தழுவியன என்பதும், மக்கள் குறிப் பொடுபட்ட முயற்சியான் உண்டாய பிறவெல்லாம் பெரும் பாலும் இயற்கையின் வேறுபட்டன வென்பதும் ஓர்ந்துணர்க.

இனி, மொழிகளெல்லாம் மக்களிடையே தோன்றி அவர்களால் வளர்க்கப் படுவனவே யென்பது கண்டாமாயினும், அவற்றின் தோற்றமுறையில் வேறுபாடும் உளது. அணித்தாய காலத்தில் தோன்றிய தொரு மொழியை ஆராயின், அஃது அதற்கு முன்புள்ள தொரு மொழியைச் சார்ந்து தோன்றிய தென்பது காணப்படும். மொழியின்கண் ஒரு சொற்றானும் வேறு சொல்லைச் சார்ந்தே தோன்றுகின்றது. இவ்வாறு எல்லா மொழிகளையும் அவ்வவற்றின் தோற்றத்திற்குச் சார்பாயுள்ள மொழிகளில் ஒடுக்கிக் கொண்டு செல்லின் வேறு சார்பில்லாது தோன்றியதென்று கருதப்படும் மொழி ஒன்றிரண்டு தான் இருக்கக் கூடும். அம்மொழியின் தோற்றமும் வளர்ச்சியுமே அறிதற் கரியவும், அளவிறந்த வியப்பிற் குரியவும் ஆகும்.

இனி, மொழியென்பது ஒரு சார் மக்களிடைத் தோன்றிப் பொருளுணர்த்தி நிற்கும் சொற்றொகுதியே. சொற்களுண்டாய நெடுநாளைக்குப் பின் எழுத்து வரையறை யேற்படும். அவ்வம் மொழிகளிலுள்ள சொற்களின் ஓசையைக் கூறுபடுத்து எழுத்துக்கள் வரையறுக்கப் படுதலின், ஒவ்வொரு மொழியிலும் எழுத்துக்கள் மிக்கும் குறைந்தும் வேறுபடுகின்றன.

சொற்களைத் தொடர்ப்படுத்தும், செய்யுளாக்கியும் வழங்குதற்குரிய விதிகள் முதலாயினவும் நாளடைவில் நன் மக்களின் வழக்கினைத் தழுவி அறிவுடையோரால் ஏற்படுத்தப் பெறும். மொழியின் ஆக்கப்பாடு இஃதே. இங்ஙனமாகலின் தமிழ்மொழியின் ஆக்கத்தைக் குறித்து வேறு கூற வேண்டு வதின்று. இஃதும் ஆனதேயென்க.

இனி, தமிழில் அகத்தியர் இயற்றியது **அகத்தியம்** எனப்படும் இலக்கணம். அது பேரகத்தியம் எனவும் வழங்கப் பெறும். தமிழின் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பாகுபாட்டிற்கும் இலக்கணமாய் மிகப்பரந்துள்ள தாகலின்

பேரகத்தியம் எனப் பட்டதாகும். பேரகத்தியம் என்னும் பெயர் நோக்கிச் சிற்றகத்தியம் எனவும் அவர் ஒன்று செய்துளாரெனச் சிலர் தவறாக எண்ணிக் கொள்வாராயினர். பேரகத்தியம் பன்னீராயிரம் சூத்திரங் களுடையது என்பர். அஃது எவ்வாதரவு பற்றிக் கூறப் படுகின்றதென விளங்க வில்லை. எனினும்அது மிகப் பரந்ததொரு நூலாயிருக்க வேண்டுமென்று கருதலாகும்.

இனி, அகத்தியனாரால் இயற்றப்பட்டு, அகத்தியம் என ஒருநூல் வழங்கியது உண்மைதானோ அன்றோ எனவும் சிலர் ஐயுறுவாராகின்றனர். அதற்குக் காரணம் அந்நூல் இப்பொழுது காணப்படாமையே. அகத்தியத்தைக் குறித்து ஐயுறுவார் அகத்தியர் என ஒருவர் இருந்தனரென்றுதான் ஏன் கொள்ள வேண்டும்? பண்டு தொட்டு ஆன்றோர் பலரும் அகத்தியத்தைக் குறித்துக் கூறி வந்திருக்கும் பொழுது, அஃது இப்பொழு தில்லாமையே பற்றி முன்பும் இருந்ததோ இன்றோ என ஐயுறுதல் சிறிதும் பொருந்தாது. அது தலை இடை கடை என்னும் மூன்று சங்கத்தார்க்கும் நூலா யிருந்ததென இறையனாரகப் பொருளுரை கூறுகின்றது. இடைச் சங்கத்தார்க்கும் கடைச் சங்கத்தார்க்கும் நூலா யிருந்ததென அவ்வுரை கூறுகின்ற தொல்காப்பியமும், அவ்வுரையாலறியப் படுகின்ற சங்கப் புலவர் பாட்டுக்களிற் பலவும் இப்பொழுதும் இருக்கின்றன வன்றோ? அப்படி யிருக்க அவ்வுரை கூறும் அகத்தியமும், வேறு சிலவும் இப்பொழுது காணப்படா தொழியினும் முன்பு இருந்திலவென்று கூறுதல் எங்ஙனம் பொருந்தும்? களவியலுரை கூறுவதொன்றே யன்று.

தொல்காப்பியத்திற்கு உரை கண்டார் பலரும் அகத்தியத்தைக் குறித்துக் கூறி வந்திருக்கின்றனர். யாப்பருங்கல விருத்தி, நன்னூல் மயிலை நாதருரை முதலியவும் அதனைக் குறித்துப் பேசுகின்றன. அவ்வுரை யெல்லாம் அகத்தியத்தைக் குறித்துப் பொதுவாகப் பேசுவது மாத்திரம் அன்றி, ஆண்டாண்டுப் பல சூத்திரங்களையும் அகத்தியருடைய வென்று எடுத்துக் காட்டுகின்றன. உரைகளே யன்றி நூல்களுள்ளும் சில அகத்தியர் கொள்கை யிவையெனக் கிளந்தோதுகின்றன.

> **“ வீங்குகட லுடுத்த வியன்கண் ஞாலத்துத்**
> **தாங்கா நல்லிசைத் தமிழ்க்குவிளக் காகென**
> **வானோ ரேத்தும் வாய்மொழிப் பல்புகழ்**
> **ஆனாப் பெருமை அகத்திய னென்னும்**
> **அருந்தவ முனிவ னாக்கிய முதனூல்,”** [1]

1. பன்னிரு படலப் பாயிரம்

என்று **பன்னிருபடலப் பாயிரம்** அகத்திய மென்னும் முதனூலைக் குறிப்பிடுதலும் காண்க.

> **"தரவின்றாகித் தாழிசை பெற்றும்,"** [1]

என்னும் செய்யுளியற் சூத்திர வுரையில் 'இனி இவ்வாறு வந்த கொச்சகங்களை யெல்லாம் ஒரு வரையறைப்படுத்துப் பாத்தோறும் இனஞ்சேர்த்திப் பண்ணிற்குத் திறம்போலப் பின்னுள்ள ஆசிரியரடக்குவர்; அதனை அகத்தியமும் தொல் காப்பியமும் உணர்ந்து அவர்தம் கருத்தறிந்த ஆசிரியர் அவ்வாறடக்காமைக்குக் காரணங் கூறுவர்' என்று **நச்சினார்க்கினியர்** கூறியுள்ளார். அவ்வாசிரியர் கூறும் காரணம் இவையென அவர் பின்பு எடுத்துக்காட்டிய வெல்லாம் பேராசிரிய ருரையாக விருத்தலின், அகத்தியமும் தொல் காப்பியமும் உணர்ந்தவரென அவராற் சுட்டப் பெற்றவர் **பேராசிரியரே** யென்பது துணிபு. இதிலிருந்தே கடைச்சங்க காலத்தின்பின் நெடுநாள்வரை அகத்தியம் வழங்கி வந்துள தென்று துணிந்து கூறலாகும்.

எனினும் அதற்கு யாரும் உரைகண்டார் எனத் தெரியாமையின் உரையாளர்கள் காலத்தில் அந்நூல் முழுவுருவுடன் காணக்கூடா வாறு சிதைந்து போயிற்றென்று கருதவேண்டி யிருக்கிறது.

இனி, அகத்தியம் முத்தமிழுக்கும் இலக்கணமாம் என்பதற்கும் பல ஆதரவுகள் உள்ளன.

> **"மூன்றுறுப் படக்கிய தன்மைத் தாயிற்**
> **றோன்று மொழிப் புலவரது பிண்ட மென்ப,"** [2]

என்னும் செய்யுளியற் சூத்திர வுரையில், 'தோன்று மொழிப் புலவர் அது பிண்ட மென்ப' என்றதனாற் பிண்டத்தினையும் அடக்கி நிற்பது வேறு பிண்டமுள தெனக் கொள்க. அது முதநூலாகிய அகத்தியம் போலும். என்னை? அஃது இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்று மூன்று பிண்டத்தினையும் அடக்கி நிற்றலின்' என்று **பேராசிரியரும், நச்சினார்க்கினியரும்** கூறியுள்ளார். உவமவியல் இறுதிச் சூத்திர வுரையினும் 'அகத்தியனாராற் செய்யப்பட்ட மூன்று தமிழினும்' எனப் பேராசிரியர் கூறினார்.

சிலப்பதிகார வுரையில், அடியார்க்கு நல்லாரால் மேற் கோளாகக் காட்டப் பெற்ற

1. தொல்காப்பியம் – பொருளதிகாரம் – செய்யுளியல் நூற்பா – 149
2. தொல்காப்பியம் – பொருளதிகாரம் – செய்யுளியல் நூற்பா – 172

***"அவைதாம், சாந்திக் கூத்தே விநோதக் கூத்தென்***
***றாய்ந்துற வகுத்தன னகத்தியன் றானே.***
***எழுவகைக் கூத்து மிழிகுலத் தோரை***
***ஆடவகுத்தன னகத்தியன் றானே."*** [1]

என்னும் சூத்திரங்கள் போல்வனவும் அகத்தியர் நாடகத்தமிழ் இயற்றியவ ரென்பதனைத் தெரிவிப்பன வாகும், சிலப்பதிகார வுரைப்பாயிரத்து 'நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் முதலாயுள்ள தொன்னூல்களும் இறந்தன' என்று அடியார்க்கு நல்லார் கூறியிருப்பதும் காண்க. அவர், அவ்வுரைப் பாயிரத்தே 'தேவ விருடியாகிய குறுமுனிபாற் கேட்ட மாணாக்கர் பன்னிரு வருட் சிகண்டி யென்னும் அருந்தவமுனி . . . சார குமாரனென அப்பெயர் பெற்ற குமரன் இசை யறிதற்குச் செய்த இசை நுணுக்கமும்' என்று கூறியிருப்பது, அகத்தியனார் இசைத் தமிழுக்கும் ஆசிரியராவா ரென்பதனைக் குறிப்பிடுவதாகும். அகத்தியர் இசைத்தமிழ் நூலியற்றியதன்றி, இசை பாடுவதிலும் முதன்மை யுடையவராவர் என்னும் வழக்குண்டு. அது தொல்காப்பியப் பாயிர வுரையில் அகத்தியர் வரலாறு கூறு மிடத்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து இராக்கதரை ஆண்டியங்காமை விலக்கினர்' என்று **நச்சினார்க்கினியராற்** குறிக்கப் பெற்றுளது. மற்றும் அவர்,

***"தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்***
***றொன்முது கடவுட் பின்னர்மேய***
***வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந."*** [2]

என்னும் **மதுரைக் காஞ்சி**யடிகளும் இச்செய்தியைக் குறிப்பன வாகக் கொண்டன ரென்பது அவ்வுரையால் விளங்கும். அது, 'இராவணனைத் தமிழ் நாட்டையாளாதபடி போக்கின. கிட்டு தற்கரிய வலியினையுடைய பழமை முதிர்ந்த அகத்தியன் பின்னே எண்ணப்பட்டுச் சான்றோனா யிருத்தற்கு மேவின ஒப்பற்றவனே; இராவணன் தென்றிசை யாண்டமை பற்றித் தென்னவன் என்றார். அகத்தியனைத் தென்றிசை யுயர்ந்த நொய்ம்மைபோக இறைவனுக்குச் சீரொப்ப இருந்தா னென்பதுபற்றிக் கடவுள் என்றார். இதனால் அகத்தியனுடன் தலைச்சங்கத்துப் பாண்டிய னிருந்து தமிழாராய்ந்த சிறப்புக் கூறினார்' என்பது. 'தஞ்சை வாண னிசைக்குருகப் - படுசிலைப் பாவை' (345) என்னும் **தஞ்சை வாணன் கோவைச்** செய்யுளும், 'இசைக்குருகப் படுசிலை -

1. சிலப்பதிகாரம் அரங்கேற்றுக்காதை 12–ஆம் அடிக்குரிய விளக்க உரை மேற்கோள்
2. மதுரைக்காஞ்சி அடிகள் 40–42

இராவணற் பிணிக்கக் குறுமுனிபாடும் இசைக்குருகப் பட்ட பொதிய மலை' என்னும் அதனுரையும் இதனைக் குறித்திடுதல் காண்க. திருநேல்வேலித் தலபுராணமும் இது கூறா நிற்கும்.

இவைகளிலிருந்து இலங்கையர் வேந்தனாகிய இராவணன் மூவேந்தரது தமிழ் நாட்டிலும் ஆட்சி நடாத்தத் தொடங்கின னென்பதும், இசையில் வல்லோனாகிய அவ்விராவணனை அகத்தியனார் இசையில் ஒட்டி வென்று அவன் தமிழ் நாட்டைக் கைவிட் டகலுமாறு செய்தன ரென்பதும் அறியக் கிடக்கின்றன. அகத்தியனார் இசை பாடிப் பாறை நெகிழ்ந்துருகி யாழினைப் பற்றிக் கொள்ளுமாறு செய்தன ரென்றும், அவ்வியாழினை யெடுப்பதற்கு இராவணன் பாடி அப்பாறையை நெகிழச் செய்ய மாட்டானாயிருப்ப, அகத்தியனாரே மீண்டும் பாடி அதனை நெகிழ்வித்து யாழினை யெடுத்தன ரென்றும் அவர் இசையில் வென்ற வரலாறு கூறுவர்.

இவ்வாறாக வுள்ள பல மேற்கோள்களும், கதைகளும் அகத்தியனார் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் வல்ல வித்தகர் என்பதனையும், அவர் அம்மூன்று பாகுபாட்டிற்கும் இலக்கணஞ் செய்துள்ளார் என்பதனையும் தெரிவிப்பனவாகும்.

சிவஞான முனிவர், பாயிர விருத்தியில் முத்தமிழ் என்னும் வழக்குண்டானமைக்கு அகத்தியத்தைக் காரணமாகக் கூறு கின்றனர். அது,

"அற்றேலஃதாக, 'எண்ணெண்ப வேனை யெழுத்தென்ப' எனவும் 'சத்தமுஞ் சோதிடமும்' எனவும், இயற்றமிழோடு சிறந்தெடுத் தெண்ணப்படும் சோதிடம் முதலிய பிற கலைகளும் உளவாக முத்தமிழ் எனத் தமிழாசிரிய ரெல்லாம் இவற்றையே விதந்துகொண்ட தென்னையோ வெனின், அஃதொக்கும்; சோதிடம் முதலிய பிற கலைகளெல்லாம் ஆரியத்தினும், தமிழினும் ஏனை மொழிகளினும் வேறுபாடின்றி ஒப்ப நிகழ்தலின் அவற்றை வேறு விதிக்க வேண்டாமையானும், இயல், இசை, நாடகம் என்னும் மூன்றும் தமிழ் நிலத்துச் சில வேறு பாடுடைமையின் அவற்றை வேறு விதிக்க வேண்டுதலானும், அது பற்றி அகத்தியத்துள் இம்மூன்றுமே யெடுத்தோதினா ராகலின் முத்தமிழென வழங்கப் பட்டன வென அறிக" என்பது. இங்ஙனம் அருந்தவக் கொள்கை அகத்தியனாரி யற்றிய தென்று பெறப்படும். அகத்திய மென்னும் ஒப்புயர்வற்ற தனித் தமிழ் முதுனூலினைக் குறித்துத் தொல்லாசிரியர் பல்லோர் கொள்கைக்கும் முற்றிலும் மாறாகச் **சுப்பிரமணிய தீக்கித**

ரென்பார் தமது **பிரயோக விவேகத்**தில் மனம்போனபடி கூறுவாராயினர்.

அது "ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை - வேறென விளம்பான் பெயரது விகாரமென் - றோதிய புலவனு முளனொரு வகையா - னிந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன், என அகத்தியத்தின் கண்ணும், 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்' எனத் தொல்காப்பியப் பாயிரத்தின் கண்ணும் வருதலின் இவர்கட்கு முதனூல் பாணினீயமும் ஐந்திரமுமா மென்க" என்பது.

இதில் தொல்காப்பியத்தைக் குறித்து இவர் கூறியிருப்பதைத் 'தொல்காப்பியர்' என்னும் ஆராய்ச்சி யுரையில் எடுத்துக் கொள்வோம். அகத்தியர் பாணினீயத்தை முதனூலாகக் கொண்டனர் என்னும் இவரது கொள்கையே இங்கு நோக்கற்பாலது. எத்தனையோ பலநூ லாசிரியர் உரையாசிரியர்களின் கொள்கைக்கு மாறாக இவர் கொண்ட இத்துணிபிற்கு ஆதரவாக வுள்ளது அகத்தியத் திலுள்ளதென்று இவர் காட்டிய சூத்திரத்தில், 'ஏழியன்முறைய தெதிர் முக வேற்றுமை - வேறென விளம்பான் பெயரது விகாரமென் - றோதிய புலவனுமுளன்' என்னும் பகுதியே. அஃது அகத்தியர் சூத்திரந்தானோ அன்றோ என்பது பின்பு பார்ப்போம். அகத்தியமாகவே வைத்துக் கொள்ளினும், இதில் பாணினியென்று பெயர் கூறப்படவில்லையே. விளிவேற்றுமையைப் பெயரின் விகாரமெனப் பாணினி கூறியிருத்தலின் 'ஓதிய புலவன்' என்றது பாணினியாதல் வேண்டும் என்னில், பாணினி கூறி யிருப்பதும் அதற்கு முன்னுள்ள ஓர் புலவன் கொள்கையென ஏன் கூறுதல் கூடாது? அன்றியும் பாணினீயம் என்பது இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளின் முன்பு தோன்றியது. அகத்தியமோ பல்லாயிரம் ஆண்டுகளின் முன் ஆதியூழியிற் றோன்றிய தென்ப. அவ்வாறிருக்க அகத்தியர் பாணினீயத்தைக் கண்டு நூலியற்றின ரென்பது இறும்பூதே. காலத்தை விட்டுவிடுவோம். பாணினீயமென்பது வடமொழிச் சந்த நூலாம். அகத்தியமோ தமிழின் இயல் இசை நாடக மென்னும் மூன்றுக்கும் இலக்கணமாவது. இசை, நாடகங்களை விடுத்து இயல் ஒன்றையே யெடுத்துக் கொள்ளினும், அது, பிற மொழிகளிற் காணப்படாத அகனும் புறனுமாய பொருட்பாகு பாட்டுடன் கூடியது. அகத்தியர்க்குப் பாணினீயம் முதனூலா மென்ற தீக்கிதர் இவ்வுண்மைகளைச் சிறிதும் அறிந்திலரோ, அறிந்து வைத்தும் வடமொழியே எம்மொழிக்கும் தாயாதல் வேண்டுமென்னும் பற்றினால் வழுக்கி விட்டனரோ அறிந்திலேம்.

அவர் பிறிதோரிடத்து, 'யாம் இந்நூலுட் பெரும் பான்மையும் தற்சமயம் தற்பவங்களாற் கூறினாம். இப்பெரும் பான்மையும் கூறியது யாதுபற்றி யெனின், வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் இலக்கணம் ஒன்றென்பதறியாது சம்ஞாபேதத்தாலும் பாடை வேற்றுமையாலும் இகழ்ந்து வேறென்பாரை நோக்கி யென்க' என்று கூறியிருப்பதிலிருந்து இருமொழிக்கும் உள்ள வேற்றுமையைச் சிறிதும் ஓர்ந்திலர் எனத் தெரிதலின் அகத்தியத்தைக் குறித்து அவர் தவறாகக் கூறியதில் வியப்பொன்று மில்லை யென்க.

தமிழில் அளவற்ற ஆராய்ச்சி யுடையரென்று கருதப் படுகின்ற சுவாமிநாத தேசிகரே தமது இலக்கணக் கொத்தில் தமிழின் பெருமையைப் புறக்கணித்து இளஞ்சிறார் போன்று முன்னொடு பின் மலையப் பல கூறுவாராயினர். அவர்,

**“ தொல்காப் பியந்திரு வள்ளுவ ராதிநூல்**
**வடமொழி நியாயம் வந்தன சிலவே”[1]**

**“ தமிழி னியாயந் தந்தன பலவால்.” [2]**

என்று கூறியவர், உடனே அதற்கு முற்றிலும் மாறாக

**“ அன்றியுந் தமிழ்நூற் களவிலை யவற்று**
**ளொன்றே யாயினுந் தனித்தமி ழுண்டோ**
**அன்றியு மைந்தெழுத் தாலொரு பாடையென்**
**றறையவே நாணுவ ரறிவுடை யோரே.**
**ஆகையால் யானு மதுவே யறிக” [3]**

**“ வடமொழி தென்மொழி யெனுமிரு மொழியினும்**
**இலக்கண மொன்றே யென்றே யெண்ணுக.” [4]**

என்று முழங்கி மகிழ்வாராயினர். தொல்காப்பியம் திருக்குறள் முதலியவற்றில் வடமொழி நியாயம் வந்தன என்கின்றார். வந்தனவென்றே கொள்ளினும் அவர் கூறியபடி அவை சிலவே யன்றோ? 'தமிழ் நூற்கு அளவிலை' யென்று கூறிவைத்து, அடுத்து 'ஒன்றேயாயினும் தனித்தமி ழுண்டோ' என்று கூறியதாற் பெற்றதென் வடசொற் சில அருகிக் கலந்துள்ளன என்பது தானே? அதுகொண்டு 'இலக்கண மொன்றே யென்றே யெண்ணுக' என எங்ஙனம் கூறத் துணிந்தனரோ! அவர் கருத்துப் படி ஆங்கிலச் சொல் சில தமிழிற் கலந்துவிடின் ஆங்கிலத்திற்கும்

1. 32, 33 , 34, 35 எண்ணுடைய 4 நூற்பாக்களும் இலக்கணக்கொத்து – 7ஆம் நூற்பாவின் பகுதிகள்

தமிழிற்கும் இலக்கணம் ஒன்றென்று கூறவேண்டியதே! 'ஐந்தெழுத்தாலொரு பாடை' என அவர் கூறியிருப்பது பள்ளியிற் பயிலும் சிறாரும் நகையாடற் கேற்ற தன்றோ? ஒவ்வொரு மொழியும் பிற மொழிகட்குப் பொது வாயுள்ள எழுத்துக்களைத் தவிர்த்து இத்தனை யித்தனை யெழுத்துக்களா னியன்றுள வெனக்காட்டி, அதன்பின் தமிழுக்குள்ள குறையைக் கூறி யிருப்பரேல் அவர் நடுநின்று கூறியதாகக் கருத இடனுண்டு அன்னோ! பெரும்புலமை வாய்ந்த ஒருவர் சிறிது அமைதி யின்மையால் தம் பெருமைக்குப் பெரியதோ ரிழுக்கினைத் தேடிக் கொண்டு விட்டனர். ஒரு காலத்தவராய தீக்கிதரும் தேசிகரும் இங்ஙனம் கூறியிருப்ப வற்றை நோக்குழி, வடமொழி மதம் பற்றிய இவ்வேழங்களின் தருக்கை யடக்கும் கோளரிபோலும் தமிழ்ப் புலவர் அக்காலத்தில் இருந்திலர் போலும் எனக் கருத வேண்டியிருக்கிறது.

பொது வெழுத்தை நீக்கி ஐந்தெழுத்தாலொரு பாடை யுண்டோ வென்று கூறியது வீண்வழக் கென்பதனைத் தேசிகர் தாமே அறிந்திருப்பரென்பதற்கு, அவர் பின்பு,

> **"பொது வெழுத்தானுஞ் சிறப் பெழுத்தானும்**
> **ஈரெழுத்தானு மிலங்குந் தமிழ்மொழி."** [1]

என்று கூறியிருப்பதே சான்றாகும்.

மற்றும் அவர் 'இருதிணையும், ஆண்பால் பெண்பால் வினையீறும் வடமொழிக்கில்லை. மூன்றிலிங்கமும், முதலீற்று வேற்றுமைகட் குருபுகளும் தமிழிற்கில்லை. மேலும் ஆண்டாண்டுக் காட்டுதும்' என ஓரிடத்துக்கூறி, மற்றோரிடத்து

> **"சில பெயரெச்சமுஞ் சில வினைத்தொகையும்**
> **இருவகை யுவமையும் வண்ணச் சினைச்சொலும்**
> **பண்புத் தொகையெனப் பகரும் வடநூல்"** [2]

எனச் சூத்திரஞ் செய்து, 'பகரும் வடநூலெனவே தமிழ்க் கடாதென்க' என்றும் கூறியிருப்பது தமிழியல்பும் வேறு, வட மொழியியல்பும் வேறு என அவர் கொண்டுளா ரென்பதற்குச் சான்றன்றோ? எனினும் அவர், தாம் முன்பு கூறியதனை முற்றிலும் தவறு என்று காட்டிக் கொள்ள மனம்பொருந்தாது, 'ஆயின் ஈரிலக்கணமும் ஒன்றென்று பாயிரத்திற் கூறியதென் னெனிற் பெரும்பான்மை நோக்கி யென்க' என்று கூறினார்.

1.. இலக்கணக்கொத்து – நூற்பா – 88
2. இலக்கணக்கொத்து – நூற்பா – 99

ஒன்றென்பதற்குச் சிறுபான்மையும் இடமில்லை யென்பதனை, தொல்காப்பியர் ஐந்திரத்தை முதுனூலாகக் கொண்டன ரென்னும் **பிரயோக விவேக** நூலாரது கொள்கையை மறுக்கு முகத்தானே **சிவஞான முனிவர் பாயிர விருத்தியிற்** காட்டி விட்டனர். அது,

'ஐந்திர நோக்கித் தொகுத்தானெனின், தமிழ் மொழிப் புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும், குறியீடுகளும், வினைக் குறிப்பு வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறமென்னும் பொருட் பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும், இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படாமையானும், இவையெல்லாந் தாமே படைத்துக் கொண்டு செய்தாரெனின், முந்துநூல் கண்டென்பதனோடு முரணுதலானும் முற்காலத்து முதனூல் அகத்திய மென்பதூஉம், அதன் வழித்தாகிய தொல்காப்பியம் அதன் வழி நூலென்பதூஉம் துணியப்படு மென்க' என்பது.

இனி, தனித்தமிழ் முதனூலாகிய அகத்தியம் தோன்றுதற்கு முன் தமிழின் நிலைமை யாதாகுமென்று பார்ப்போம்.

அகத்தியர் பல புலவர்களோடு சங்கமிருந்து தமிழா ராய்ந்தனர்; மாணவர் பலர்க்குத் தமிழறிவுறுத்தினர்; அகத்திய மென்னும் முத்தமிழிலக்கணம் அருளிச் செய்தனர்; என்னும் இச் செய்திகளே, அதற்கு முன் எண்ணிறந்த நூல்களோடு கூடித் தமிழ் தழைத்திருக்க வேண்டு மென்பதனைப் புலப்படுத்தா நிற்கும். அகத்தியம் ஒன்றையே கொண்டு நோக்குதும். ஒரு மொழியில் பெரியதோ ரிலக்கணம் தோன்ற வேண்டுமாயின் அதற்கு முன்பே நன்மக்களின் வழக்கும் செய்யுளும் அதன்கண் மலிந்திருத்தல் வேண்டும். இலக்கணங்களும் பல இருந்திருத்தல் வேண்டும்.

> **" வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்**
> ***எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச்***
> ***செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு***
> ***முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்."***

என்று **தொல்காப்பியப் பாயிரங்** கூறுவது இவ்வுண்மையை நன்கு விளக்குவதாகும். அகத்தியத்திற்கும் இது பொருந்தும் என்க. ஆயின் அகத்தியம் முத்தமிழ்க்கும் பெரியதோரிலக்கண மாகலின் அது தோன்றுதற்கு அடியாக வழக்கே யன்றி

1. தொல்காப்பியச்சிறப்புப்பாயிரம.ச்

எண்ணிறந்த செய்யுட்களும் இருந்திருத்தல் வேண்டு மென்பது பொருத்தமே; இலக்கணமும் வேறு இருந்திருக்க வேண்டு மென்பது என்னை? அகத்தியமே முதலிற் றோன்றிய இலக்கண மாகும்; என்னில், கூறுதும் ஒருமொழியானது தோன்றி எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாயின பின்பே அது முற்றிலும் திருந்திய நிலையடையப் பெறுவதாகும். அதற்கு முன்பெல்லாம் வழக்கும் செய்யுளும் இலக்கணத்திற்கும், இலக்கணம் வழக்குச் செய்யுள்களுக்கும் ஆக இங்ஙனம் ஒன்றுக்கொன்று, ஆதரவாயிருந்து நாளடைவில் மொழியானது வளர்ச்சியும் திருத்தமும் அடைந்து, வந்து கொண்டிருப்பதே இயற்கை. அவ்வாறன்றி, முதன் முதலாகவே ஓர் பேரிலக்கணம் ஏற்பட்டு விட்டதென்பது இயற்கைக்கு ஒத்ததாகாது. அன்றியும் அகத்தியர் சூத்திரத்திருந்தே அவர்க்கு முன் வேறு இலக்கணம் இருந்தமை அறியப் படுகின்றது. **யாப்பருங்கல** இறுதிச் சூத்திர விருத்தியில் அகத்தியனாரது சூத்திரமாக எடுத்துக் காட்டப் பெற்றுளது பின் வருவது:

**“களவினுங் கற்பினுங் கலக்க மில்லாத்**
**தலைவனுந் தலைவியும் பிரிந்த காலைக்**
**கையறு துயரமொடு காட்சிக் கவாவி**
**எவ்வமொடு புணர்ந்து நனிமிகப் புலம்பப்**
**பாடப் படுவோன் பதியொடு நாட்டொடும்**
**உள்ளுறுத் திறினே யுயர்கழி யானந்தப்**
**பையு ளென்று பழித்தனர் புலவர்.”** [1]

இதில் ‘பழித்தனர் புலவர்’ என்று கூறியிருப்பது இதற்கு முன் வேறு இலக்கண நூல் இருந்தமையைத் தெரிவிக்கு மன்றோ?

ஆயின், அகத்தியத்தை முதனூலென்று கூறுவ பொருந் தாதாம் எனின், அன்று; முதனூலென்று எல்லா நூற்கும் காலத்தால் முற்பட்டிருக்க வேண்டுமென்பதின்று. முதனூல் இன்னதென்பது,

**“வினையி னீங்கி விளங்கிய வறிவின்**
**முனைவன் கண்டது முதனூலாகும்”** [2]

என்னும் மரபியற் சூத்திரத்தால் அறியப்படும். அச் சூத்திர வுரையில் பேராசிரியர், தாமே தலைவராயினாரும், அத் தலைவரை, வழிபட்டுத் தலைவராயினாரும் முதனூல் செய்வரெனவும், முற்

1. அகத்தியம் – ஆனந்தவோத்து.
2. தொல்காப்பியம் – பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா – 96

காலத்து முதனூல் அகத்தியமே யெனவும் பிற்காலத்தானும் பெருமானடிகள் களவியல் செய்தாங்குச் செய்யினும் அதுவும் முதனூலே யாமெனவும் கூறியிருக்கின்றனர். எனவே முற்காலத் தேனும் பிற்காலத்தேனும் இறைவனோ அவனருள் வழிப்பட்ட பெரியாரோ பிறிதொரு நூலின் வழித்தன்றிச் செய்யும் நூல் முதனூலெனப்படும் என்பதாயிற்று. களவியலுக்கு முன்பே அகப்பொருளை விரித்துணர்த்தும் நூல்கள் உளவாகவும் களவியல் முதனூலெனப்படுவது போன்றே அகத்தியமும் முதனூலெனப் படுகின்றது என்க. அற்றேல்., சிவஞானமுனிவர் தொல்காப்பியப் பாயிரத்திலுள்ள 'நிலத்தொடு முந்துநூல்' என்னுஞ் சொற்றொடர்க்கு 'செந்தமிழ் நிலத்து மொழியோடு முற்பட்டுத் தோன்றும் நூல்' என்று பொருள்கூறி, 'என்றது அம்மொழி தோன்றுங் காலத்துடன் றோன்றிய நூலென அதன் றொன்மை கூறியவாறாயிற்றென்பது. எனவே அகத்தியமென்பது பெற்றாம்' என்ற தென்னையெனின், முனிவரர் கருத்து இங்கு இசைவுடைத்தன் றென்பதே எமதறிவிற்குப் புலனாவது. இதனை முன்னரே மறுத்துரைத்தாரும் உளர். சிவஞான முனிவர் அகத்தியர் வரத்தாற் பிறந்தவரென்ப. அதற்குப் பல பொருத்தங் களும் உள. அவர் அகத்தியனார்க்கு வணக்கங் கூறியிருப்பதும் முன்பு காட்டப் பெற்றுள்ளது. இவ்வாற்றால் அகத்தியனார் பால் அளவு கடந்த அன்புடையார் என்பது பெறப்படினும், அது பற்றியே அங்ஙனம் கூறினாரென்றால் அவர் பெருமைக்கு ஏலாததொன்றாம். முனிவரது கருத்தின் மெய்ம்மையை நல்லறிவுடையோர் ஆராய்ந்து வெளிப்படுப்பரேற் காண்பேமாக.

இனி, யாப்பருங்கல விருத்தியில் "அகத்தியனார் அறுவகை யானந்த வோத்தினுள் இதனை

**" இயற்பெயர் சார்த்தி யெழுத்தள பெழினே**
**யியற்பா டில்லா வெழுத்தா னந்தம் "** [1]

என்றார் என்க." (சூ. 4- உரை) என்று கூறியிருத்தலின் அகத்தியர் ஆனந்த வோத்து எனவும் ஒரு நூல் இயற்றியுள்ளாரென்பது பெறப்படும். ஆயின், தமிழ் நூற் கடல்முழுதும் பருகித் திளைத் தோரான பேராசிரியர் நச்சினார்க்கினியர்களின் கருத்து இதற்கு முற்றிலும் மாறுபட்டுளது.

பேராசிரியர், உவமவியல் இறுதிச் சூத்திர வுரையிலே "இனி ஆனந்த வுவமையென்பன சில குற்றம் அகத்தியனார் செய்தாரெனக் கூறுபவராகலின் அவையிற்றை யெவ்வாறு

1. யாப்பருங்கல விருத்தி – நூற்பா – நான்கின் உரை.

கோடுமெனின், அவைகள்தாம் அகத்துள்ளும் பிறசான்றோர் செய்யுளுள்ளும் வருதலிற் குற்றமாகா; அகத்தியனாராற் செய்யப் பட்ட மூன்று தமிழினும் அடங்காமை வேறு ஆனந்த வோத் தென்பது ஒன்று செய்தாராயின் அகத்தியமும் தொல் காப்பியமும் நூலாக வந்த சான்றோர் செய்யும் குற்றம் வேறு படா வென்பது'' என்றும், மரபியலில் 'சிதைவெனப்படுபவை' என்னுஞ் சூத்திரவுரையில் ''தன்னா னொருபொருள் கருதிக் கூறலென்பது மலைபடு கடாத்தினை ஆனந்தக் குற்றமெனப் பிற்காலத்தா னொருவன் ஒரு சூத்திரம் காட்டுதலும் . . . . . . போல்வன'' என்றும் கூறினர். எனவே அகத்தியனார் ஆனந்த வோத்துக் கூறவில்லை யென்பதே பேராசிரியர் கருத்தாதல் பெறப்பட்டது. இவர் அகத்தியமுணர்ந் தவரென நச்சினார்க்கினியர் கருதியுள்ளாரென்பது முன்பு காட்டப் பெற்றது. இதனை 'ஆங்ஙனம் விரிப்பின்' என்னும் செய்யுளிற் சூத்திரவுரையில் ''அஃதெற்றாற் பெறுதுமெனின் இதன் முதனூல் செய்த ஆசிரியன் அகத்தியனார் சொல்லு மாற்றாற் பெறுது மென்றவாறு'' எனப் பேராசிரியர் தாமே கூறுதல் வலியுறுத்தா நிற்கும்.

நச்சினார்க்கினியர் மலைபடு கடாத்திலுள்ள 'தீயினன்ன வொண்செங்காந்தள்' என்னும் அடிக்குப் பொருள் எழுதிய விடத்தே ''இதற்கு நன்னனென்னும் பெயர் தீயோடடுத்த தன்மையின், ஆனந்தமாய், பாடினாரும் இறந்தாரென்று ஆளவந்த பிள்ளை யாசிரியர் குற்றங் கூறினாராலெனின், அவர் அறியாது கூறினார்; செய்யுள் செய்த கௌசிகனார் ஆனந்தக் குற்றமென்னுங் குற்ற மறியாமற் செய்யுள் செய்தாரேல், இவர் நல்லிசைப் புலவராகார்; இவர் செய்த செய்யுளை நல்லிசைப் புலவர் செய்த ஏனைச் செய்யுட்களுடன் சங்கத்தார் கோவாமல் நீக்குவர்; அங்ஙனம் நீக்காது கோத்ததற்குக் காரணம் ஆனந்தக் குற்றமென்ப தொரு குற்றம் இச்செய்யுட்கு உறாமையா னென்றுணர்க'' எனப் பொது வகையாற் கூறிவைத்து, பின்பு இவ்வடியிலுள்ள சொற்களின் நிலையை ஆராய்ந்தும் குற்றமின்மையை நாட்டுகின்றார்.

அவர் அவ்வளவில் நின்றிருப்பின் இச்செய்யுளில் குற்றம் இன்றென்றாரெனும் ஆனந்தக் குற்றமென்பது ஒன்று உண்டு என உடன்பட்டாராவர். ஆனால் அவர் அவ்வளவில் நில்லாது ''நூற் குற்றங் கூறுகின்ற பத்துவகைக் குற்றத்தே 'தன்னானொரு பொருள் கருதிக் கூறல்' என்னுங் குற்றத்தைப் பின்னுளோர் ஆனந்தக் குற்றமென்பதொரு குற்றமென்று நூல் செய்ததன்றி அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் இக்குற்றம் கூறாமையிற்

சான்றோ செய்யுட்கு இக்குற்ற முண்டாயினுங் கொள்ளாரென மறுக்க" என்று கூறியிருப்பது ஆனந்தக் குற்றம் அவர்க்கு உடன்படாமையை விளக்குகிறது. அகத்தியனார் ஆனந்தக் குற்றங் கூறவில்லையென அவர் துணிந்துரைப்பது, பேராசிரியர் அங்ஙனம் கூறியிருத்தலானும் தொல்காப்பியத்தில் அது காணப்படாமையானும் போலும்? அகத்தியர் சிறிதேனும் எடுத்தியம்புவது முறையே யன்றோ?

யாப்பருங்கல ஆசிரியர் அமித சாகரனார் 'ஆனந்த முதலிய ஊனம்' என்று அதனைச் சுருங்கக் கூறிவைத்தனர். அதன் உரைகாரர் ஆனந்தத்தை அறுவகைப்படுத்து இலக்கணங் கூறி, அவ்விலக்கணங் கட்கு மேற்கோளாக வேறு சூத்திரங் களையும் காட்டினர். அதனோடு அவர் அக்குற்றங்களுக்கு உதாரணங் காட்டும் வழி மலைபடு கடாத்தில் வெவ்வேறிடத்தி லிருந்து பதினான்கு அடிகளை யெடுத்துவைத்து, அவற்றில் அக்குற்றங்கள் அமைந்து கிடக்குமாறு காட்டுவாராயினர்.

நச்சினார்க்கினியரோ நல்லிசைப்புலவர் செய்யுட்களில் குற்றம் விரவுமாறில்லை யென்பதனோடு, ஆனந்தக் குற்றத்தையே பெயர்த்தெறிந்து விட்டு, அகத்தியனார் அது கூறிற்றிலர் எனவும் துணிந்துரைக்கின்றனர்.

இலக்கண விளக்கப் பாட்டிய லுரைகாரர் அறுவகை ஆனந்தத்திற்கும் ஆறு சூத்திரம் எடுத்தெழுதி, 'என ஆசிரியர் அகத்தியனார் ஆனந்தவோத்துட் கூறுதலா னறிக' என்கின்றனர். அவர் காட்டிய சூத்திரங்கள்:

**" இயற் பெயர் சார்த்தி யெழுத்தள பெழினே**
**யியற் பா டில்லா வெழுத்தா னந்தம்."** [1]

**" இயற் பெயர் மருங்கின் மங்கல மொழியத்**
**தொழிற் சொற் புணர்ப்பினது சொல்லா னந்தம்."** [2]

**" புகழ்ச்சிப் பொருளை யூறுபடக் கிளப்பினும்**
**புகழ்ச்சிக் கிளவியது பொருந்தக் கூறினும்**
**மூவர் காட்சியி னூனந் தோன்றினும்**
**இவைபல பிறவு மின்னவை யின்வரின்**
**அவமொழி யாக்கும் பொருளா னந்தம்."** [3]

---

இலக்கண விளக்கப் பாட்டியலுரைகாரர் ஆனந்தவோத்துக்காக எடுத்துக்காட்டும் ஆறு அகத்தியச் சூத்திரங்கள் –1, 2, 3, இல் சுட்டிய ஆறு நூற்பாக்களும் இலக்கண விளக்கப் பாட்டியல் நூற்பா நூற்று இருபத்தேழுக்கு விளக்கம் கூறும்பகுதியில் அமைந்துள்ளன.

*" முதற்றொடை மயங்கின மொழியரில் தரத்திருப்*
*பெயரிடைப் படுத்த வழியிரு பாட்டினுள்*
*வாய்ப்ப நோக்கி வல்லோர் கூறியது*
*யாப்பா னந்தமென் றியம்பல் வேண்டும்."* [4]

*" பாவகை யொருவனைப் பாடுங் காலை*
*தொடைவகை யிடையின் வந்தபெயர் தோற்றி*
*யேங்கினு மெழுத்துப் பிரிந்தி சைப்பினும்*
*தூங்கினுஞ் சுழலினுந் தூக்கா னந்தம்."* [5]

*" அளபெடை மருங்கின் பாடுவோன் பெயரொடு*
*பிறப்பின் வழாஅத் தொடைவரத் தொடுப்பின்*
*தொடையா னந்தமெனத் துணிதல் வேண்டும்."* [6]

*என்பன இவ்வாற்றால் ஆனந்த வோத்து என ஒரு நூல் அகத்தியனார் இயற்றியதாக உரையாளர்கள் காலத்தில் வழங்கியுள தென்பதும், அதனைச் சிலர் அகத்தியனாருடையதென்றும், வேறு சிலர் அன்றென்றும் கருதியுள்ளா ரென்பதும் பெறப்படுகின்ற உண்மைகளாம்.*

*இனி, அகத்தியர் மாணாக்கர் தொல்காப்பியர் முதலாகப் பன்னிருவ ரென்பதும், அப் பன்னிருவரும் தனித்தனி நூலியற்றிய தன்றி அனைவரும் சேர்ந்து* **பன்னிரு படலம்** *என ஓர் நூல் இயற்றியுள்ளா ரென்பதும் இருவகை வழக்கானும் அறியப்படு கின்றன.*

*" மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்*
*தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்*
*தன்பாற் றண்டமிழ் தாவின் றுணர்ந்த*
*துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதல்*
*பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த*
*பன்னிரு படலம் பழிப்பின் றுணர்ந்தோன்."* [4]

*என* **புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரம்** *கூறுவது காண்க. பன்னிருவராவார்: தொல்காப்பியன், அதங் கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம் பாரன், கழாரம்பன், அவினயன், காக்கை பாடினி, நற்றத்தன், வாமனன் என இவரென்ப.*

இலக்கண விளக்கப் பாட்டியலுரைகாரர் ஆனந்தவோத்துக்காக எடுத்துக்காட்டும் ஆறு அகத்தியச் சூத்திரங்கள் –1, 2, 3, இல் சுட்டிய ஆறு நூற்பாக்களும் இலக்கண விளக்கப் பாட்டியல் நூற்பா நூற்று இருபத்தேழுக்கு விளக்கம் கூறும்பகுதியில் அமைந்துள்ளன.

4. புறப்பொருள் வெண்பா மாலைப் – பாயிரம்

சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் "இனித் தேவ விருடியாகிய குறு முனிபாற் கேட்ட மாணாக்கர் பன்னிருவருள் சிகண்டி யென்னும் அருந்தவ முனி.... சார குமாரரென அப்பெயர் பெற்ற குமரன் இசை யறிதற்குச் செய்த இசை நுணுக்கமும்" என்று அடியார்க்கு நல்லார் கூறியிருப்பது, சிகண்டியென்பாரும் அகத்தியனார்க்கு மாணாக்க ராவர் என்பதனைக் காட்டு கின்றது. சிகண்டியைப் பன்னிருவரில் ஒருவரென்று இவர் கூறியிருப்பவும், பிறர் காட்டியுள்ள பன்னிரு மாணாக்கர் பெயர் களில் சிகண்டி யென்னும் பெயர் காணப்படாமை என்னையோ? இயல் இசை நாடகங்கட்கு வெவ் வேறாகப் பன்னிரு மாணாக்கர் இருந்தன ராவரோ என்று கருதுதற்கு இஃது இடந் தருகின்றது. மற்றும் அகத்தியனார்பால் மருத்துவம் முதலியன கற்ற மாணாக்கரும் பலராவர் என்று கூறுகின்றனர். அதனை இறுதிக் கண் ஆராய்குதும்.

இனி, அகத்தியனாரின் மாணாக்கர்களான தொல்காப்பியர் முதலிய பன்னிருவரும் சேர்ந்து இயற்றியது பன்னிருபடலம் என்னும் புறப்பொருளிலக்கண நூல் என்பதும், அதன் வழி நூலாகவுள்ளது புறப்பொருள் வெண்பா மாலை யென்பதும், வெண்பா மாலைப் பாயிரச் சூத்திரத்தால் அறியப்படுமென முன்பு காட்டியுள்ளாம். நன்னூலின் பழைய உரையாளரான மயிலை நாதர் 'முதனூல் கருத்தன்' என்னும் சூத்திரவுரையில் அளவினாற் பெயர் பெற்றதற்குப் பன்னிரு படலத்தை உதாரணங் காட்டினர். தமிழுரைகளில் மிக்க பழமை வாய்ந்ததாகிய இறையனாரகப் பொருளுரையும், 'அளவினாற் பெயர் பெற்றது பன்னிரு படலமென்பது' என்று கூறுகின்றது.

'வினையினீங்கி' என்னும் மரபியற் சூத்திர வுரையில் பேராசிரியரும் அகத்தியர் செய்த அகத்தியத்தினை முதனூ லெனவும், அவர் வானோரேத்தும் வாய்மொழிப் பல்புகழ் ஆனாப் பெருமை யுடையாரெனவும், அவராற் செய்யப்பட்ட முதனூல் பொருந்தக் கற்றுப் புரைதப வுணர்ந்தோருள் தலைவ ராயினர் தொல்காப்பியனாரெனவும் பன்னிரு படலத்துப் புனைந்துரை வகையாற் பாயிரச் சூத்திரத்துள் உரைக்கப் பட்டது. இனிப் பன்னிரு படலம் முதனூலாக வழிநூல் செய்த வெண்பாமாலை ஐயனாரிதனாரும் இது கூறினார். என்னை? 'மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத், தென்மலை யிருந்த சீர் சால் முனிவரன், றன்பாற் றண்டமிழ் தாவின்றுணர்ந்த, துன்னருஞ் சீர்த்தித் தொல்காப்பியன் முதற், பன்னிரு புலவரும்

பாங்குறப் பகர்ந்த' எனப் பாயிரஞ் செய்தற்கு 'உடம்பட்டமையி னென்பது' என்று கூறியுள்ளனர்.

ஆயின், நச்சினார்க்கினியரோ பன்னிருபடலம் அகத்தியர் மாணாக்கர் பன்னிருவரும் செய்த தென்பதில் கருத்து ஒருப்படாதவ ராகின்றார். அவர் புறத்திணைக் கண்ணே 'வேந்து விடுமுனைஞர்' என்னும் சூத்திரவுரையில் 'மீட்டலைக் கரந்தை யென்பார்க்கு அது திணையாயிற் குறிஞ்சிக்குப் புறனாகாமை யுணர்க' என்றும் 'மாயோனிறம் போலும் பூவைப் பூநிற மென்று பொருவுதல் பூவை நிலையென்றால் ஏனையோர் நிறத்தொடு பொருந்தும் பூக்களையும் பொருவுதல் கூறல் வேண்டும்; ஆசிரியர் அது கூறாமையின் அது புலனெறி வழக்கன்மை யுணர்க' என்றும் பன்னிரு படல வழிநூற் கொள்கையை மறுத்திருக்கின்றனர். மற்றும் அவர், 'கொடுப்போ ரேத்தி' என்னும் சூத்திரவுரையில் 'தத்தம் புதுநூல் வழிகளால் புறநானூற்றிற்குத் துறை கூறினாரேனும், அகத்தியமும் தொல் காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின், அவர் சூத்திரப் பொருளாகத் துறை கூறவேண்டு மென்றுணர்க' என்பதனால் பன்னிரு படலம் முதலாயின பிற்காலத்தார் இயற்றியவை யென அவர் கொண்டுளாரென்பது பெறப்படும். பேராசிரியர் 'புனைந்துரை வகையால்' என்று கூறியது, அகத்தியர் மாணாக்கர் பன்னிருவரும் செய்ததென்பது கருதியெனின் அவர் கருத்தும் நச்சினார்க்கினியர் கருத்தும் ஒன்றென்றே கொள்ளலாகும்.

சிவஞான முனிவர் தொல்காப்பியப் பாயிர விருத்தியில் 'இவ்வுண்மை யுணராதார் பன்னிரு படலம் முதலிய நூல்களை வழீஇ யினவென் றிகழ்ந்து, பன்னிரு படலத்துள் வெட்சிப் படலம் தொல்காப்பியனார் கூறியதன் றெனவும், தொல்லாசிரியர் வழக்கொடு முரணித் தமக்கு வேண்டியவாறே கூறுப' என்று நச்சினார்க்கினியர் கொள்கையை மறுத்திருக்கின்றனர்.

இனி, அகலக்கவி யெனப்படும் பலவகைப் பிரபந்த இலக்கணங் கூறும் பாட்டியல் என்பதொரு நூல் அகத்தி யனாராற் செய்யப்பட்டதாக வழங்கி யிருத்தல் வேண்டும். சங்கப் புலவர் பன்னிருவரியற்றிய நூற்பாக்களின் தொகையாகப் பன்னிரு பாட்டியல் என வழங்குவதொரு நூலின்கண் இரண்டு சூத்திரங்கள் 'அகத்தியர் பாட்டியல்' என்று குறிக்கப் பெற்றுள்ளன. ஆனால், பாட்டியல் என்பது பிற்காலத்துத் தோன்றியதே எனல் பழைய உரையாளர்களின் கருத்தாக வுள்ளது.

'சிதைவெனப் படுபவை' என்னும் மரபியற் சூத்திர வுரையில், 'நின்று பயனின்மை யென்பது பிற்காலத்துத் தோன்றிய வழக்கே பற்றி அவற்றிற்கும் குற்றந் தீர இலக்கணங் காட்டிய வழி அது சான்றோர் செய்யுட்குப் பயன்படாது தம்மோரன்ன செய்யுட்குப் பயன்பட்டொழியச் செய்தல், அவை வந்த வழிக் கண்டு கொள்க. பாட்டியன் மரபெனக் காட்டு வனவும் அவை' என்று பேராசிரியர் கூறியுள்ளார்.

'விருந்தேதானும்' என்னும் செய்யுளியற் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர், 'பின்னுள்ளார் பாட்டியன் மரபிற் கூறிய கலம்பகச் செய்யுள் முதலியவற்றைப் பாடுதலுமாயிற்று' என்றனர். இலக்கண விளக்கப் பாட்டிய லுரைகாரரும், 'வித்தார கவியை' என்னுஞ் சூத்திர வுரையில், "ஈண்டுக் கூறிய அகலக் கவிக்கு இலக்கணம் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறாராயினார் என்னை யெனின் ........ 'அகன்று பொருள் கிடப்பினுமணுகிய நிலையினும் - இயன்று பொருள் முடியத் தந்தனருணர்த்தல் - மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்' என்றதனாற் பொருட்டொடர் நிலைச் செய்யுளும், 'மாட்டு மெச்சமு நாட்ட மின்றியுடனிலை மொழியினுந் தொடர்நிலை பெறுமே' என்றதனாற் சொற்றொடர் நிலைச் செய்யுளும் பெறப்படும் என்று அவற்றைப் பின்னுள்ளோர் பலரும் பாட்டியலென விரித்துக் கூறினாராகலின், இந் நூலுடையாரும் அகலக்கவிக்கு இலக்கணங் கூறினாரென வுணர்க" என்றனர்.

இவ்வாற்றால் அகத்தியர் முதலாயினார் இயற்றியவாகக் கூறப்படும் பாட்டியல்கள் பிற்காலத்தார் செய்து தொல்லாசிரியர் பெயரால் வெளிப்படுத்தவை யென்பதே உரையாளர்கள் கருத் தாதல் பெறப்படும். பாட்டியல்களிற் கூறப்படும் செய்திகளும் அவை பிற்காலத்தின என்பதை நன்கு காட்டி நிற்கின்றன.

இனி, ஆனந்தவோத்து, பன்னிரு படலம், பாட்டியல் என்பன குறித்து இதுகாறும் ஆராய்ந்து போந்தனம். மேல் , அகத்தியம் என்னும் பெயரால் இப்பொழுது வழங்கி வரும் சூத்திரங்களின் இயல்பினையும் ஆராய்வோமாக. பேரகத்தியத் திரட்டு என ஒரு புத்தகம் திவான் பகதூர் S. பவானந்தம் பிள்ளைஅவர்களால் பதிப்பிக்கப் பெற்றுளது. அவை பேர் அகத்தியம் எனப் படுதலன்றி அகத்தியனாரியற்றிய வாகா என்று அவர்களே குறிப்பிட் டுள்ளார்கள். அவற்றுட் சில சூத்திரங்கள் இங்கே காட்டுதற்குரியன.

1. அநாதியொலியெழுத் தாதிவடிவெழுத்தே.[1]

2. இரேகைவரிபொறியிலேகை யக்கரப்பெயர்.[2]

3. அச்சாவிகரம்பூத மாமுயிரின்பெயர்.[3]

4. குறிலுங் குறுமையும் இரச்சுவமும் குறிற்பெயர்.[4]

5. நெடிலு நெடுமையுந் தீர்க்கமு நெடிற்பெயர்.[5]

6. உடலுடம் பொற்றல் ஊமைவியஞ்சன மெய்.[6]

7. வலிவன்மை வன்கணம் பரிசம் வல்லினப்பெயர்.[7]

8. அளபும் புலுதமும் அளபெடைப் பெயர்.[8]

9. ஆதனநாதியும் உதானனாதியுமாம்
நாதமுரங் கண்டந் தலையிட முற்று
பல்லிதழ் நாமூக் கணமைந் தொழிலால்
எல்லா வெழுத்தும் பிறக்கு மென்ப.[9]

10. தலைமையக் கரம்போற் சார்பெழுத் தூற்பவம்.[10]

11. சநுக்கிரகஞ் சங்கதம் அவப்பிரஞ்சனம் பாகதம்மொழி
நான்கென்றே மொழியப்படுமே.[11]

12. தீர்க்கங்குணம் விருத்திசந்தி மூவகையாம்.[12]

இவற்றையெல்லாம் யாவரே அகத்தியமென்று கூற ஒருப்படுவர்? மற்றும், தொல்காப்பியனார் சகரம் ஒன்பது உயிரொடும், ஞகரம் மூன்று உயிரொடும், யகரம் ஆகாரவுயிர் ஒன்றொடும் முதலாமென்று கூறியிருப்ப, இப்பேர் அகத்தியச் சூத்திரங்களில் அவை முறையே பன்னிரண்டும், நான்கும், ஆறும் ஆகிய உயிர்களுடன் முதலாமெனக் கூறப்பட்டுள்ளன.

'ஙகரமவ் வேற்றுச்சுட்டு வினாவொடாம்' என்று ஙகரம் முதலாமாறும் கூறப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து, இது மிக்க அணிமைக் காலத்தவராய யாரோ ஒருவரால் நன்னூல் எழுத்தியலிற் கூறப்பட்டுள்ள இலக்கணங்களையே பெரும் பாலும் எடுத்தும், அவற்றிற் சிலவற்றைத் திரித்தும், சில வடமொழிப் பெயர்களையும் சந்திகளையும் புகுத்தும் எழுதப்பட்டதாகுமென ஓர்ந்து கொள்ளலாகும். எனினும் இதிற் காணப்படும் சில சூத்திரங்களும், பிறவும் பார்க்க வேண்டியவையே. சான்றாக இரண்டு சூத்திரம் காட்டுதும்.

---

1. 1 முதல் 12 வரை உள்ள மேற்கோள் நூற்பாக்கள் பேரகத்தியத்திரட்டில் உள்ளன.

## அளபெடை

*" இயற்கை செயற்கை யின்னிசை சொல்லிசை*
*நெடில்குறி லொற்றுயி ரெழுத்துப்பே றளபெண்."[1]*

## மொழிவகை

*" தனிமொழி யிணைமொழி துணைமொழி பொதுமொழி*
*கணமொழி தணமொழி கலப்புறு மொழியேழ்."[2]*

இனி, தொல் உரையாளரும், பிற்காலத்தோரும் தத்தம் உரையகத்தே அகத்தியச் சூத்திரம் எனக் காட்டியவற்றுள்ளும் பல ஐயுறற்பாலனவே. அகத்தியர் மாணாக்கர் எனப்படுகின்ற தொல் காப்பியனாரது சூத்திரத்தொடு ஒத்து நோக்குவார்க்கு இது புலனாம்.

1. *ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை*
   *வேறென விளம்பான் பெயரது விகாரமென்*
   *றோதிய புலவனு முளனொரு வகையான்*
   *இந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்.[3]*

2. *வயிர வூசியு மயன்வினை யிரும்பும்*
   *செயிரறு பொன்னைச் செம்மை செய்யாணியும்*
   *தமக்கமை கருவியுந் தாமா மவைபோல்*
   *உரைத்திற முணர்த்தலு முரையது தொழிலே.[4]*

3. *இலக்கிய மின்றி யிலக்கண மின்றே*
   *எள்ளின் றாகி வெண்ணெயு மின்றே*
   *எள்ளினின் றெண்ணெ யெடுப்பது போல*
   *இலக்கி யத்தினின் றெடுபடு மிலக்கணம்.[5]*

இவற்றை அகத்தியம் என்பர். பின் வருவன தொல்காப்பியச் சூத்திரங்கள்:

1. *வேற்றுமை தாமே யேழென மொழிப.[6]*

2. *விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே.[7]*

3. *பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலுஞ்*
   *சொல்லி னாகு மென்மனார் புலவர்.[8]*

---

1–3. தொல்காப்பியம் – சொல்லதிகாரம் – நூற்பா – 74 உரையில் உள்ளது.
4. நன்னூல் – நூற்பா – 265 – சிவஞான முனிவர் விருத்தியுரை மேற்கோள்.
5. பேரகத்தியத்திரட்டு மேற்கோள் – 1
6. தொல்காப்பியம் – சொல்லதிகாரம் – வேற்றுமையியல் நூற்பா – 1
7. தொல்காப்பியம் – சொல்லதிகாரம் – வேற்றுமையியல் நூற்பா – 2
8. தொல்காப்பியம் – சொல்லதிகாரம் – பெயரியல் நூற்பா – 2

4. அவற்றுள்,
நூலெனப் படுவது நுவலுங் காலை
முதலு முடிவு மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை நாட்டி
எண்ணின் றகன்ற வுரையோரு பொருந்தி
நுண்ணிதின் விளக்க லதுவதன் பண்பே.[1]

இக்காட்டியவற்றிலிருந்தே சில்வகை யெழுத்தின் செய்யுட் டாதலும், நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாதலும், துவக்கலாகாத் துணைமை யெய்தலும் முதலிய சூத்திரயாப்பிற் குரிய இலக்கணங்கள் தொல்காப்பியத்திற்போல அகத்தியச் சூத்திரம் என்பவற்றில் அமைந்திலாமை நுண்ணறிவுடை யார்க்குப் புலனாகும். பின்வருவனவும் அகத்தியம் எனப்படும்.

1. பலவி னியைந்தவு மொன்றெனப் படுமே
அடிசில் புத்தகஞ் சேனை யமைந்த
கதவ மாலை கம்பல மனைய
எனப்பல பொருளா லியைந்த வொருபொருள்.,[2]

2. வினைநிலை யுரைத்தலும் வினாவிற் கேற்றலும்
பெயர்கொள வருதலும் பெயர்ப்பய னிலையே.[3]

3. பெயரே யன்றிப் பிறவுரு பேலா.[4]

4. ஆலு பாலு மோடு மொடுவுஞ்
சாலு மூன்றாம் வேற்றுமைத் தனுவே
செய்வோன் காரணஞ் செயத்தகு கருவி
எய்திய தொழின்முத லியைபுடைத் ததன்பொருள்.[5]

5. ஆற னுருபே யதுவா தவ்வே
வேறொன் றுடையதைத் தனக்குரி யதையென
இருபாற் கிழமையின் மருவுறத் தோன்றும்.[6]

---

1. தொல்காப்பியம் – சொல்லதிகாரம் – பொருளியல் நூற்பா – 166
2. இந்நூற்பாப் பற்றி நன்னூல் பெயரியல் 3ஆம் நூற்பாவுக்கு எழுதிய உரையில் சங்கரநமச்சிவாயர் கீழ்வருமாறு கூறுகின்றார். 'இப்பொருளைப் பலபொருளான் இயைந்த ஒரு பொருளென ஆசிரியர் அகத்தியனார்;
"பலவி னியைந்தவு மொன்றறெனப் படுமே
அடிசில் புத்தகஞ் சேனை யமைந்த
கதவ மாலை கம்பல மனைய."
எனக் கூறுமாறு காண்க.
3 – 4 நன்னூல் – பெயரியல்–நூற்பா – 38 உரை மேற்கோள்
5. நன்னூல் – பெயரியல் – 40ஆம் நூற்பா உரைவிளக்கப் பகுதியில் உள்ளது.
6. நன்னூல் – பெயரியல் – 43ஆம் நூற்பா உரைவிளக்கப் பகுதியில் உள்ளது.

*(காலமும் வினையுந் தோன்றிப் பால்தோன்றாது*
*பெயர்கொள் ளும்மது பெயரெச் சம்மே.)*

6. *ஐம்பா லுரிமை மன்றதற் கிழமை*
*பொருளிடங் காலமாம் பிறிதின் கிழமை,* [1]

7. *காலமும் வினையுந் தோன்றிப் பால்தோன்றாது*
*வினைகொள் ளும்மது வினையெச் சம்மே.*[2]

8. *வினையெஞ்சு கிளவியும் பெயரெஞ்சு கிளவியும்*
*பலபல வடுக்கினு முற்றுமொழிப் படிய.*[3]

9. *மற்றுச் சொனோக்கா மரபி னனைத்தும்*
*முற்றி நிற்பது முற்றியன் மொழியே.*[4]

10. *முற்றுச் சொற்றாம் வினையொடு முடியினும்*
*முற்றுச்சொ லென்னு முறைமையிற் றிரியா.*[5]

11. *காலமொடு கருத வரினு மாரை*
*மேலைக் கிளவியொடு வேறுபா டின்றே.* [6]

12. *எனைத்துமுற் றடுக்கினு மனைத்துமொரு பெயர்மேல்*
*நினைத்துக்கொள நிகழும் நிகழ்த்திய முற்றே.* [7]

13. *இட்டுவிட் டிரண்டும் வினையிடைச் சொல்லே.* [8]

---

1. நன்னூல் – நூ299 – மயிலைநாதர் உரை மேற்கோள்

2. நன்னூல்–வினையியல் 23ஆம் நூற்பா உரைவிளக்கப் பகுதியில் உள்ளது.
"காலமும் வினையும் தோன்றிப் பால்தோன்றாது
பெயர்கொள் ளும்மது பெயரெச் சம்மே."

நன்னூல் பொதுவியல் 4ஆம் நூற்பாவிற்கு மயிலைநாதர் எழுதிய உரையில் 81ஆம் நூற்பா முன்னிரண்டு வரியாகவும் 77ஆம் நூற்பா பின்னிரண்டு வரியாகவும் அமைந்து ஒரே நூற்பாவாகக் காணப்படுகின்றன.

3 ஆம் நூற்பாவில் 'மொழிப்படிய' என்னும் சொல்லுக்கு 'மொழிப்படியே' என்னும் பாடவேறுபாடு உள்ளது.

7 ஆம் நூற்பாவில் 'எனைத்துமுற்று' என்னும் பாடத்திற்கு 'ஏனைமுற்று' என்னும் பாடவேறுபாடு உள்ளது.

3. பொதுவியல்–நூற்பா–4 மயிலைநாதர் உரைவிளக்கப் பகுதியில் உள்ளது.
4. நன்னூல்–வினையியல் 4ஆம் நூற்பா உரைவிளக்கப் பகுதியில் உள்ளது.
5. நன்னூல் – வினையியல் நூற்பா – 14 மயிலைநாதர் உரைவிளக்கப் பகுதியில் உள்ளது.
6. நன்னூல் – வினையியல் 8ஆம் நூற்பா உரை விளக்கப் பகுதியில் உள்ளது.

7– 8 நன்னூல் – பொதுவியல் – நூற்பா–4 மயிலைநாதர் உரை விளக்கப்பகுதியில் உள்ளது.

14. கண்டுபான் மயங்கு மையக் கிளவி
நின்றோர் வருவோ ரென்றுசொன் னிகழ்க
காணா வையமும் பல்லோர் படர்க்கை.[1]

15. அசைநிலை யிரண்டினும் பொருண்மொழி மூன்றினும்
இசைநிறை நான்கினு மொருமொழி தொடரும்.[2]

16. உலக வழக்கமு மொருமுக் காலமும்
நிலைபெற வுணர்தரு முதுமறை நெறியான்.[3]

17. கன்னித் தென்கரைக் கட்பழந் தீவம்
சிங்களங் கொல்லங் கூவிள மென்னும்
புறத்தவு மீழம் பல்லவம்
கன்னடம் வடுகு கலிங்கந் தெலுங்கம்
கொங்கணந் துளுவவங் குடகங் குன்றம்
என்பன குடபா லிருபுறச் சையத்
துடனுறைபு பழகுந் தமிழ் திரி நிலங்களும்
முடியுடை மூவரு மிடுநில வாட்சி
அரசுமேம் பட்ட குறுநிலக் குடிகள்
பதின்மரு முடனிருப் பிருவரும் படைத்த
பன்னிரு திசையிற் சொன்னய முடையவும்,[4]

சிறப்பில்லனவாம். வேறு சில சூத்திரங்களும் உரைகளில் காணப்படும். தொல்காப்பியச் செய்யுளி லுரையில் உரையாசிரியர் காட்டா சில சூத்திரங்கள் அகத்தியம் என்று தெருவற்பாலன.

அவை,

1. ஆறடி யராகந் தாமே நான்காய்
ஓரேவொன்று வீதலு முடையமூ விரண்டடி
ஈரடி யாகு மிழிபுக் கெல்லை,[5]

2, தரவேயெருத்த மராகங் கொச்சகம்
அடக்கியல் வகையொ டைந்துறுப் புடைத்தே,[6]

---

1. நன்னூல்–பொதுவியல் 27ஆம் நூற்பா மயிலைநாதர் உரை மேற்கோள்.
2. நன்னூல்–பொதுவியல் 44ஆம் நூற்பா –மயிலைநாதர் உரை மேற்கோள்.
3. நன்னூல்–பொதுவியல் 31ஆம் நூற்பா – மயிலைநாதர் உரை மேற்கோள்.
4. நன்னூல்–பொதுவியல் 16ஆம் நூற்பா – மயிலைநாதர் உரை மேற்கோள்.

5,6,7 என்னும் மூன்று நூற்பாக்களும் தொல்காப்பியம் – பொருளதிகாரம் –செய்யுளியல் 117ஆம் நூற்பாவிற்கு இளம்பூரணர் எழுதிய உரையில் சிறு வேறுபாடுகளுடன் நான்கு நூற்பாக்களாகக் கீழ்வருமாறு காணப்படுகின்றன.

3, ***கொச்சக வகையி னென்னொடு விராஅய்***
***அடக்கியல் வகையி னடக்கவும் பெறுமே,***

*என்பன இவற்றுள் இடையது.*

***" தரவேயெருத்த மராகங் கொச்சகம்***
***அடக்கியல் வகையொ டைந்துறுப் புடைத்தே,"***[7]

*என்று பரிபாடல் முகவுரையில் சிறிது திரிபுடன் காணப்படுகிறது.*

## காலம்

*இனி அகத்தியனாரது காலத்தைக் குறித்து யாம் ஒன்றும் துணிந்துரைக்குமாறில்லை. பார்வதி தேவியாரின் திருக்கல்யாண காலத்திலேயே புவியின் தடுமாற்றத்தை நீக்குதற்கு அகத்தியர் தெற்கில் இருந்தன ரென்னில் அவரது காலத்தை யாமா வரையறுக்கற்பாலம்? இருக்குவேதப் பாடல்களை வெளி யிட்டருளிய இருடியருள்ளும் அகத்தியர் என்னும் பெயர் கேட்கப்படுகிறது. பொதியிலுக்குத் தெற்கிலிருந்து கடல் கோட்பட்டதாகிய மகேந்திர மலையில் இறைவர்பால் ஆகமங் கேட்ட முனிவர் ஐவருள் அகத்தியர் ஒருவராவர் என்றும் கூறுகின்றனர்.*

*சிலர் தமிழ் அகத்தியர் வேறு, ஆரிய அகஸ்தியர் வேறு என்கின்றனர். இருவராயினும் அகத்தியர்க்கு அகஸ்தியரும், அகஸ்தியர்க்கு அகத்தியருமே ஒப்பானவரென்று கூறல் வேண்டும். அன்னோர் பெருமைக்குச் சான்றாகப் புராணங்களில் வழங்கும் வரலாறுகள் அளவிறந்தன. அவற்றில் இவை தமிழ் முனிவர்க் குரியன. இவை ஆரிய முனிவர்க் குரியன என்று பிரித்துக் காட்டுதல் எனக்கு இயலுவதொன்றன்று. அன்றியும் அன்னார் புரிந்தனவாகக் கேட்கப்பெறும் அரும் பெருஞ் செயல்களை நோக்கின் அவர், தமிழர் ஆரியர் என்று கருதும் நம் கருத்தின் அளவினரல்லர் என்பது போதரும். அங்ஙனமாயினும் தொன்று தொட்டு நம் பெருமக்கள் பல்லோரானும் தமிழ் முனி*

---

"அராகந் தாமே நான்காய் ஒரோவொன்று
வீதலும் உடைய மூவிரண் டடியே"
"ஈரடி யாகு மிழிபிற் கெல்லை"
"தரவே எருத்த மராகங் கொச்சகம்
அடக்கியல் வகையோ டைந்துறுப் புடைத்தே"
"கொச்சக வகையின் எண்ணொடு விராஅய்
அடக்கிய லின்றி அடங்கவும் பெறுமே"

என்று பாராட்டப்பெற்ற அகத்தியனாரை நாமும் அங்ஙனம் கூறுவதால் எய்தற்பாலதோர் இழுக்கில்லை யென்க.

புவிதுலை யொக்க வீற்றிருந்ததும், விந்தமடக்கியதும், காவிரி கொணர்ந்ததும் முதலியவெல்லாம் பொதியி லகத்தியர்க்கே உரியனவாகப் புராணம் கூறுகிறது. இராமபிரானாலும் வழிபாடு பெற்ற அகத்தியரைத் தமிழ் முனியென்றே இராமாயணங் கூறுகின்றது. இவற்றிலிருந்து தமிழ் முனிவர் இராமாயணக் காலத்தும் அதற்கு முன்னும் விளங்கியிருந்தனர் என்று கூறலாகும். மற்றும் அகத்தியர் இராவணனைக் காந்தருவத்தாற் பிணித்தமையும், காவிரிப்பூம்பட்டினத்திருந்த காந்தன் என்னும் சோழனானவன் அரசர் குலத்தைக் களைதலையே நோன்பாகக் கொண்டு பரசுராமன் தன்பாற் போர் குறித்து வருதலைக் கொற்றவையால் அறிந்து அகத்திய முனிவர் பக்கல் அடைந்தன னென்று மணிமேகலை கூறுவதும் அவர் எவ்வளவு பழங் காலத்தே தெற்கில் இருந்தவர் என்பதனைக் காட்டுவனவாகும்.

இனி, இறையனாரகப் பொருளுரை கூறும் முச்சங்க வரலாற்றைச் சான்றாகக் கொண்டு நோக்கின் அகத்தியர் ஏறக்குறையப் பன்னீராயிரம் ஆண்டுகளின் முன்னரே தென் மதுரையகத்துத் தலைச்சங்கத்தே வீற்றிருந்தனரெனவும், அக் காலத்திலேயே அகத்தியம் இயற்றப் பட்ட தெனவும் கொள்ளுதல் சாலும். ஆனால் இறையனாரகப் பொருளுரை தலைச்சங்கப் புலவருள் முதல்வராக எடுத்தோதிய அகத்தியனாரை இடைச்சங்கப் புலவருள்ளும் முதல்வராக வைத்துக் கூறுகின்றது. அகத்தியர் தலைச் சங்கத்தின் தொடக்கத்திலேயே வீற்றிருந்தா ரென்னில் அவர் வரம்பற்ற வாழ்நாள் உடைய ரென்பதே அவ்வுரையாளர் கருத்தாதல் வேண்டும். மற்று, சிவபிரான் கட்டளைப்படி அகத்தியர் நக்கீரனார்க்குத் தமிழ் இலக்கணம் அறிவுறுத்தருளினரென்று திருவிளையாடற் புராணம் கூறுகின்றது. அவ்வளவே யன்றி, சிவாலய முனிவர் மூவர் தேவாரங்களிலிருந்து இருபத்தைந்து திருப்பதிகங்களை எடுத்துத் திரட்டித் தந்தருளினர் என்னும் வரலாறும் உண்டு. அகத்தியர் தேவாரத் திரட்டின் திருப்பதிகக் கருத்துரைக்கும் ஓர் அகவலில்,

> ***“இப்பரிச கத்திய முனிவ னிருநிலத்***
> ***தொப்பரு மூவ ரோதுதே வார***
> ***முழுகையுஞ் சிவாலய முனிக்கறி வித்துப்***
> ***பழுதிலா வளைவயுட் பரிந்தெடுத் திருபத்***
> ***தைந்துயர் பதிகமும் அறிவுறத் திரட்டி***
> ***யெண்ணரு மடங்கல் யாவையு முணரும்***

***புண்ணிய மிவைகொடு பொருந்து மென்றவன்***
***றனக்கருள் செய்தனன் றகவுற வதனால்***
***தீதிலா அகத்தியத் திரட்டினை யுலகில்***
***ஓதினர் அடங்கலும் ஓதின ராவரே."***[1]

என்று கூறாயிருப்பதும் காண்க. அவ்வாறாயின் அகத்தியர் இப்பொழுதும் உளரென்றே கோடல் அமையும். சரித்திர ஆராய்ச்சி யாளர் இது குறித்து யாது கூறுவரோ அறியேம். சிவயோக சித்தி பெற்ற பெரியார் பல்லாயிரம் ஆண்டுகளேயல்ல பல்லூழிக் காலம் வாழ்ந்திருத்தல் கூடுமென்பது யோக நூற்களின் துணிபு. அகத்தியரோ சித்தர் குழாத்திற்கெல்லாம் தலைவராவர் என்பர். அப்பெரியாரது வாழ்நாளை அறுதியிடப் புகுவது எம்மனோர்க்கு அடாத தொன்றாகலின் அதனை இம்மட்டின் நிறுத்துதும்.

## சமயம்

இனி, அகத்தியனாரது சமயம் யாதென்பது பற்றியும் சிறிது கூறுதும். இதுகாறும் கூறிவந்தவற்றிலிருந்தே அவர் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் கொள்கையுடையர் என்பது பெறப்படும். அவர், சிவனார் பாலும், முருகவேளிடத்தும் தமிழியல் கேட்டனர்; சிவபெருமானிடத்தே ஆகமங்கள் பெற்றனர், கொங்கு நாட்டிலே சிவவுரு நிறுவி வழிபாடாற்றினர், திருக்குற்றாலத்திலே திருமாலுருவைக் குழைவித்துச் சிவலிங்க மாக்கி வழிபட்டனர் என்னும் இவையெல்லாம் அவர் சிவநெறி நிற்போர் என்பதனை விளக்குமன்றோ? எனினும் சைவம் என்பது பல்லாயிரம் ஆண்டுகளின் முன்பிருந்த கொள்கைகளில் சிறிதும் மாறுபடாமலே இன்றைக்கும் இருக்கிறதென்று கூறுதல் அமையாது. உலகிலுள்ள எல்லா மதங்களுமே காலந்தோறும் வேறுபட்டு வருதல் கண்கூடு. சைவத்தினுள்ளும் பல பிரிவுகள் நூல்களிலே பேசப்படுகின்றன. இப்பொழுது சில பிரிவுகள் கைக்கொள்ளப்படுமாறும் காண்கின்றாம். ஒரு பிரிவினுட்பட்ட கொள்கைகளும் நாளடைவில் திரிபெய்தி வருகின்றன. இவ்வாற்றால் அகத்தியனாரைப் பொதுவகையாற் சிவநெறியாளர் என்னலாமன்றி சைவத்துட்பட்ட இன்ன கொள்கையினர் என வரையறுத்தல் சாலாது.

இனி, அதத்தியனார் பல இடங்களில் சிவபெருமானை வழிபட்ட வரலாறுகளும் குறிப்புகளும் உள்ளன. தமிழ் நாட்டிலே திருமறைக் காட்டின் அணித்தாகவுள்ள ஓர் திருப்பதி **அகத்தியான்**

1. அகத்தியர் – தேவாரத் திரட்டு – (பக்கம் – 4)

**பள்ளி** எனப்படுகின்றது. திருமறைக்காட்டிலே சிவபெருமானது திருக்கல்யாணக் கோலத்தைத் தரிசிக்க வந்த தமிழ் முனிவர் இருக்கை அமைத்துக்கொண்டு தங்கிய இடமாகலின் அஃது **அகத்தியான் பள்ளி** எனப்படுவதாயிற்று என்பர். அங்கு அகத்தியர் திருவுருவும் இருக்கிறது. பொதியிலில் திருமணக்கோலம் தரிசித்தா ரென்பதும் வரலாறு, பாவநாசத் திருப்பதியின் அணிமையில் பொதியின் மலைக்கண்ணே அகத்தியாச் சிரமம் என்னும் பெயரால் ஒரு கோயிலும் உளது. மற்றும் பல திருப்பதிகளில் அகத்தியர் சிவபெருமானை வழிபட்ட செய்தி கேட்கப்படுவதுடன்; ஆங்காங்கு அகத்தியரது திருவுருவும் காணப் படுகிறது. அவற்றுள் திருச்சிராப்பள்ளியும் ஒன்று. இங்ஙனம் அகத்தியர் இறைவனை வழிபட்ட செய்தி திருநெறித் தமிழ் வேதம் அருளிய சமய குரவர்களாலும் குறிக்கப்பெறுகின்றது. பின் வரும் திருப்பாட்டுக்கள் காண்க.

*அன்றாலின் கீழிருந்தங் கறஞ்சொன்னானை*
*அகத்தியனை யுகப்பானை யயன்மால்தேட*
*நின்றானைக் கிடந்தகட னஞ்சுண்டானை*
*நேரிழையைக் கலந்திருந்தே புலன்களைந்தும்*
*வென்றானை மீயச்சூர் மேவினானை*
*மெல்லியலா டவத்தினிறை யளக்கலுற்றுச்*
*சென்றானைத் திருவீதி மிழலையானைச்*
*சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே.* [1] *(திருநாவுக்கரசர்)*

*வந்தோரிந்திரன் வழிபட மகிழ்ந்து*
*வானநாடுவீ யாள்கென வருளிச்*
*சாதி மூன்றிலுந் தாபர நிறுத்திச்*
*சகளிசெய்திறைஞ் சகத்தியர் தமக்குச்*
*சிந்துமாமணி யணிதிருப் பொதியிற்*
*சேர்வுநல்கிய செல்வங் கண்டடைந்தேன்*
*சேந்தண்மாமலர்த் திருமகள் மருவுஞ்*
*செல்வத்தென்றிரு நின்றியூரானே.* [2] *(சுந்தரர்)*

***குறிப்பு:*** இதுகாறும் அகத்தியர் என்று பெயரிட்டெழுதி வந்த இவ்வரலாறு, சில திருத்தங்களுடனும் சித்தர் நூல் ஆராய்ச்சி யுடனும் தனிப் புத்தகமாக வெளிவரும்.

♦ ♦ ♦

1. திருநாவுக்கரசர் – தேவாரம் – திருவீழி மிழலைத் திருத்தாண்டகம் பா – 3
2. சுந்தரர் தேவாரம் – திருநின்றியூர்த் திருப்பதிகம் – பா – 5.

# இ
# ள
# ம்
# பூ
# ர
# ண
# ம்

## வரலாறு

# 4. இளம்பூரணம் வரலாறு

தொல்காப்பியப் பாயிரவுரையில் ஆசிரியர் நச்சினார்க்கினியர், “இதற் கிங்ஙனங் கண்ணழித்தலுரையாசிரியர் கருத்தென்ப தவ்வுரையானுணர்க” என்றும், “இனியிவ்வாறன்றிப் பிறவாறு கண்ணழிவு கூறுவாருமுளராலெனின் வேங்கடமுங் குமரியு மெல்லையாகவுடைய நிலத்திடத்து வழங்குந் தமிழ் மொழியினைக் கூறு நன்மக்கள் வழக்குஞ் செய்யுளுமென்றால் . . . . அது பொருளன்மையுணர்க” என்றும் இரண்டிடத்தில் முறையே யெழுதியிருக்கின்றார். அச்சிட்ட எழுத்ததிகார இளம்பூரண ருரையிற் பாயிரச் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் கூறியவாறு கண்ணழிவு கூறப்படவில்லை. “இங்ஙனங் கண்ணழித்தல்” என்பதற்குச் சொற்களைக் கொண்டு கூட்டிக் கண்ணழித்தல் என்பது பொருளாகக் கொள்ளலாமெனின் - “இனி யிவ்வாறன்றிப் பிறவாறு கண்ணழிவு கூறுவாருமுளரா லெனின்” என்றும் ஒரே சூத்திரவுரையிற் கூறியிருத்தலை நோக்குமிடத்து முறையே இருவர் மதங்களை நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டினரென்று ஊகிக்க வேண்டியிருத்தலின் அது பொருத்தமாகத் துணியக் கூடவில்லை. நச்சினார்க்கினியர் எடுத்துமறுத்த இரண்டாவது கொள்கையே இளம்பூரணத்திற் காணப்படுவது.

நூன்மரபு **“மெய்யோ டியையினு முயிரிய றிரியா”** [1] என்னுஞ் சூத்திரவுரையில் **“விளங்காய் திரட்டினா ரில்லை களங்கனியைக், காரெனச் செய்தாருமில்”** [2] என்பதே காட்டினா ருரையாசிரியரும்” என்றார் நச்சினார்க்கினியர். எடுத்துக்காட்டிய விப்பகுதி இளம்பூரணத்தில் ஆண்டுக் காணப்படவில்லை.

மதுரைக்காஞ்சி “**தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற் றொன்முது கடவுட் பின்னர் மேய வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந**”[3] என்னும் அடிகட்குப் பொருளெழுதிய

1. தொல்காப்பியம் – எழுத்ததிகாரம் – நூன்மரபு நூற்பா – 10
2. நாலடியார் – பா . 103
3. மதுரைக்காஞ்சி – அடிகள் 40 – 43.

விடத்தில் "இராவணன் தென்றிசையாண்டமை பற்றித் தென்னவனென்றார் . . . . இராவணனாளுதல் பாயிரத்துச் சூத்திரத்து உரையாசிரியர் கூறிய உரையானுமுணர்க" என்று நச்சினார்க்கினியர் எழுதியுள்ளார். இச்செய்தியும் இளம்பூரணத்திற் காணப்படவில்லை. இவற்றால் உரையாசிரியரும், இளம்பூரணரும் இருவேறு உரையாள ராவரென்று கருத நேருகின்றது.

ஆயின், இதுகாறும் அச்சிடப்பட்டுள்ள நூல் உரை களிலெல்லாம் உரையாசிரியர், இளம்பூரணர் என்னும் இரு பெயரையுமுடைய ஆசிரியர் ஒருவரென்றே குறிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்கவே உரையாசிரியர் கொள்கையாக நச்சினார்க் கினிய ரெடுத்து மறுக்கின்றவைகளிற் பெரும்பாலான இளம்பூரணத்திற் காணப்படுகின்றன. உதாரணமாக நூன்மரபு 27-ஆம் சூத்திரம், மொழி மரபு 17 ஆம் சூத்திரம், புள்ளி மயங்கியல் 21 ஆம் சூத்திரம் இவற்றிற்கு இருவரெழுதிய வுரை களையும் காண்க. அன்றியும் இளம்பூரணர், வேறு உரையாளர் யாரையும் எடுத்துக் கூறாமையியானும், ஓரிடத்தும் பிறர் மதம் எடுத்துக்காட்டாமை யானும் அவரே தொல்காப்பியத்திற்கு முதன்முதல் உரை யெழுதினோரென்பது பெறப்படுகின்றது.

இன்னவேதுக்களால் உரையாசிரியரும் இளம்பூரணரும் இரு வேறுரையாளரென்றாதல், இருபெயருமுடை யாரொருவரே, அவருரையிற் சிலசில பகுதிகள் எழுதினோரால் விடப்பட்டன வென்றாதல் கோடலமையும், ஏட்டுப்பிரதி முதலிய சாதனங்களா லுண்மை கண்டு வைத்துளோர் வெளியிடுவாராக.

♦ ♦ ♦

# நாவலர் ந.மு.வே நாட்டார் எழுதிய நூல்கள் / உரைகள்

## நூல்கள்

*1915* - *வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி*

*1919* - *நக்கீரர்*

*1921* - *கபிலர்*

*1923* - *கள்ளர் சரித்திரம்*

*1926* - *கண்ணகி வரலாறும் கற்பு மாண்பும்*

*1928* - *சோழர் சரித்திரம்*

## உரைகள்

*1925* - *இன்னாநாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது, ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, மூதுரை, உலகநீதி, நல்வழி, நன்னெறி*

***திரிகடுகம்*** *- கையெழுத்துப் படியாகக் கிடைத்து முதன் முதலாக வெளிவருகிறது. நாவலர் நாட்டார் தமிழ் உரைகள் தொகுதி எண் : 20 இல் பார்க்க.*

*1925 - 1932* - *திருவிளையாடற்புராணம்*

*1940* - *சிலப்பதிகாரம்*

*1942* - *மணிமேகலை*

*1940 - 42* - *கட்டுரைத்திரட்டு (இரண்டு தொகுதிகள்)*

*1944* - *அகநானூறு*

**உரைத்திருத்தம் :**

*1940* - *தண்டியலங்காரப் பழைய உரை*

*யாப்பருங்கலக்காரிகை*

*அகத்தியர் தேவாரத்திரட்டு*

*1930* - *பிப்ரவரி 11,12,13,14 ஆகிய நாட்களில் சென்னைப் பல்கலைக்கழக அறக்கட்டளை சார்பாக* **தொல்காப்பிய ஆராய்ச்சி சொற்பொழிவு**. *(இந்த சொற்பொழிவு இதுவரை வெளிவராதவை கையெழுத்துப் படியாகக் கிடைத்தது. முதன் முதலாக வெளிவருகிறது. நாவலர் நாட்டார் தமிழ்உரைகள் தொகுதி எண் - 17 இல் 15-வது கட்டுரையில் பார்க்க .)*

## குறிப்புகள்

## குறிப்புகள்